

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

நிலாப்பெண்

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா



14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

முதற் பதிப்பு : டிசம்பர், 1988
பதிப்புரிமை பெற்றது

விலை ரூ. 24-00

அச்சிட்டோர் :

கனிமொழி அச்சகம்,
19, வடுகு இடையர் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.



நிலாப்பெண்...

அவள் எண்டமூரி வீரேந்திரநாத்தின்
புதுமைப்பெண்!

கதையோட்டத்தில்—
கருத்தோட்டத்தில்
புதுமை மிளிர்கிறது!

கட்டிப்பிடித்து
காதல் பாட்டுப் பாடி
இப்படித்தான்
காதல் பிறக்கிறது—வளர்கிறது
என்று
பழைய பாடம்
படிக்கும்—இன்றைய
எழுத்தாளர்களுக்கு
ஒரு சவாலாக...

புதிய கோணத்தில்
காதலர் இருவரும்
சந்திக்காமலேயே
தொலைபேசி மூலமே
காதல் பிறந்து—வளர்ந்து
மலர்கிறது!

அம்பிகாபதி - அமராவதி
அனார்கலி - சலீம்
ரோமியோ - ஜூலியட் போன்ற
அமர காவியங்களின்
நிறைவு—பொலிவு
இந்த
நிலாப்பெண்ணில்
மிளிர்கிறது—மனதைக்
கவர்கிறது!


ஆம்!
புதிய காதல் காவியம்!

ரேவந்த்-ரம்யா காதல் ஓவியம் நிலாப்பெண்!

இந்த
அமர காவியத்தை
வெளியிட வாய்ப்பளித்த
எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கட்கும்
சுவை குன்றாமல் மொழியாக்கம் செய்த
சுசீலா கனகதுர்கா அவர்கட்கும்
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்!

வே. சுப்பையா

நிலாப் பெண்



ரஷ்யாவில் நாமஸ்கான் உஸ்பெஸ்கிஸ்தான் என்ற இடம்— நேரம் மாலை ஐந்தரை மணி.

விசாலமான ஹால் நிசப்தத்தில் தோய்ந்துக் கொண்டிருந்தது. நூறு பேர் பரந்த படிகளைப் போலிருந்த ஆர்ச் —வளைவுகளில் உட்காந்தபடி மூச்சுவிடவும் மறந்தவர்களாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு டெலிவிஷன் கேமிராக்கள் நிசப்தமாய் இயங்கிக்கொண்டிருந்தன. சிலர் சந்தடியின்றி தொலைவில் நின்றபடி லென்ஸ் உதவியோடு போட்டோக்களைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

போலன்ஸ்க்கீ குனிந்து மிகக் கவனமாய் பார்த்துக்கொண்டிருந்தான்—தன் முன்னிருந்த பெஞ்சியை, பெஞ்சியின் மேல் வெள்ளை கோதுமை நிறத்தில் சதுரங்கக் காய்கள் மனித வாழ்க்கையின் வெற்றி தோல்வியைப் போல சிதறிக் கிடந்தன.

அடுத்த காயை நகர்த்தி வைக்கவேண்டியவன் போலன்ஸ்க்கீ. அவன் மோவாயைத் தடவிக் கொண்டே

யோசனையில் ஆழ்ந்தான். அவனுடைய மந்திரி எதிரிகளுக்கு நடுவில் எட்டுப் பக்கமும் சிறைபட்டுக் கிடந்தான்.

சதுரங்க மேஜையில் காய்கள் இருந்த நிலையை உயரே யிருந்த போர்டில் எலெக்ட்ரானிக் விளக்குகள் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. அந்த விளக்கை ஆதாரமாய் வைத்துக்கொண்டு பார்வையாளர்களில் சிலர் தமக்கு முன் னால் இருந்த போர்டின் மேல் அதே ஆட்டத்தை ஆடியபடி குறிப்பெடுத்துக் கொண்டார்கள். இத்தனையும்— மிகநிசப்த மாய் அங்கிருந்த ஒருவரின் கவனத்திற்கும் குந்தகம்ஏற்படாத வாறு நடந்தேறிக் கொண்டிருந்தது.

போலன்ஸ்க்கீ மந்திரியைப் பின்னுக்கு எடுத்து வந்து ராஜாவின் பக்கத்தில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு எதிராளியைப் பார்த்துச் சிரித்தான்.

ரஷியன் சாம்பியன்ஷிப் போட்டி அது. அதுதான் இறுதி ஆட்டம்.

ரஷ்யர்கள் சதுரங்க ஆட்டத்தில் கைதேர்ந்தவர்கள். சதுரங்க ஆட்டம் மனிதனின் மூளையை உற்சாகமும் விரிவும் படுத்துவதை உணர்ந்து அதனைப் பாடத் திட்டத்தில் ஒரு பாகமாய் புகுத்தி இருப்பவர்கள் ரஷ்யர்கள். பாபீ ஃபிஷர் போன்ற ஏதோ ஒரிருவரைத் தவிர, வேறுயாருமே இதுரை ரஷ்யர்களைத் தோற்கடித்து உலக சாம்பியன் பதவியை அடைந்தவர்கள் கிடையவே கிடையாது. அதிலும்போலன்ஸ்க் கீயோ கடந்த பத்தாண்டுகளாய் மகுடமில்லாத மகாராஜா வாய் இருந்து வருகிறான். இந்தச் சின்ன ரஷியன் சாம்பியன் ஷிப் போட்டி அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

தன் மந்திரியை எதிரியின் காய்களிடமிருந்து திருப்பிக் கொண்டு வந்து மீட்டுக் கொண்டதோடல்லாமல், 'நைட்' மூலம் 'செக்' சொன்னதால் போலன்ஸ்க்கீயின் புத்தி சாதுரி யம் வெளிப்பட்டது. திடீரென்று இப்பொழுது இந்திய ஆட் டக்காரன் மேல் எல்லோரின் பார்வையும் விழலாயிற்று.

பார்த்துக் கொண்டிருந்த ரஷ்ய ஆட்டக்காரர்கள் குறுகுறு சிரிப்போடு இந்திய ஆட்டக்காரன் என்ன தான் பண்ணப்போகிறான் பார்ப்போம் என்ற ஏளன பாவத்துடன் அவனையே பார்க்கத்தொடங்கினார்கள். பெண்களோ கேட்கவே வேண்டாம். கம்பளிக் கோட்டுக்களைப் போர்த்திக் கொண்டு சிரிப்பு மலர்ந்த கண்களுடன் வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள்.

இந்தியத் தூதர் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டு, தன் தேசத்தைச்சேர்ந்த விளையாட்டு வீரன் என்ன பண்ணப் போகிறானோ என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு சதுரங்க ஆட்டத்தில் உற்சாகம் உண்டு. இந்த போட்டியின் முக்கிய அதிதி அவரே. வெற்றி பெற்றவருக்குப் பரிசளிக்க வந்திருந்த அவரே அந்த விளையாட்டு வீரர்களைவிட அதிக பரபரப்பில் இருந்தார்.

வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியாய் அது வெள்ளை ஊசியாய் தென்பட்டுக் கொண்டிருந்தது.

அவ்வளவு குளிரிலும் ரேவந்த்தின் முகத்தில் வியர்த்துக் கொட்டிற்று. அவன் மூளையில் யோசனைகள் வேகமாய் படர்ந்தன. விளையாட்டு வீரனான தனக்கு இது ஒரு உயிர்ப் போராட்டம் என்பதை அறிவான். நினைவு தெரிந்ததிலிருந்து தான் ஆடிய ஆட்டங்களும், எடுத்து வைத்த உபாயங்களும், படித்த புத்தகங்களும், எடுத்துக் கொண்ட குறிப்புகளும் மனதில் நிழலாய் படர்ந்தன அவ்வப்பொழுது நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

நேரம் மிஞ்சிக் கொண்டிருந்தது.

சதுரங்க ஆட்டத்தில் காய்களை எடுத்து வைக்கக் குறிப்பிட்ட நேரம்தான் தரப்படும். மணிக்குப் பதினாறு தடவைகள் தான் காய்களை எடுத்து வைக்க அனுமதி தரப்படும்.

ரேவந்த்திற்கும் போலன்ஸ்க்கீக்குமிடையே இருந்த மேஜையில் இரண்டு ஸ்டாப் கடிகாரங்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. ஒருவர் காய் எடுத்து வைத்ததுமே தன் கடிகாரத்தை நிறுத்தி விட வேண்டும். உடனே அடுத்த கடிகாரம் தானே இயங்கத் தொடங்கிவிடும். அடுத்த ஆட்டக் காரன்காயை எடுத்துவைத்து விட்டு அதை நிறுத்தும் வரை இயங்கிக் கொண்டேயிருக்கும். காயை வைத்ததுமே கடிகாரத்தை நிறுத்த மறந்துபோய் தோல்வியடைந்தவர் களும் உண்டு.

ஒவ்வொருவரின் கடிகாரமும் ஒரு மணி நேரம் ஆனதைக் காட்டி முடிப்பதற்குள் பதினாறு முறை, நகர்த்தி வைக்கா விட்டால் தோல்வியடைந்தாற் போல் ஆகும். குறிப்பிட்ட நேரத்திற்குள் விளையாட்டை முடிக்க முடியாமல்—அந்த பரபரப்பில் தவறான காய்களை நகர்த்தி வைத்துத் தோல்வி யடைந்தவர்கள் தான் நிறைய.

ரேவர்த்தும் இப்பொழுது அதே நிலையில்தான் இருந்தான்.

இன்னும் ஐந்து நிமிஷங்களில் நான்கு காய்களை நகர்த்தி விட வேண்டும். எப்படி...எப்படி? கடிகாரத்தின் முள் நகர்ந்து கொண்டேயிருந்தது. ஜனங்கள் கைத்தட்டக் காத்திருந்தார்கள்.

போலன்ஸ்க்கீ நாற்காலியில் சாய்ந்து மேற் கூரையை பார்த்தபடி சற்று ஓய்வாய் உட்கார்ந்திருந்தான். 'இனி உன் வேலை முடிந்து விட்டது, என்ற மனத்தளர்ச்சியை எதிராளி யின் பால் ஏற்படுத்த வேண்டிக் கையாண்டஉபாயம் அது! போலன்ஸ்க்கீக்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள் நேரமிருந்தன. எவ்வளவு வேண்டுமானாலும் நிதானமாய் ஆடலாம். ஆனால் ரேவந்த்துக்கு அவ்வாறில்லை.

ஐந்து நிமிஷத்தில் அதற்குள் அரை நிமிஷம் கழிந்து விட்டது. அவன் ஆள்காட்டி விரலால் காயை நகர்த்தினான். போலன்ஸ்க்கீ சட்டென்று 'நைட்'டை முன்னுக்கு

கொணர்ந்தான். ரேவந்த் 'பண்ட்' காயை நகர்த்தினான். அவன் மிகப் பரபரப்பிலிருந்தது புரிந்தது. இன்னும் இரண்டே நிமிஷங்கள்தான் பாக்கியிருந்தன.

போலன்ஸ்க்கீ எளிதாய் மறுபடியும் முன்னுக்கு நகர்த்தி பண்ட் காயை வெட்டிவிட்டான்.

அதற்காகவே காத்திருந்ததைப் போலிருந்த ரேவந்த் மூலையிலிருந்த யானையை நடுவில் கொணர்ந்து 'செக்' என்றான். ஒரு வினாடி போன்ஸ்கீக்கோ, பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கோ நிகழ்ந்தது புரியவில்லை. எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நிகழ்ந்து முடிந்துவிட்டாற் போலிருந்தது. குழப்பத்தால் அந்த ஹாலிலிருந்தஎல்லோருமே வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் அது இமைக்கும் நேரம் மாத்திரமே. அடுத்த வினாடியே அணைக் கட்டை உடைத்துக் கொண்டு வெளியேறிய நீரைப் போல் ஜனங்களின் ஆரவாரம் கட்டுக் கடங்காமல் போயிற்று.

போலன்ஸ்க்கீ இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. மேலுக்கு ஏதும் அறியாதவனைப் போல் தோற்றமளித்து தன் அகம்பாவத்தைத் தூண்டி விடக் கருதித் தான் இவ்வாறு அலட்சியமாய் ஆடி வந்திருக்கிறான் இந்த எதிராளி! அவன் நிமிர்ந்து ரேவந்த்தைப் பார்த்தான்.

ஜனங்கள் அதற்குள் ரேவந்த்தைச் சுற்றிக்கூடி விட்டார்கள். பெண்கள் மேலே விழுந்து ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டார்கள், பத்திரிக்கையாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்கலானார்கள். போட்டோக்கள் பளிச் சிட்டன. டி. வி. காமிராக்கள் பல கோணங்களில் படமெடுக் கத்தொடங்கின. இந்தியத் தூதர் தன் பதவியையும் மறந்து போய் ரேவந்த்தை அலாக்காய் தூக்க முயன்று கொண்டிருந் தார்.

அவன் சாதித்தது பெரிய வெற்றிதான். தோற்றோடச் செய்தது போலன்ஸ்க்கீயை, பத்தாண்டுகளாக விளையாட்டுத்

துறையில் மகுடமில்லாத ராஜாவாய் திகழ்ந்து கொண்டிருந்த விளையாட்டு வீரனை!

உலக சாம்பியன் அனாட்டலி கார்போவ் ஸ்வீடிஷ் கிராண்ட் மாஸ்டர் ஆண்ட்ரசன் கூட அவனோடு விளையாடச் சற்றுத் தயங்குவார். அப்படிப்பட்டவனை இருபத்தைந்து வயது இளைஞனொருவன் கடைசி நிமிஷத்தில் நந்திரத்தால் வென்றானென்றால்—அதற்கு எவ்வளவோ ஆண்டுகள் இடைவிடாத பயிற்சியை மேற்கொண்டிருக்க வேண்டும். ஏதோ இறுதியில் போகிற போக்கில் அடித்துக் கொண்ட தற்காலிக வெற்றியல்ல அது. தன் இடத்தைக் கைப்பற்றிக் கொள்ள இளந் தலைமுறை உருவாகிவிட்டது என்று புரிந்தது போலன்ஸ்கீக்கு.

ஒரு பெண் தன் உள்ளங்கையில் ரேவந்த்தின் ஆட்டோகிராப்பைப் பெற்றுக் கொண்டாள். ஒரு கிழவர் அவன் தோளில் அன்போடு தட்டிக் கொடுத்தார். இளைஞர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டனர். ரேவந்த் கும்பலோடு சேர்ந்து அவ்வறையை விட்டு வெளியே வந்தான். அதற்குள் லைவ் டி.வி. மூலம் இவ்விஷயம் பரவிவிட்டது போலும். ஜனங்கள் வந்து கூடத் தொடங்கினார்கள். இந்த ஆட்டத்தில் ரஷ்யர்களுக்கு இருக்கும் ஆர்வம் வேறு யாருக்குமே இருக்காது.

அவ்வளவு பேர் சுற்றிக் கொண்டதால் ரேவந்த்திற்கு வியர்த்துக் கொட்டிற்று. கைக்குட்டைக்காக ஜேபியைத் தடவியபோது அது கிடைக்கவில்லை. ஆட்டத்தின் நடுவே தழுவி விழுந்திருக்கிறது.

அதற்குள்ஒலி பரப்பியில் அறிவிப்பு கேட்டதால் எல்லோர் கவனமும் அந்தப்பக்கமாய்போயிற்று. அந்த இடைவெளியில் திரும்பி உள்ளே வந்தான் ரேவந்த்.

வராந்தாவைத் தாண்டி ஹாலுக்குள் அடியெடுத்து வைத்த அவன் அப்படியே நின்றுவிட்டான். விசாலமான

ஹால் ஆளரவமின்றி இருந்தது. ஹாலுக்கு நடுவிலிருந்த சதுரங்க மேஜைக்கு முன்னால் தலை கவிழ்ந்து கொண்டு மெதுவாய் தேம்பிக் கொண்டிருந்தான் போலன்ஸ்க்கீ. ரேவந்த் அவனையே பார்த்தபடி சிலையாய் நின்றுவிட்டான்.

உலகப்புகழ்பெற்ற ஒரு விளையாட்டு வீரனின் தோல்வி மற்றொரு வீரனின் வெற்றிக்கு அடிகோலிவிட்டது. இன்னும் பத்தாண்டுகள் தான் இந்த ராஜியத்தை ஆளப்போகிறான். பிறகு தானும் இதுபோல் தோற்றுத் தேம்பும்பொழுது வேறொரு இளைஞன் தன்னை இதே போல் இரக்கத்தோடு பார்ப்பான்.

ரேவந்த் சந்தடியின்றி அங்கிருந்து வெளியேறியவன் தனக்குள் எண்ணிக் கொண்டான், வெற்றியே நீ வரும் போது உச்சாணியில் ஏற்றி வைத்து விடுகிறாய். போகும் போதோ பாதாளத்தில் தள்ளிவிட்டுப் போகிறாய். இது உனக்கே அடுக்குமா?'



''கங்கிராஜுலேஷன்ஸ்''

''தாங்க்யூ''

''ஹாய் ரேவந்த்—கங்கிராட்ஸ்''

''கங்கிராட்ஸ் மிஸ்டர் ரேவந்த்''

''தாங்க்யூ சார்''

அவன் தலை குனிந்தபடி பாராட்டியவர்களைப் பார்த்து நன்றி கூறிக் கொண்டே படியேறிக் கொண்டிருந்தான்.

'பெனின்சுலா ப்ரொடக்ஸ்' நான்காம் மாடியிலிருந்தது. அதுதான் அவன் ஆபீசு. அதில் ரேவந்த் டெம்புடி சீஃப் எக்ஸிகியூடிவ்.

அவன் தன் சேம்பருக்குள் அடியெடுத்து வைத்தபொழுது மேனேஜிங் டைரக்டர் அழைத்ததாய் செய்தி வந்தது. போனான்.

''கங்கிராஜுலேஷன்ஸ். காலையில் பேப்பரில் பார்த்தேன்'' என்றார் அவர். தாங்க்யூ சொன்னான் ரேவந்த்.

''உன்னால் கம்பெனிக்குக் கூட நல்ல விளம்பரம் கிடைத்துடுத்து ஓய்''

ரேவந்த் மௌனமாயிருந்தான்.

ஒரு மாபெரும் போட்டியில் தன் ஊழியன் பெற்ற வெற்றியைக் கூட வியாபாரக் கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடிய அவருடைய வியாபார மூளையை அவனால் மனதிற்குள் வாழ்த்தாமலிருக்க முடியவில்லை. அவர் மட்டும் வியாபாரத்தை விட்டுவிட்டு சதுரங்கம் ஆடத் தொடங்கியிருந்தாரானால் என்றோ உலகச்சாம்பியனாகி விட்டிருப்பார்.

அங்கிருந்து ஜெனரல் மேனேஜரின் அறைக்குள் நுழைந்தான் ரேவந்த். அவரிடம் ரேவந்திற்கு நெருங்கிய பழக்கமுண்டு. அவர் எப்பொழுதும் பிசியாய் இருப்பார். வேலையைத் தவிர வேறெதையும் பொருட்படுத்தமாட்டார்.

''வாப்பா வா! எதிலேயோ பரிசு வந்ததாய் கேள்விப்பட்டேன். எதில்?...காரம்போர்டா?'' ஃபைலைப் பார்வையிட்டுக் கொண்டே கேட்டார் அவர்.

''இல்லை சார், சதுரங்கம்''

''ஓஹோ? வெரிகுட். உன் பேரைக் கொட்டை எழுத்தில் எழுதியிருந்தாங்களே, நீ டீம் கேப்டனா?''

''இல்லை சார், சதுரங்கம் இரண்டே பேர்தான் ஆடுவாங்க''

''ஓஹோ? அப்படின்னால் யாரோடு ஆடி ஜெயித்தாய்?''

''போலஸ்ன்க்கீன்னு ஒருத்தர்...உலகச் சாம்பியன் சார்'' ரேவந்த்தின் குரலில் கர்வம் பொங்கி வழிந்தது.

''அவர் இங்கே எங்கே வந்தார்?''

''இல்லை சார், நான்தான் போனேன்''

''எங்கே?''

''ரஷ்யாவுக்கு''

''வாட்? எப்பொழுது??''

''நீங்கதானே சார் போன வாரம் எனக்கு லீவு கொடுத்தீங்க?''

''ஆமாம், அதுசரி, ரஷ்யாவுக்கு ஏன் போனாய்?''

''சதுரங்கம் டோர்னமெண்டிற்கு சார்''

''டோர்னமெண்ட்டா? ஓஹோ? அப்படின்னால் உங்க டீம் வெற்றி பெற்றுடுத்துன்னு சொல்லு? குட்.''

ரேவந்திற்குத் தன் மேலேயே தனக்கு இரக்கம் பிறந்தது. இனி இவரோடு பேசிப் பலனில்லை என்று எழுந்திருந்தான், அவன் வெளியே போக அடியெடுத்து வைத்தபோது, ''.....என்ன வெளியிலே ரொம்பப் பேர் கூடியிருக்காங்க போலிருக்கே?'' என்று கேட்டார்.

''இன்னிக்கு இன்டர்வ்யூ சார்'' என்று ரேவந்த் நினைவு படுத்தினான்.

''ஓ, ஆமாம். அந்த விஷயத்தையே மறந்துட்டேனே! இன்னிக்கு பதினோறு மணிக்கு மீட்டிங் வேறே இருக்கே,

எப்படி?'' அவர் தனக்குள் சொல்லிக் கொள்வது போல முணுமுணுத்துக் கொண்டார். ரேவந்த் பதில் பேசாமல் வெளியே வந்துவிட்டான்.

அவன் தன் சேம்பருக்குள் நுழைந்தபொழுது அங்கு உட்கார்ந்திருந்த ஜேம்ஸ் அவனைப் பார்த்துச் சிரித்தான். சாதாரணமாய் கங்கிராஜுலேஷன்ஸ் சொல்லிக் கொள்வதைக் காட்டிலும் அதிகப்படியான சிநேகமே அவர்களிருவருக்கும் இருந்து வந்தது. ஜேம்ஸ் ,பெனின்சுலா ப்ரொடக்ஸ் மார்க்கெட்டிங் மேனேஜர்.

ஜேம்ஸ் ஐந்தடி ஆறங்குல உயரமும், உயரத்திற்குத் தகுந்த பருமனுமாய் களை பொருந்திய முகமும் கொண்டவன். அலட்சியமான கண்கள். அந்த அலட்சியம் பத்தாவது வயதில் அவன் தாய் அவனை விட்டு ஓடிப் போனதால் வந்து படிந்தது. தந்தை குடிகாரனாகி கவனிக்காமலிருந்ததால் அதுமேலும்வளர்ந்தது. பெண்களின் பால் அவனுக்கு மதிப்பு கிடையாது. அது அவன் தவறில்லை. அவன் உள்ளத்தைத் தொட்டவர்கள் கிடையாது.

விரக்தி மனப்பான்மை அவனுடைய நளினமான உணர்ச்சிகளைக் கொன்றுவிட்டது. குடித்தால் இரவெல்லாம் குடித்துக் கொண்டேயிருப்பான். இல்லாவிட்டால் நாலைந்து மாதம் அதைத் தொடவே மாட்டான். எவ்வளவோ பேர் கெட்டவர்கள் நல்லவர்களைப்போல வேஷம் போட முயற்சிப் பார்கள். ஆனால் இவனோ வேண்டுமென்றே கெட்டவனாய் தென்படவேண்டுமென்றே பாடுபடுவான். பெண்களிடையே அந்த கெட்ட பெயரை வெகு சீக்கிரத்திலேயே பெற்று விட்டவன் ஆனால் உள்ளத்தின் அடிவாரத்தைத் தோண்டிப் பார்த்தால் மனம் முழுவதும் வெள்ளை. ஆனால் அவ்வாறு பார்க்கும் பொறுமை யாருக்கு இருந்தது? வாழ்க்கையை ஒரு பார்வையாளனாய் இருந்து பார்க்க நேர்ந்த அனுபவத்தால் அந்த அலட்சியத்திலிருந்து ஹாஸ்யம் பிறந்தது. அந்த ஹாஸ்யம் அவ்வப்போது வரைகோடுகளின் உருவத்தில்

வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். பத்திரிகைகளில் அவ்வப் போது அவன் வரைந்த கார்ட்டூன்கள் வெளிவரும். பெனின் சுலா கம்பெனியில் வேலை செய்த எட்டுப் பெண்களுக்கும் அவனைக் கண்டால் ஆகாது.

ரேவந்த் மட்டும் இதற்கு முற்றிலும் வேறுபட்டவன். ஒரு மாபெரும் ஓவியனை நிதானமாய் உட்கார்ந்து வரைந்த ஒரு சித்திரம் போன்றது ரேவந்தின் வாழ்க்கை. மிகவும் சிஸ்டமேடிக் அது. ஐந்து மணிக்கே எழுந்திருந்து ஐந்து மணிநேரம் அந்தச் சதுரங்கத்தோடு ஆடி முடித்து விட்டு ஆபீசிற்கு வரும் அவன் அந்தரங்க உள்ளமானது ஆகாயத்தைப் போல நிர்மலமானது. தோற்றமோ தாமரையைப் பழிக்கும்கோமளம். பதவியின் பெயரில் அதிகாரத்தையும் ஹோதாவிற்காக வெட்கத்தையும் பூசிப்பவனல்ல.

இரு வேறு துருவங்கள் இணைந்தாற் போலிருந்தன அவ்விருவரின் சிநேகமும்.

''ஏர்போர்ட்டுக்கு வந்தேன். ஆனால் நான்வரத்துக்குள் விமானம் கிளம்பிப்போய் விட்டது'' என்றான் ஜேம்ஸ்.

ரேவந்த் சிரித்துவிட்டு, ''ரெம்பத்தான் சிரமம் எடுத்துண்டிருக்காய்'' என்றான்.

''கொடியை நாட்டிட்டு வந்திருக்காயில்லே?'' ரேவந்தின் முகத்தில் சிரிப்பு ஓடி ஒளிந்தது. மெதுவாய் சொன்னான். ''விமானம் வந்ததுமே என் கண்கள் தேடியலைந்தன... நான் சாதித்ததொன்றும் சின்ன வெற்றியில்லை என்று தெரியும் எனக்கு. நான் அபிமானிகளையும் பூமாலையையும் ஆரவாரமான வரவேற்பையும் விரும்புபவனில்லை. ஆனால் உனக்குத் தெரியுமா ஜேம்ஸ்? சொல்லப் போனால் விளையாட்டு வீரர்களின் சங்கத்து செக்ரட்டரி கூட ஒரு உபச்சாரத்திற்காக வரலை.''

''காரணம் நீ கிரிக்கெட் ஆட்டக்காரனாயில்லாமல் சதுரங்க ஆட்டக்காரனாயிருந்ததாலா?''

''இல்லை—தமிழனாய் இருந்ததுதான்''

நிசப்தத்தைப் பிளந்து கொண்டு வெளிவந்தது வேதனை தோய்ந்த அவன் குரல்—

''நீயும் ஒரு கலைஞன்தான். உனக்குத் தெரியாததா? விளையாட்டு வீரர்களும் சரி, கலைஞர்களும் சரி, சிறு குழந்தையை போன்றவங்க...கடுகளவு உற்சாகம் காட்டினாலும் போதும் பொங்கிப் போயிடுவாங்க. வெற்றியைப் பாராட்டினால் போதும் இரு மடங்கு உற்சாகத்துடன் உழைக்கத் தொடங்கிடுவாங்க. அதுதான் இந்த காலத்தில் வேண்டியது...''

போன் ஒலித்தது.

ரேவந்த் போனை எடுத்துத் தன் வழக்கமான வியாபார தோரணையில் ''ஹலோ'' என்றான்.

மறுமுனையிலிருந்து சட்டென்று பதில் வரவில்லை. அவன் அலுப்போடு மற்றொரு முறை ''ஹலோ'' என்றான்.

''ஹ...ஹல்லோ'' சற்று பயமும், கொஞ்சம் பரபரப்பும் இன்னும் கொஞ்சம் குறும்புத்தனமும் இழையோடிய அழகான குரலொன்று மறுமுனையிலிருந்து கேட்கவே நிமிர்ந்து உட்கார்ந்த ரேவந்த் ''யாரு?'' என்றான்.

''நான்...நான் உங்க ரசிகை. உங்களுக்கு கங்கிராஜுலேஷன்ஸ் சொல்லத்தான் போன் பண்ணினேன்''

''தாங்க்யூ. உங்க பேரு?''கேட்டான் ரேவந்த். அவனுக்கு அவ்வாறு முன்பின் அறியாதவர்கள் போன் பண்ணி பாராட்டுரை வழங்குவது புதிது. அதிலும் ஒரு பெண் போன் பண்ணியது மேலும் புதிய அனுபவம்.

''பேர் எதற்கு?'' என்றாள் அப்பெண்.

ரேவந்த் வியப்புடன் ''ஏன், பேரைச் சொன்னால் என்ன நஷ்டம் வந்துடப் போகுது?'' என்றான்.

''பேரைச் சொன்னால் உங்களுக்கு வரப் போற லாபந் தான் என்ன? உங்களுக்குத் தெரிய வேண்டிய தெல்லாம், ஒரு ரசிகை உங்க வெற்றியைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிக் கிறாள் என்பதொன்றுதானே?'' என்றாள்.

''ஆனால் சொன்னால் எனக்குக் கொஞ்சம் திருப்தியாய் இருக்கும். இந்த மாதிரி பேருடைய ஒரு பெண் போன் பண்ணினாளென்று எப்பவாவது ஞாபகப்படுத்திக்க நன்றா யிருக்குமில்லே?'' என்றான் ரேவந்த்.

ரேவந்த்தின் அவஸ்த்தையைப் பார்த்து விட்டு ''என்ன விஷயம்?'' என்று கேட்டான் ஜேம்ஸ். ரேவந்த் போனை மூடிக் கொண்டு, ''யாரோ ஒரு பெண் வாழ்த்துக்களைத் தெரியப்படுத்துகிறாள்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பப் போனில் ''என்ன, நான் சொன்னது சரிதானே?'' என்றான்.

''என் பேர்'' என்று சொல்ல வந்தவள் நிறுத்திவிட்டு, ''என் பேரின் முதல் எழுத்து ஆங்கிலத்தில் ஆர். அதை கண்டு பிடியுங்கள் பார்ப்போம்'' என்றாள்.

அவன் வியப்படைந்து ''எப்படிக் கண்டு பிடிப்பது?'' என்று கேட்டான்.

''பெரிய சதுரங்க ஆட்டக்காரராச்சே! இது கூடக் கண்டு பிடிக்க முடியாதா? 'ஆர்' என்ற எழுத்தில் தொடங்கும் தமிழ்ப்பெண்களின் பெயர் எவ்வளவு இருந்துடப் போறது?'' ''என்று சிரித்துவிட்டு'' அரைமணிக்கப்பறம் போன்பண்றேன் அதற்குள் முடிந்தவரையிலும் நோட் பண்ணி வையுங்க'' என்று போனை வைத்துவிட்டாள்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு பார்த்தால் சிநேகிதர் களிருவரும் பேனாவையும் காகிதத்தையும் வைத்துக் கொண்டு மண்டையைக் குடைந்து கொண்டிருந்தார்கள்.

ராதா—ராதிகா—ரமணி என்ற மூன்று பெயர்கள் கிடைத்தன. ரேவந்த் தலையை சிலிர்த்துக்கொண்டே, ''ஊஹூம் இதெல்லாம் பிரயோஜனமில்லை'' என்றான். அதற்குள் ஐந்து நிமிஷங்கள் கழிந்து விட்டிருந்தன. அந்த சமயம் பார்த்து ஜெனரல் மேனேஜர் அழைப்பதாய் பியூன் வந்து சொன்னான்.

ரேவந்த் ஜெனரல் மேனேஜரின் அறைக்குள் அடியெடுத்து வைத்தபொழுது அவர் தன் பி.ஏ. யைத் திட்டிக் கொண்டிருந்தார். ''இன்னும் ஒரு மணி நேரத்தில் மீட்டிங்கை வைத்துக்கொண்டு இண்டர்வியூவுக்கு எப்படி ஏற்பாடு பண்ணினாய்'' என்று திட்டிக் கொண்டிருந்தார். ரேவந்த் போய் நின்றதும், ''இதப்பாருப்பா. பதினாறு பேரை இண்டர்வ்யூ பண்ணனுமாம், ஒரே மணி நேரத்தில், நடக்கிற காரியமா இது?'' என்றார்.

ரேவந்த் மௌனம் வகித்தான்.

அவர் சொன்னார். ''இப்ப எதுபண்ணியும் லாபமில்லை, ரேவந்த். கமிட்டி ரூமில் உட்கார்ந்து அவங்களில் நாலுபேரை செலக்ட் பண்ணி. அரை மணியில் இதெல்லாம் முடிந்துடணும்... அப்புறமாய் அந்த நால்வரையும் நான் ஃபைனல் இன்டர்வ்யூ பண்ணிக்கிறேன்...க்விக்...—பதினொரு மணிக்கு எனக்கு மீட்டிங் இருக்கு.'' என்று ஃபைலில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விட்டார்.

ரேவந்த்தும். பி.ஏ.யும் வெளியே வந்தார்கள். அவரால் ஒரு மணி நேரத்தில் பண்ண முடியாதது தன்னால் அரை மணிக்குள் எப்படிப் பண்ணமுடியும் என்றுதான் புரியவில்லை அவனுக்கு. கிடக்கட்டும், ஒரு மணி நேரத்தையும் தனக்கே தந்து அதில் யாரேனும் ஒருவரை செலக்ட் பண்ணச் சொல்லியிருக்கலாமே! ஃபைனல் அத்தாரிட்டியைத் தன் கையில்தான் வைத்துக்கணுமா? அவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

வராந்தா நாற்காலிகளிலும் சோபாவிலுமாய் இண்டர்வ்யூவுக்கு வந்திருந்த நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எட்டு ஆண்களும் எட்டுப் பெண்களும். எல்லோரும் பார்க்க புத்திசாலிகளாய்தான் தெரிந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததுமே அவன் மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது.

போய் கமிட்டி அறைக்குள் உட்கார்ந்து கொண்டு செக்ரட்டரியிடம் அவர்களை அனுப்பச் சொன்னான்.

''ஒவ்வொருத்தராய் அனுப்பட்டுமா?'' செக்ரட்டரி கேட்டான். ''வேண்டாம், எல்லோரையும் சேர்த்து அனுப்பு''

செக்ரட்டரி அவனை வினோதமாய் பார்த்தான். ரேவந்த் அவனுடைய சந்தேகத்தை ஊகித்தவனாய், ''ஒவ்வொருவராய் இண்டர்வ்யூ பண்ண அரைமணி நேரம் போதாது. கூட்டாய் சேர்த்தே இண்டர்வ்யூ பண்ணிடலாம்.'' என்றான்.

செக்ரட்டரி வெளியே போன அடுத்த நிமிஷமே புளுபுளுவென்று விண்ணப்பதாரர்கள் உள்ளே வந்து விட்டார்கள். ''உட்காருங்கள், என்றான் ரேவந்த். நடுவில் மேஜை போடப்பட்டுள்ளது. சுற்றிலுமிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள் அவர்கள்.

ரேவந்த் எழுந்து நின்று தொண்டையை கனைத்துக் கொண்டு பிரசங்கம் பண்ணுவது போல சொல்லத் தொடங்கினான். ''தற்காலத்தில் தேவையான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும், விஞ்ஞான முறைகள் வந்து சேர்ந்துவிட்டன. முன்பு போல சரித்திர, பூகோளங்களில் கேள்விகள் கேட்பது பழைய முறையாகிவிட்டது. அறிவுக்கூர்மையை பரிசோதிப்பதற்கு ஒரு புதிய வழி இண்டெலிஜென்ஸ் கோஷியன்ஸ் டெஸ்ட். அதாவது 'ஐ க்யூ' டெஸ்ட். இப்ப உங்களுக்கு அந்தப் பரீட்சையை வைத்து உங்களில் நால்வரை செலக்ட் பண்ணி ஃபைனல் இண்டர்வ்யூவுக்கு ஜெனரல் மானேஜரிடம்

அனுப்பி வைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளது'' என்று சற்று நிறுத்தினான்.

எல்லோரும் அவன் என்ன சொல்லப்போகிறானோ என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் சொல்லத் தொடங்கினான். ''..... ஐக்யூ டெஸ்ட்டில் என்ன வேண்டு மானாலும் கேட்கலாம். கணக்கு, நிறவேற்றுமை இது போன்றவைகளைக் கேட்கலாம். ஆனால் 'பெனின்சுலா ப்ரொக்டர்' தமிழ் மக்களுக்கு பிடித்தமானது. முக்கியமாய் தமிழ்ப் பெண்களுக்கு! அதனால் உங்களுக்கு ஒரு பரீட்சை வைக்கிறேன். உங்களுக்கு தெரிந்த தமிழ்ப் பெண்களின் பெயரை எத்தனை முடியுமோ அத்தனை எழுதுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை. பெயரின் முதல் எழுத்து 'ஆர்' என்று தொடங்க வேண்டும். உங்களுக்கு பதினைந்து நிமிஷங்கள் தரப்படும். அதற்குள் அதிகப் பெயர்களை எழுதியவங்க நால்வரை ஃபைனல் இண்டர்வ்யூவுக்கு அனுப்பப்படும்.'' அதற்குள் இரண்டு மூன்று பேர் எழுதத் தொடங்கி விட்டதால் அவன் மௌனமானான். சிலருக்குச் சட்டென்று புரியவில்லை. ஒரு நிமிஷங் கழித்து மூளை வேலை செய்யத் தொடங்கி மளமளவென்று எழுதத் தொடங் கினார்கள்.

முதல் ஐந்து நிமிஷங்கள் வரை யாருமே குனிந்த தலை நிமிராமல் எழுதிக் கொண்டேயிருந்தார்கள். பிறகு நிமிர்ந்து மேற்கூரையைப் பார்த்துக் கொண்டும், நகத்தைக் கடித்துக் கொண்டும், யோசித்தபடியும், ஓரக்கண்களால் அடுத்த வர்கள் பேப்பரைப் பார்வையிடவும் தொடங்கிவிட்டார்கள். நிறையப் பேர் பத்துப் பதினோறு பெயர்களுக்குமேல் எழுத வில்லை. ஒரே ஒரு பெண் மட்டும் நிறைய எழுதியிருந்தாள்

எல்லோரையும் விட அதிகமாய் எழுதியிருந்த நால்வரைப் பொறுக்கி ஃபைனல் செலக்ஷனுக்காக ஜெரனல் மானேஜ ரிடம் அனுப்பிவிட்டு அக்காகிதங்களை எடுத்துக் கொண்டு தன் சேம்பருக்கு வந்தான். அந்தப் பெண்ணிடமிருந்து போன் வர இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன.

சேம்பரில் உட்கார்ந்திருந்த ஜேம்ஸ் ''என்ன இவ்வளவு நேரமாயிடுத்தே?'' என்று கேட்டான். ரேவந்த் தான் பண்ணிய காரியத்தைச் சொன்னான். ஜேம்ஸ் அதிர்ச்சி யடைந்தவனாய், ''குட்! உண்மையில் உன் மூளையே சதுரங்க மூளைதான்'' என்றான். ரேவந்த் முறுவலுடன் ''எல்லாம் சேர்ந்து கிடைத்த பெயர்கள்'' என்றான் தன் கையிலிருந்த காகிதங்களைக் காட்டி. பிறகு அப்பெயர்களை யெல்லாம் வரிசைப்படுத்தி எழுதிக் கொள்ளவும் போன் ஒலிக்கவும் சரியாயிருந்தது.

''என்ன, கண்டு பிடித்துட்டீங்களா?'' மறுமுனை யிலிருந்து மெல்லிய சிரிப்புடன் அப்பெண் கேட்டாள்.

''ஆங்...நிறைய பெயர் இருக்கு.''

''சொல்லுங்கள்...அதில் என் பெயர் இருந்தால் இன்றே உங்க ஆபீசுக்கு நேரிடையாய் வந்து பாராட்டுகிறேன். சதுரங்கத்தில் ஜெயித்ததற்கு இல்லை. நான் வைத்த போட்டியில் ஜெயித்ததற்கு.''

ரேவந்த்தின் முகம் கோபத்தால் சிவந்தது. ''அத்தனைக் கஷ்டமாயிருக்காதுன்னு நினைக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உங்க முழுப் பெயரையும் என்னால் சொல்ல முடியாமல் போகலாம். உதாரணமாய் உங்க பேர் 'ரமணீப்ரியான்னு' வெச்சுக்குங்க. நான் 'ரமணீ'ன்னு சொன்னாலும் அது கரெக்ட்தான்'' என்றான்.

''ஓ.கே.''

ரேவந்த் தான் தயாரித்த லிஸ்டிலிருந்த பெயர்களைப் படிக்கத் தொடங்கினான்.

''ராதா.''

''இல்லை.''

''ரஜனி.''

''இல்லை.''

ஜேம்ஸ் மூச்சை அடக்கிக் கேட்டுக்கொண்டிருந்தான்.

''ராஜலட்சுமி...ரோஜா...''

மறு முனையில் சிரிப்பு. ''இரண்டாவது தமிழ்ப் பெயர் இல்லை. என்னுது அசல் தமிழ்ப் பெயர். ஏதாவது பாலச்சந்தரோ அல்லது பாரதிராஜாவோ கேட்டால் போதும்; சட்டென்று சினிமாவுக்கு வைத்துடக் கூடிய பெயர்'' என்றாள்.

''ரங்கம்மா, ரௌடி ரங்கம்மா'' வெறுப்போடு சொன்னான். மறுமுனையிலிருந்து தாங்கமுடியாத சிரிப்பொலி.

''....இல்லை'' என்றாள் அப்பெண்.

அவன் கடகடவென்று படிக்கத் தொடங்கினான்.

''ராமேஸ்வரி, ராமலட்சுமி, ராகினி, ரதி, ரமாப்ரபா, ராஜசுலோச்சனா, ரத்னப்ரபா, ரத்னகுமாரி, ரங்கமணி, ரமாமணி, ரோஹிதா, ராகசந்திரிகா, ரோகினி, ராணி, ரங்கம், ரங்கவல்லி, ராமசீதா, ராஜநர்த்தகி, ரீதிகௌள ரசன, ரூபா, ரஜிதா, ருக்மணி, ரஞ்சிதா, ராதிகா, ரசிகா, ரேணுகா, ரேவதி, ருத்ரா, ராகமயி, ராகவல்லி, ரம்பா, ரீமா, சகுநந்தினி, ராஜஸ்ரீ, ரசமயி...''

''ஊஹூம்...இதொன்றுமே இல்லை.''

ரேவந்த்திற்குக் கோபம் வந்தது. ''...ராவுலம்மா ராமாயம்மா, ரமம்மா, ருத்ரம்மா, ராமபத்ரம்மா'' என்றான்.

அந்தப் பக்கத்திலிருந்து வெறுமே ''இல்லை'' என்ற பதில் வந்தது.

''சினிமா நடிகைகள் ராக்கீ-ரேகா''

''ஊஹூம்,''

''ஆயுர்வேத மருந்துகள்—ரத்னாவளி, ராஜரத்னா, ராஜிவா.''

''ஹோமியோபதியை ட்ரை பண்ணுங்க.''

அவன் உதட்டைச் சுளித்து,ரஸனா,-ரைனா- ரஸ்மோ-சாங்'' என்றான். அதற்குள் பக்கத்திலிருந்த ஜேம்ஸ், ''ரசிகப்ரியா'' என்று எடுத்துக் கொடுத்தான். ''ஆங்... ரசிகப்ரியா, ரமணி, ரதி'' என்றான் ரேவந்த். மறுமுனையில் போன் 'கட்' ஆகிவிட்டது.

ரேவந்த் அதிர்ந்தவனாய், ''அந்தப் பெண்ணுக்கு கோபம் வந்துடுத்துப் போலிருக்கு, ஆபாசமான பேரைச் சொல்லிட்டாமே பின்னே'' என்றான்-'ரதி' என்றால் 'கலவி' என்று பொருள் உண்டு என்றுணர்ந்து. அதற்குள் வெளியே கதவு தட்டிய ஓசை கேட்டது.

''மே ஐ கமின் சார்?''

''எஸ் ப்ளீஸ்''

இண்டர்வ்யூவில் எல்லோரைக் காட்டிலும் அதிகமார்க்கு வாங்கிய் பெண் உள்ளே வந்தாள். அவன்முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. நான் செலக்ட் ஆயிட்டேன் சார்'' என்றாள்.

ரேவந்த் சிரித்துவிட்டு, ''கங்கிராட்ஸ்! நீங்க எல்லா பேரையும் எழுதினப்பவே தோணிடுத்து எனக்கு, நீங்க கண்டிப்பாய் செலக்ட் ஆயிடுவீங்கன்னு. உங்களுக்கு 'ஐ க்யூ' ஜாஸ்தி.'' என்று பாராட்டினான் அவள் அறிவுக்கூர்மையை ஜேம்ஸ் குறுக்கிட்டு. ''கால் மணிநேரத்தில் பதினாறு பேரில், வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்க எங்க ரேவந்த் தன் புத்திக்கூர்மையைப் பயன்படுத்திக் கண்டுபிடித்த 'ஐ க்யூ' இது என்று ரேவந்த்தைப் புகழ்ந்தான்.

அவள் பக்திப் பூர்வமாய், ''எங்கப்பாவையே கொண்டிருக்கீங்க நீங்க'' என்றாள்.

''அவர் என்ன பண்ணுவார்?'' கேட்டான் ரேவந்த்.

''நாமகரணம் வைக்கும்போது பிறந்த நட்சத்திரத்தை வைத்துண்டு பெயர் வைக்கும் புரோகிதர் அவர் சிநேகிதர் களிருவருக்கும் 'திக்'கென்றது. ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். ரேவந்த் உடனே தேறியவன் ''ஐக்யூவில் என்னங்க இருக்கு? உங்களுக்கு அதிர்ஷ்டமும் சேர்ந்திருக்கு'' என்றான்.

''அது சரி, உங்க பேர் என்ன?'' கேட்டான் அவளை.

''ராமசிலுக! என் நட்சத்திரத்துக்கு அந்த ஒருபேர்தான். பொருந்தியிருக்காம்.''

3

சுமார் நான்கு நாட்கள் போன் வரவேயில்லை. முதல் நாள் நினைவிருந்தாலும் பிறகு அதைப்பற்றியே மறந்து விட்டான் ரேவந்த். நான்காம் நாள் மாலை வேலை முடியும் தறுவாயில் திரும்பவும் போன் வந்தது-

அப்பெண் ஏதோ சொல்ல வருவதற்குள்ளாகவே ரேவந்த் ''நீங்க என்னை மன்னிக்கனும்'' என்றான்.

''எதுக்கு?''

''அன்று கடைசியாக போனில் 'ரதி'ன்னு அசிங்கமாய்ப் பேசிட்டேன்'' அவள் கொஞ்சநேரம் மௌனமாய் இருந்து விட்டுப்பிறகு சொன்னாள் ''இதிலொன்றும் வியப்பில்லைன்னு நம்பறேன் நான். ஒவ்வொரு மனிதனிடமும் அந்த பெரானா யிட் சைக்காலஜி கொஞ்சமாவது இருக்கத்தானே செய்யும்? முக்கியமாய் கலைஞர்களிடம் அது அதிகமாகவே இருக்கும்.

அடுத்தவங்களை ஆழம் பார்க்கிற குணம். உதாரணத்துக்கு, நான் உங்களுக்குப்போன் பண்ணினேன். ஏன் பண்ணினேன்? எல்லோரையும் போலவே பேப்பரில் விஷயத்தைப் படித்து விட்டுச் சும்மாயிருந்திருக்கலாமில்லே? நான் உங்கமேல்காட்டு கிற இந்த அன்பிற்குப் பின்னால் ஏதாவது இருக்குமாங்கற சந்தேக மேற்பட்டதால் எல்லாக் கோணங்களையும் தாண்டி, இன்னும் குறும்புத்தனத்தைப் பண்ணித் தீர்த்துக்கிட் டீங்க. இத்தனைக்கும் காரணம் நான் ஒரு பெண் என்றதால் வந்த சிக்கல்தான்.'' ரேவந்த் கலவரமடைந்தவனாய், ''என் எண்ணம் அதில்லை'' என்றான்.

''உங்களுக்கில்லாவிட்டால் உங்களுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துண்டு உங்களுக்குப் பேரை எடுத்துக் கொடுக்கும் உங்க சிநேகிதர்க்கு இருக்கலாமில்லையா? ரேவந்த் அதிர்ந்த வனாய் ''என் பக்கத்தில் சிநேகிதன் இருந்தது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டான்.

''உங்க டெலிபோனில் மௌத் பீஸ் ட்ரான்ஸ்மீட்டருக் கருகிலுள்ள ஒலியலைகளை மின்சக்தி அலைகளாய் மாற்றி விடக்கூடிய சக்தி என்னிடமுள்ள போன் ரிசீவரின் மேல் பாகத்தில் நான்றாய் பொறுத்தப்பட்டிருக்கும் டயா.ர்.பர் மூக்கு உண்டு. அது காற்றலைகளை ஒலியலைகளாய் மாற்றி விடவல்லது. மூன்று நான்கடி தூரத்திலிருந்தே ஒலிகளை கிரகிக்கும் வழக்கம் ட்ரான்ஸ்மீட்டருக்கு உண்டு. அதனால் அந்த ஆள் உங்களுக்கு அருகில் உட்கார்ந்திருப்பவராய்த் தான் இருக்கவேண்டும்...ஒரு நல்ல பதவியிலிருக்கும் ஒரு ஆபீசருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ரசிகப்ரியா என்ற பெயரை எடுத்துக் கொடுக்கக் கூடிய ஒரு ஆள் நிச்சய மாய் அவருக்கு சிநேகிதராய்த்தான் இருக்கவேண்டும். அது மட்டுமில்லை. வாழ்க்கையை மிக அற்பமாய் பாவிக்கும் ஒரு வராயிருக்கவேண்டும்என் ஊகம் சரிதானே?'' அவள் அம்மாதிரி மனித மனதின் ஆழத்தை ஊடுருவிப் பார்த்துச் சொல்லிவிட வல்லவள் என்றெண்ணியிராத அவன் ஆச்சரியமடைந்த

வாய் தன்னையறிமால் ''கரெக்ட்'' என்றான். தொடர்ந்து ''அன்றைக்கு உங்களை ரசிகப்ரியா என்று சொன்னது தப்போன்னும் யாரோ ஒரு பெண் போன் பண்ணியதை சாக்காய் வைத்துண்டு சில்லியாய் நடந்துக்கிட்டேனோன்னும் இந்த மூன்று நாளும் ரொம்ப வருத்தப்பட்டேன். உங்க மனது துன்பப்பட்டாலும் மறுபடியும் போன் செய்து இதைப் பற்றி விவரித்ததால் என் குற்றமனப்பான்மையைப் போக்கிட்டீங்க, தாங்க்ஸ். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிடறேன் ... என் நண்பன் அந்தப் பெயரை எடுத்துத் தந்திருக்காவிட்டாலும் இன்னும் நாலைந்து தடவை நீங்க போன் பண்ணியிருந்தால் நானே சம்பாஷணையை அந்தக் கோணத்துக்குக் கொண்டு வந்திருப்பேனோ என்னவோ; இதைச் சொல்ல வெட்கப்படுகிறேன். ஆனால் லெட்மீ பீ..பிராங்க் என்றான் நட்போடு. அவள் சொன்னாள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே ஏற்படும் நட்பில் இந்த சங்கதி—அதாவது அடுத்தவரிடமிருந்து எதை எதிர்ப்பார்த்து நட்புக் கொள்கிறார்கள் என்ற சங்கதி என்றாவது ஒருநாள் தோன்றாமல் போகாது. பதினெட்டு வயது பக்குவப்படாத இளைஞர் இளம்பெண்களிடையே சிநேகமானது உற்சாகம் ஆவேசம் ஆத்திரம் படபடப்பு முதலிய சென்ட்டிமென்ட்டுகள் நிரம்பியதாதலால் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டாம். நமக்கிடையே இந்த உறவு இவ்வளவு சீக்கிரத்தில் வந்து விட்டதற்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. இல்லாவிட்டால், அடிக்கடி போன் பண்ற இந்தப் பெண் எப்படிப்பட்டவள்னு ஒரு கை பார்ப்போம்னு உங்க வார்த்தையில் என்றாவது ஒருநாள் தோன்றி அதனால் சீ நான் சிநேகம் செய்ய விரும்பியது இந்த மாதிரி ஒரு ஆளா'? என்ற கெட்ட எண்ணம் பிறக்க வழிஏற்பட்டுவிடும். பாருங்க எவ்வளவுபெரிய கம்யூனிகேஷன் கேப்பை நாம் இவ்வளவு குறுகிய காலத்திற்குள் கடந்து விட்டோம்னு ஆச்சர்யமாயிருக்கு.

அவள் வாதத்தைக் கேட்டு மெய்சிலிர்த்த அவன் எனக்கு உங்களைப் பார்க்கனும்னு இருக்கு என்றான்.

அக்குரலிலிருந்த நட்பை உணர்ந்த அவள் "கண்டிப்பாய் சந்திப்போம். ஆனால் கொஞ்ச காலம் போகட்டும். ஒருவரை யொருவர் உண்மையான சிநேகிதர்களாய் புரிந்துகொண்ட பிறகு சந்திக்கலாம்."

அவன் ஏதோ சொல்ல வருவதற்குள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த நேரத்தில் "என்ன அந்தப் பெண்ணேவா?" என்று கேட்டான். ரேவந்த் தலை யாட்டவே போனை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு "ஹலோ எப்படியிருக்கே?" என்று ஒருமையில் அவளை விளித்ததைக் கண்டு ரேவந்த் திடுக்கிட்டு நிமிர்ந்தான். ஜேம்ஸ், "எனக்குத் தெரியும் இந்தப் பெண் திரும்பிப் போன் பண்ணுவாள்னு" என்ற பொருள்பட அவனைப் பார்த்தான்.

"நீங்க சௌக்கியமா?" மறுமுனையிலிருந்து கேட்டது

"எதுக்கு டெலிபோனில் இந்தக் குசலப் பிரச்னை யெல்லாம்? நேரில் வந்து சந்திக்கலாமே?" சற்று பழிப்பது போல சொன்னான் ஜேம்ஸ்.

"நீங்க சந்திக்கத் தகுந்த பெரிய மனுஷங்கதானான்னு தெரிந்து கொள்ள வேண்டாமா?"

ஜேம்ஸ் வியந்து, "அப்படியென்றால் ஏன் இந்த மாதிரி போன் பண்ணி நேரத்தைப் பாழடிக்கணும்?" என்றான்.

"சிநேகம் பண்ணிக்கத்தான்." என்றாள்.

"இதோபாரும்மா, நான் பத்தாண்டுகளாய் கார்ட்டூன் களைப் போட்டுண்டிருக்கிறவன். பத்திரிகைகளில் என் பெயர் நிறைய வந்திருக்கு. பெண்கள் கடிதம் போட்டு உங்களோடு பென்ஃபிரன்ட்செய்துக்க விருப்பமாயிருக்கும்பாங்க. பைதிபை நீ என்ன படித்திருக்கிறாய்?"

"பத்தாங்கிளாசு பெயில்" சிரிப்பை அடக்கிக் கொண்ட குரல்.

''உன் பொழுது போக்கு?''

''ஸ்டாம்ப் சேகரிப்பது, சினிமா பார்ப்பது''

''உனக்குப் பிடித்த நடிகர்?''

சொன்னாள்.

''இப்ப நான் சொல்றேன், கேளு. எங்க ரேவந்த் எம்.பி.ஏ. பஸ்ட் ராங்க். அவன் சதுரங்க சாம்பியன். பிடித்த நடிகர்களின் புகைப் படங்களை சேகரித்து வைப்பது போன்ற சின்னப் பசங்களின் பொழுது போக்கையெல்லாம் தாண்டி பதினைந்து வருடமாகிவிட்டது. அவன் எப்பவாவது பொழுது போகாமல் புத்தகங்களைப் பாடித்தானானால் அவை, 'ஆசிமோவ்'-'ஆந்தர் க்ளார்க்'-இப்படிப்பட்டவங்களுக்குக் கீழ் தொடவும் மாட்டான். அப்படிப்பட்டவனோடு நீ எதுக்குப் போய் சிநேகம் செய்துக் கனும்? ஒரு மாதங்கழித்துச் சந்தித்துக் கொண்டால் எந்தப் பிளேளில் உங்களால் சந்தித்துப் பேசமுடியும்? அல்லது உங்களை ஒன்றிணைக்கப் போவதுதான் எதுங்கறேன்?''

''ஆமாம். அப்படின்னால் என்ன பண்ணலாம்?'' அப்பாவியாய் கேட்டாள் அவள்.

''அதற்காகத்தான் உடனே எங்கஆபீசுக்கு வாங்கறேன், வம்பு பேசிக்கலாம்.''

''அப்ப மட்டும் எங்க சம்பாஷணை எந்த பிளேனில் நடந்துடும்? அவர் பேசும் விஷயம் எதுவும் எனக்குத் தெரியாதல்லவா?''

''குறைந்தது நீ எப்படி இருக்கிறாய் என்றாவது தெரிந்துக்கலாம். இப்படிப் பச்சையாய் பேசறத்துக்கு ஒன்றும் நினைச்சுக்காதே. கலைஞர்களுக்கு உற்சாகமளிப்பது அழகான பெண்கள்தான்! குறைந்தது உங்களுக்கு அந்த 'அழகு' என்ற தகுதியாவது இருந்ததானால் உங்க பரிச்சயம் சிநேகமாய் மாற வழியுண்டு.''

ரேவந்த் நாற்காலியிலிருந்து ஒரே துள்ளலில் குதித்து எழுந்து நின்று, ''ஜேம்ஸ், என்ன இது? உனக்கு புத்தி பிசகிடுத்தா என்ன?'' என்றான். ஜேம்ஸ அதைப் பொருட் படுத்தவில்லை.

''ஒரு பெண்ணோடு சிநேகம் கொள்ள அவள் அழகை மட்டுந்தானா பார்ப்பாங்க...'' மறுமுனையிலிருந்து கேட்டது.

''சமமான புத்தி சாதுரியம் இருந்தால் நல்லதுதான். அது இல்லாத பட்சத்தில் நமக்கெதிரே இருக்கும் பத்து பொம்மைகளுள் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளச் சொன்னால் அழகானதைத்தானே பொருக்கி எடுத்துப் போம்? என்னைப் பொருத்தவரை பெண்களுக்கு அழகைத் தவிர வேறெந்த தகுதியும் வேண்டாம். ஏதோ ஒரிருவரைத் தவிர...''

''ஜேம்ஸ்! ஜேம்ஸ! ஜேம்ஸ்! என்ன பேசறநீ? போனை இப்படிக் கொடு.'' ரேவந்த் இந்த சம்பாஷணையை தாள மாட்டாமல் கத்தினான்.

''உங்களைப் பார்த்தால் இரக்கமாய் இருக்கு'' என்றாள் அப்பெண். தொடர்ந்து, ''உங்க சிநேகிதர்கள் எல்லோருமாய் சேர்ந்து உங்களுக்குப் பெண்களின் மேலும் நட்பின் மேலும் கெட்ட அபிப்பிராயம் விழும்படி செய்திருக் காங்க. என் ஊகம் நிஜமாயிருந்தால் உங்களுக்குத் தாய் தந்தையர் இல்லாமலிருந்திருக்க வேண்டும். ஒரு வேளை இருந்தாலும் அவர்களோடும் வீட்டில் இருக்கும் யாரோடும் உங்களுக்கு நல்லுறவு இல்லாமலிந்திருக்கணும். தனிமையின் கொடுமையிலிருந்து சினிசிஜத்தை நோக்கிப் போயிண்டிருக் கீங்க நீங்க''

மென்மையாய் வந்து தாக்கிய அவ்வார்த்தை ஜேம்ஸின் முகத்தை வெளுக்கச் செய்தது. அவள் சொன்னதெல்லாம் உண்மையாயிருந்ததால் அவன் சிலையாய் நின்றுவிட்டான். ரேவந்த் டெலிபோனை அவனிடமிருந்து பிடுங்கிக்

கொண்டு, ''என்னவாச்சு'' என்று கேட்டான். மறுமுனையிலிருந்து அப்பெண்ணின் குரல் கேட்டது. ''சின்ன ஷாக்-ட்ரீட்மென்ட் தந்தேன்.''

ரேவந்த் சொன்னான் ''நீங்க யாருன்னும் உங்கபேரென்னன்னும் எனக்குத் தெரியாது. ஆனால் என் நண்பனின் சார்பில் நான் மன்னிப்புக்கேட்டுக்கறேன், மன்னிச்சுக்குங்க.''

''அவர் சொன்னதில் எந்தத்தப்பும் தோணலை எனக்கு. நீங்க இன்டர்நேஷனல் செஸ் பிளேயர். உங்களோடு தொடர்பு கொள்ள நிறைய பேருக்கு ஆசை இருக்கும். ஆனால் என் ஸ்டாண்டர்டையும் நான் யோசித்துப் பார்த்துக் கணுமில்லே? நீங்க என்னவோ ஹெமிங்வேயிலிருந்து ஜாபால்சாத்ரே வரைக்கும் படித்தவங்க. நானோ வீட்டில் பல்லாங்குழி ஆடுபவள். என்னோடு நட்பு கொள்ளுங்கன்னு நான் வந்து கேட்டால் உங்களுக்கு தொந்தரவாய்த் தானே இருக்கும்? என்னிடமுள்ள ஒரே ஒரு ஆயுதம் அழகு தான். சிநேகமானது சமமான அந்தஸ்தில் இருக்கவேண்டுமாதலால் உங்க அறிவுக்கூர்மையை என் அழகோடு சமப்படுத்திக்கனும் என்று உங்க சிநேகிதர் ஆலோசனை வழங்குகிறார்.''

ரேவந்த் வருத்தமாய், ''நீங்க கேலி பண்றீங்க, எங்களை மன்னிக்கும்படி சொன்னேனே'' என்றான்.

''நான் கேலி பண்ணலை ரேவந்த் சார். எங்க சிநேகிதரின் மனத்தத்துவத்தைப் பிட்டுச் சொல்றேன். அவ்வளவு தான்.....''

அதுவரையிலும் மௌனமாய் ஏதோ யோசித்துக் கொண்டிருந்த ஜேம்ஸ் முன்னுக்கு வந்து ''போனை ஒரு நிமிஷம் என்னிடம் கொடு'' என்றான். அவன் குரலில் தென்பட்ட நெகிழ்ச்சிக்கு ரேவந்த் வியப்படைந்தான். போனை நீட்டினான்.

''ஐயம் ரியலி சாரி சிஸ்டர்'' என்றான் ஜேம்ஸ். அவள் போனில் வீரிட்டுக் கத்தாத குறையாய் ''இதென்ன தீடீர்னு என்னைத் தங்கையாக்கிட்டீங்க?'' என்றாள்.

''நோ ஜோக்ஸ்; நான் சீரியசாய் சொல்றேன்.

ரேவந்த் போனைப்பிடுங்கிக்கொண்டு,'' அவன் சொல்லி விட்டானானால் அதற்கு அப்பீலே கிடையாது. அவன் வாயால் இதுவரை யாரையுமே சிஸ்டர்னு சொன்னதில்லை. நீங்க உடனே ஒத்துக்குங்க'' என்றான்.

''.....சரி''

''தாங்க்யூ, ஆனால் ஒரு சந்தேகம் எனக்கு''

''என்ன?''

''ரசிகப்ரியா என்று உங்களை அவமானப்படுத்தி விட்டோம். என் நண்பனும் உங்களை ஒருமையில் அழைத்து விட்டான். சம்பாஷணைகள் மிகவும் தடித்துப் போய்விட்டது. அப்படியும் உங்களுக்கு ஏன் கோபம் வரவில்லை?''

''எனக்குக் கோபம் வருவதே ஒழிந்து போய் சுமார் ஆறு மாதமாகிறது.''

''என்னது. ஏன்?''

''இந்த ஒரு கேள்விக்கு மட்டும் பதிலை நாம் சந்திக்கும் போது சொல்கிறேன் மிஸ்டர் ரேவந்த். என்னை பலவந்தப் படுத்தாதீங்க'' அவள் குரல் ஏனோ நடுங்கிற்று.

அவன் பேச்சை மாற்றியபடி, ''சரி, நாம் சந்திக்கப் போறது தான் எப்பொழுது என்று கேட்டான்.

''சந்திக்கணும்னு இருந்தால் இன்றே கூட சந்திக்கலாம் நான் எந்த போன் நம்பரிலிருந்து பேசறேன்னு கண்டுப் பிடித்துவிட்டால்.....'' என்றாள்.

ரேவந்த் ஆர்வத்துடன், ''எங்கேயிருந்து பேசறீங்க?'' என்று கேட்டான்.

''பப்ளிக் போனிலிருந்து.''

''அப்படியென்றால் எப்படிக் கண்டு பிடிப்பது'' திகிலோடு கேட்டான் ரேவந்த்.

''நான் இந்த பூத்திற்கருகிலேயே போனை வைத்து விட்டு இரண்டு நிமிஷம் காத்துட்டிருக்கேன். அதற்குள் நான் தரும் குறிப்புக்களின் மூலம் இந்த நம்பரை கண்டுப்பிடித்துத் திரும்பவும் போன்செய்தீர்களானால் உடனே உங்க ஆபீசுக்கு வருகிறேன். பேரைத்தான் எப்படியும் கண்டுபிடிக்க முடிய வில்லை உங்களால். குறைந்த பட்சம் நம்பரையாவது கண்டு பிடியுங்க...சீக்கீரம் கண்டு பிடியுங்க...ஒரு அழகான பெண் ணோடு இன்று மாலையில் தேனீர் அருந்தலாம்.....''

''அந்தக் குறிப்பைச் சீக்கிரம் சொல்லுங்க.''

''இந்த டெலிபோன் நம்பரின் மொத்தம் ஆறு எண்களில் முதல் எண்ணைவிட இரண்டாவது இரண்டு அதிகம். இரண் டாம் எண்ணைவிட மூன்றாம் என் மூன்று அதிகம். மூன்று நான்காம் எண்களுக்கிடையேயுள்ள வித்தியாசம் எட்டு. நாலாம் எண்ணை இரண்டால் பெருக்கினால் ஐந்தாம் எண் வரும். அதை இருமடங்காக்கினால் ஆறாம் என்... க்விக் இன்னும் இரண்டே நிமிஷம்தான் பாக்கி'' அவள் வார்த்தை கள் இன்னும் முடியக்கூடவில்லை, அதற்குள் போனை வைத்து விட்டு காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டான். ரேவந்த்.

காகிதத்தில் அப்பெண் சொன்ன கணக்கைப் போட்டுப் பார்த்துவிட்டு, ''எப்படி? எனக்கொன்றும் புரியலையே''? என்றான் ஜேம்ஸிடம்.

அதற்குள் அரை நிமிஷம் ஓடிவிட்டது. ஒன்றரை நிமிஷந் தான் பாக்கி.

''நம்மை அழ வைக்கத்தான் வராத கணக்கைச் சொல்லி யிருப்பாள்'' என்றான் ஜேம்ஸ்.

''அப்படி நினைச்சுடாதே. அந்தப் பொண்ணு ரொம்ப கெட்டிக்காரியாய்த்தான் தோணுது. இதில் ஏதோ குறிப்பு, இருந்தே தீரும்'' என்று எழுதியிருந்ததைப் படித்தான்.

முதல் எண்ணைவிட இரண்டாவது இரண்டு அதிகம். இரண்டாம் எண்ணைவிட மூன்றாவது மூன்று அதிகம். மூன்றாவது நாலாவது எண்களுக்கிடையேயுள்ள வித்தியாசம் எட்டு.

சட்டென்று ஏதோ பொறிபறந்தது. மூளையில் ''இரண்டு எண்களுக்கிடையேயுள்ள வித்தியாசம் எட்டானால் அந்த எண் 1-9 அல்லது 9-1 ஆகத்தான் இருக்கணும்'' என்றான்.

ரேவந்த் ஆலோசனையைக் கேட்டு ஜேம்ஸ் துள்ளிக் குதித்தான். ரேவந்த்தின் கண்டு பிடிப்புடன் தன் புத்திக் கூர்மையை ஜோடித்து ''எண்கள் 1-9 இல்லை அவை நிச்சயமாய் 1-9 ஆகத்தான் இருக்கணும்'' என்றான்.

''எப்படிச் சொல்கிறாய்?''

''நாலாம் எண்ணுக்கு ஐந்தாவது இருமடங்கு இல்லையா?

''நாலாம் எண் 1 ஆக இருந்தால் ஐந்தாவது பதினெட்டாய் இருக்கணுமேடெலிபோனில் அது சாத்தியமில்லையே.''

''கரெக்ட் நம்பர் வந்துடுத்து'' என்று ரேவந்த் காகிதத்தில் எழுதினான்.

''469124.''

இன்னும் அரை நிமிஷந்தான் பாக்கி.

ரேவந்த் ஓடிப்போய் டெலிபோனைக் கையிலெடுத்தான். ஒவ்வொரு நம்பராய் கவனமாய் டயல் பண்ணினான். மறு முனையில் மணியடித்ததும் யாரோ எடுத்தஓசையும் கேட்டது. ஜேம்ஸ் பரபரப்புடன் கவனித்துக்கொண்டிருந்தான். ரேவந்த் நம்பரை அலட்சியமாய் பார்த்தபடி குரலை நாசூக்காய் மாற்றிக் கொண்டு போனில் மிக மென்மையாய் ''ஹலோ பார்த்தீங்களா? ஜெயிச்சுட்டேன்'' என்றான். ஜேம்ஸ் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டிருந்தான். பேசிக் கொண்டிருந்த ரேவந்த்தின் முகம் களையிழந்தது.

''என்னவாச்சு?'' கேட்டான் ஜேம்ஸ்.

''முயல் மார்க் சுருட்டுக்கம்பேனியாம் அது'' என்றான். போனை வைத்து விட்டு ஜேம்ஸ் முகம் வெளுத்தது. கையிலிருந்த காகிதத்தையே பார்த்தான். அதற்குள் போன் ஒலித்தது.

''நான்தான்'' என்றாள் அப்பெண், ரேவந்த் போனை எடுத்ததுமே.

''...பின்ன, நம்பரைக் கண்டுபிடிக்க முடியலையா?''

''கண்டுபிடித்து விட்டோம். ஆனால் அந்த நம்பரில் நீங்க இல்லை.''

''அதென்ன நம்பர்?''

''469124''

''தப்பு.''

''பின்னே?''

''358000'' என்றாள்.

ஒரு வினாடி ரேவந்த்துக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் சொன்ன கணக்கைக் காகிதத்தில் போட்டுப் பார்த்துக் குழப்பமடைந்தவன் புரிந்ததும் ''இது அநியாயம்.' என்று கத்தினான்.

மறுமுனையில் சின்ன சிரிப்பொலி. ''எது அநியாயம்?''

''நாலாம் எண்ணைவிட ஐந்தாம் எண் இரு மடங்குன்னீங்க?''

''ஆமாம். சைபரை இரு மடங்காக்கிப் பெருக்கினால் சைபர்தானே?''

ரேவந்த் பற்களைக் கடித்துக் கொண்டே, ''எங்களை இழுத்தடிக்கடித்தானே இந்த மாதிரி செய்தீங்க?'' என்றான். அவளோ மெதுவாய். ''இதப்பாருங்க மிஸ்டர் ரேவந்த்! நீங்க இன்டர்நேஷனல் சதுரங்க ஆட்டக்காரர். சதுரங்கத்

திலேயே கணக்கு அந்தர்லீலையாய் கலந்திருக்குன்னு உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. எந்தக் காயை எப்படி நகர்த்தினால் என்னவாகும்னு நீங்க சதா யோசிச்சிட்டிருக்க வேண்டியவங்க. எல்லாவற்றையும்விட கஷ்டமானது குதிரை. எதிராளியின் குதிரை எந்தக் கோணத்திலிருந்தும் வந்து நம் காய்களை வெட்டித் தள்ளிடலாம். அதற்கு சகலவிதமான பெர்மினேஷன்களும் காம்பினேஷன்களும் வேறு எந்தக் காய்க்குமே கிடையாது. சதுரங்கத்தில் எல்லா கோணங்களையும் பரிசீலித்துப் பார்க்கும் நீங்கள் 9-1 ஐயே யோசித்துப் பார்த்தீங்களே தவிர 8-0ஐ யோசித்துப் பார்க்காதது வருந்தத்தக்கது.'' என்றாள்.

ரேவத்திற்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. ''நீங்க சொன்னதில் கொஞ்சம் நியாயம் இருக்கு'' என்றான்.

''இப்பவே இரண்டு குறிப்புத் தந்தேன். பேரையும் கண்டு பிடிக்காமல் போயிட்டீங்க. நம்பரையும் கண்டு பிடிக்க முடியலை'' என்றாள்.

''நம்பராவது பரவாயில்லை. பேரோ ரொம்ப அநியாயம். ஒரே எழுத்தை வைத்துக்கொண்டு எப்படிக் கண்டு பிடித்துவிட முடியும்?''

''ஏன் முடியாது?''

சாதாரணப் பேர் சுமார் என்பது சொல்லியிருப்பேன். அத்தனையும் இல்லைன்னுட்டீங்க. உங்க பேர் ஏதோ வினோதப் பேராய்த்தான் இருக்கணும். அந்த மனிதர்களால் கண்டு பிடிக்க முடியாது.''

மறுமுனையில் சிரிப்போசை.

''என் பேர் உங்க பேரைப் போன்ற அழகான பேரு மில்லை, வினோதப் பேருமில்லை மிஸ்டர் ரேவந்த்'' ரேவந்த் கர்வமடைந்தான். அத்தகைய அழகான பெயரைத் தனக்கு வைத்த தன் தாய்த்தந்தையரை அவ்வப்போது

மெச்சிக் கொள்வான் அவன். அதையே போன்றும் சொன்னான்.

''உங்களுக்கு இத்தனை அழகான பெயரை வைத்த உங்க தாய்தந்தையர்—வைப்பதற்கு முன்னால் ஒரு முறை அகராதியைப் புரட்டிப் பார்த்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.''

ரேவந்த் அதிர்ந்தவனாய், அப்படின்னால்?'' என்றான்.

''என்ன ரேவந்த் இது? இந்த இருபத்தைந்து வயதில் ஒரு தடவையாவது உங்கப் பேருக்கு அர்த்தம் என்னன்னு தெரிந்துக்க விரும்பலையா, நீங்க?'' ரேவந்த் மௌனம் வகித்தான்.

''அப்புறமாய் போன் பண்றேன். அதற்குள் உங்க பேரின் அர்த்தத்தைக் கண்டு பிடிச்சுக்குங்க. அதைப்பற்றி வாதாடலாம்'' என்று போனை வைத்துவிட்டாள்.

விஷயம் புரியாத ஜேம்ஸ் ''என்ன சமாச்சாரம்?'' என்று கேட்டான்.

''ரேவந்தனால் என்ன அர்த்தம்?''

''அவ்வளவு புலவனாயிருந்தால் கதைகள் எழுதிப் பிழைத்திருப்பேனே பிரதர்! இந்த ஆயிரம் ரூபாய்க்கு உத்யோகம் பண்ண வேண்டிய தலையெழுத்து எதுக்கு?'' ரேவந்த் எழுந்து ''வா போவோம்'' என்றான்.

''எங்கே?''

''நம்ப விளம்பர செக்ஷனுக்கு.''

பெனின்சுலாப் ரொடக்ட்ஸ் பெண்களுக்குத் தேவையான மையிலிருந்து பிரா வரையிலும் தயாரித்து-அவற்றிற்குப் பல் வேறு பெயரிட்டு விளம்பரப்படுத்தி விற்கும் ஸ்தாபனம். அதற்கு அழகான பெயர்களைப் புனையவும் விளம்பரப் படுத்தவும் ஒரு தனிப் பிரிவு இருந்தது. அந்தப் பிரிவின் தலைவி சரளா என்ற பெண்மணி. விளம்பரங்களிலிருக்கும்

படங்களைப் போலவே அழகாய் இருப்பாள். இவ்விருவரையும் பார்த்து விட்டு எழுந்து நின்றவள் ''வெல்கம் சார்'' என்றாள். அஸிஸ்டென்ட் சீஃப் மெனக்கெட்டுத் தன் பகுதிக்கு வந்தது வியப்பளித்தது. டிஸைன் போட்டுக் கொண்டிருந்தவர்களும் படங்களைக் கத்திரித்துக் கொண்டிருந்தவர்களும் தம்தம் வேலையில் ஆழ்ந்திருந்தார்கள்.

''கொஞ்சம் அகராதியைத் தரமுடியுமா மேடம்?'' கேட்டான் ரேவந்த்.

அவள் வியப்புடன் அகராதியை எடுத்துத் தந்தாள். அண்மையில் அவன் தன் பியூனை அனுப்பி வரவழைத்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அவன் பக்கங்களைப் புரட்டிய விதத்தைப் பார்த்தால் மிக பரபரப்பிலிருந்தது புலப்பட்டது. ர, ரி, ரு, ரே என்ற இடத்தில் நின்று ஆள்காட்டி விரலை நகர்த்திக் கொண்டே போனான். நின்றான். 'ரேவந்த்'—அவன் கை நடுங்கிற்று. அதன் பொருளைப் பார்த்ததும் முகம் வெளுத்தது. நண்பனின் முகத்தில் நிறம் மாறியதை கவனித்த ஜேம்ஸ், ''என்னவாச்சு?'' என்று குனிந்து புத்தகத்தைப் பார்த்தான். ''ரேவந்த்'' என்ற பதத்தின் அர்த்தத்தைப் படித்துவிட்டுக் கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான்.

இருவரையும் பார்த்து முன்னுக்கு வந்த சரளா ''என்னவாச்சு? சார்'' என்று கேட்டாள். ஜேம்ஸ் ஏதோ சொல்ல வந்தபோது ரேவந்த் தடுத்துவிட்டு, ''போதும், வா. போவோம்'' என்று இழுத்துக் கொண்டு வந்து விட்டான்.

வெளிவந்த ஜேம்ஸ் சிரித்துக் கொண்டே, ''அந்தப் பொண்ணு யாரோ தெரியலை, கணக்கில் மட்டுந்தான்னு இல்லை; தமிழில் கூட புலி போலிருக்கு'' என்றான்.

ரேவந்த் பதில் பேசவில்லை. அவன் முகம் கோபத்தால் செம்மை ஏறிற்று. தன் பெயரை மாற்றிக் கொள்ள விரும்பி ஆலோசிக்கத் தொடங்கினான்.



'அந்நியர்கள் உள்ளே நுழையக்கூடாது. உத்தரவின்றி உள்ளே நுழைந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.'

கேட்டின் மேல் எழுதியிருந்த போர்டிற்குப் பக்கத்தில் ஸ்டூலைப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த கூர்க்கா தூங்கி வழிந்து கொண்டிருந்தான். அவனைத் தாண்டிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் சுலோச்சனா.

அது எட்டடுக்கு கட்டடம். டெலிபோன் எக்ஸ்சேஞ்சு, கீழ் ரண்டு மாடிகளிலும் லோகல் ஆட்டோமேடிக் எக்ஸ்சேஞ்சுகள் அதற்குமேலிருந்த இரண்டு மாடிகளிலும் அட்மினிஸ்ட் ரேஷன் ஆபிஸ்களும், நாலாவது மாடியில் எமெர்ஜென்சி ஸ்டாஃப் க்வார்டர்சும், ஆறாவது மாடியில் லோகல்சர்வீஸும் ஏழாவது மாடியில் டிரங்க் சர்வீசும் இருந்தன. எட்டாவது மாடியில் என்ன இருந்ததன்று அவளுகுத்தெரியாது. அவள் அங்கு போகவில்லை.

அவள் லிஃப்டிற்கருகில வந்து நின்றாள். அது வர ஐந்து நிமிஷங்கள் பிடித்தன. ''ஹலோ'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினாள். அருகில் அனுசூயா ஒரு மாதக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நின்றிருந்தாள். சுலோச்சனா கண்களாலேயே வணங்கினாள். லிஃப்ட் முதல் மாடியை வந்தடைந்ததும் அனுசூயா போய் குழந்தையை க்ரெச்சில் விட்டுவிட்டு வந்தாள். எது பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் டெலிபோன் டிபார்ட்மென்ட் ஊழியர்களுக்காக இந்த உதவியைப் பண்ணித்தந்திருந்தது. அதற்காகக் கொஞ்சம் வசூல் பண்ணிக்கலாம்—அது வேறு சங்கதி.

லிஃப்ட் பாய் சுலோச்சனா, அனுசூயா இருவரையும் நன்றாய் அறிந்தவனே. அவனைப் போலவே அவர்களும் அங்கே பல ஆண்டுகளாய் வேலை பண்ணிக்கொண்டிருக் கிறார்கள். ஒரு லிஃப்ட்பாய் கூட கிளார்க் வரைக்கும் முன்னுக்கு வர சான்ஸ் இருக்கலாமோ என்னவோ, ஆனால் ஒரு டெலிபோன் ஆபரேடர் வாழ்நாளெல்லாம் டெலிஃபான் ஆபரேடராகவேதான் இருக்க நேரும். அதிகமாய் போனால் செலக்ஷன் கிரேட் சூப்பர்வைசராகலாம். இப்பொழுதோ எல்லா எக்சேஞ்சுகளையும் ஒன்றாய் சேர்த்து விட்ட பிறகு அது கிடைப்பது கூட கனவே...? முன்னுக்கு வரமுடியாத ஒரே உத்யோகம் சுலோச்சனா பன்னிரண்டாண்டுகளாய் டெலிபோன் ஆபரேட்டராய் இருந்து வருகிறாள். அதற்குச் சான்று அவளுடைய ஆள்காட்டி விரலே!

ஆள்காட்டி விரல் நகத்திற்குச் சற்றுக் கீழே டயலைத் திருப்பித் திருப்பி ரத்த ஓட்டம் நின்று சதையானது இறுகிப் போய் தோல் தேய்ந்து கெட்டியாகி விட்டிருந்தது. நிறையப் பேர் ஆபரேட்டர்களிடையே இது நன்றாய் தென்படும். தென்படாதது இன்னொன்றும் உண்டு. அது இடுப்பு வலி.

பட்டரையில் நெருப்பிற்கு முன்னால் வேகும் கொல்ல னானவன் குளிர்ந்த காற்றுக்காகச் சற்று வெளியே வருகி றான். கவனம் சிதறாமல் ஆபரேஷன் செய்யும் ஒரு டாக்டர் அது முடிவடைந்ததும் ஓய்வெடுத்துக் கொள்ள வெளியே வருகிறார். ஆனால் ஒவ்வொரு வினாடியும் இயந்திரமாய் வேலை பண்ணும் ஆபரேட்டர் தன் காதுகளிலிருந்து ஹெட் போனைச் சற்று எடுத்து வைத்து விட்டு நாற்காலியை விட்டு எழுந்திருக்க வேண்டுமானால் அது சட்டென்று முடியாது. அதற்குப் பல விதிமுறைகளைப் பண்ணிவைத்து விட்டுத்தான் எழுந்திருக்க முடியும். அவ்வாறு நாளுக்கு ஏழு மணி நேரம் அப்படிப் பேசிக் கொண்டே இருக்கவேண்டும். விரல்களைச் சுழற்றிக் கொண்டே இருக்க வேண்டுமே, நாட்கள் நகர்ந்து மாதங்களாகும். மாதங்கள் கடந்து வருடமும் பிறகு இளமை போய் வயோதிகமும் வந்துவிடும். அந்த வயோதிகத்தில் லும்பாகோ வியாதி வந்துவிடும்.

வேலையில் சேர்ந்த புதிதில் அவளுக்குப் பல்வேறு வினோதக் கனவுகள் வருவது வழக்கம். டயலைச் சுற்றுவது போலவும் ஹெட்போன் நழுவுவதுபோலவும் வினோதக் கனவுகள். கனவிலேயே ''ஹலோ...ட்ரங்க் புக்கிங் ப்ளீஸ்...'' என்றோ''லோகல் அசிஸ்டென்ஸ் சார்''என்றோ புலம்புவாள். என்னம்மா ஏதாவது கெட்ட கனவு வந்ததா? என்றுத் திட்டி எழுப்புவதற்கு யாருமே இருக்கமாட்டார்கள். வேலை பழக்கப்பட்டுப் போன பிறகு அந்தப் புலம்பல் நின்றுவிட்டது. ஆனால் புதிய பழக்கம் வந்து சேர்ந்துவிட்டது. அது... நாளுக்கு ஏழுமணி நேரம் ஆள்காட்டி விரலைச் சுழற்றி டயல் பண்ணிப் பண்ணி வீட்டிற்கு வந்த பிறகும் கூட ஆள்காட்டி விரலால் சைபர்கள் சுற்றிக் கொண்டேயிருக்கும் பழக்கம் வந்து சேர்ந்துவிட்டது. கல்யாணமாகாத முப்பத்தைந்து வயது பெண்ணொருத்தி திரும்பத் திரும்ப அவ்வாறு ஆள் காட்டி விரலால் சைபர் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த் தால் பிறர் கணணுக்குக் கெட்ட எண்ணம் தோன்றும் என்ற றிந்திருந்தும் அவளால் அதிலிருந்து மீள முடியவில்லை.

அவளுக்கு ஆண்களைக் கண்டாலே வெறுப்பு. அதற்குப் பல காரணங்கள். அது திடீரென்று தோன்றியதல்லை. கொஞ்சங் கொஞ்சமாய் புரையோடியவை. டெலிபோன் அவளுடைய மெனமையான இயல்புகளைக்கொன்றுவிட்டது. போனில் கேட்கும் ஆண்குரல்கள் அவளுள் இருந்த பெண்க ளுக்கே உரிய அன்பு என்ற உணர்ச்சியைப் புதைத்துவிட்டன. அவளுக்கு எங்கோ தான் படித்திருந்தது நினைவுக்கு வரும். இவ்வுலகில் எல்லோரும் கெட்டவர்கள்தான். ஏதோ ஒரு சில நல்லவர்கள் இருப்பதறகுக் காரணம் அவர்களுக்குக் கெட்டுப் போக வழி தெரியாததால்தான் என்று படித்திருகிறாள். அது போனில் பேசும் ஆண்களைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மையாயிருந்தது.

காதில் ஆபரேட்டரின் குரல் கேட்டதுமே அக்குரலுடைய பெண் எளிதில் வசப்பட்டுவிடுவாள் என்றெண்ணி சம்பாஷ

ணையைத் தொடங்கிவிடுவார்கள். வெறுப்பு வரும். கோபமும் அலுப்பும் கூட தோன்றும். ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளுங்கூடாது. கோட் ஆஃப் காண்டக்ஸ் என்ற ஒரு விதி முறை உண்டு ஆபரேட்டர்களுக்கு டெலிபோன் வைத்திருப் வர்கள் கோபமாய் ஏதாவது பேசினாலும் தாம் சகஜமாய் பதிலளிக்க வேண்டும் என்பதே அது. ஆபரேட்டர் வெளிப் படுத்தும் அந்தப் பொறுமையையும் இனிய சிரிப்பையும் போன் வைத்திருப்போர் வேறுவிதமாய் புரிந்து கொண்டு விடுகிறார்கள். முக்கியமாய் ஆபீசுகளிலும் ஓட்டல்களிலும் இருக்கும் ஆண் ரிசப்ஷனிஸ்ட்டுகளும் ஆண் ஆபரேட்டர் களும்.

லி..ப்ட் ஆறாவது தளத்தில் வந்து நின்றது. கதவு திறந்து கொண்டதுமே வரேன் என்று புறப்பட்டு விட்டாள் அனுசூயா. யோசனையிலிருந்து மீண்ட சுலோச்சனா தலை யாட்டினாள். அவள் போய் மறைந்ததும் லிஃப்ட் நகர்ந்தது.

திரும்ப யோசனைகள் வந்து சூழ்ந்து கொண்டன..... ஆண்களின் பால் சுலோச்சனாவுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்படுவதற்கு அனுசூயாவின் வாழ்க்கைக் கூட கொஞ்சம் காரணம் எனலாம். அனுசூயா சுறுசுறுப்பான புத்திசாலிப் பெண் திருமணத்திற்கு முன்பே இரண்டாண்டு சர்வீஸை முடித்து விட்டிருந்தாள். கணவன் சந்தேகப்பேர்வழி. மனைவி எச்சேஞ்சில் வேலை பண்ணுவது பிடிக்கவில்லை. ஆயினும் வந்த சம்பளத்தையும் விட மனமில்லை. ஏதோ தியாகம் பண்ணுவது போல பேசுவான். நைட் டியூட்டியைக் கான்சல் பண்ணச்சொல்லுவான். அது எப்படி சாத்தியப்படும்?

அன்று, முதல் ஷிஃப்ட் முடிய இரவு பன்னிரெண்டு. நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு வீட்டிற்குப் போகமுடியாத வர்களுக்காக அங்கேயே படுத்துக்கொள்ள டார்மெடரிஸ் இருந்தன.

எக்ஸ்சேஞ்சில் சைலஜா என்று ஒரு சுறுசுறுப்பான பெண் இருந்தாள். உற்சாகத்திற்காக கூர்க்காவின் கண்ணில்

மண்ணைத் தூவிவிட்டு தேனீர் குடிக்க அருகிலேயே இருந்த ஒரு ஓட்டலுக்கு அழைத்துச்சென்றாள். அதுதான் குடிமுழுகச் செய்து விட்டது. இரண்டாவது ஆட்டம் சினிமாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த கணவன், மனைவியை நள்ளிரவு நேரத்தில் நடு வீதியில் பார்க்க நேர்ந்து மனதில் சந்தேகம் கிளைவிடத் தொடங்கியது. சந்தேகப் பேய் தலைவிரித்தாடத் தொடங்கிற்று. அவர்கள் விவாவகரத்துப் பெற்றுக்கொண்ட சமயத்தில் அனுசூயா மூன்றுமாத கர்பிணி. அன்று சுலோச்சனா வெறுப்போடு சொன்னாள்.— ''கற்புங்கறது போனில் பேசுவதாலும் நைட்-டியூட்டி செய்வதாலும் போயிடாது. உன் கணவனை ஒரு முறை எக்சேஞ்சுக்கு வரச் சொல். 181-ல் உட்காரச் சொல்லிட்டு, எவ்வளவு பேர் பெரிய இடத்துக் குடும்பப் பெண்கள் மத்தியான வேளை பூராவும் போனில் மானசீகமாய் விபச்சாரம் பண்ணின்டிருக் காங்கங்கறதைக் கேட்கச் சொல்லுவோம்.'' என்றாள்.

இப்படிப்பட்ட ஆண்களையும் சுற்றுப் புறத்தையும் தனிமையில் விரக்தியையும் மீறி அவளை மகிழ்விப்பது அவர், குரல் ஒன்றுதான்! போனில் அது மிக மென்மையாய் ஒலித்து கேட்போரைப் பரவசப்படுத்த வல்லது. அவள்உருவத்தைப் பாராதவர்கள் குரலை மட்டும் கேட்டு அவளோடு பரிச்சயம் பண்ணிக்கத் துடிதுடித்து செம்மையாய் வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். உலகத்தின் மேலுள்ள வெறுப்பை தன்னால் முடிந்தளவு இவ்விதமாய் தீர்த்துக் கொள்ளுவாள். ஆயினும் அவள் சாட்டிஸ்ட் இல்லை. வெறுப்பு...வெறுப்பு...வெறுப்பு மட்டுமே! லிப்ட் ஏழாவது தளத்தில் வந்து நின்றது. அவள் லாக்கர்ஸை அணுகித் தன் கைப்பையை அதில் வைத்துவிட்டு ஹாலுக்கு வந்தாள். குளிர் சாதனக் கருவி பொருத்தப்பட்ட ஹால் குளுகுளுவென்றிருந்தது.

டிபார்ட்மென்ட்டில் முன்பெல்லாம் எந்த நம்பர் வேண்டுமோ அதைத தருவது வழக்கம். சீனியர்கள் எல்லோரும் 181 (டிரங்க் உதவி) வேண்டிக் கேட்டுக் கொள்

வார்கள். அங்கிருந்தலாவது தமக்குத் தேவையான போன் களைப் பண்ணிக்கமுடியும். ஆனால் ஆப்சர்வேஷன் சம்பாஷனைகளை டேப்பண்ணி 'மெமோ' கொடுக்கவும் வேண்டியிருக்கு. 180 (டிரங்க் புக்கிங்) பொசிஷனில் நிறையவே வேலை இருக்கும். அதிலும் பத்தடித்துவிட்டால் போதும் போன்கால்கள் சரமாரியாய் வரத் தொடங்கிவிடும்.

அன்று அவளுக்கு 181-வது பொசிஷன் வேலை சற்றுக் குறைவாயிருக்கும். அதுவே 199 ஆக இருந்தால் லோகல் அசிஸ்டென்சிற்கு நாளொன்றுக்கு சுமார் பதினாறாயிரம் வரையிலும் கால்கள் வரும். ஒவ்வொரு ஆபரேட்டர்களும் மணிக்கு அறுபது கால்கள் வரையிலும் அடெண்ட் ஆக வேண்டும். அதாவது ஒரு நிமிஷத்திற்கு ஒன்று. அப்படியானால் ஆள்காட்டி விரல் மரத்துப் போகாமல் என்ன பண்ணும்? ஒரு முறை அவள் 199-ல் பத்திலிருந்து ஒரு மணிக்குள் சுமார் நானூறு கால்கள் அட்டெண்ட் செய்யிருக்கிறாள், அதுதான் அவளுடைய ரிகார்டு பிரேக்.

''என்ன யோசித்துண்டிருக்காய்?''

அவள் திடுக்கிட்டு, முறுவலுடன் ''ஒன்றுமில்லை'' என்று வந்து உட்கார்ந்தாள்--இதற்கு முன்னால் உட்கார்ந் திருந்தவளிமிருந்து வேலையை ஏற்றுக்கொண்டு, அந்தப் பெண்ணிற்கு மறுபடியும் வேலை ஏழுமணி ஷிஃப்டிற்குதான்.

''மேடம்—திஸ் ஈஸ் டு ஃபை'வ் டு சிக்ஸ் ஒன் டு ஃபோர். பம்பாய்க்குக் கால் புக் பண்ணி இரண்டு மணி நேரமாகிறது. பொசிஷனைச் சொல்றீங்களா?''

''மேடம் மதுரை லைன் எப்படியிருக்கு?''

''எஸ், டி.டி.யைப்பற்றிய விவரங்களை யாரைக் கேட்கணும் மேடம்? உங்களையில்லையா?'' —அன்றைய தினமும் இவ்வாறு தொடங்கிற்று—சார்பில்லாமல் எந்த மாறுதலுமில்லாமல் உணர்ச்சியற்று தினமும் போலவே என்றும் போலவே அவள் பாடரை ஆன் பண்ணினாள்

தினத்தைப் போலன்றி அன்று ஓர் புதுமை எதிர் நோக்கிக் கொண்டிருந்தது என்பதை அவள் ஊகித்திருக்கவில்லை.



''எங்கேயோ டிடெக்டிவ் நாவலில் படித்த நினைவு. போலீசார் நமக்கு வரும் போன்களை எங்கேயிருந்து வருகின்றன என்று கண்டு பிடித்துடுவாங்களாம்''

''அதெல்லாம் கதைகளில்தான்'' என்றான் ரேவந்த் செய்வதறியாமல்.

''இல்லை பிரதர். டெலிபோன் டாப்பிங் சிஸ்டம்னு ஒன்றிருக்கிறதாம். நாம் போலீஸ் உதவியைப் பெற்றுக் கலாம்''

''இதென்ன கிரிமினல் கேசா என்ன? ரிபோர்ட் என்ன்னு தருவோம்?''

''கிடக்கு. ப்ரைவேட் டிடெக்டிவ் மூலம் முடியாதா?''

''மூடு வாயை''

''ஆனாலும் நாம்ப ஒரு முறை முயன்றுப் பார்ப்பதில் தப்பில்லை'' என்று போனை எடுத்துச் சுழற்றினான் ஜேம்ஸ்.

''ஹலோ'' மறுமுனையிலிருந்து கேட்டது.

ரேவந்த் கலவரத்துடன் நாற்காலியை விட்டெழுந் திருந்து. ''யாருக்குப் பண்ணுகிறாய்? போலீஸ் ஸ்டேஷனுக்கா?'' என்று கேட்டான். ஜேம்ஸ் பேசாதே

என்று சைகை காட்டி விட்டுப் போனில் சம்பாஷனையைத் தொடர்ந்தான். ''எங்களுக்குக் கொ ச்சம் உதவி தேவைங்க. டெலிபோனுக்கு சம்பந்தப்பட்ட தகவல்! நீங்க ட்ரங்க் அசிஸ்டென்சுதானே? பி. ஆர். ஒக்குப் போன் பண்ணச் சொல்றீங்களா?.....எதுக்குங்க?...ஒரே வினாடியில் நீங்களே சொல்லிடலாமில்லே? அ ஹ ஹ ஹா...போனை வெச்சுடா தீங்க ப்ளிஸ்... உங்கக் குரலைப் போலவே உங்க மனதும் மென்னமயானதுன்னு தெரியும் எங்களுக்கு. பலே ஆள்தான்...ஒன்றும் நினைச்சுக்காதீங்க...என்ன விஷயத்தைச் சொல்லாமலேயே இழுத்தடுக்கிறிங்களே.....''

கேட்டுக்கொண்டிருந்த ரேவந்த் ''டேய்! நீ உண்மையில் பெரிய அரசில்வாதியாய் இருக்கவேண்டியவன்'' என் றெண்ணிக் கொண்டான்.

''ஆங்...ஆமாங்க...பிளாக் மெயில் இல்லை.....ஒரு பொண்ணு...என் சிநேகிதன் ரேவந்த் இண்டர்நேஷனல் செஸ் பிளேயர். அவனுடைய அபிமானி ஒருத்தி...பேரைச் சொல்லாமல் போன் பண்றாள். அவள் எந்த நம்பரிலிருந்து போன் பண்றாள்னு கண்டு பிடிக்கணும்...அவ்வளவுதான். ஓஹோ போலீசார் பண்ண மாட்டாங்ளா? ஆமாங்க. அவங்களுக்கு வேறென்ன வேலை வெட்டி?...ஆனாலும் உங்களையே ஒரு ஆலோசனை கேட்கிறேன்...கம்ளைண்ட் யாருக்கு எழுதணும் ஜெனரல் மானேஜர்! டெலிபோன்ஸ்? இருங்க ஒரு நிமிஷம்... குறித்துக்கறேன்! தாங்யூ, வெச்சுடேற னுங்க...பைதிபை உங்களைப் போன்ற சிநேகசீலிகளும் தியாக மூர்த்திகளும் இருக்கிற டெலிபோன் இலாக்கா வாழ்க...'' என்று போனை வைத்துவிட்டான்.

போன் தொடர்பை துண்டித்துவிட்டு நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்துக் கொண்ட சுலோச்சனா விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். வெகு நாட்களுக்குப் பிறகு மனப்பூர்வமாய்— ''என்ன நீயே சிரித்துக்கறாய்?'' கேட்டாள் சைலஜா. ''ஒன்றுமில்லை, யாருக்கோ உதவி

தேவைன்னதால் பண்ணினேன். டிரங்க் உதவி இல்லை பெர்சனல்உதவி.'' என்று சொன்னாள். அவ்விருவரும் பேசிக் கொண்டிருக்கையில் சூப்பர்வைசர் உள்ளே வந்தாள். அவருக்கு ஐம்பது வயதிருக்கும். இரட்டைநாடி சரீரம். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளுக்கியவன்— ''போர்டைப் பாரு. கால்ஸ் காத்துக்கிட்டிருக் காப்பல இருக்கு'' என்றாள் சைலஜாவிடம். அவள் குரலில் ஒழுங்கு நடவடிக்கையைவிட தன் ஹோதாவைக் காட்ட வேண்டும் என்ற தவிப்புதான் தெரிந்தது.

சைலஜா அலட்சியமாய் தலையைத் திருப்பிக் கொண்டாள் போர்டை நோக்கி.

அசிஸ்டென்ட் இஞ்ஜினியரின் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கம்ளைண்ட் எழுதிக்கொண்டிருந்தான் ரேவந்த்.

ஐயா,

என் டெலிபோன் நம்பர் 13414. ஒரு ஆள் என் இந்த நம்பருக்குப் போன் பண்ணி அடிக்கடி பயமுறுத்துகிறார். இது எனக்கு எரிச்சலாயிருக்கிறது. எங்கிருந்து அது வருகிற தென்று தெரிந்து கொண்டு அந்த நம்பரை எனக்குத் தெரியப்படுத்தினால் நன்றியுடையவனாயிருப்பேன்.

இப்படிக்கு,

ரேவந்த்.

என்று கையொப்பமிட்டுத் தந்தான்.

''போலீசு கம்ளைண்ட் கொடுத்தீங்களா?''

ரேவந்த்துக்கு திக்கென்றது. சட்டென்று தேறிக்கொண் டவன் ''கொடுத்தேன்'' என்றான்.

''நாளைந்து நாளில் உங்கபோனை எடுத்துட்டு வேறொரு போனை வைக்கிறோம். அதற்குப் பட்டன் இருக்கும் உங்க ளுக்கு அந்த ஆள் போன் பண்ணியதுமே பட்டனை அழுத்

துங்கள் நாங்கக் கண்டுப்பிடிக்கும் வரையிலும் நீங்க எப்படியாவது சம்பாஷணையைத் தொடர்ந்துண்டிருக்க வேண்டியது.''

''அப்படி எவ்வளவு நேரம் தொடரணும்.''

''உங்களுக்கு வரும் கால் இதே எக்சேஞ்சிலிருந்தானால் மூன்று நிமிஷம் போதும். வேறு ஏதாவது எக்சேஞ்சாயிருந் தால் ஐந்து நிமிஷம் வரை பிடிக்கும். உங்க போனைப் பத்து நாட்கள் வரையிலும் இப்படியே கவனித்து வரோம். அதற் குள் அந்த பிளாக்மெயிலர் போன் பண்ணினால் சரி''

''பத்துநாள் எதுக்கு தினந்தோறுமே பண்றாள்,'' என்று சொல்லி விட்டுச் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான்.

''பண்றாளா அப்படின்னால் பெண் பிளாக் மெயிலரா?'' ஆச்சரியமாய் கேட்டார் இஞ்ஜினீயர்.

ரேவந்த் சட்டென்று தேறி''ஆமாங்க இப்பல்லாம் பெண் கள்தான் நிறைய குற்றம் பண்றாங்க'' என்று சொல்லி விட்டு அவருக்குக் கைக் குலுக்கிவிட்டு வெளியே வந்தான். வரும் போது நினைத்துக் கொண்டான், எங்கே போயிடுவாய் பெண்ணே எப்படித் தப்பித்துடப் போறாய் பார்ப்போம் என்று.

ரேவந்த்திடமிருந்து கம்ளையிண்ட் அப்ளிகேஷனை வாங் கிக் கொண்ட இஞ்ஜினீயரின் பெயர் விஸ்வம். இளைஞன். ரேவந்த் போனதும் அவன் இரண்டாவது தடத்திற்கு வந் தான். அங்கிருந்த ஸ்விட்ச் ரூம் கதவைத் திறந்ததுதான் தாமதம் அங்கு கேட்ட ஓசைக்குத் தன்னையறியாமலேயே ஓரடிபின் வாங்கினான்'

அந்த எக்ஸ்சேஞ்சு ஏரியாவிலிருந்த டெலிபோன்கள் எல்லாவற்றிற்கும் அவ்வறையில்தான் ஸ்டோர்ஸ் இருந்தது. ரேவந்த்தின் டெலிபோன் இருந்தது ஸ்ட்ரோகேர் எக்சேஞ் ஜில். அதைத்தவிர மான்யுவல் என்றும் கிராஸ்பார் என்றும்

இன்னும் இரண்டு வித எக்சேஞ்சுகளும் இருந்தன. எலெக்ட்ரானிக் எக்சேஞ்சு இன்னும் இந்தியாவுக்கு வரவில்லை. தினமும் சுமார் 20,000 ட்ரங்க்கால்கள் போகும். இதில் என்ன ஆச்சரியமென்றால் வரும் கால்கள் 10000 க்கு மேலிராது. உள்ளூர் கால்கள் சுமார் 2 லட்சங்கள் இருக்கும். அதனால் தான் ஸ்விட்ச்ரூமில் அத்தனை இரைச்சல்.

ஸ்விட்ச் ரூமில் வரிசையாய் சுவற்றைப் போன்ற பானெல்ஸ் இருந்தன. விஸ்வம் 13414 லிடம் நின்று அந்தப் பின்னை ஆப்சர்வேஷனுக்கு எடுத்துக் கொண்டு மானிடருக்கு ஏற்பாடு பண்ணினான். அன்றையிலிருந்து ரேவந்த்தின் போன் கண்காணிப்பில் வைக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டு நாட்களும் அவளிடமிருந்து போன் வந்தன. அவ்விரண்டு நாட்களும் ரேவந்த் மிக பரபரப்போடு இருந்துவந்தான். எந்த போன்கால் வந்தாலும் சரி அவன் ஆள்காட்டி விரல் பட்டனை நோக்கிப் போயிற்று ''ஹலோ'' என்று அவள் குரல் இனிமையாய் ஒலித்ததுமே பட்டனை அழுத்தினான். உடனே ஸ்விட்ச் ரூமில் பஸ்ஸர் ஒலித்தது அடுத்த வினாடியே இஞ்ஜினியர் பேக்கிரவுண்ட் டிரேசிங் கண்டுபிடிக்கும் வேலையில் ஆழ்ந்தான்.

அங்கே ரேவந்த் அப்பெண்ணோடு நிதானமாய் பேசிக் கொண்டிருந்தான்.

''நான் என் பேரை மாற்றிக்கலாம்னு இருக்கேன்''

''ஏன் ரேவந்த்! உங்க பேர் ரொம்ப நன்றாயிருக்கே எனக்கு ரொம்பப் பிடித்திருக்கு.''

''ஆனால் அர்த்தம் .....'' இழுத்தான்.

''பரவாயில்லை எப்படியாவது சமாளித்துக்கலாம். எல்லைய்யா பிச்சைய்யா இதையெல்லாவற்றையும் விட நன்றாய்தானே இருக்கும்-''

ரேவந்த்தின் முகம் சிவந்தது? ''அது சரி நீங்கயார்?''

''கேட்டான் கோபத்தை அடக்கிக்கொண்டு குரலைப்பார்த் தால் தெரியலையா நான் ஒரு பெண்ணுன்னு பத்துக்கிளாஸ் படித்திருக்கும் ஒரு பெண்''

''நீங்க பெண்ணுன்னு நம்பறேன். ஆனால் நீங்க படித் திருப்பது பத்து கிளாஸ் மட்டுமில்லை பந்தயம் கட்டத்தயார்.

''அவள் சிரித்துவிட்டு தேவலையே...ஆமாம் பொய்தான் சொன்னேன் போதுமா?'' என்றாள்.

''நீங்க இந்த மாதிரி பேரும் விலாசமும் தெரிவிக்காம எதுக்குப் போன் பண்றீங்க.''

''ரெண்டு தடவை குறிப்புக் கொடுத்தேன் கண்டுபிடிக் காதது என் தப்பில்லையே.''

''சந்தித்துக்காமல் வெறுமே இந்தமாதிரி போன் பன்ற தால் நேரந்தானே வீணாகுது''

''ஏன் சந்திக்கமாட்டோம்? கண்டிப்பாய் சந்திப்போம். உங்களுடைய சிநேகிதியாகணும்னுதானே இவ்வளவு பாடு பட்டுப் போன் பண்றேன். அதற்கு நடுவில் கொஞ்சம் த்ரில் லுக்காக இந்த போன்கள் அவ்வளவுதான். இதுவும் வேண் டாமானால் நாளைக்கே உங்க ஆபீசுக்கு வந்து சந்திக் கிறன்.''

''வேண்டாம் நாளைக்குள் கண்டுபிடித்துட முயற்சிக் கிறேன்.''

''எப்படி?''

''என்னால் முடிந்தவரை முயன்று.''

''இன்னும் ஏதாவது குறிப்பு தரட்டுமா?''

''வேண்டாம்''

''சரி, வெச்சுடறேன்''

ரேவந்த் கலவரமடைந்தவனாய், ''வேண்டாம், இன்னும் கொஞ்சநேரம் ஏதாவது பேசுங்க'' என்றான். அதற்குள் ஒரு நிமிஷந்தான் கழிந்திருந்தது. இன்னும் நாளு நிமிஷமே பாக்கியிருந்தது. இங்கே இந்த சம்பாஷனையைத் தொடர்ந்துக் கொண்டேயிருந்தால் அங்கே பேக் கிரவுண்ட் டிரேசிங் ஆபரேஷன் எளிதில் முடியும். இரண்டு உதவி யாளர்கள் ஸ்விட்ச் ரூமில் மளமளவென்று குறிப்புக்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்தார்கள்.

''உங்களைப்பற்றி எதுவும் தெரியாமல் எப்படி என்னால் சிநேகம் பண்ணமுடியும்?'' என்றான் ரேவந்த்.

''என் விருப்பு வெறுப்புக்களை போனில் சொல்றேன்''

''ஆனாலும் உங்களைப் பார்த்தாகணும்.''

''எதுக்கு?''

உடனே பதில் வரவில்லை.

''நீங்க யாரு எப்படியிருப்பீங்கன்னு தெரியாமல் எப்படி சிநேகம் பண்றது? சங்கடத்துடன் கேட்டான்.

''எப்படியிருந்தால் என்ன ரேவந்த்? எல்லா பெண் ணுக்குமே இரண்டு கன்னங்களும் இரண்டு காதுகளுந்தானே உண்டு?''

''ஆனால் சிலரைப் பார்த்தால் சட்டென்று சிநேகம் பண்ணிக்கணும்னு தோணும். வேறு சிலரைப் பார்த்தால் காரணமின்றி வெறுப்பு ஏற்படும். நாம்ப போனில் சிலநாள் சிநேகமானதும் சந்தித்துண்டோம்னு வையுங்க. அப்பநான் ஊகித்திருந்ததற்கு விரோதமாய் நீங்க இருந்தீங்கன்னால் ஏமாற்றம் ஏற்படாதா? இதற்கு 'இரண்டு கண்கள் ஒரு மூக்குன்னு புள்ளிக் கணக்கெல்லாம் எதற்கு? உணர்வுகளைக் கணக்கில் வடித்துச் சொல்ல முடியுமா?'' அவள் ஒரு வினாடி மௌனமாயிருந்தாள். பிறகு ''நான் சிநேகிதியாய் உங்களை

ஏமாற்றிடமாட்டேன்னு தான் நினைக்கிறேன் ரேவந்த்'' என்றாள்.

''மாட்டீங்கதான். ஆனால் ஏமாற்றிடுவீங்களோங்ற சங்கடத்தோடு ஏற்படுத்திக்கும் சிநேகத்தில் நிறைவு இருக்காதே. ஒருவரையொருவர் பார்த்துக்காமல் நட்புப் பண்ணிக்கும் பேனா நண்பர்கள் தம் சந்திப்புக்குப் பிறகு பெரிய தோல்வியடையவதற்குக் காரணம் கூட இதுதான்.',

''மற்றவங்க விஷயத்தில் அப்படி நடக்கலாமோ என்னவோ, ஆனால் நம்ப விஷயத்தில் மட்டும் அந்த மாதிரி ஆகாது''

''அத்தனைக் கச்சிதமாய் எப்படிச் சொல்றீங்க?''

''இந்தக் கேள்விக்கு பதிலை நாம் சந்திக்கும்போது சொல்றேன்.''

அதற்குப் பிறகு என்னபேசுவதென்றே தெரியவில்லை அவனுக்கு. நேரம் மூன்று நிமிஷந்தான் கழிந்திருந்தது. இன்னும் இரண்டு நிமிஷம் பேசவேண்டும். அதற்குள் அவளே கேட்டாள் ''உங்க சிநேகிதர் என்ன சொல்றார்?', என்று.

''யாரு, ஜேம்ஸா?...அவன் உங்களைப்பற்றி என்ன சொல்றான் தெரியுமா?''

''என்ன நீங்கஒரு சைக்கிகாம், சாதாரணமாய் இந்தமாதிரி போன் பண்றவங்களில் ரொம்ப பேர் பெண்கள் தான் இந்த மாதிரி குறும்பு சேஷ்டைகள் பண்ணுவாங்களாம். பெரும்பாலானவர்கள் தன் மனவேதனையைப் போக்கிக்கத் தான் இந்த மாதிரி ஒரு 'அவுட்லெட்' ஏற்படுத்திப் பாங்களாம்.''

''அவர் சொன்னது நிஜந்தான். ஆனால் நான் அந்த பெரும்பாலானவர்களின் கட்சியைச் சேர்ந்தவளில்லை. குறை த பேர் கட்சிதான்'' மிகச் சாதாரணமாய்

சொன்னாள். ரேவந்திற்கு ஆச்சரியமாயிருந்தது. தன் வார்த்தை அவளுக்குக் கோபம் வரலாம் என்றெண்ணினான். அவளுக்குக் கோபத்தை வரவழைக்க வேண்டுமென்பதுதான் அவன் எண்ணமும். அந்தக் கோபத்தில் தன்னைப்பற்றிச் சொல்லிவிடுவாள் என்ற ஆசை. ஆனால் அவள் உண்மையை அந்த மாதிரி ஏற்றுக் கொள்வாள் என்று எதிர்பார்க்கவில்லை.

''அப்படின்னால் நீங்க குறும்புத் தனமாய் சேஷ்டைப் பண்ற பெண்ணுன்னு சொல்லுங்க.''

''ஆஹா'' என்று சிரித்துவிட்டு, ''விடிவதற்கு முன்பாகவே பால் போல காயும் நிலா வெளிச்சத்தில் சேலையைத் தூக்கிக் கட்டிக்கொண்டு 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்...' என்று பாடிக் கொண்டு கோலமிடும் பெண்''

''நிலாப் பெண்'' சட்டென்று சொன்னான்,

''பேர் நன்றாயிருக்கு''

''அப்படியே கூப்பிடறேன்''

''எனக்கு ஆட்சேபனையில்லை... அதுசரி, முந்தாநாள் ஏன் டெலிபோன் எக்சேஞ்சிக்குப் போனிங்க ரேவந்த்?'' என்று கேட்டாள்.

அருகில் குண்டு விழுந்தாற்போல அதிர்ந்தவன், ''உங்களுக்கு எப்படித் தெரிந்தது?', என்று கேட்டான்.

''உங்களோடு சிநேகம் பண்ணிக்கறதுக்கு முன்னால் உங்க தினசரி நிகழ்ச்சியைப் பற்றித் தெரிந்துக்கத் தேவை யில்லையா?''

''ஆமாம், ஒரு சின்ன வேலை இருந்தது, போனேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தபொழுதே அவனுக்கு ஒரு யோசனை உதித்ததுதான். அவள் போன் நம்பரைக் கண்டுப்

பிடிக்கப்போவது அவளுக்குத் தெரிந்து விட்டது போலுய்'? அதனால் வீட்டிற்கு அருகிலேயே போன் பண்ணால் தொலை தூரத்திற்குப் போய் எங்கிருந்தாவது பண்ணுகிறாளோ? அம்படியானால் அவன் அந்தப் போனிடம் தான் சேரும்வரை அவளைத் தடுத்து, அங்கயே நிற்க வைக்க வேண்டும்! இந்த யோனை வந்ததுமே குரலை அப்பாவிக் குரலாய் மாற்றிக்கொண்டு, நீங்க அன்றைக்கு ஒரு கணக்குச் சொன்னீங்க பாருங்க அதே போன்ற கணக்கு இன்னோன்று சொல்லுங்க இப்ப. அப்பத் தான் கண்டு பிடிக்காமல் போயிட்டேன் இப்பவாவது முடியுதான்னு பார்க்கிறேன் என்றான்.

எந்தக் கணக்கு என டெலிபோன் நம்பர் சம்பந்தப்பட்ட கணக்கா

ஆமாம் உங்க நம்பரைக் கண்டுப்பிடிக்கிறேன். ஆனால் எனக்கு ஐந்து நிமிஷம் நேரம் தரணும் என்றான் அவன் மதிலிருந்த யோசனை வேறு. அவளை எப்படியாவது ஐந்து நிமிஷம் வரை அந்தப் போனிடம் நிறுத்தி வைத்துவிட வேண்டும்.

அன்றைக்கு பண்ணின நம்பரால் உங்களை இழுத்தடித்து அழவைக்கமுடிந்தது. இப்பப் பண்ற இந்த நமபரில் அந்த மாதிரிப் பண்ண வழியில்லையே.

எந்த நம்பருக்குமே ஏதாவது ஒரு சிறப்பு இல்லாமல் போகாது முயன்றுப் பாருங்கள் ஊக்குவித்தான் அவன். ஒரு நிமிஷம் இருங்கள் என்று நிறுத்திய அவள் மறுமுனையில யோசனையில் மூழ்கி நிசப்தமாகி விட்டாள்.

ரேவந்த் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான்.

உம் கிடைத்துடுத்து

என்ன பரபரப்போடு கேட்டான்.

''இப்ப நான் பண்ற இந்த நம்பர் ரொம்ப வேடிக்கை யானது ரேவந்த் .ஐந்தே நிமிஷத்தில் நீங்க கண்டுபிடித்திட முடியும்னுதான் எதிர்பார்க்கிறேன்.''

''சொல்லுங்க.''

''ஐந்தெழுத்துடைய இத்த நம்பர் எண் கணித சாஸ்திரத் திலுள்ள முதல் ப்ரைம் நம்பர்''என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டாள்.

ரேவந்த்தும் போனை வைத்துவிட்டான். காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டான்.

ப்ரைம் நம்பர் என்றால் எதனாலும் கழிக்கமுடியாத எண்கள். உதாரணமாய் இரண்டு ஸ்தானங்களுடைய ப்ரைம் நம்பர்கள் 11 13 17 19

இப்படி ஐந்து ஸ்தானங்களுடையது அவளுடைய டெலி போன் நம்பர். அவன் கணக்குப் போடத் தொடங்கினான். எண் கணித சாஸ்திரத்தில் முதல் முதலாய் வரும் ஐந்து ஸ்தான ப்ரைம் நம்பர் 10000. ஆனால் இந்தப் பத்தாயி ரத்தை பத்தால் வகுக்கமுடியும் அதனால் டெலிபோன் நம்பர் அதில்லை.

அடுத்தது 10001 இதை 73 ஆல் வகுக்கமுடியும்.

10002 இது இரண்டால் வகுக்கப்படும்.

அவன் வேகமாய் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான் நேரம் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. அவனுக்கு ஒன்று மட்டும் ஆச்சரியமாயிருந்தது. அந்தப்பெண் தன் போன் நம்பரின் சிறப்பை அவ்வளவு துரிதமாய் எப்படிக் கண்டு பிடித்திருப்பாள். அவள் கணிதத்தில் சகுந்தலா தேவிக்குச் சமமானவளாய்த் தான் இருந்திருக்கவேண்டும்.

அடுத்த எண் 10003 இது ஏழால் வகுக்கப்படும். 10004 10005 10006 வரிசையாய் இரண்டு மூன்று இரண்டால் வகுபடுபவை.

அடுத்த எண் 10007 அவசரமாய் கணக்குப் போட்டுக் கொண்டேயிருந்தான். அந்த நம்பர்தான் என்று தெரிந்த தும் சந்தோஷமிகுதியால் யுரேகா என்று கத்தப் போன பொழுது டெலிபோன் கணகணவென்று ஒலித்தது. ரிசீவரை எடுத்து,''ஹலோ'' என்றான்.

''டெலிபோன் டிபார்ட்மென்டிலிருந்து பேசறோம் சார் உங்களுக்கு இப்ப வந்தக் கால் 10007யிடமிருந்து..... ஓட்டல் ஹரிப்ரியா.''

''இன்னும் அரைமணி கழித்துச் சொல்லாமல் போனீங் களோ'' என்று கோபமாய் போனை வைத்துவிட்டுச் சட்டென்று எழுந்தான். இன்னும் இரண்டே நிமிஷம் எஞ்சி யிருந்தது.

அவன் வேகமாய் படியிறங்கிக் காரை நோக்கி ஓடி னான். ஓட்டல் ஹரிப்ரியா அடுத்த தெருவில்தான் இருந் தது.....போய்ச் சேர்த்தபொழுது ஒரு மிஷம் பாக்கியிருந் தது

அவன் ரிசப்ஷனிஸ்ட்டிடம் போய் ''இப்ப ஒரு பெண் உங்க ஓட்டலிலிருந்து போன் பண்ணினாள் அவள் எங்கேயிருக்கிறாள்'' என்று கேட்டான்.

''நீங்க யார்?''

சி ஐ. டி. போலீஸ் க்ரைம்பிராஞ்ச் சி. பி. ஐ என்ற வாயில் வந்த பெயரைச் சொன்னான். அத்துடன் ரிசப்ஷ னிஸ்ட் பயந்து''நாங்க பெண்களுக்கு அறைகளோ போனோ தருவதில்லிங்க'' என்றாள்.

''இப்ப இந்த நம்பரிலிருந்து எங்களுக்குப் போன் வந்தது'' அதட்டினான் அவன்.

ரிசப்ஷனிஸ்ட் மெதுவாக ''314-ம் நம்பர் அறையில் மட்டும் ஒரு பெண் வந்து தங்கியிருக்கிறாள். ஒரு மணி நேரந்தான் ஆச்சுங்க'' என்றாள்.

ரேவந்த் மேற்கொண்டு தாமதிக்கவில்லை லிப்ட்டைக் கூட எதிர்பார்க்காமல் மூன்றாவது மாடியை நோக்கி ஓடினான்.

ரூம் நம்பர் 3.4 இருட்டாய் இருந்தது. கதவைத்தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். திடீரென்று வெளிச் சத்திலிருந்து இருட்டிற்கு வந்தால் கண்ணுக்கு எதுவும் புலப் படவில்லை. தடவிக் கொண்டே ஸ்விட்ச்சைப் போட்டான்.

அவ்வளவுதான்!

வீலென்று எழும்பவிருந்த அலறல் தொண்டைக் குழியி லேயே சிகிக் கொண்டது. கைகள் இறுக்கிக் கொண்டன. அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு திரும்பினான்.

அப்பொழுதுதான் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்த அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அறைக்கு நடுவில் ஒரு இளம் பெண்ணின் சவம் தொங்கிக் கொண்டி ருந்தது.

ஒரு மணி நேரங்கழித்து ரேவந்த் போலீஸ் ஸ்டேஷனில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பல விசாரணைகள் நடந்தன. அவனுக்கிருந்த சொல்வாக்கும் புகழும் எதற்கும் பயன்படவில்லை. அந்தப் பெண் யாரோ தெரியவில்லை. சாவதானமாய் ஓட்டலில் அறையை எடுத்துக் கொண்டு, இன்ஸ்பெக்டருக்குப் போன் வேறு பண்ணி விட்டுப் பிறகு செத்திருக்கிறாள்.

''நீங்க அந்த ரூமுக்குள் போக வேண்டிய காரணமென்ன ரேவந்த்?'' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''தவறுதலாய் போயிட்டேன்.''

''அப்படின்னால் எந்த ரூமுக்குப் போக நினைத்து இதில் நுழைந்துட்டீங்க?''

அதற்கு ரேவந்த்திடமிருந்து பதிலில்லை.

''ரிசப்ஷனிஸ்ட்டுக்கு நீங்க சி.ஐ.டின்னு ஏன் சொன்னீங்க தப்பில்லையா அது?''

ரேவந்த் பதில் பேசவில்லை. தான் வந்த விவரத்தைச் சொல்லிவிட்டால் போதும். இக்குற்றம் இன்னும் நன்றாய் தன்மேல் வந்து படிந்துவிடும். தான் டேலிபோன் இலாக்காவிற்குத் தந்த கம்ளையிண்டு வெளிவந்து விடும். 'இப்பல்லாம் பெண் பிளாக்மெயிலர் கூட நிறையவே கிளம்பிட்டாங்க, என்று தான் சொன்னவார்த்தையை அந்த இஞ்ஜினீயர் போலீசுக்குச் சொல்லிவிடுவார். தனக்கு அன்று 10007 லிருந்து போன் கால் வந்த விஷயத்தைத் தான் சொன்னதாய் ஸ்விட்ச்ரூம் அசிஸ்டென்ட் வாக்குமூலமளிப்பார். உடனேதான் ஓட்டல் ஹரிப்ரியாவுக்குக் கிளம்பி அவ்வறையிலிருந்த பிளாக்மெயிலரைக் கொன்று விட்டதாய்.....''

கோவிந்தா கோவிந்தா என்றெண்ணிக்கொண்டான்.

இனி தன் பேர் புகழ் வேலை எல்லாம் கோவிந்ததான், என்றெண்ணிக் கொண்டான்.

''மிஸ்டர் ரேவந்த்! நீங்க எந்தக் கேள்விக்கும் சரியாய் பதில் சொல்ல மறுக்கிறீங்க. நீங்க படித்தவர். உங்கள் மேல் தர்ட் டிகிரியைப் பயன்படுத்த விரும்பலை நான்''

ரேவந்த் திடுக்கிட்டான், தன்னைக் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடு என்று இன்ஸ்பெக்டர் மறைமுகமாய் சொல்லுகிறார்.

அவனுக்கு துக்கம் வரவில்லை. தன் முட்டாள்த்தனத்தைக் கண்டு தனக்கே தன்மேல் பரிதாபமாயிருந்தது. யாரோ ஒருத்தி போன் பண்ணினால் அவளுக்கு 'நிலாப் பெண்' என்று பெயரிட்டு விட்டு அவளைத் தேடிப் பிடிக்கப் பெரிய ஹீரோவைப் போல் கிளம்பியிருக்கிறான். இதற்குப் பின்னால்

ஒரு குழு இருந்திருக்கிறதென்றும் தன்னைச் சுற்றிலும் கவனமாய் வலை பின்னுவதற்காகத்தான் இந்நாடகம் ஆடப் பட்டிருக்கிறதென்றும் தெரிந்துக் கொள்ளாமல் போய் விட்டான். அவர்கள் செய்ய வேண்டிய கொலையை அவர்கள் செய்து முடித்துவிட்டுத் தன்னை இதில் சிக்கவைத்து விட்டார்கள். அந்தப் பெண்ணின் மோகத்தில்தான் அந்த வலையில் சிக்கிவிட்டேன். தன்னைப் போன்ற முட்டாள் உண்டா?

மேலும் அரைமணி நேரம் விசாரணை நடந்தது. அது வாதனையாய் மாறிற்று இன்ஸ்பெக்டர் கோபமாய்'' ஓ.கே. மிஸ்டர் ரேவந்த்! மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் உங்களை கொணர்ந்து நிறுத்துகிறோம். பிறகு எஞ்சியதைப் பார்த்துப் போம்'' என்றார்.

''நீங்க வரத்துக்கு ரெண்டு நிமிஷத்துக்கு முன்னால் தான் நான் ஓட்டல் அறைக்குள் நுழைந்தேன். அந்த விஷயத்தை ரிசப்ஷனிஸ்ட் சொல்லுவாள். இந்த இரண்டு நிமிஷத்திற்குள் நான் கொன்று தொங்கவிட்டிருப்பேன்னு நினைக்கிறீங்களா?'' ஆவேசமாய் கேட்டான் ரேவந்த்.

இன்ஸ்பெக்டர் நிதானமாய் ''அந்த வாதத்தையெல்லாம் கோர்ட்டில் சொல்லிக்குங்க'' என்று போலீசாரைப் பார்த்து ''இவரை லாக்கப்பில் வை'' என்றார். அதைக் கேட்டு ரேவந்த் சரேலென்று நாற்காலியை விட்டெழுந் திருந்து ''இது அநியாயம்! சாட்சியை அழைத்து வந்து என் லாயரைச் சந்திக்கக்கூட அவகாசம் தராமல் இங்கேயே என் மேல் குற்றத்தைச் சுமத்தி விடுவது அநியாயம்'' என்றான். இன்ஸ்பெக்டர் கோபமாய் ''மிஸ்டர் ரேவந்த் எந்த வேலையை எப்பப் பண்ணணுங்கறதெல்லாம் எங்க ளுக்குத் தெரியும்.'' என்று அதட்டினார். அவரை இழுத்து ஒரு உதைகொடுக்கவேண்டும் போல ஆத்திரமாயிருந்தது ரேவந்த்திற்கு. ஆதரவின்றி ரோஷத்தால் அவன் கண்களி லிருந்து கண்ணீர் வந்ததுதான் மிஞ்சியது. விளையாட்டுப்

போல பண்ணத்தொடங்கி எதில் போய் சிக்கிக் கொண்டிருக்கிறான்! முதலில் அரெஸ்ட்—பிறகு—ஜாமீன்—பிறகு—தீர்ப்பு லாக்அப்—ஜெயில் வாழ்க்கை! ''வாங்க போவோம்'' என்றார் ஒரு போலீஸ் அருகில் வந்து—

இன்ஸ்பெக்டர் மேஜைக்குப் பத்தடி தூரத்தில் கம்பிக் கூப்பால் நின்று கொண்டிருந்த பிக்—பாக்கெட் கைதி வேடிக்கைப் பார்ப்பதுபோலச் சிரித்துக் கொண்டிருந்தான். ரேவந்த் அவனைக் குழப்பத்துடன் பார்க்கலானான்.

ரேவந்த் எழுந்திருக்காததால் போலீஸ் அவன் தோளைப் பிடித்துக் கொண்டார். ''ஒரு ஐநூறு அவங்க மூஞ்சியில் கடாசி எறிஞ்சுடுங்க சார், அவங்க வேனில் மரியாதையோடு வூட்டுக்கு அனுப்பி வெச்சிடுவாங்க'' என்றான் கைதி. லாட்டி அவன் முகத்தில் வந்து விழுந்தது.

இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டார்.

வேறு வழியின்றி ரேவந்த் எழுந்திருந்தான். அவனுக்கு இதெல்லாம் கனவா நினைவா என்று புரியவில்லை. தூக்கத்தில் எழுந்து நடப்பது போல லாக்கப்பை நோக்கி நடந்தான்.

நடந்து கொண்டிருந்தபோது போன் ஒலித்தது. இன்ஸ் பெக்டர் அலட்சியமாய் போனை எடுத்து,'' ஹலோ டூ டெளன் என்றார். ஆனால் சட்டென்று அவர் குரலில் மாறுதல் தெரிந்தது.

சட்டென்று எழுந்து நின்று அட்டென்ஷனுக்கு வந்து ''எஸ் ஸார்'' என்றார் நடுங்கும் குரலுடன். அவரிடம் தென்பட்ட மாறுபாட்டைக் கண்டு ரேவந்த் வியப்படைந்தவனாய் பார்த்தான். இன்ஸ்பெக்டர் நெற்றியில் வழிந்த வியர்வையை அடிக்கடி துடைத்துக் கொண்டார். போனைப் பிடித்துக் கொண்டிருந்த கை நடுங்கிற்று.

''எஸ் ஸார்...சரிங்க சார்'' என்பதைத் தவிர வேறொன்றும் சொல்லவேயில்லை. அவர் தோரணையைப் பார்த்தால் மறுமுனையில் ஃபோனில் பேசிக் கொண்டிருந்தது இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீசுக்கு அடுத்தபடி பதவியிலிருக்கும் ஆளாயிருக்கலாம் என்றெண்ணினான்.

''இல்லங்க சார்—தற்கொலைன்னு எழுதி வெச்சுட்டு தான் செத்திருக்கு''

''ஆமாம் சார். எனக்குப் போன் பண்ணிச்சு. வாழ்க்கையின் மேல் விரக்தி ஏற்பட்டுடுத்தாம்''

''.....''

''அப்பத்தான் வந்தாராம் சார். ரிசப்ஷனிஸ்ட் சொன்னாங்க''

.....''

''எஸ்...விட்டுடறேங்க சார். ஃபைலை மூடிடறேன்'' போனை வைத்துவிட்டு தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ரேவந்த்தை நோக்கி மெல்ல நடந்து வந்தார் இன்ஸ்பெக்டர்.

''வாங்க, உட்காருங்க மிஸ்டர் ரேவந்த்! வி ஆர் சாரி... நிஜமாய் தற்கொலைதான் அது. சந்தேகத்திற்கிடந்தராப்பல நீங்க தென்பட்டதால் உங்களைக் குற்ற விசாரணைப்பண்ண வேண்டியிருந்தது. நடந்ததையெல்லாம் மறந்துடுங்க. ஏய் டு நாட் ஃபோர் ஒரு காபி எடுத்துட்டு வா ஐயாக்கு''

ரேவந்திற்கு ஆச்சரியம் தாங்கவில்லை. தன் நிரபராதித்தன்மை—தன் நியாயமான வாதங்கள்—கிடைத்த ருசுக்கள்—சாட்சிகள் இவைறெல்லாவற்றையும் விட ஒரு போன் கால் அதிகப் பலனைத் தந்ததற்கு.

அதற்குள் வெளியே கார் வந்து நின்ற ஓசை. ரேவந்த்துடன் இன்ஸ்பெக்டரும் சேர்ந்து விடைதருவதற்காக வெளியே வந்தார்.

வெளியே வெய்யலில் டயோட்டா பளபளத்துக் கொண்டிருந்தது. டிரைவர் வினயமாய் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ரேவந்த் உட்கார்ந்து கொண்டதும் இன்ஸ்பெக்டர் கதவைச்சாத்தினார். கார் புறப்பட்டதும் ரேவந்த் கேட்டான். ''...யார் உங்களுக்குப்போன் பண்ணினாங்க?''

''டி. ஐ. ஜி. சர் ''

கார் வேகமாய் போயிற்று. ஏர் கண்டிஷன் பொறுத்தப் பட்டக் காரானதால் குளிர்ந்த காற்று வந்து மோதிற்று. சீட்டுக்குப் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான். அவன் உடலிலிருந்த சக்தியையெல்லாம் இந்த சம்பவம் ஒரேயடியாய் வீழ்த்திவிட்டது போலிருந்தது. டிரைவரை எதுவும் கேட்கக்கூடப் பிடிக்கவில்லை.

அவன் ஆபிசிற்கு முன்னால் காரை நிறுத்தி விட்டு டிரைவர் இறங்கி கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான். ரேவந்த் இறங்கியதும் அவன் கையில் ஒரு கவரைத் திணித்து விட்டு, ''அம்மா தரச்சொன்னாங்க சார்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

அப்பொழுதுதான் ரேவந்த்திற்கு ஞாபகம் வந்தது—தான் அந்தக் கார் யாருடையது என்றுக்கூட கேட்காமல் போய் விட்டது. அதற்குள் அது சாலையில் வெகுதூரம் போய் மறைந்து விட்டது. கையிலிருந்த கவரைப் பிரித்து ரோஜா வண்ணத்திலிருந்த தாளை உருவி வெளியே எடுத்தான். முத்துக் கோர்த்தாற் போல—நீல வானத்தில் சுடரிடும் நட்சத்திரக் கோர்வையைப் போல—அழகான எழுத்துக்கள்.

''விளையாட்டாய் பண்ணப்போய் இப்படித் திரும்பும் என்று கனவிலும் நினைக்கவில்லை. என்னை மன்னியுங்கள். மன்னிப்பீர்கள் அல்லவா? கண்ணீருடன்—உங்கள் நிலாப் பெண்'' அவன் தூணாய் நின்றுவிட்டான். அவனுக்கு இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனில் நிகழ்ந்த அனுபவம்

நினைவில் இல்லை. தான் செய்த பிழை புரிந்தது. கார் யாருடையது என்றுகூடக் கேட்காமல் போய்விட்டான். டிரைவரை கேட்டிருந்தால் அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களையெல்லாம் சொல்லியிப்பானே!

தன்னையே நொந்து கொண்டு, சம்பருக்குள் நுழைந்த பொழுது போன் ஒலித்தது.

"அம்மாடா! வந்துட்டீங்களில்லே? நான் எவ்வளவு கலவரமடைந்தேன் தெரியுமா" நிம்மதியாய் மூச்சு விட்டபடி சொன்னாள்.

"நீங்களா?" என்றான் ரேவந்த்.

"நான்தான். டிரைவர் வந்து சொல்ற வரையிலும் என் மனம் என் வசத்திலேயே இல்லை. அதுசரி, நீங்க எதுக்கு அந்த ரூமுக்குள் போனீங்க ரேவந்த்?"

"314-ம் நம்பர் ரூமில் ஒரு பெண் இருந்ததாய் ரிசப்ஷனிஸ்ட் சொன்னதால், வேறு எதையுமே யோசித்துப் பார்க்கலை."

"இந்த ஊரிலேயே நான் இருந்துகொண்டு உங்களுக்குப் போன் பண்றத்துக்காக ரூம் எடுத்துப்பேனா ரேவந்த் அதுவும் நீங்க உங்க போனைக் கண்காணிப்பில் வைத்தபிறகுமா?"

ரேவந்த் திடுக்கிட்டு. "அப்டின்னால் உங்களுக்கு எல்லாம் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும். ஆனாலும் உங்களிடம் சொன்னாற் போல ஐந்து நிமிஷம் வரையிலும் நான் அங்கேயே இருந்தேன். ஒரு விஷயம் மட்டும் உண்மை ரேவந்த். நான் உங்களோடு கண்ணாமூச்சி ஆடலை. இதை மட்டும் நம்புங்க. உங்களுக்கு நல்ல சான்சு கொடுத்துண்டே வந்திக்கேன் இதுவரை. நீங்கதான் விடுவிடென்று ரிசப்ஷனிஸ்டிடம் போய் சி ஐ டி போலீஸ், க்ரைம் பிராஞ்ச், சி பி ஐ ன்னு ஜம்ப

மாய் சொல்லிண்டிருந்ததைப் பார்த்து அடக்கமாட்டாமல் சிரித்தேன். நீங்க எந்தப் பக்கமும் திரும்பிப் பாராமல் நேராய் மூன்றாவது மாடிக்குப் போயிட்டீங்க. கொஞ்சம் திரும்பிப் பார்த்திருந்தால் லாஞ்ச் சோபாவில் என்னைப் பார்த்திருக் கலாம்.'' அவள் சிரித்தாள்.

சட்டென்று அவள் குரல் மாறிவிட்டது.

''நீங்க திரும்பவும் தோற்றுட்டீங்க என்று சிரித்துக் கொண்டே நான் எழுந்திருக்கப் போனபொழுது இன்ஸ் பெக்டர் வந்து கொண்டிருந்தது தென்பட்டது. ஓட்டலில் நொடிப்பொழுதில் கலவரம் கிளம்பிவிட்டது. அதற்குள் வேனில் உங்களை இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிச்சென்று விட்டதால் நிலைமை மேலும் மோசமாயிற்று. எனக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. அழாத குறையாய் ஓடிப்போய் அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லிட்டேன். அவர் டி.ஐ.ஜி.க்குப் போன் பண்ணினார்.''

கேட்டுக் கொண்டிருந் ரேவந்த் திடுக்கிட்டான்.

உங்கப்பாவுக்கு ...அப்பாவுக்கு எல்லாம் தெரியுமா?' கேட்டான் தொண்டை உலர்ந்துப் போய்.

''தெரியும் ''

இருவருக்குமிடையே வெகு நேரம் நிசப்தம். அதைச் சிதறடித்தபடி அவள் சொன்னாள். ''ரேவந்த், உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லணும். முதலில் சொல்ல வேண்டாம்னு தான் இருந்தேன். ஆனால் இப்பச் சொல்லிடறேன்..... ரேவந்த், நான் ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடியில் படிப்பை முடிச்சுட்டு சமீபத்தில்தான் திரும்பிவந்தேன். அப்பாவுக்கு ஒரே மகள். ரொம்ப செல்வாக்கும் பணமுமுடையவர் அவர். அரிஸ்டோகிரெடிக்ட்டாய் தன் மகள் வெளிநாட்டில் செட்டி லாகவேண்டுமென்றும் மருமகனும் பெரிய அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்றும் ஆசைப்படுபவர். ஆனால் என் ஆசையோ வேறு. காவேரி மணற்பரப்பில் படுத்துக்கிட்டு

பாரதியார் பாட்டைப் பாடிகொண்டிருக்கணுங்கறதுதான் என் கோரிக்கை. ஒரு அழகான கெட்டிக்காரக் கணவனுக்கு இல்லாளாகி நம் நாட்டில் நம் தமிழ் மண்ணிலேயே கண்ணை மூடணும்னு விருப்பம். எங்களிருவருக்கும் மோதல் ஏற் பட்டது. இறுதியில் நான்தான் வென்றேன். ஆனால் அப்பா, 'அம்மா எனக்குத்தெரிந்தவங்க எல்லோருமே பெரிய பிசினஸ் புள்ளிகள். அவங்க பிள்ளைங்க கூட அந்தமாதிரிதான். புத்திசாலித்தனமும் அழகும் வேண்டினால் பரவாயில்லை. ஆனால் நீயோ அதோடு கூட அப்பாவித்தனமும் கவிதை இயற்றும் திறனுகூட கலந்திருக்கணுப்கிறாய். என்உத்தேசப் படி அந்தமாதிரி பிள்ளைங்க இநத பூமியிலேயே யாரும் கிடைக்கமாட்டாங்கன்னு நினைக்கிறேன்''என்றார். அதுமட்டு மில்லை.'' அந்தமாதிரி பிள்ளைங்க யாரையாவது பார்த்து எனக்குக் காடடினால் அந்தப் பையனையே உனக்குப் பரிசாய் அளிக்கிறேன்'' என்றார். வேறு விதமாய் சொல்லணும்னால் எனக்கு வரப்போகும் மணமகனை நானே தேர்ந்தெடுத்துக் கணும்னு அர்த்தம். நானும் அதை ஒரு சவாலாய் எடுத்துக் கிட்டேன். ஆனால் சீக்கிரமே தெரிந்துடுத்து அப்பா சொன்னது நூற்றுக்கு நூறு சரின்னு. அழகு புத்திசாலித்தனம், அப்பாவித் தனம், கவிபாடும் திறன் இந்த நான்கில் குறைந்தது மூன்றா வது பொறுந்தியிருக்கிற பையன் யாருமே எனக்குக் கிடைக் கலை. நான் தோற்றுப்போயிட்டேன்னு நினைத்துக்கொண்டி ருந்த சமயத்தில்தான் ஒரு பார்ட்டியில் உங்களைப் பார்க்க நேர்ந்தது. யாரோடும் சேராமல் தொலைவில்தனியாய் நின்று கொண்ருந்த உங்களைப் பார்த்ததும் யாரிந்த 'பன் ரொட்டி'ன்னு நினைச்சேன்.''

கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த்தின் முகம் கோபத்தால் சிவந்தது.

அவள் மேலும் தொடர்ந்தாள்.

''.....கோபித்துக்காதீங்க. உங்களைப் பார்த்ததுமே எனக்கு முதல் முதலில் தோன்றியது அதுதான். அதற்குள்

யாரோ சொன்னாங்க நீங்க, பெனின்சுலா ப்ரொடெக்ட்டில் டி.ஃ.புடி சீ.ஃ.ப் எக்சிகியூடிவ் என்று. நான் வியந்து கொண்டி ருந்தபோதே வேறு யாரோ உங்களை சதுரங்க மேதை என்றும் சொன்னார்கள். அப்பொழுதுதான் எனக்குத் தெரிந் தது, நான் தேடிய மூலிகை கிடைத்துடுத்துன்னு...எனக்குத் துணைவராகத் தகுந்தவர்னு...''

ரேவந்த் திடுக்கிட்டு, ''என்ன சொல்றீங்க நீங்க?'' என்றான்.

''அப்பாவிடம் சொன்னேன் ரேவந்த். அவருக்கு எனக்குப் பிடித்தவர் யாராயிருந்தாலும் சரி, அதிலும் உங்களை அவருக்கு ரொம்ப பிடிச்சுடுத்து.''

''இதுமுட்டாள்தனம். நான் என்ன கடைத்தெருவில் விற் கிற கடைச்சரக்கா? நீங்களும் உங்கப்பாவும் பிடித்துப்போய் விலைகொடுத்து வாங்கிக்கொள்வதற்கு. முதல்ல உங்களைப் பார்த்து எனக்குப் பிடிக்க வேண்டாமா? அதானே முதலில் வேண்டியது.''

''உங்களுக்குக் கோபம் ரொம்ப அதிகம்னு நினைக்கிறேன். ரொம்பத்தான் தமிழ்நாட்டு பையன்களைப் போலப்பேசறீங்க. இங்கே பெண்பார்த்ததும் எல்லோரும் பையனைத்தான் கேட்பாங்களாம் பெண் பிடித்திருக்கான்னு. பெண்ணின் விருப் பமெல்லாம் ஒப்புக்குத்தானாம்'' என்ற அவளின் குரல் சட் டென்று மாற,''சரி, நான் உங்க உரிமையை மறுக்கமாட்டேன் ரேவந்த்...ஆனால் முதல்ல உங்களைப் பார்த்தது நான். பார்த்து விருப்பிட்டேன். அதனால்தான் இந்த முடிவுக்கு வந்தேன். இதில் தப்பு ஏதாவது இருக்கா?''

அவனால் சட்டென்று பதிலளிக்க முடியவில்லை. 'ஆமாம்' என்று சொல்வதற்கு அகம்பாவம் குறுக்கிட்டது. ஆனால் அதை உடனே அடக்கிவிட்டு, ''தப்பில்லை. ஆனால்

நான் உங்களைப் பார்க்காமல் எப்படிச் சொல்லமுடியும்? ஆஃப் கோர்ஸ்! எனக்கு அப்பா கிடையாது. எங்கம்மா நான் சொன்னால் மறுக்க மாட்டாங்க. சந்தோஷப்படுவாள் கூட. ஆனால்...ஆனால்...'' அதற்கு மேல் என்ன பேசுவதென்று தெரியவில்லை அவனுக்கு.

அவள் பிடித்துக் கொண்டு, ''உங்க எண்ணம் புரிஞ்சுடுத்து. பெண் சந்தித்துப் பார்த்துக்காமலேயே எப்படின்னுதானே?'' என்றாள். ரேவந்த் பதில் பேசவில்லை. அவன் மௌனத்தைச் சம்மதமாய்எடுத்துத் தொடர்ந்தாள்.— ''இந்தப் பெண் பார்க்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே சிரிப்புதான் வரது எனக்கு. ஃபுல் சூட்டில் முறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் மணமகனும்—வெட்கத்தால் பூமியில் தலையைப் பொத்துக்கொணடு நிற்கும் மணமகளும் சேர்த்து, தாமிருவரும் வாழ்நாளெல்லாம் சேர்ந்து வசிக்க வேண்டு மென்ற நிர்ணயத்தை மூன்றே நிமிஷங்களில் முடிவெடுக் கிறார்கள். எவ்வளவு அர்த்தமில்லாத சடங்கு இது இல்லையா?''

''அப்படின்னால் வெளிநாடுகளைப்போல டேட்டிங் இருக்கணுங்கிறீங்ளா?''

''ஐயோ, அது ரொம்பக் கொடுமை! நம்ம நாட்டு சூழ்நிலையில் சீக்கிரமாய் பரவி விடக்கூடிய ஆபத்து இது கல்யாணத்துக்கு முன்னாடி ஒருவரையொருவர் தெரிந்துக் கணும். ஆனால் அவங்க சந்தித்துக் கொள்ளக் கூடாது. ரொம்ப வேடிக்கையான சூழ்நிலை இது!... எப்படி முடியும்:'' என்று கேட்டான் ரேவந்த்.

''வாதத்தில் சரியாய் நான் நினைத்தே அதே இடத்துக்கு வந்து சேர்த்துட்டிங்க ரேவந்த்! ஏன் சாத்திய மில்லை? போன் மூலம் சாத்தியமாகலையா?... இல்லா விட்டால் கடிதங்கள் மூலம் ஆகாதா?'' கேட்டாள். சிலையாகி

விட்டான் ரேவந்த். இந்த உண்மை அவனைக் கட்டிப் போட்டு விட்டது. என்ன பேசுவதென்று புரியவில்லை. தன்னை இந்த வாதனைக்குக் கொண்டு வந்துச் சேர்ப்பித்து விட்டு, எங்கே இழுத்துச் செல்ல வேண்டுமோ அங்கே இழுத்துச் சென்று விட்டாள். இவள் தான்முன்பு ஊகித்தது போல வெறும் கணிதத்திலும் தமிழிலும் மட்டுமே கெட்டிக் காரியாயிருந்திருக்க வேண்டும். அல்லது அரசியலில்.....

''என்ன யோசிக்கிறீங்க?''

ரேவந்த் யோசனையிலிருந்து மீண்டு ''ஒன்றுமில்லை'' என்றான். ''இந்த மாதிரி நானே கல்யாணப் பேச்செடுத்தது உங்களுக்கு ஏளனமாயும் இளப்பமாயும் இருக்கா?''

ரேவந்த் கலவரமடைந்தவனாய், ''இல்லை இல்லை, நிஜமாய் இல்லை. அந்த மாதிரி எண்ணமே ஏற்படுத்திக்கா தீங்க. ஒரு ஆணாய் இருந்தாலும் நானே இந்த உண்மையை ஏற்றுக்க் வேண்டியிருக்கு. நீங்க பண்ணியது ரொம்ப நல்ல காரியம். நீங்க உங்கப்பாவுக்குச் சாதாரணமாய் சொல்லி யிருந்தால் அவர் பெண்பார்க்கும் நிகழ்ச்சியை அரேஞ்சு பண்ணியிருப்பார். அப்ப நீங்க சொன்னதுபோல மூன்றே நிமிஷத்தில் நம் விவாகம் நிச்சயமாகி முடிந்திருக்கும்...உங்க கருத்து எனக்கும் சரியாய்தான் தோணுது''

''ஆனால் எனக்குப் புரியாதது ஒன்றுதான். இப்ப போனில் மட்டும் என்னைப்பற்றிச் சரியான விவரங்களைத் தருவேன்னு என்ன நிச்சயம்? உதாரணமாய் உங்களுக்கு கவிதை என்றால் பிடிக்கும். நான் எங்கிருந்தோ கீட்ஸ் கவிதைகளை சேகரித்துண்டு வந்து நீங்க புகழணும்னு போனில் நான் இயற்றியது போலவே படித்துக் காட்டிடலா மில்லே?''

மறுமுனையில் சிரிப்பு! ''நீங்க அந்த மாதிரி பண்ண முடியாது ரேவந்த்! நான் கவிபாடும் திறனைப் பற்றிச்

சொன்னதுமே நீங்க குறைந்தது கீட்ஸைப் பற்றியாவது பேசத் தெரிந்து வைத்திருகீங்களே,'' என்றாள். ''அதில் ''அதில் உங்களுக்கென்ன நம்பிக்கை?'' கேட்டான். கொஞ்ச நேரம் நிசப்தம். உங்களைப்பற்றி எதுவுமே தெரிந்துக் காமலேயே ஏதோ பார்ட்டியில் பார்த்துட்டுக் கண்டதும் காதல்னு நான் போன் பண்ணத் தொடங்கிட்டேன்னு நினைக்கிறீங்களா?.....வாழ்க்கையை நான் ரொம்ப அளந்து வைத்திருக்கேன் ரேவந்த! இதை கர்வம்னு நினைத்துடா தீங்க...உங்களை நான் முதன் முதலில் பார்த்ததற்கும் உங்களுக்கு முதல் முதலில் போன் பண்ணத் தொடங்கியதற்கு மிடையே இரண்டு மாதம் இடைவெளி கழிந்திருக்கிறது. நான் சிநேகம் பண்ணிக்கப் போகும் ஆள் எனக்குத்தகுந்தவர் தான்று நான் முடிவெடுத்துக்கத்தான் அவ்வளவு நாளாயிற்று. அந்த இடைவெளியில் உங்களைப்பற்றியெல்லாம் தெரிந்து கொண்ட பிறகு தான் உங்களுக்குப் போன் பண்ணினேன்.'

ரேவந்த் உற்சாகத்துடன் நிமிர்ந்து, ''என்னைப்பற்றி என்ன தெரிந்துகொண்டீங்க நீங்க?'' என்று கேட்டான்.

''எல்லாம்''

''எல்லாம்னால்?''

''உங்க விருப்பு வெறுப்பு, உங்க பழக்கங்கள், உங்க குணம்,...எல்லாவற்றையும் எல்லாவற்றையும் சொல்லறதுன்னால் ரொம்ப நேரமாகும்.''

''பரவாயில்லை, சொல்லுங்க. நான் இப்ப ஓய்வாய்த் தான் இருக்கேன்.'' என்றான் ரேவந்த். அவனுக்குத் தன்னைப்பற்றி அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்று பரபரப்பாய் இருந்தது. தன் தந்தை பிழைத்திருக்குங்கால் என்ன பண்ணிக் கொண்டிருந்தார்? தாம் எவ்வளவு பேர் குழந்தைகள்—தன் வாழ்க்கை இதையெல்லாம் பற்றிச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவன் ஊகித்திராதவளவில் அந்த விவரங்கள் வேறு விதமாய் இருந்தது.

''நீங்க ரொம்ப சென்சிடிவ் ரேவந்த்! நீங்க எவ்வளவு சென்சிடிவ் என்றால் யாராவது உங்களுக்கு உதவி பண்ண முன்வந்தால் கூட அந்த உதவியைப் பெறுவது உங்களையே நீங்க தாழ்த்திப்பது போலன்னு நினைப்பீங்க. அதனால் நீங்க உங்களைச் சுற்றிலும் ஒரு கோட்டைக் கிழித்துக் கொண்டு வாழ்ந்துண்டிருப்பது போல தோன்றும் பார்ப்பவர்களுக்கு உங்களைப் புரிஞ்சுக்க ரொம்பப் பொறுமை வேண்டும். உங்க வாழ்க்கையின் குறிக்கோளை என்றுமே உயர்ந்ததாய் அதை பாவித்து, சாதிப்பதற்காக இடைவிடாமல் உழைப்பதிலேயே உங்க நேரமெல்லாம் செலவாகி விடுவதால், நீங்க 'அற்ப மகிழ்ச்சி'யின் பக்கமெல்லாம் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டீங்க. உங்களோடு வாழ்க்கையைப் பகிர்ந்துக்கப்போற துணைவிக்கு அது ஒன்றுதான் கஷ்டம். ஆனாலும் உங்களுக்கு கோபம் எரிச்சல் எல்லாம்வராதது அதிர்ஷ்டம். வாழ்க்கையின் மேல் நம் இளந்தலைமுறையினர் யாருக்குமே இல்லாத ஒரு தகுதி...எந்தச் சூழ்நிலையுடனும் எந்த நிலையிலும் ஒன்றிணைந்துபோய் அதை உங்களுக்கு சாதகமாய் மாற்றிக் கொண்டு விடக் கூடிய ஒரு விதமான ஸ்டைல் உங்களுடையது. பண விஷயத்தில் ரொம்பக் கறாராய் நடந்துப்பீங்க நீங்க. செலவழிக்கும் ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வைத்திருப்பீங்க. இந்த உலகத்தில் நீங்க விரும்பும் ஒரே நபர் உங்கள் தாயார். ஐந்து மணி நேரம் தினமும் சதுரங்கத்தில் எப்படி நேரத்தை செலவிடுவீங்களோ அதுபோல தினமும் ஒரு மணிநேரமாவது உங்க தாயாருடன் கழிக்காவிட்டால் உங்களுக்கு எதையோ இழந்துட்டாற் போலிருக்கும். உங்க சிநேகிதர் ஜேம்ஸைப் போல நீங்களும் சாரமில்லாத விரக்தியான வாழ்க்கையை எதிர்ப்படாமலிருப்பதற்குக் காரணம் உங்கத் தாயார்தான்! அவங்க மேல் உங்களுக்கு இருக்கும் பாசம் பற்று எல்லாம் அபோவ் ஆவரேஜ், அவ்வளவுதான். மற்றபடி உங்க வாழ்க்கையே சதுரங்கத்தின் மேல்தான். குறைந்தது உங்களைச் சுற்றியிருக்கும் பெனின்சுலா ப்ரொடக்ட்டில் வேலை பண்ணும் பெண்களின் பெயர் கூட உங்களுக்குத் தெரியாது. அந்த விதத்தில் உங்க மனைவி அதிர்ஷ்டசாலி.

ஆனால் சதுரங்கம் உங்க முதல் மனைவியானதால் அந்த கோணத்தில் பார்த்தால் துரதிர்ஷ்டசாலி. இளம் பெண்களுடன் பேசுவதைக் காட்டிலும் சதுரங்கம் ஆடுவதில்தான் உங்க நாட்டமெல்லாம். உங்க யோசனைகளைப் பிறருடன் பகிர்ந்துப்பதைக் காட்டிலும் உங்களுக்குள்ளேயே ரகசியமாய் வைத்திருப்பதைத் தான் நீங்க விரும்புவீங்க. மூளையைக் காடடிலும் இதயத்திற்குதான் அதிக முக்கியத்துவம் தருவீங்க. உங்களிடம் எல்லாவற்றையும் விட எனக்குப் பிடித்தது என்னவென்றால், வாழ்க்கையை நீங்கள் ஒரு லட்சியத்தை நோக்கி சிஸ்டமேடிக்காய் வைத்துக் கொண்டிருக்கும் விதம்...கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு நாள் கூட நீங்கள் ஐந்து மணி தாண்டி தூங்கியதில்லை.....இனி உங்களுக்கு இருக்கும் கெட்ட பழக்கம் என்னவென்றால் ஆபீசுக்குக் கிளம்புவதற்கு முன்னால் அரைமணிநேரம் பெண்பிள்ளைங்களைப் போல கண்ணாடிக்கு'' முன்னால் உட்கார்ந்திருப்பது.....''

''கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த்தின் முகம் சிவந்தது.

''இன்னொரு குணம் என்னன்னால் எந்தச் சின்ன விஷயமானாலும் உங்களுக்கு எதிர்ப்பதமாய் கேட்க நேர்ந்தால் உங்க முகம் சிவந்துடும். தற்போது கூட அப்படித்தான் சிவந்திருக்கு.''

''ரேவந்த் திடுக்கிட்டான். அவள் குரல் மாறத்தொடங்கிற்று.

''இதெல்லாம் ரொம்பக் கஷ்டப்பட்டு—எவ்வளவோ செலவழித்துச் சேகரித்துக்கொண்ட விவரங்கள். இப்பச்சொல்லுங்க ரேவந்த்! மூன்று நிமிஷம் பெண் பாாக்கும் படலத்தில் நிறைய விஷயங்களை சேகரித்து வைத்திருக்கிறேனா இல்லையா?''

''ரேவந்த் மௌனமாயிருந்தான். ஏதோ ஒரு அற்புதமான—வினோத விஷயங்களைக் கேட்க நேர்ந்ததுபோல

சிலையாய் உட்கார்ந்திருந்தான். இதெல்லாம் எப்படி சேகரிக்க முடிந்ததென்றுதான் புரியவில்லை அவனுக்கு.

''சொல்லுங்க ரேவந்த்! நான் இந்த மாதிரி உங்களைத் தேர்ந்தெடுத்துண்டதில் தப்பில்லைன்னும்—உங்களுக்குப் போன் பண்ணியதால் பெண்களுக்கே உரிய வரம்பைத் தாண்டிடலைன்னும் சொல்லுங்க. நீங்க மௌனமாயிருத்தால் உங்கள் சிநேகிதியாய் வரப்போகும் இந்தப் பெண் இவ்வளவுக்குத் துணிந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லைன்னு நான் ஊகிக்க வேண்டியிருக்கும்.....''

அவள் பேச்சை இடைமறித்து, ''இல்லை இல்லை... நான் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. எனக்கு நம்பவே முடியலை. நீங்க எப்படிக் கண்டுப்பிடித்தீங்க!''

''அதை விட்டுடுங்க. நான் கேட்டதற்குச் சொல்லுங்க. இந்தப் பெண் என்ன இப்படிப் பெரிய ஆண்பிள்ளை தடியனைப்போல என்னைப்பற்றி இதையெல்லாம் ஆராய்ந்து துப்புத்துலக்கிக் கல்யாணப் பேச்சுவரைக்கும் எடுத்திருக்கிறாளேன்னு நினைக்கலையே?''

''இல்லை... ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்பறேன் நான். நாம்ப சந்தித்து நான் உங்களைப் பார்த்தபிறகுதான் என் முடிவைத் தெரிவிக்க முடியும்.''

மறுமுனையில் அவள் சிரித்தாள். ''நான் என் அவலட்சணத்தை மூடி மறைப்பதற்காக முன்கூட்டியே இந்த மாதிரி போன் பண்ணி என் புத்திசாதுரியத்தால் உங்களைக் கவர முயற்சிப்பதாய் நீங்க எண்ணிட்டதில் தப்பில்லை. ஆனால், நான் உங்களை ஏமாற்றத்துக்கு ஆளாக்கமாட்டேன்.''

''எதுக்கு அவ்வளவு ரிஸ்க்? நாம்ப உடனே சந்தித்துண்டால்?'' பரபரப்போடு கேட்டான்.

''அம்மம்மா! ஆசையைப் பார்! எவ்வளவோ பேருக்கிடையே உங்களைத் தேடிப்பிடித்திருக்கேன். இனி என்னைத் தேடிக்கிற பொறுப்பு உங்களுது.''

''எப்படிக் கண்டு பிடிக்கிறது?''

''நிறைய குறிப்புக்களைத் தந்துண்டே வரலையா ரேவந்த்? இனியும் தரேன். ஒரு மாதம் கெடு தரேன். அதற் குள் என் மனதிலுள்ள உணர்ச்சிகளை எடுத்துச் சொல்லுவ தற்காக கடிதங்கள்கூட எழுதுகிறேன். நான் தந்த குறிப்பைக் கொண்டு என் போன் நம்பரைக் கண்டுபிடித்துட்டாலோ அல்லது நான் யாருன்னு கண்டுபிடித்துட்டாலோ அன்றைக்கே நாம் சந்தித்துக்கலாம். ஒருக்கால் நீங்க கண்டு பிடிக்காவிட்டால் சரியாய் இன்றையிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு நான் உங்களைச் சந்திக்கிறேன். ஆனால் என் வருங்காலக் கணவர் இவ்வளவு கூட புத்தி சாதுரியம் இல்லாதவரா, இவ்வளவு குறிப்புத் தந்தும் என்னைக் கண்டு பிடிக்க முடியலையேங்கிற வருத்தத் துடனேதான் உங்களைச் சந்திப்பேன் அன்றைக்கு போதுமா?''

ரேவந்த் முகம் சிவந்தது.

''எப்படியாவது ஒரே மாதத்திற்குள் உங்களைக் கண்டு பிடித்துடுவேன் என்றான் உறுதியாய்.''

''இன்று பதிமூன்றாந் தேதி. அடுத்த மாதம் பதிமூன்றாந் தேதி மாலை ஐந்து மணிக்குள் நீங்க என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் தோற்றுட்டாற் போலத்தான்'' என்றாள்

அவள் பதிமூன்று என்றது ஏதோ அபசுருதி தட்டினாற் போலிருந்தது அவனுக்கு. ஆயினும் ''சரி'' என்றான்.

''அதற்குள் நீங்க என்னைக் கண்டுபிடிக்காவிட்டால் அன்று மாலை சரியாய் ஐந்துமணி ஒரு நிமிஷத்திற்கு எங்கள் கார் உங்க ஆபீசுக்கு முன்னால் வந்து நிற்கும்...தோற்று விட்ட உங்களை எங்க வீட்டுக்குப் பெண்பார்க்க வரவேற்பதற் காக...பிறகு அந்நுடன் திருப்தியடைய-வேண்டியதுதான்...''

ரேவந்த் ரோஷத்துடன் ''சரி'' என்றான். மனதிற்குள் என் சதுரங்க புத்தி சாதுரியத்தை யெல்லாம் உங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்திக்கிறேன்' —என்றெண்ணிக் கொண்டான். மேலுக்கு, ''...நீங்க மட்டும் எனக்கு சரியான குறிப்பைத் தரணும். இழுத்தடிக்கக்கூடாது'' என்றான்

''அப்படி ஒரு நாளும் பண்ணமாட்டேன். என் வருங் காலக் கணவர் கெட்டிக்காரர்னு தெரிந்தால் எனக்கும் மகிழ்ச்சிதானே? இன்னொரு தடவை சொல்றேன் கேட்டுக் குங்க ரேவந்த்! எனக்கு உங்களோடு கண்ணாமூச்சி ஆடணும்னு இல்லை. உங்க ஐக்யூவைக் கண்டுபிடிக்கத் தான் செய்யறேன் இதெல்லாம். வேணுமானால் உங்களுக்கு ஒரு நல்ல குறிப்புத் தரேன்''

''என்ன?''

நான் உங்களுக்கு ஒரு வாக்கியத்தைச் சொல்றேன். அதில் எங்க வீட்டுப் போன் நம்பர் ஒளிந்துகொண்டிருக்கு. நீங்க அந்த வாக்கியத்தின் மூலம் எங்க போனைக் கண்டு பிடிக்க ஒரு மாதம் அவகாசம் இருக்கு.''

ரேவந்த் பரபரப்போடு' அதென்ன வாக்கியம்?'' என்றான்.

''I ATE NOTHING FOR SIX மணிகள்'' அவன் காகிதத்தில் அதை எழுதிக் கொண்டான்.

''உங்களைப்பற்றி இன்னொரு விஷயம் சொல்ல மறந் துட்டேன். நீங்க கைதேர்ந்த டிரைவர். உங்களுக்கு இண்டர் நேஷனல் டிரைவிங் லைசன்சு இருக்கு, இல்லையா?''

''ஆமாம்''

''வெளியே மழை பெய்கிறதா?''

''ரேவந்த் ஜன்னல் வழியாய் பார்த்துவிட்டு 'இல்லையே'' என்றான்.

''இங்கே பெய்கிறது. நீங்க மணிக்கூண்டு கடியாரத்திற் கருகில் வாங்க. நானுப் அங்கே டாக்சியில் வந்து சேர்கிறேன், நீங்க. வேகமாய் வந்தால் என்னைப் பார்க்கலாம்.''

ரேவந்தின் ரத்தம் குப்பென்று சூடாயிற்று. சட்டென்று சந்தேகம் பிறக்கவே, ''நீங்க அங்க கிட்டத்தில்தான் இருக்கீங்க போலிருக்கு. நான் வரத்துக்குள் போயிடுவீங்க லோன்னு சந்தேகம்'' என்றான்.

''உங்க டிரைவிங் திறமையையெல்லாம் காட்டினால் அந்த மாதிரி நடக்காது. தூரத்தைக் கணக்கிட்டு தான் சொல்றேன்.''

அவன் மேற்கொண்டு தாமதிக்காமல் காற்றினும் வேக மாய் படியிறங்கி காரை நோக்கி வந்தான். அடுத்த வினாடி அது புறப்பட்டது.

போக்குவரத்து விதிகளையோ, ஜனசந்தடிகளையோ பொருட்படுத்தவில்லை. அவன் நெற்றியிலிருந்து வியர்வை ஆறாய் வழிந்துகொண்டிருந்தது. மணிக்கு என்பது மைல் வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான். வாகனங்களுக்கிடையே அம்பாய் பறந்து கொண்டிருந்தான்.

சரியாய் எட்டு நிமிஷத்தில் அவன் கிளாக் டவரை வந்தடைந்தான்.

அங்கு எந்த டாக்சியையும் காணோம்.

அவன் நிம்மதியாய் மூச்சுவிட்டுக் கொண்டான். இனி தான் வரவேண்டும்...தன் டிரைவிங்கைப்பற்றித் தெரியாமல் இந்தப் பந்தயம் கட்டியிருக்கிறாள்.

அவன் சாவதானமாய் சீட்டில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டபோது தொலைவிலிருந்து டாக்சி மெதுவாய் வந்து கொண்டிருந்தது புலப்பட்டது. அவன் நிமிர்ந்து உட்கார்ந்து பரபரப்பு தாளாமல் டாக்சியையே பார்த்தான்.

டாக்சி வந்து அவன் காருக்கருகிலேயே நின்றது. நின்ற டாக்சியிலிருந்து டிரைவர் கிழே இறங்கினான். டாக்சி காலியாயிருந்ததைப் பார்த்து ரேவந்த் மனமொடிந்தான்.

''வணக்கம் சார்'' என்றான் டாக்சி டிரைவர். அந்தப் பெண் ஏதாவது செய்தி சொல்லியனுப்பியிருக்கலாமென்ற ஆசையுடன், ''என்ன ஒய்! இப்ப உன் காரில் யாராவது ஏறினாங்களா?'' என்று கேட்டான்.

ஒரு பொண்ணு ஏறிச்சு சார், அதோ அந்த டைப் இன்ஸ் -டிடியூட்டுக்குள்ளாரப் போச்சு.''

ரேவந்த் சட்டென்று அந்த இன்ஸ்டிடியூட்டிற்குள் ஓடினான். உள்ளே நாலைந்து மிஷின்கள் இருத்தன. ஆனால் ஆட்கள் யாரையுமே காணோம். முதலாளி மட்டும் ஏதோ மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தார்.

ரேவந்த் வெளியே வருவதற்குள் டாக்சி கிளம்பிவிட்டது.

அதற்குள் சந்தடியை கேட்டு நிமிர்ந்து பார்த்தார் அந்த முதலாளி.

ரேவந்த், ''இப்ப எந்தப் பொண்ணாவது உள்ளே வந்துதா சார்?'' என்று கேட்டான். குறைந்த பட்சம் அவளுடைய உருவத்தோற்றத்தையாவது அவரிடமிருந்து கேட்டறிந்துக்கலாமே என்ற நப்பாசையில்!

''ஆமாம் வந்தது. ஆனால் ஒன்றும் சொல்லாம வந்த வேகத்திலேயே விர்ரென்று திரும்பிப் போயிடுத்து, எதி வந்ததோ தெரியாது''

தன்னை முட்டாளாக்கத்தான் அவள் அம்மாதிரி அங்கு வந்து விட்டுப்போயிருக்கிறாள் என்று புரிந்தது ரேவந்திதிற்கு. அந்த டாக்சிக் காரனையாவது அவள் எங்கே ஏறினாள் என்று கேட்டிருக்கலாம். இப்பொழுது அதற்கும் வழி யில்லாமல் போய்விட்டது.

''நீங்க அந்தப் பொண்ணை பார்த்தீங்களா'' என்று கேட்டான்.

''பார்த்தேன்''

ரேவந்த்தின் ரத்தம் சூடாயிற்று. மேஜையின் மேல் கைகளை ஊன்றியபடி குனிந்து ''அவள் எப்படியிருந்தாள்னு வர்ணித்துச் சொல்லுங்க சார்'' என்றான் படபடப்புடன்.

அவர் மௌனமாய் தன் உலகத்தில் ஆழ்ந்து விட்டார் கொஞ்ச நேரம். பிறகு திடீரென்று அழத்தொடங்கினார். ரேவந்த் கலவரமடைந்தான் ஆனால் சட்டென்று தேறிய அவர், ''அந்த நாட்கள் திரும்ப வரப் போவதில்லையா'' என்றார்.

''எந்த நாட்கள்?''

''என் மனைவியோடு சேர்ந்திருந்த நாட்கள்''

''இப்ப அவங்க இல்லையா?''

''எதிர்த்த வீட்டு தையல்காரனுடன் ஓடிவிட்டாள். அதிலிருந்து நான் மார்க்சிசத்திற்கு என் வாழ்க்கையை அர்ப்பணித்துட்டேன்.''

அதுவரை சமூக சிந்தனையும் பசிக்கொடுமையுந்தான் போராட்டங்களைத் தோற்றுவிப்பதாய் எண்ணியிருந்தான் ரேவந்த். ஆனால் சம்சார சுகமில்லாதவர்கள் கூட மார்க்சிசத்தின் நிழலில் தஞ்சம் புகுவார்கள் என்றெண்ணியிருக்கவில்லை. ஆறுதலளிக்க வேண்டி, ''அதுக்கு முன்னால் என்ன பண்ணிண்டிருந்தீங்க?'' என்று கேட்டான்.

''கற்பனைக்கவிதைகளையும் பாட்டுக்களையும் இயற்றிக்கிட்டிருந்தேன்''

''உங்க கற்பனைக் கவிதை படைக்கும் முளைக்கு அத்தப் பெண் எட்டலையா சார்?'' என்று பாயிண்ட்டிற்கு இழுத்து வந்தான் அவரை.

அவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, அந்தப் பெண்ணைப் பார்த்தால் எனக்குப் பழைய நாட்கள் நினைவுக்கு வந்தன... நிஜமாய் அந்தப் பெண்...அவை கண்களில்லை தாமரை யிலைத் தண்டுகள். அந்த மூக்கு...மூக்கு...மூக்கு...'' என்று தடவிக் கொண்டார்,

''வர்ணிக்கத் தேவையில்லை சார், பொண்ணு எப்படியி ருந்தாள்னு சொன்னால் போதும். அழகாயிருந்தாளா?''

''அழகா? அழகுங்கறதே அவளைப் பார்த்துக் கற்றுக் கணும்! அந்த மூக்கு...''

''மூக்கு விஷயத்தை விட்டுடுங்க சார், சிவப்பாய் இருந் தாளா?''

''வெளுப்பா? இதப்பாரு இந்த மல்லிப்பூ, அதைவிட வெள்ளையாயிருந்தாள்''

தரையில் சிதறியிருந்த மல்லிகை மலர்களைப் பார்த்த ரேவந்த்தின் உள்ளம் வேகமாய்த் துடித்தது. அதை ஜாக்கி ரதையாய் பொருக்கி எடுத்து வைத்துக் கொண்டான். அவள் கூந்தலிலிருந்து விழுந்த மல்லிகை!

அவருக்குப் பிடிகொடுத்து, ''அந்தப் பொண்ணு இன்னும் எப்படியிருந்தாள்?'' என்று கேட்டான்.

''தங்க விக்கிரகம்ப்பா! என் வாயிலிருந்து 'தங்கம்'ங்கற பதம் வந்ததற்கு மன்னிச்சுடு. ஆனால் அந்தப்பொண்ணு மாத்திரம் தங்க விக்ரகந்தான்! விக்கிரகத்தைப் போலவே தான் வந்தாள். பேசாமல் படியிறங்கிப் போய் விட்டாள். சந்திரபிம்பத்தைப் போன்ற வட்டவடிவமான முகம். பவளம் போன்ற சின்ன வாய்-எல்லாவற்றைக் காட்டிலும் முக்கிய மாய் அந்த மூக்கு...மூக்கு...மூக்கு''

ரேவத்ந் அழாதகுறையாய் ''மூக்கை விட்டுத்தள்ளுங்க. சார், வேறு ஏதாவது விஷயத்தைச் சொல்லுங்க'' என்றான்.

''வேறு ஏதாவது விஷயமா? அப்படீன்னால் போராட்டம் என்று அவர் தொடங்குவதற்குள் ரேவந்த் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வெளியே வந்து விட்டான். இனி அவரிடமிருந்து விவரத்தை வரவழைப்பது கல்லிலிருந்து நாரை உரிப்பது போலத்தான் என்றெண்ணிக் கொண்டு காரில்வந்து உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணத் தொடங்கினானோ இல்லையோ, பின்னாலிருந்து, ''நில்! ஒரு முக்கியமான விஷயம் ஞாபகத்திற்கு வந்துடுத்து'' என்ற குரல் கேட்டது. ரேவந்த் சட்டென்று பிரேக்கைப் போட்டு அவசரமாய் திரும்பிப்பார்த்தான் கார் ஜன்னல் வழியாய்.

அவர் ஓட்டமாய் மூச்சிரைக்க ஓடிவந்து சொன்னார். ''மூக்கு...எப்படியிருந்ததுன்னு...அதை எதுக்கு ஒப்பிடறதுன்னு குழம்பிட்டிருந்தேன். .....ஞாபகம் வந்துடுத்து..... மூக்கு சம்பங்கி.''

6

அன்று போர்டு மிக பிசியாயிருந்தது. காரணம் புரியாமலேயே சிற்சில நாட்கள் ஏனோ வேலை நிரம்பி வழிந்து கொண்டேயிருக்கும். அதோடு கூட அன்று எலெக்ஷன் ரிசல்ட் வேறு வந்தன. நிறைய ஆபரேட்டர்கள் ஸ்பெஷல் சர்வீஸ் போன் மூலம் போர்டில் எழுதியிருக்கும் தேர்தல் விவரங்களை அலுப்புச் சலிப்பின்றி பார்த்துக் கொண்டேயிருந்தார்கள் 176-ல்.

சுலோச்சனா அன்றைக்கு லோகல் அசிஸ்டென்ஸில் இருந்தாள். அன்று ஏனோ அவளுக்கு மூடே சரியாயில்லை.

காலையிலிருந்தே அலுப்பாயிருந்தது. யாரோ போன்பண்ணி ஒரு நம்பரைத் தரச் சொன்னார்கள். முயன்றுபார்த்து விட்டு அது எங்கேஜிடாயிருந்ததால் ''நம்பர் பிசியாயிருக்கு சார்'' என்றாள். கொஞ்ச நேரங்கழித்துத் திரும்பவும் அதே நம்பரி டமிருந்து அவளுக்குப் போன் வந்தது. நம்பரை முயற்சி பண்ணிப் பார்த்துவிட்டு, ''நம்பர் தப்பாயிருக்கலாம்னு நினைக்கிறேன் சார்'' என்று டாகெட் தயாரிப்பதில் முனை யத்தொடங்கியபோது, மறு முனையிலிருந்து, ''நினைக் கிறது என்ன, சரியாய் சொல்ல முடியலையா?'' என்று கடுமையாய்க் கேட்டது. அவள் கோபத்தை அடக்கிக்கொண் டாள்.

எக்சேஞ்சில் பெண்கள் கற்றுக்கொள்ளும் முதல் பாடம் பொறுமையை இழக்காமலிருப்பதுதான். சப்ஸ்ரைபர் தமக்கு முதலாளி என்ற தோரணையில் பேசவேண்டுமென்றும் மறுமுனையிலிருப்பவர் எடுத்தெறிந்து பேசினாலும் நாம் சகஜமாய் எடுத்துக்கொண்டு சிரித்த முகத்துடன் பதிலளிக்க வேண்டுமென்பதும் பயிற்சியில் சொல்லித்தரப்படுகிறது.

''உயர்ந்தவனோ—அல்லது எளியவனோ
யாராயிருந்தாலும் அவன் நம் வாடிக்கையாளன்
எத்தனையோ முக்கியமான விஷயத்தை
மறுமுனையிலிருப்போருக்குப் போனில் சொல்லவேண்டி
முயன்று முயன்று தோல்வியடைந்து
நம் உதவியை வேண்டுகிறான்.
அவ்விஷயம் சந்தோஷச் செய்தியாயிருக்கலாம்
வேதனையாயிருக்கலாம்,
கோபம், வருத்தம், விரக்தி,
ஆசை, நிராசை எதுவாயுமிருக்கலாம்.
எரிச்சல்—ஃபஸ்ட்ரேஷன்
கலந்த—டெஸ்பிரேஷனுடன்
நமக்குச் சம்பளம் தரும் முதலாளியானதால்,
மரியாதையோடு புன்னகையையும்
சேர்த்துக் கொண்டு பதிலளிப்பது நம் கடமை''

என்று ஒரு பாட்டைக் கூட எழுதி இயற்றியிருக்கிறார்கள்— ஆபரேட்டர்களுக்காக!

சுலோச்சனா அதே பொறுமையுடன் ''நம்பர் தப்புத் தாங்க, ரிபோர்ட் பண்றேன்'' என்றாள்.

''பின்னே முதல்ல எங்கேஜ்ட்னு ஏன் சொன்னாய்?''

''அப்போ எங்கேஜ்ட் டோன் வந்தது''

''அதற்காக இரண்டு தடவை போன் பண்ணனுமா? வேலை வெட்டியில்லாத பிச்செஸ் எல்லோரும் அங்கே கூடியிருப்பது எதுக்காக? வேலை செய்யறதுக்குதானே?''

சுலோச்சனா முகம் சிவக்க, ''மரியாதையாய் பேசுங்க'' என்றாள்.

''போனில் வேலை பண்ற உங்களிடம் என்ன மரியாதை வேண்டிக்கிடக்கு?'' என்றான்.

அவன் அதைச் சொன்னதுதான் தாமதம் அவள் ஆவேசம் அடக்கமாட்டாதவளாய், ''யூ சன் ஆஃப் பிச்! ஷட் அப்'' என்று கத்திவிட்டாள். அவளுக்கு இருபுறமும் உட்கார்ந்திருந்த ஆபரேட்டர்களும் அவ்வறையிலிருந்த எஞ்சிய நபர்களும் தம் வேலைகளை விட்டுவிட்டு திடீரென்று அவளைத் திரும்பி வேடிக்கை பார்த்தார்கள். என்றுமே பொறுமையின் இருப்பிடமாயிருக்கும் அம்முகம் இன்று சிவந்து ஆவேசத்தால் துடித்துக்கொண்டிருந்தது. எந்த நிமிஷத்திலும் துக்கம் மடைதிறந்து வெளிவந்து விடும் போலிருந்தது.

சூப்பர்வைசர் அருகில் வந்தாள். அவள் அனுபவசாலி. என்ன நடந்ததென்று யாருமே கேட்கவில்லை.

சக ஆபரேட்டரின் முகம் அவ்வாறு மாற நேர்ந்ததென்றால் அதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரியும். சூப்பர்வைசர் அவள் தோளைத் தட்டினாள். சுலோச்சனா அரும்பாடுபட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

திரும்ப. அவரவர்கள் தம் வேலையிலாழ்ந்ததும் அவள் கைகள்கூட இயந்திர கதியில் தன் வேலையிலாழ்ந்தன.

"அசிஸ்டென்ஸ்சார்—நம்பர் பிசிசார்—நோ ரிப்ளைசார்-லைன் அவுட் சார்—ஆர்டர் சார்—"

"வாழ்க்கையே அவுட் ஆஃப் ஆர்டர் மேடம்!"

"சரியாய் அதே சமயத்தில்—

மின்சாரம் போய் பத்து நிமிஷங்களிருக்கும். ஜேம்ஸ் போனுடன் போராடிக் கொண்டிருந்தான்.

"ஹலோர் ஆப்ரேட்டர்.....கொஞ்சம் பாருங்க. நான் சீதா ராமபுரத்தில் இருக்கேன். எங்க வீட்டில் மின்சாரம் போயிடுத்து. என்ன...நீங்க ட்ரங்க் அசிஸ்டென்சா? டைரக்டரி என்கொயரிக்குப் பண்ணனுமா? அது என்ன நம்பருங்க?"

"டைரக்டரியை பாருங்க,"

"எங்கே ஒழிஞ்சுத் தொலைஞ்சுதோ தெரியலீங்க... அப்பப்பா, உங்களை ஒழிஞ்சுத் தொலைன்னு சொன்னதா எடுத்துக்காதீங்க."

"....."

"உங்க மேல் கம்ளைன்ட் பண்ணப் போறேன். என்ன, பண்ணிக்கட்டுமா? நம்பரைச் சொல்றிங்ளா? அந்த நம்பரைச் சொல்றத்துக்கு முன்னாடி மின்சார இலாக்கா நம்பரைச் சொல்லலாமில்லே?"

போன் கட் ஆகிவிட்டது.

ஜேம்ஸ் டைரக்டரியில் 'கம்பிளையிண்ட்' என்றிருந்ததைத் தேடிப்பிடித்து 198-க்குப் போன் பண்ணினான். அவர்கள் கெட்டுப்போன போன்கள், கம்ளையிண்டுகள் முதலியவற்றை ட்டுமே ஏற்பார்கள்.

இனி சாமதான பேத தண்டோபாயத்தில் முதலாவதே மேலாய் பாவித்துக் குரலை மென்மையாக்கிக் கொண்டு அசிஸ்டென்சுக்குப் போன் பண்ணி ''ஹலோ, இதப்பாருங்க, எங்க சீதாபுரத்தில் மின்சாரம் போயிடுத்து'' என்றான்.

''ஓ, அப்படியா? எப்பப் போச்சுங்க?'' என்று குசலம் விசாரித்தார் ஆபரேட்டர். இவ்வளவு நேரங்கழித்து ஏதோ நல்லவர் கிடைத்து விட்டார் என்றெண்ணிக் கொண்டு ''ஒரு பத்து நிமிஷமாச்சு'' என்றான்.

''உங்க வீட்டில் மட்டுந்தான் போச்சா, இல்லை உங்க வீதி முழுவதுமே போயிடுத்தா?'' அவ்வீதி சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.ஐப் போல பாவித்து நலன் விசாரிக்கத் தொடங்கினான் அந்த ஆபரேட்டர்.

''எங்க வீடடில் மட்டுந்தான் 'போயிடுத்து''

''சீதாராமபுரம் மின்சாரக் காரியாலயத்தின் நம்பரா வேணும் உங்களுக்கு?''

''ஆமாங்க''

''197-டைரக்டரி என்கொயரியில் கேளுங்க. என்று ஒரு ஆலோசனையை வீசியெறிந்து விட்டுப் போனை வைத்து விட்டான். மறுமுனையிலிருந்தவனைத் திட்டித் தீர்த்துக் கொண்டே 197-க்குப் பண்ணினான் ஜேம்ஸ்.

''ஹலோ எனக்கு சீதாராமபுரம் சப்ஸ்டேஷன் நம்பர் தரீங்ளா?'' என்று 197-ம் ஆபரேட்டரைக் கேட்டான் அலுப்போடு.

''ஒரு நிமிஷம் சார்'' என்று மரியாதை நிரம்பிய குரலுடன் அந்த நம்பரைச் சொன்னாள் ஆப்ரேட்டர். மனதிற்குள் அவளை மெச்சிக்கொண்டே அந்த நம்பருக்குப் பண்ணினான்.

''ஹலோ, சீதாராமபுரம் சப்ஸ்டேஷனா?''

''ஆமாங்க, அதான்'' என்றது மறுமுனையிலிருந்து.

''பாருங்க, எங்க வீட்டில் மின்சாரம் போயிடுத்து. வீட்டு நம்பர்...''என்பதற்குள் இடைமறித்து,

''ஐயா இல்லீங்க, வீட்டுக்குப் போயிட்டாரு'' என்றான்.

'மின்சார இலாக்கா ஆட்கள் இரவு முழுவதும் ஆபிசில் இல்லாமல் வீட்டிற்குப் போயிட்டால் ப்யூஸ் யார் வந்துப் போடுவாங்களாம்?''

''என்னவோ எனக்குத் தெரியாதுங்க. அவரையே கேளுங்க''

''அப்ப நீ யாரு?''

''சீதாராமபுரம் வாட்டர் ஒர்க்ஸ் ஸ்டேஷனில் ப்யூனுங்க.'' ஜேம்ஸுக்கு ஆத்திரமாய் வந்தது. இம்முறை 199-க்குப் போன் பண்ணினான்.

நேரம் கடந்தது. இரண்டு நிமிஷமாயிற்று. போன் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் யாருமே எடுக்க வில்லை.

அவன் ரிசீவரை கோபமாய் கீழே வைக்கப்போன பொழுது ஆபரேட்டர் லைனுக்கு வந்து ''ஹலோ'' என்றாள். போனில் மற்றவர்களின் சம்பாஷணை கேட்கும்.

ஜேம்ஸ் தொண்டை கிழிய, ''ஐந்து நிமிஷமாய் மணியடித்துண்டேயிருக்கு, ஒருத்தரும் எடுக்கக் காணோமே ஏன்? நீங்கள்ளாம் வந்திருக்கீங்ளா வேலைக்கு?'' என்று கத்தினான்.

''எங்களுக்கென்ன ஆயிரம் கையா இருக்கு? ஒரு தடவை இங்கே வந்து பாருங்க, எப்படி வேலை பண்றோம்னு'' என்று வெறுப்பாய் வந்தது பதில்.

ஜேம்ஸுக்கு 'பக்'கென்றது. டெலிபோன் இலாக்கா வினர் அம்மாதிரி அலுத்துக் கொள்வது புதுமையாயிருந்தது.

அவனுக்குக் குரலில் பணிவையும் நல்ல ஆங்கிலத்தில் மரியாதையாயும் பேசும் பயிற்சி நிரம்ப உண்டு. அந்த மாதிரி பேசும் ஆண்களைக் கண்டால் ஆபரேட்டர்களுக்கும் பிடிக்கும். அதனால் இதுவரை இந்த மாதிரி ஒரு அனுபவம் நேர்ந்ததில்லை அவனுக்கு. ஆனாலும் 'பக்'கென்றது அக் குரலில் புதிதாய் தோன்றிய அலுப்பைக் கேட்க நேர்ந்த தற்கில்லை.

அக்குரலைக் கேட்டுதான்!

அக்குரல் அவனுக்குத் தெரியும்.

''ஹலோ, நீங்களா?'' என்றான்.

''யாரு?''

''நான்தான். அன்றைக்கு உங்களை மாலிஷஸ் காலுக்காகப் போனை ஆப்ரேவேஷனில் எப்படி வைப்ப துன்னு விவரம் கேட்டுத் தெரிந்துண்டவன்''

சுலோச்சனா ஆச்சரியமடைந்தவளாய், ''நான்தான் அப்ப எல்லா விவரமும் உங்களுக்குச் சொன்னேன்னு எப்படித் தெரிஞ்சுண்டிங்க?'' என்று கேட்டாள்.

''ப்ரீக்வென்சியை வெச்சுண்டுக் குரலை அடையாளம் புரிஞ்சுக்கத் தெரியும் எனக்கு''

''ரொம்பப் பெரிய கலைதான் அது''

''தாங்யூ, உங்க பேர்?''

''சுலோச்சனா'' என்று சொல்லிவிட்டுப் டிஸ்கனெட் பண்ணினாள். இதற்கு முன்னால் நிகழ்ந்த சபபாஷணையால் ஏற்பட்ட விளைவிலிருந்து தேறத் தொடங்கிற்று அவள் மனது. உண்மையில் அது ஒன்றும் புதிதில்லை. முதல்

முதலில் புதிதாய் வேலை பழகியபொழுது மிக வருத்த மாயிருக்கும். ஆனால் இப்பொழுது அனுபவம் அதைக் கடந்து விட்டிருந்தது.

அவன் மேலும் அரைமணி நேரம் வேலை பண்ணி டியூடியை முடித்துவிட்டு, ரிலீவரிடம் போர்டை ஒப்படைத்து விட்டு லாக்கிலிருந்து புத்தகங்களை எடுத்து வந்து லிஃப்டை நோக்கிப் போனபோது, ''எக்ஸ்க்யூஸ்மீ'' என்ற குரல் கேட்டது.

அவள் நிமிர்ந்து பார்த்தபொழுது முப்பது வயது மதிக்கத் தக்க இளைஞனொருவன் எதிரே வந்து கொண்டிருந்தவன்.

''நீங்கதானா சுலோச்சனாங்றது?'' கேட்டான்.

''ஆமாம் நான்தான்''

''குட்ஈவினிங். என் பேர் ஜேம்ஸ். வரச் சொன் னீங்களே, அதான் வந்தேன்''

அவளுக்குப் புரியவில்லை. அவனைக் குழப்பத்தோடு பார்த்தாள்.

''எங்களுக்கு ஆயிரம் கையா இருக்கு, ஒருமுறை இங்கே வந்துபாருங்க. எப்படி வேலை செய்யறோம்னு'' என்றீங்க''

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''ஓ, நீங்கதானா அது?'' என்றாள்.

ஃ ஃ ஃ

''நீங்க அந்தப் பக்கத்திலேயே இருந்துண்டு என்னை இவ்வளவு தூரம் வரச்சொன்ன காரணம் என்ன?'' நான் எவ்வளவு வேகமாய் காரை ஓட்டிண்டு வந்தேன் தெரியுமா? அவ்வளவு வேகமாய் வந்துகூட உங்களைப் பார்க்க முடிய லைன்னால் நீங்க என்னை முட்டாளாக்கத்தான் இப்படி இழுத்தடித்திருக்கீங்கன்னு புரியுது...இப்படியிருந்தால்

உங்களை அந்த பிரம்மதேவனால்கூட பிடித்திருக்க முடியாது. தயவுபண்ணி என் நேரத்தை வீணடிக்காதீங்க'' கோபமாய் சொன்னான் ரேவந்த்.

''நான்தான் சொல்லிட்டேனே, உங்களோடு கண்ணா மூச்சியாடுவது என் எண்ணமில்லைன்னு. உங்களுக்கு நியாயமான குறிப்புத் தந்துண்டே வந்தேன், நீங்க கண்டு பிடிக்காவிட்டால் என் தப்பா?''

''என்ன தந்தீங்க? உங்க வீடு அந்த க்ளாக் டவருக்குப் பக்கத்திலேயேதானிருக்கு. நான் இவ்வளவு தூரத்திலிருந்து வரத்துக்குள் நீங்க போயிட்டீங்க. இதென்ன பந்தயம்?''

''நான் ஏறிய டாக்சிக்காரனை உங்களிடம் போகச் சொல்லி அனுப்பினேனே அவனை ஏன் கேட்கலை நீங்க? அந்தப் பெண் எங்கேடா ஏறினான்னு கேட்டிருந்தால் அவன் நானிருக்கும் வட்டாரத்தைச் சொல்லியிருப்பானே! அதற்கு முன்பே என் வீட்டுப் போன் நம்பர் சம்பந்தப்பட்ட குறிப்பைக் கூடத் தந்திருக்கேன் நான். அவ்விரண்டையும் சேர்த்து ஒப்பிட்டுப்பார்த்துக் கொண்டால் உங்களுக்கு நம்பர் புரிந்திருக்கும்.''

ரேவந்த் தளர்ச்சியடைந்தான். ஆயினும் தன்னைத் தேற்றிக் கொண்டு, ''என்னவோ, டாக்சி டிரைவருக்கு நீங்க பொய் சொல்லச் சொன்னீங்களோ என்னவோ?'' என்றான்.

''அதெல்லாம் வேறு விஷயம். முதல்ல நீங்க அவனைக் கேட்கவேயில்லையே?''

''நீங்க டைப் இன்ஸ்டிடியூட்டில் இருக்கீங்கன்னு சொன்னதுமே அங்கே ஓட்டமெடுத்தேன்.''

''இதுதான் அவசரபுத்திங்கறது. ஒருக்கால் நான் அதிலிருந்திருந்தால் அங்கேயிருந்து வெளியே போனாலும் தெரியாமல் போகாதே? முதல்ல கைக்கு அகப்பட்ட டிரைவரை விட்டுட்டு 'டூ இன் தி புஷ்'க்காக அங்கே ஏன் ஓடினீங்க?''

''டிரைவர் உண்மையைச் சொல்லுவான்னு நான் நம்பவேயில்லை. அவன் என்னைத் தேடிண்டு வந்தப்பவே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது''

''டிரைவரை நீங்க ஒரு கேள்வி கூட கேட்டிருக்கத் தேவையில்லை. நீங்க கிளம்பறத்துக்கு முன்பு உங்களை ஒரு கேள்வி கேட்டேனே நினைவிருக்கா? அங்கே மழை பெய்துண்டிருக்கான்னு? இல்லைன்னீங்க. நீங்க நான் வந்த டாக்சியைக் கொஞ்சம் உற்று கவனித்திருந்தால் அது மழையில் நனைதிருப்பது புரியும். அந்த சின்னத் தூறல் இந்த வட்டாரத்தில் எங்கே பெய்திருக்கும்னு கண்டுப்பிடிப்பது ஒன்றும் சிரமமில்லை உங்களுக்கு. அதன் மூலம் அந்த டிரைவர் உண்மையைச் சொல்கிறானா பொய் சொல்கிறானா என்று தெரிந்து கொண்டிருக்கலாம் மிக எளிதாய். இந்த மாதிரி யோசித்துப் பார்க்கறதை விட்டுட்டு அனாவசியமாய் டைப் இன்ஸ்டியூட்டிற்கு ஓடினீங்க.

அவன் நாணமடைந்தவனாய், ''இவ்வளவு ஆழ்ந்து சிந்தித்துப் பாராமல் போயிட்டேன்'' என்றான் உண்மையை ஒப்புக் கொள்வது போல.

''சரி விடுங்க. இன்னும் இருபத்தாறு நாள் இருக்கே, கடைசி நாளில் கண்டு பிடித்துட்டாலும் போதும், வெற்றி உங்களுதுதான்''

''சொல்ல மறந்துட்டேன். உங்களைப் பற்றி டைப் இன்ஸ்டிடியூட் முதலாளி வர்ணித்துச் சொன்னார்.''

மறுமுனையில் சின்ன சிரிப்பு; ''என்ன சொன்னார்?''

''அந்த வர்ணனை தேவதைக்கு சமமாயிருந்தது.''

அவள் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து விட்டுப் பிறகு மெல்லச் சொன்னாள். ''நான் உங்களை ஏமாற்ற மாட்டேன்னுதான் நினைத்திருக்கேன் மிஸ்டர் ரேவந்த்''

''எனக்கு உங்களை உடனே பார்க்கணும்னு இருக்கு.''

''இன்னும் இருபத்தாறு நாள் பொறுக்கணும். அதற்குள் நீங்க கண்டுபிடித்துட்டால் சரி...மறந்துட்டேனே, உங்களுக்குக் கடிதம் எழுதுவதாய் சொன்னேனில்லே? இன்றைக்குத்தான் ஒரு கடிதம் எழுதிப் போஸ்ட் பண்ணினேன். வாரத்துக்கு ஒரு கடிதம் வீதம் அதற்குள் மூன்று கடிதங்கள் கிடைத்துடும்.....''

''அதற்குள் என்னால் கண்டு பிடிக்கமுடியாவிட்டால்?''

''முடியும்னே எதிர் பார்ப்போம்.''

''என் புத்திசாதுரியத்தையெல்லாம் பயன்படுத்தி உங்களை எப்படியாவது கண்டு பிடித்தே தீருவேன்.''

அவள் சிரித்தாள்.

''இந்த உலகத்தில் புத்திசாலிதனத்தோடு கூட சமயோஜித அறிவும் பகுத்தறிவும் உடையவங்க ரொம்பக் குறைவு. அந்த இரண்டாம் ரக அறிவுடைய ஆண் சிநேகிதர்களைத்தான் பெண்கள் ரொம்ப விரும்புவார்கள். அந்தமாதிரி திமிர் பிடித்து யோசிக்கும் ஆண்களைத்தான் பெண்கள் விரும்புவாங்க. இந்த விஷயம் ரொம்ப்ப் பேர் ஆண்களுக்குத் தெரியவே தெரியாது.''

''ஊஹூம், எனக்குப் புரியலையே'' என்றான் ரேவந்த்.

''உதாரணத்துக்கு ஒரு வீட்டுக் கூரைமேல் பத்துக் காக்கைகள் உட்கார்ந்திருக்கின்றன, ஒருவன் துப்பாக்கியை வெடித்து அதில் ஒன்றைக் கொன்றான். இப்ப எவ்வளவு காக்கைகள் இருக்கும் அந்தக் கூரையின் மேல்?''

''ஒன்றுமே இருக்காது. பறந்து ஓடியிருக்கும் எல்லாம்'' என்றான் ரேவந்த் சட்டென்று.

''அதுதான் சாதாரணமானவங்க சொல்ற பதில்.''

''ஒன்றே ஒன்று இருக்கும் செத்துக்கிடக்கும் அந்தக் காக்கை.''

''அது கொஞ்சம் புத்திசாலி சொல்ற பதில்.''

''ஒன்பது இருக்கும்...துப்பாக்கி தொலைவிலிருந்து சுடப் பட்டு, அந்த சப்தம் எஞ்சிய காக்கைகளுக்குக் கேட்காம லிருந்தால்.''

''அது மிக புத்திசாலியானவன் சொல்ற பதில்.''

ரேவந்த் ரோஷமடைந்தவனாய், ''பின்னே, என்ன தான் பதில்?'' என்று கேட்டான்.

''கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னால் கொஞ்சம் தர்க்கமாய் யோசித்துப்பார்த்தால் உங்களுக்கே விஷயம் புரியும். கேள்வி...எவ்வளவு காக்கைகள் மிகுந்திருக்கும் என்பது இல்லை—கூரையின் மேல் எவ்வளவு இருக்கும் என்பதுதான். அதனால் நாம் கூரை சாய்வாயி ருக்கும் கூரையா சமதளமான கூரையான்னு திரும்பிக்கேட்கணும். வீட்டுக்கூரை சமதளமாயிருந்திருந்தால் துப்பாக்கி தொலைவிலிருந்து சுடப்பட்டிருந்தால் பத்துக் காக்கைகள் (இந்த காக்கையோடு சேர்த்து) கூரையின் மேல் இருக்க வழியுண்டு.....கெட்டிக்கார இளைஞனானவன் தன் போசனையில் எந்த விதமான நெளிவு சுளிவையும் வைத்துக்க மாட்டான்...நீங்க இந்த விகிதத்தில் யோசித்துப்பார்த்தால் ஒரு மாதம் கூட தேவையில்லை. பத்தே நாளில் கண்டு பிடித்துடலாம்.''

ரேவத்த் வியப்படைந்தவனாய், ''நீங்க என்ன படிச்சிருக் கீங்க?'' கேட்டான்.

சிரித்தாள். ''என்ன படிச்சிருப்பேன்னு நினைக் கிறீங்க?''

''முதல்ல கணக்குன்னு நினைச்சேன். அப்புறம் இங்கிலீஷ்னு, ஆனால் இப்பவோ லாஜிக்னு நினைக் கிறேன்.''

''ஊஹூம், இதொன்றுமில்லை'' :.பிலாசபி. நீங்க சொன்ன எல்லா சப்ஜெக்டும் அதிலிருந்து வந்தவைதான்...''

உண்மையே என்றெண்ணிக் கொண்டான் அவன்.

''சரி நான் வெச்சுடறேன். நாளைக்கு உங்களுக்கு கடிதம் கிடைக்கும். பை...''

அவன் கலவரமடைந்தவனாய் 'ஒரு நிமிஷம்...'' என்றான்.

''என்ன?''

''உங்க நம்பரைப் பற்றிய குறிப்பு இன்னும் ஏதாவது இருந்தால் தாங்க, ப்ளீஸ்.''

''எந்த நம்பர்? வீட்டு நம்பரா, போன் நம்பரா?''

''நீங்க 'ஐ ஹேட் நத்திங்'னு சொன்னீங்களே—அதைப் பற்றி.....அந்த நம்பர்...''

''சரி, அப்படீன்னால் எழுதிக்கலாம் கேளுங்க.': என்று சொல்லத் தொடங்கினாள்.—''ஐந்து ஸ்தானமுடைய எண். மொத்த எண்களையும் கூட்டினால் வரும் தொகை பத்தொன்பது. முதல்எண்ணைவிட இரண்டாவது எட்டுமடங்கு அதிகம். கடைசி மூன்றெண்ணையும் ஒன்றுடன் ஒன்று கூட்டினால் சைபர் வரும். நாலாவது எண்ணையும் மூன்றாவது எண்ணையும் கூட்டி ஐந்தாம் எண்ணிலிருந்து கழித்தால் இரண்டு'' என்று சொல்லிவிட்டுப் போனை டிஸ்கனெக்ட் பண்ணி விட்டாள்.

அவள் போனை வைத்ததுமே ரேவந்த் மேற்கொண்டு தாமதிக்காமல் கணக்குப் போடத் தொடங்கினான். முதல் எண்ணைவிட இரண்டாம் எண் எட்டு மடங்கு அதிகம் என்றதுமே 18 என்று தெரிந்து விட்டது. கடைசி மூன்றெண்ணில் மொத்தமும் பத்து. அவை 6, 4, 0 அல்லது 6, 2, 2 ஆக இருக்கலாம் என்று புரிந்தது. கடைசி எண் எல்லாவற்றையும் விட பெரிதாதலால் வித்தியாசம் இரண்டு அதிகம் அந்நம்பர்—

18226, 18406, 18046 இம்மூன்றில் ஏதோ ஒன்றாயிருக்க வேண்டுமென்று நிச்சயமாயிற்று. போனை அருகில் இழுத்துக் கொண்டு முதலில் முதல் நம்பருக்குப் பண்ணினான்.

''ஹலோ'' என்ற குரல் வந்தது மறுமுனையிலிருந்து.

''இப்ப ஒருபெண் அங்கேயிருந்து போன் பண்ணினாள்''

''பெண்ணா? இம்பாசிபிள். யாராவது பெண் குரலில் பேசியிருப்பாங்க.'' என்று சிரித்தான் மறுமுனை ஆன். ரேவந்த் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''அவ்வளவு உறுதியாய் எப்படிச் சொல்றீங்க?'' என்று கேட்டான்.

''இது பைத்தியங்கார ஆசுபத்திரியானதால்.....'' என்று போனை வைத்து விட்டான் அந்த ஆள்.

ரேவந்த் அவனை மனதிற்குள் திட்டித் தீர்த்துக் கொண்டே இரண்டாவது நம்பருக்குப் போன் பண்ணினான்.

''திஸ்ஈஸ் கேன்சர் ஹாஸ்பிடல் ப்ளீஸ்''என்றுஒரு பெண் குரல் இனிமையாய் ஒலித்தது. பட்டென்று வைத்துவிட்டு மூன்றாவது நம்பருக்கு பண்ணினான்.

முதலில் பெருத்த இருமல் ''ஹலோ...டி. பி. ஆசுபத்திரி'' ரேவந்த் கையிலிருந்த போன் நழுவிற்று.

ஒரு நிமிஷம் யோசித்தான். அவள்பேசியது நினைவுக்கு வந்தது.

''புத்திசாலியானவன் எந்த ரிஸ்க்கும் எடுத்துக்கமாட்டான். சமயோஜிதமாய் சிந்தித்துப் பார்ப்பான்'' என்ற வார்த்தை.

உடனே டெலிபோன் டைரக்டரியை எடுத்து அம்மூன்று ஆசுபத்திரி நம்பருக்கும் போன் செய்தான்—ஒருக்கால் அவன் பைத்தியக்கார ஆசுபத்திரிக்கருகிலேயே இருந்து, தனக்குப் 'பைத்தியக்கார ஆசுபத்திரி' என்று சொல்லியிருக்கலாமோ என்றெண்ணி! மூன்று ஆசுபத்திரி நம்பர்களும் வரிசையாய் 18226, 18046, 18406 என்றே இருந்தன!

.....அப்படியானால் தான்தான் அந்த நம்பர்களைத் தப்பாய் கணக்குப் போட்டிருகிறான் போலும்!

பின்னே வேறெந்த நம்பராயிருக்கும்?

ரேவந்த் காகிதமும் பேனாவும் எடுத்து வைத்துக் கொண்டு கணக்குப் போட்டுக் கொண்டிருந்தபோது சீதாராம் வந்தான். சீதாராமுக்கு சுமார் நாற்பது வயதிருக்கும். 'பேரா-சைக்காலஜி' நன்றாய் பழுத்திருப்பதாய் சொல்லிக் கொண்டு திரிபவன், நெற்றியில் பொட்டு, முகத்தில் அசட்டுச் சிரிப்பு இவையே அவன் ஆபரணங்கள். மனிதனிடம் சினிசிசம் நன்றாய் தெரிந்தது

''உங்களை ஒரு உதவி கேட்கணும்னு வந்தேன் சார்'' என்றான் வந்ததுமே.

''என்ன?'' என்றான் ரேவந்த், சீக்கிரத்தில் அவனை ஒப்பேற்றி அனுப்பிவைத்து விட வேண்டுமென்ற பரபரப்பில்.

''நீங்க எழுதிய புத்தகத்தை...நீங்க ஒன்றும் நினைச் சுக்க மாட்டேன்னு சொன்னால், எனக்கு அர்ப்பணம் பண்ண ணும்.''

ரேவந்த்திற்கு சட்டென்று புரியவில்லை. அவன் சொன் னது புரியத்தொடங்கியதும் அருவருப்பு ஏற்பட்டது.

ரேவந்த் தன் அனுபவங்களையும், தனக்குத் தெரிந்த விஷயங்களையும் ஜோடித்து ''சதுரங்கம் ஆடுவது எப்படி?' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியிருந்தான். ஒரு பிரபல சங்கம் அதைப் பிரிசுரித்துக்கொண்டிருந்தது. அதைத் தான் இப்பொழுது சீதாராம் தனக்கு அர்ப்பணம் பண்ணச் சொல்லி கேட்க வந்திருக்கிறான்.

ரேவந்த் அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''இதப்பாரு சீதாராம்! அர்ப்பணங்கறது தம குப் பிடித்தவங்களுக்குத்தான் இஷ்டப்பட்டுத் தரணுமே யன்றி, கேட்டு வாங்கிக்கறதில்லை. எனக்கு மேலும்

கோபமும் வெருப்பும் வந்து உன்னைத் திட்டுவதற்கு முன்னால் இங்கிருந்து போயிடு'' என்றான்.

''உங்களை நாலுபேருக்குத் தெரியும். உங்களைப் போன்றவங்க கொஞ்சம் என்னைப்பற்றியும் எழுதினால் என்னையும் நாலுபேர் புரிஞ்சுப்பாங்க.'' என்றான் சிரித்துக் கொண்டே சீதாராம். சின்னச் சின்னக் கட்டுரைகளை எழுதி வருபவன். புகழாசை அதிகமிருந்தது.

ரேவந்த் பொறுமையை வரவழைத்துக் கொண்டு, ''கையில் கலைன்னு ஏதாவது இருந்தால் எப்படியாவது புகழ் வந்து சேரலாமேயன்றி இந்த மாதிரி 'அர்ப்பணம்' வாங்கிப்பதால் வந்துடாது. சரி போய் வா'' என்றான்.

அவன் நகரவில்லை. ஜோயிலிருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்து மேஜையின் மேல் வைத்துவிட்டு, ''இதை வெச்சுக்குங்க'' என்றான். மறு நிமிஷம் அவன் காலரைப்பற்றி 'ராஸ்கல்' உன்னை, உன்னை...போயிடு, இனி ஒரு போதும் இந்த மாதிரி பண்ணாதே'' என்று நூறு ரூபாய் நோட்டை அவன் ஜோயில் திரும்பவும் திணித்து விட்டு, ''இது ஒரு நாளைய லஞ்ச் செலவு என்னது, மைன்ட் இட்... கெட் அவுட்...'' கத்தினான்.

சீதாராம் வருத்தப்படவில்லை. அதே அசட்டுச் சிரிப்புடன், ''மன்னிச்சுக்குங்க சார்'' என்றான்.

''கெட் அவுட்'' ரேவந்த் கத்தினான். அவன் போனதும் பியூனைக் கூப்பிட்டு, ''அவன் திரும்பி இந்தப் பக்கம் வந்தால் உள்ளே விடாதே'' என்று சொன்னான்.

கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் தள்ளப்பட்ட சீதாராமின் முகம் அவ்வறையிலிருந்து வெளியேறும் வரையிலும் அதே அசட்டுச் சிரிப்பு வழிந்து கொண்டிருந்தது. அறையைத் தாண்டியதும் அச்சிரிப்பு மாயமாகி விகாரமாய் மாறிற்று. ஒரு முறை திரும்பி ரேவந்தின் அறையை நோட்டமிட்டான்.

தலை குனிந்து வெளியேறினான்.

''நான் சொன்ன அந்த ஒரு வார்த்தையை வைச்சுண்டு மெனக்கெட்டு வந்தீங்களா?'' என்றாள் சுலோச்சனா.

''அதில்லைன்னு வையுங்க. மாலிஷஸ்—காலைப்பற்றிக் கேட்டபோது நீங்க பேசிய அந்தக் குரல் எனக்கு ரொம்பப் பிடித்துடுத்து. அப்பவே உங்க எக்சேஞ்சைப் பார்க்க வரேன்னு கேட்கலாமான்னு நினைத்தேன். ஆனால் நன்றாயிருக்காதுன்னு விட்டுட்டேன். இரண்டாந்தடவை இன்றைக்குக்கூட போனில் நீங்களே எதிர்ப்பட்டதால் இது எதேச்சையான செயல் இல்லைன்னும் சுவாமியே நாம்ப சந்திப்பதற்காக விரும்புகிறார்னும் புரிந்துண்டு உங்கப் பேரைக் கேட்டேன். நீங்களும் சொல்லிட்டீங்க, நானும் வந்துட்டேன்'' என்றான் ஜேம்ஸ். அதை சர்வசாதாரண விஷயமாய் பாவித்து. அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். அது உணர்ச்சிப்பூர்வமாய் இருந்தது.

''எங்க சூப்பர்வைசர் என்ன சொல்லுவாளோ என்னவோ?''

''பரவாயில்லை போவோம் வாங்க''என்றான். உண்மையில் அவனுக்கு எக்சேஞ்சைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை இல்லவே இல்லை, அவளைத்தான் பார்க்க வேண்டுமென்றிருந்தது!

அவள் ஒரு வினாடி தடுமாறி, ''கொஞ்சம் இருங்க'' என்று உள்ளே போய்விட்டுத் திரும்பி வந்தவள் ''வாங்க'' என்றாள்.

இருவரும் உள்ளே போனார்கள்.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே நுழைந்ததுமே அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்து நம்ப முடியாதவனாய் அப்படியே நின்றுவிட்டான். அது வரை அவனுக்கு டெலிபோன் எக்சேஞ்சு என்றாலும்

ஆபரேட்டர்கள் என்றாலும் ஒரு வித ஏளன மனப்பான்மை தான் இருந்து வந்தது.

வேலை பண்ணாமல் கும்பல் சேர்ந்து புடவைகளைப் பற்றி வம்பளந்து கொண்டிருப்பார்கள் என்றுதான் எண்ணி யிருந்தான்.

ஆனால் இங்கேயோ?

சுமார் ஐம்பதுபேர் நீண்ட மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு நிமிர்ந்தோ, திரும்பியோ கூட பாராமல் நம்பர்களை டயல் பண்ணிக்கொண்டே ஒரு வினாடி கூட வீணாக்காமல் வேலை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

எந்த ஆபீசிலும், பேக்டரியிலும். தொழிலாளர்களிடமும் காணப்படாத 'டைம் சென்ஸ்' அங்கு தென்பட்டது.

பின்னே இந்த இலாக்காவின் மேல் ஜனங்களுக்கு ஏனிந்த ஏளனமனப்பான்மை?

அவனுக்குத் தன் நண்பன் சொன்ன ஒரு வார்த்தை நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு இலாக்காவும் தம் சொந்த தப்பாலும், சரியாய் வேலை பண்ணாததாலும் நஷ்டமடைந்தால் டெலிபோன் இலாக்காவோ தன் சொந்தத் தவற்றின் மூலம் லாபம் சம்பாதிக்கிறது. தப்பு சில்லிங் மூலம் போனைப் பயன்படுத்தாவிட்டாலும் சரி ஆயிரக்கணக்காண பில் வருவதும், டிரங்க் லைன்கள் சரியாய் கிடைக்காமல் போவதும், அடிக்கடி ராங் நம்பர் வருதலும், கொஞ்சம் மழைபெய்தாலும் போன் வேலை பண்ணாததும்... எல்லாவற்றிற்கும் முக்கியமாய்—

விசாரணைக்காகவோ, நம்பர் உதவிக்காகவோ எக்சேஞ்சிற்குப் போன் பண்ணினால் 199 லோ அல்லது 197 லோ யாருமே போனை எடுக்காமல் போவதுதான்! அதையே அவளிடம் கேட்டான்.

''இது ரொம்பத் தப்பு அபிப்பிராயம். உதாரணத்துக்கு இந்த 199 ஐ எடுத்துக்குங்க'' என்றாள்.

சுமார் அறுபதுபேர் பெண்கள் அந்த லேனில் வேலை பண்ணிக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு முன்னாலிருந்த போர்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஆறு பேரும் போனில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''தற்சமயம் இந்த ஆறு பேரும் ஆறு வாடிக்கையாளர்களுக்கு உதவி பண்ணிண்டிருக்காங்க. ஆனால் அந்த விளக்குகள் எரிந்துண்டிருக்குன்னால் அதற்குக் காரணம் அப்பத்தான் மேலும் ஆறுபேர் வாடிக்கையாளர்கள் லைனுக்கு வந்திருக்காங்கன்னு அர்த்தம். இதைத்தான் கால் க்யூ சிஸ்டம்பாங்க!.....இதில் வெளி உலகத்தாருக்குப் புரியாத ஒரு விஷயம் உண்டு..... இந்த லைனுக்கு வந்துட்ட வாடிக்கையாளர்களுக்கு 'எங்கேஜிட்-டோன்' கேட்காது. டெலிபோன் ஒலிப்பது மட்டுமே கேட்கும். அவங்களோ யாருமே போனை எடுக்கலையேன்னு எரிச்சலடைவாங்க. உண்மையில் அந்த மாதிரி போன் ஒலிப்பதற்குப் பொருள் என்வென்றால்'ஆபரேட்டர் யாருடனோ பேசிண்டிருக்கிறாள். அடுத்த சான்சு உங்களுடையதுதான். கொஞ்ச நேரம் லைனில் இருங்க' என்று! இதைப் புரிஞ்சுக்காம எக்சேஞ்சின் மேல் கெட்ட அபிப்பிராயம் கொண்டு விடுகிறாங்க ஜனங்கள்.''

''நானும் அப்படித்தான் எண்ணிண்டிருந்தேன். ஆபரேட்டர்கள் ஹெட்போனை எடுத்துக் கீழே வைத்துட்டு வம்பளந்துண்டிருப்பாங்கன்னு நினைச்சேன். பைதிபை உங்க பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் யார்?'' அவள் வியப்படைந்தவளாய், ''ஏன்?'' என்று கேட்டாள்.

''அவருக்கு பதில் என்னைத் தேர்ந்தெடுத்துக்குங்க. முதலில் இந்த விஷயங்களையெல்லாம் ஜனங்களுக்குப் புரியும்படிச் சொல்ற பொறுப்பு அவருதுதான்.''

''அவர் மட்டும் என்ன பண்ணுவார்? அவர் பிரச்னை அவருடையது.''

இருவரும் வெளியே வந்தார்கள். லிஃப்டில் இறங்கிக் கொண்டிருந்தபோது அவன் தான் மின்சார ரசப் ஸ்டேஷனின் நம்பரைக் கண்டு பிடிக்கப்பட்ட பாட்டை விவரித்தான். அவன் சொல்லச் சொல்ல அவளுக்குச் சிரிப்புத் தாளவில்லை. சிரிக்கும்பொழுது கன்னத்தில் விழுந்த குழி மிக அழகாயிருந்தது.

லிஃப்ட் நின்றதும், ''போயிட்டு வரேன்'' என்றாள்.

''உங்க ஆபீசுக்கு வந்த அதிதிக்குக் காபி கூட தராமல் அனுப்பி வைச்சுடுவீங்களா?''

எதிர்பாராத இக்கேள்விக்கு வியப்படைந்த அவள், சட்டென்று சிரித்து விட்டாள். ''எங்கக் காண்டீனில் நீங்க காபி குடிக்க நேர்ந்தால் அவ்வளவுதான், பிறகு வாழ் நாளெல்லாம் காபியே குடிக்கமாட்டீங்க'' என்றாள்.

''அப்படின்னால் வெளியே எங்கேயாவது குடிப்போம்'' என்று கைக்கடியாரத்தைப் பார்த்தான், ''இந்த நேரத்தில் காபி எதுக்கு? உங்களுக்காக யாராவது காத்துண்டிருப்பாங்களே?'' என்று கேட்டான்.

அவள் இல்லை என்றாள்.

''அப்படின்னால் சேர்ந்தே சாப்பிடுவோம்'' என்றான்

தடுமாறாமல் அவள் தலையாட்டினாள்.

அப்பொழுது இரவு ஒன்பதடிக்கவிருந்தது. நகரம் உறக்கத்தில் ஆழவில்லை, இன்னும்.

அவன் மோட்டார் சைக்கிளில் அந்த விலாசமான வீதி வழியே வேகமாய் போனது அவளுக்கு பயத்தையளித்தது. சொல்லத் தயக்கமாயிருந்தது.

பிடித்துக் கொள்ள எதுவுமே இல்லை அவனுடைய இடுப்பைத் தவிர.



''அன்பார்ந்த உங்களுக்கு,

நலமா? இதுதான் நான் உங்களுக்கு எழுதும் முதல் கடிதம். ஆனால் தபாலில் சேர்க்காத கடிதங்கள் என் கற்பனையில் எவ்வளவோ எழுதியிருப்பேன் இதுவரை! இந்தக் கடிதத்தோடு சேர்த்து என் புகைப்படத்தைக் கூட அனுப்பிவைக்கலாம் என்றெண்ணினேன். ஆனால் நீங்கள் பயப்படுவீர்கள் என்றெண்ணி சும்மாயிருந்துவிட்டேன், என்னை உடனே பார்த்துத் தீரவேண்டுமென்று ஏன் உங்களுக்கு அவ்வளவு ஆர்வமோ? போனில் உங்கள் குரல் ஏன் அப்படிப் படபடப்போடு ஒலிக்கிறது? சிரிப்பு வருகிறது எனக்கு. இன்னும் இருபத்தி நாலே நாட்கள்தானே? அதுவரை பொறுமையாய் காத்திருக்கமாட்டீரா?

என்னைப்பற்றிச் சொல்லச் சொன்னீர்கள். என்னதைச் சொல்வது? வானத்தில் பறக்க முடியாதவாறு கனத்த சிறகுகளையுடைய பட்சியைப் போன்றவள் நான். ரயில்வே பிளாட்பாரத்தைப் போல வேலையாட்களால் கலகலத்து விளங்கும் என் வீட்டில் புத்தகங்கள்தான் என் சிநேகிதிகள். இந்திரசேனனின் எழுத்திற்காக 'ஸ்ரீகாந்த்' புத்தகத்தை எவ்வளவு தடவை படித்திருப்பேன் தெரியுமா?...'ஸ்ரீகாந்த்' படித்த பிறகுதான் தோன்றத் தொடங்கிற்று, ஒவ்வொரு சந்திப்பும் ஒரு பிரிவிற்கு அடிகோலுகிறது என்று! சந்திப்

பையும் பிரிந்து போவதையும் ஒரு தலையெழுத்தாய் எடுத்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கு ரொம்ப டிடாச் மென்ட் வேண்டுமென்று எண்ணுகிறேன்.

பிலாசபிக்கு வேறு பெயர் ''விஸ்டம் ஆ.ப் லவ்'' என்று பிளாட்டோ சொல்லியிருக்கிறார். அது உண்மைதான் போலும்! எந்த விதமான ஆசைவுமில்லாமலிருப்பதுபிலாச.ப்.பி இல்லை. எல்லாம் இருந்தும் எல்லாவற்றிருக்கும் எட்டநிற்பது தான் பிலாச.ப்.பி அந்த விதத்தில் பார்த்தால் காதல் என்பதே வேதாந்தந்தான். அடடா, என்னுள் இத்தனைக் காதல் புதைந்துக் கொண்டிருக்கிற விஷயமே எனக்கு இப்பத்தான் புரிந்தது. ஹாங்க்யூ (ஏன் சொல்கிறேன் என்று புரிந்ததா?)

மைகாட்! எதையோ எழுத எண்ணி எதையோ எழுதிக் கொண்டிருக்கிறேனே!

தமிழ் சரியாய் வராதோ என்ற தாழ்வு மனப்பான்மை யைப் போக்கிக்-கொள்வதற்காக மேலும் புரியாத தமிழைத் தப்பும் தவறுமாய் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒன்றும் நினைக்காதீர்கள்.

அப்பொழுது மணி என்ன தெரியுமா? பதினொன்றரை!

ஜன்னலுக்கு வெளியே நிலவு காய்கிறது...உலகம் உறங்கிக் கொண்டிருக்கிறது. கருத்த இரவை பால் போல காயும் நிலா வெளிச்சத்தில் மூழ்கடித்துக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறான் இயற்கை வேந்தன். விடிவதற்குள் ஊரெல்லையைத் தாண்டிவிட வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன மேகங்கள். நிலா வெளிச்சத்தில், மலர்ந்து நிற்கும் ஜாதிமல்லிகை மலரைப் பார்க்க விரும்பி இமைக்கும் நேரத்தைக் கூட பார்வையைத் திருப்பி வீணாக்கப் பிடிக்காத பேராசை எனக்கு! ஜாதிமல்லிகை என்றதும் நினைவுக்கு வருகிறது! போனில் உங்கள் குரலைக் கேட்கும்பொழுதெல்லாம் குப்பென்று ஜாதிமல்லிகை என் மார்பின் மேல் பொலபொல வென்று செரிந்தாற் போலவேயிருக்கிறது. மிக சந்தோஷமா யிருக்கிறது. விடியலிலேயே எழுந்து 'திருப்பாவை'யைக்

கேட்டுக்கொண்டே வீட்டிற்கு முன்னால் கோலமிடும்பொழு தெல்லாம் குளிரால் லேசாய் நடுங்கும் போது ஏற்படும் சந்தோஷத்தைப் போன்ற ஆனந்தம் அது. கார்த்திகை மாதம் வந்து விட்டால் போதும், ஜலதோஷம் பிடித்து விடும். ஆக்ஸ்போர்டில் கார்த்திகை மாதமோ நவராத்திரி உற்சவமோ கிடையாது. பனி, இலையுதிர்காலம் போன்ற வாழ்க்கை. விடியலிலேயே அம்மாவுடன் கோவிலுக்குப் போவதற்காக குளிக்கநேர்ந்ததால் இந்தஜலதோஷம். அம்மா வுக்கு பக்தி அதிகம், அப்பா பணத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தால் அம்மா பக்தியில் குளித்துக்கொண்டிருப் பாள். எனக்கு பக்தி உண்டா இல்லையா என்று தெரியாது. எனக்கு எது என்னவானாலும் கோவிலுக்குப் போவது மட்டும் மறக்க முடியாத அனுபவம்.

நடந்து கொண்டிருக்கும்போது தொலைவில் நிலா வெளிச்சத்தில் மங்கலாய் தென்படும் கோவில். கீழ் வானத்தைச் சிவக்கச் செய்யும் சூரியன். அந்த உதய வேளையில் ஜோடியாய் சேர்ந்துபாடும் வானம்பாடிகள். வாழ்க்கைக்குத்தான் எவ்வளவு இனிமையை சேர்க்கிறது. ஒற்றை நட்சத்திரத்தின் வெளிச்சத்தைத் துணையாக்கிக் கொண்டு கோவிலுக்குச் செல்லும்போது இதயமெல்லாம் ஓங் காரம்!

இ ன்னும் கொஞ்ச நேரத்தில் நகரம் துயிலெழுந்துவிடும். அப்பொழுது வானம் முழுவதும் சிறகுகளைப் படபடத்துக் கொண்டு, எல்லோரையும் பார்த்துச் சிரித்துவிட்டு இந்த மெட்டீரியலிஸ்ட் உலகத்திலிருந்து ஓடிப்போய் விடவேண்டும் போலிருக்கிறது.

சந்தியா வேளையில் இருட்டத் தொடங்கும் வேளையில் திறந்த வெளியில் உட்கார்ந்து தேநீர் அருந்தியபடி கீட்ஸின் 'ஓட் ஆன் க்ரீஷியன் அர்ன்' படிப்பது மறக்கமுடியாத நிகழ்ச்சி. என்னுள் நானே கட்டிக் கொண்டிருக்கும் கோட்டை உலகம் இது. இதற்கு நானே ராணி. என்னுடைய இந்தச் சின்னஞ் சிறு உலகத்திற்குள் நீங்கள் எப்பொழுது

அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள்? உங்களுக்காக எவ்வளவு கற்பனைக் காவியங்களையும், மனக்கோட்டைகளையும் நிரப்பிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? என் இராமனின் பாதக் கமலங்களிலிருந்தும், புத்தரின் தாழ்ந்த கண்ணிமைகளின் வழியே வழிந்தோடிய பேரமைதியிலிருந்தும், ஷெல்லியின் கற்பனைக் காவியங்களிலிருந்தும், ரோசெடனின் சிற்பக்கலையிலிருந்தும், ரவிந்திரரின் கவியிலிருந்தும், இன்னொரு இந்திரனின் நிசப்தத்திற்கு பால் நிலவு காயும் மைதானத்தின் மேல் பறந்து வந்து இறங்கி மயங்கி விழ வேண்டும் போலிருக்கிறது—ரோஜாப்பூ அழகாயிருக்கிறது என்று சொல்வதற்குக்கூட விஞ்ஞானம் தடை விதிக்கும் இந்த மகானுபாவர்களிடமிருந்து தொலைவிற்கு ஓடிப் போய் விட வேண்டும் போலிருக்கிறது. I listen to his Silent root steps, he comes, he Comes, ever he Comes...

எங்கள் யூனிவர்சிடியில் ப்ரொ..பசர் ஹாகின்ஸ் என்று ஒரு பேராசிரியர் இருந்து வந்தார். தத்துவ போதனைகளைப் பற்றி அவர் சொல்லத் தொடங்கினால் மணிக்கணக்காய் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் போலிருக்கும் ரேவந்த், மனிதனின் வாழ்க்கையில் அவனின்றி அணுவும் அசையாது என்கிறார்கள். ஆனால் சிற்சில செயலகளும் உணர்ச்சிகளும், துடிப்புகளும் கூட தெய்வமே ஏற்படுத்துவதாய் எண்ணிக்க ஒரு மாதிரியாயில்லையா? எங்கள் யூனிவர்சிடிக்குத் தெற்கே உயர்ந்த மரம் ஒன்றிருந்தது. அதை 'ஸ்னோ—செல்லாஸ்' என்பார்கள். இரவெல்லாம் அடர்ந்து பெய்யும் பனி அதன் கிளைகளில் சிக்கிக கொண்டிருக்கும். சற்றே உலுக்கினால் முத்துக்களைப் போல உதிரும்.

''.....எவ்வளவு ஆசை என்ற அகர்பத்திகளை ஏற்றி வைத்தேன்!...எவ்வளவு விருப்பம் என்ற சந்தனங்களை பூசிக் கொண்டேன்!'' என்றார் திலக்.

அதுபோல நாம் சந்திக்கும் போது முதல் முதலாக என்ன பேசப் போகிறீர்கள் நீங்கள்? 'ஆட்டுக்கார அலுமேலு' பார்த்தாயான்னு கேட்டுவிடாதீர்கள். ரவீந்திரரின் 'தபால் காரன்! நினைவுக்கு வருகிறது. காலீப் காவியங்களைப் படித்திருக்கிறீர்களா?'' உறக்கத்திலிருந்து விழித்தெழுந்த காதலியின் சிவந்த அதரங்களை முத்தமிட்டேன்! எவ்வளவு அழகான திருட்டுத்தனம் இது!'' என்கிறார். ஆனால் ஏனோ காலீபை விட உமர்கய்யாம் பிடித்திருக்கிறது. எனக்கு.

ரேவந்த்!

இதென்ன இந்தப்பெண் தன் கனவு உலகத்தில் நிரந்தரமாய் கனவு கண்டு கொண்டேயிருப்பவளோ?—என்றெண்ணிவிட்டீர்களா? தப்புத் தப்பு! என்றாவது சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று என் வீட்டிற்குள் நுழைந்து என் அறையைப் பார்த்தால் தெரியும்—அது டிஸ்கோவுடனும் டினாசார்லெஸ் குரலுடனும் நிரம்பி வழிந்து கொண்டிருப்பதை! 'என்னம்மா நீயும் சின்னக்குழந்தையாய் குதித்துக் கும்மாளமிடுகிறாயே?' என்று பாட்டிற்கு நடுவில் பூஜை வேளையில் கரடியைப் போல வந்து என் தாய் கத்துவது கேட்கும். ஜீன்ஸ் அணிந்த ஒரு பெண் அங்கு காட்சியளிப்பாள் உங்களுக்கு. பயந்து விடாதீர்கள். நானும் சின்னப் பெண்தானே?பீடில்ஸ் அல்லது பாரதியார் எழுதிய பாட்டைப் பாடினால் கேட்க விரும்பும் பெர்வரெட் வயதிலிருப்பவள்! 'இந்த வயதில் குதிக்காவிட்டால் பிறகு தமிழ் சினிமாக் கதாநாயகிகளின் வயது வந்த பிறகா குதிக்கச் சொல்கிறீங்க?' என்று அம்மாவுடன் வாதாடுவேன். டீன்பீட்ஸின் லேட்டஸ்ட் ரிகார்ட் 'கமான் டான்ஸ்' என்ற பாட்டு... சமீபத்தில்தான் ரிலீஸ் ஆயிற்று, கேட்டீர்களா? நிஜமாகவே டான்ஸ் ஆடவேண்டும் போலில்லை?

இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் சமையலறையில் கூட டிஸ்கோ ஆடிக்கொண்டே சமயலைக்

காந்த வைத்து விடுவாளோ என்ற பயம் உங்களுக்குத் தேவையில்லை ரேவந்த்! இல்லாள் ஆனதும் அந்தமாதிரி பண்ணமாட்டேன் என்று ஸ்டாம்புப் பேப்பரில் கையெழுத் திட்டுத் தரேன்...ஆனால் பெட்ரூமில் உங்கள் மூச்சுக்காற்றை சுவாசித்துக்கொண்டு—ஜன்னல் வழியே தெரியும் வெண்ணி லவையும், கலகலவென்று உதிரும் ஜாதிமல்லிகைப் பூவையும் பார்த்தபடியே உங்களை மறந்து விட்டால் மட்டும் என்னை மன்னிக்க வேண்டியது!

நாளைக்கு திங்கட்கிழமை. விடியலிலேயே எழுந்திருந்து காலத்தோடு வேகமாய் நடை பயில வேண்டும். உறக்கம் வராத மனம் எங்கோ தாவி ஓடுகிறது.....அங்கே ஜாதிமலர் தான் இருக்குமோ அல்லது கடல் மணல்தான் இருக்குமோ உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள். நாளன்றைக்கு உங்களுக்குப் போன் பண்ணுகிறேன். அதுவரை கற்பனை நட்சத்திரங்களைத் தூவுகிறேன். அவை போய் உங்கள் வீட்டு முற்றத்தில் சின்னஞ்சிறு பொறிகளாய் ஒளிவீசிக் கொண்டிருக் கட்டும். அந்த நிலா வெளிச்சத்தில் தாவணி அணிந்த ஒரு பெண்.....

—நிலாப் பெண்

மனம் பரவசமடைந்தவனாய்—யோசனைகளின் மேல் குளிர்ந்த சந்தனத்தைத் தெளித்தாற்போல—அவன் சிலை யாய் அப்படியே உட்கார்ந்து விட்டான். பிறகு கனவிலிருந்து எழுந்திருப்பது போல எழுந்து முன்ஹாலுக்கு வந்தான். அங்கே தாய் ஊஞ்சல் பலகையில் உட்காந்து ஏதோ தைத் துக்கொண்டிருந்தாள். அவன் சந்தடி செய்யாமல் போய் தரையில் உட்கார்ந்து சிறு பையனைப் போல அவள் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டான்.

அவள் பரிவோடு மகனின் தலையை விரலால் கோதி யவள் "என்னடா ரேவு, ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று கேட்டாள். அவன் பதில் பேசவில்லை. அந்த ஸ்பரசத்

தில் அவனைப் பார்த்தவர்கள் யாருமே அவன் ஒரு அகில உலக விளையாட்டு வீரன் என்பதை மறுக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவன் இந்த நேரத்தில் தாயின் புடவைத்தலைப் பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு இனிமை கலந்த மன வேதனையை அசைபோட்டுக் கொண்டிருந்தான்.

அந்த அமைதியின்மையானது உடம்பு சப்பந்தப் பட்டதோ என்றஞ்சிய அவள், பயந்து, ''என்னப்பா ரேவு உடம்பு நன்றாயிருக்கோனோ?'' என்றாள் கலவரத்துடன்

அவள் அடிக்கடி தன்னை 'ரேவு' என்றழைத்ததால் ஆத்திரமடைந்த அவன், எனக்கு இந்தப் பேரை வெச்சது யாரும்மா?'' என்று கேட்டான் கோபமாய். தன் காதல் விஷயத்தைத் தற்காலிகமாய் மறந்தே விட்டான்.

''அப்பல்லாம் யாருக்குக் குழந்தை பிறந்தாலும் உங்க பெரிய அத்தைதான் பேர் வைப்பாள்'' என்றாள் தாயார். ரேவந்த்தின் பெரிய அத்தை எழுத்தாளி. இப்பொழுதும் பக்கம் பகமாய் எழுதித் தள்ளிக் கொண்டேதானிருந்தாள். ஆனாலும் புதிய தலைமுறை எழுத்தாளிகள் வந்து சேர்ந்து விட்ட பிறகு அவள் எழுததுகளைப் பிரசுரிப்பதை விட்டுவிட்டார்கள் பத்திரிக்கையாளர்களும்—புத்தகம் பிரசுரிப் போரும்,

''கிராக்கி குறைந்திருந்த நாளில் நான் பிறந்திருப்பேன் போலிருக்கும்மா. உலகத்தை மேலுள்ள வெறுப்பை இந்த மாதிரி என் மேல் தீர்த்துக கொண்டிருப்பாள்'' என்றான்.

''என்னவாச்சுடா?''

''ரேவந்த் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?''?

''என்ன?''

''குதிரைகளுக்குப் பயிற்சி தருபவன். நீ செல்லமாய் அழைக்கிறாயே 'ரேவு'ன்னு அதற்கும் அர்த்தம் அதான்'' என்று கோபமாய் அங்கிருந்து எழுந்து போய் விட்டான்.

∴ ∴ ∴

''குட்மார்னிங் சார், என்னை ப்ரொபசர் ராமன் அனுப்பினார்.''

''ப்ளீஸ் கமின்.''

ரேவந்த் நாற்காலியில் வந்து உட்கார்ந்து கடிதத்தை அவர் முன் வைத்து, சற்று வெட்கத்துடன், ''இதொன்றும் கிரிமினல் கேசில்லை'' என்றான்.

அவர் சிரித்துவிட்டு, ''எனக்கு ராமன் சொன்னார். எந்தக் கேள்வியும் கேட்காமல் உங்க வேலையைப் பண்ணித் தந்து அனுப்பி வைத்துடச் சொல்லி'' என்றார்.

ரேவந்த் மேலும் நாணமடைந்து, ''சாரி! ரொம்ப அற்ப விஷயத்திற்காக உங்க நேரத்தைப் பாழாக்கறேன் நான்'' என்றான்.

''பரவாயில்லை, எனக்கும் ஆர்வமாய்த்தான் இருக்கு. இந்தப் பெண் யாருன்னு உங்களுக்குத் தெரியாதா?''

''ஊஹூம். இந்தக் கையெழுத்தைப் பார்த்து அந்தப் பெண்ணைப் பற்றிய விவரம் ஏதாவது தெரிஞ்சுக்கலாம்னு நினைக்கிறேன். பை தி பை நீங்க சைகாலஜிஸிஸ்டா?''

''இல்லை. குறைந்த பட்சம் டாக்டர் கூட இல்லை. நான் கையெழுத்தை வைத்துண்டு மனத் தத்துவத்தைக் கண்டுப்பிடிக்கும் சாத்திரத்தை'' கிராபாலஜி ''என்பாங்க. யார் வேண்டுமானாலும் இதைக் கற்றுக்கலாம். ஒரு ஹாபியாய் வைத்துக்கலாம் கூட.''

''ப்ரொபசர் ராமன் சொன்னார். எனக்கு இந்த மாதிரி ஒரு டெக்னிக் இருப்பதே தெரியாது.''

அவர் முறுவலுடன், ''நாளைக்கு வாங்க. பார்த்து வைக்கிறேன்'' என்றார்.

ரேவந்த் மறுநாள் போனபொழுது இரண்டு பக்கம் டைப் அடித்து வைத்திருந்ததைத் தந்தார்.

ரேவந்த் ஆச்சரியமடைந்தவனாய், ''ஒரு சிறிய லெட்டரை ஆதாரமாய் வைத்துண்டு இவ்வளவு மன இயல்பை ஆராய்ந்து முடிவெடுத்திருக்கீங்களே!'' என்றான் அக்காகிதத்தைப் பெற்றுக் கொண்டு,

''கடிதம் தமிழில் இருந்ததால் கொஞ்சமாய்த்தான் சோதித்து முடிவெடுக்க முடிந்தது. ஆங்கிலத்தில் இருந்திருந்தால் மேலும் விவரம் தந்திருப்பேன்.''

கையிலிருந்த காகிதத்தைப் பார்த்து ''இதெல்லாம் என்னால் நம்பவே முடியலை'' என்றான்.

''கையெழுத்தைப் பார்த்து ஒருவரின் மனத்தத்துவத்தை மட்டுமேயில்லை, குடும்பத்தைப் பற்றிக் கூட சொல்லிடலாம். எழுத்துக்களின் சைசு, முற்றுப்புள்ளி வைக்கும் விதம், வாக்கியங்களை அமைத்திருக்கும் விதம், எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாய் கடிதத்தை முடித்து விட்டுக் கடைசியில் கையெழுத்திடும் போது தென்படும் அலுப்பு, போடமறந்து விட்ட கால்கள், கொம்புகளை நீட்டிய விதம், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விதம், கடிதத்தைத் தொடங்கும் போது முத்துமுத்தாய் ஆரம்பித்து முடிக்கும் வரையிலும் அதே மாதிரி முடிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது, இவையெல்லாம் நமக்கு உதவும். நீங்க ஒரு ஆளுடன் ஐந்து வருடம் பழகித் தெரிந்து கொள்வதை—அவர் எழுதிய ஒரே ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு கையெழுத்தின் உதவியுடன் கண்டுபிடிக்கலாம். அவ்வளவு வளர்ச்சியடைந்திருக்கிறது இந்த விஞ்ஞானம்''

''எனக்கும் இந்தக் கலையைக் கற்றுக்கணும் போலி ருக்கு.''

''முதலில் காதலில் வெற்றியடையுங்கள். கிராபாலஜியில் என்ன இருக்கு?'' கை குலுக்கி விட்டுச் சொன்னார் அவர்.

''ஏற்கனவே நீங்க ஒரு கோழை. அந்தப் பெண்ணை உங்களால் சமாளிக்க முடியுமா?''

ரேவந்த் பேராச்சரியமடைந்தவனாய், ''நான் கோழைன்னு?'' எப்படித் தெரியும் உங்களுக்கு என்று கேட்டான்.

''விசிடிங் ஸ்லிப்பின் மேல் நீங்க உங்க பேரை எழுதி னீங்களில்லே? உங்கக் கையெழுத்தை வைத்துண்டு அவ்வளவு கூட தெரிஞ்சுக்க முடியாதா? அதுதான் கிராபாலஜி'' என்றார் அவர் சிரித்துக் கொண்டே.



''உங்களைப்பற்றி எனக்கு நிறைய தெரிந்துடுத்து''

''என்ன தெரிந்தது?''

''உங்க விருப்பு வெறுப்பு, உங்க குணாதிசயம் எல்லாம்''

''எப்படித் தெரிந்தது?''

''அதை மட்டும் சொல்லமாட்டேன்.''

''சரி, என்ன தெரிந்ததோ, அதைச் சொல்லுங்க.''

அவன் அவளைப் பற்றித் தயாரித்திருந்த அந்த இரண்டு பக்க விவரங்களையும் போனில் சொன்னான். மிக நுட்பமாய் தயாரித்திருந்த ரிபோர்ட் அது. அவள் குணங்களைப்பற்றியும், வெளிப்படையாய் பேசும் இயல்பு, இரக்க உள்ளம், வாழ்க்கையின் மேலுள்ள எண்ணம், சிநேதிதிகளுடன் நடந்து கொள்ளும் முறை முதலிய விவரங்களையெல்லாம் அவன் சொல்ல திக்பிரம்மையடைந்து விட்ட அவள், ''எப்படிக் கண்டு பிடித்தீங்க இதையெல்லாம்?'' என்று கேட்டாள்.

அவன் கர்வமாய், ''உங்களைப் போல, நான் யாருன்னு தெரிந்து உளவாளிகளை வைத்து இரண்டு மாதம் கஷ்டப்பட்டுத் தெரிந்துண்ட மாதிரி நான் பண்ணலை'' என்றான்.

அவள் கெஞ்சும் குரலில், ''சொல்லமாட்டீங்களா? ப்ளீஸ்'' என்றாள் குரல் கம்ம.

அதனால் அவன் மேலும் இறுகி, ''ஆசையைப்பாரு! உங்களைப்பற்றி நீங்க ஒன்றுமே சொல்லமாட்டீங்க. நான் மட்டும் எப்படி கண்டுப்பிடித்தேன்னு சொல்லனுமா உங்களுக்கு?'' என்றான்.

''சரி, எங்க வீட்டில் என்னை என்ன பேரிட்டு அழைப்பாங்கன்னு சொல்லிடறேன். நீங்க மட்டும் இதைச் சொல்லுங்க, ப்ளீஸ்'' என்றாள் ராஜிக்கு வந்து.

''குட்...கிராபாலஜி'' என்றான்.

''மைகாட்? அது அதுவா? அதைப்பற்றி யோசித்துப் பார்க்கவேயில்லை நான்'' என்றாள்.

''சரி, இப்பச் சொல்லுங்க உங்க செல்லப் பேரை''.

''வாட்?'' என்றாள் கோபமாய்,

''அதான், உங்கவீட்டில் செல்லமாய் கூப்பிடும் பெயர்''

''ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக்குங்க'' எடுத்துக் கொண்டான்.

''ஒரு கோழிமுட்டை உருவத்தில் 26 புள்ளிகளை வைத்துக்கொண்டே போங்கள். ஏதாவது ஒரு புள்ளிக்கருகில் 3 என்ற எண்ணைப் போட்டுக்குங்க. கடிகார முள் நகரும் விதத்தில் (கிளாக்வைஸ்) அந்தப் புள்ளிக்கு அடுத்த பன்னிரண்டாவது புள்ளியின் மேல் 4 என்ற எண்ணும் பிறகு ஒரு புள்ளியை விட்டு விட்டு 5 என்ற எண்ணையும் போடுங்கள்.''

''போட்டுட்டேன்'' என்றான்.

''கவனமாய் கேளுங்க. ஆங்கிலத்தில் ஐந்தெழுத்துடைய பெயர் என்னுடையது. முதல் எழுத்து உங்களுக்குத் தெரியும் ஆர். இரண்டாவது எழுத்தைச் சொல்லிடறேன். அது ஏ! பிறகு எஞ்சிய இரண்டு எழுத்துக்களைப் பற்றிய குறிப்புக்களைத் தரேன். நீங்க இருபத்தாறு புள்ளிகளை வைத்திருக்கீங்களோனோ? ஏதோ ஒரு புள்ளிக்கருகில் 'எ' ஐ வைத்துவிட்டு வரிசையாய் பி, சி, டி யிலிருந்து 'இஸட்' வரையிலும் எழுதிக்கொண்டே போங்க. ஒரு புள்ளிக் கருகில் 3 என்ற எண்ணை வைத்திருக்கீங்க இல்லையா? அந்தப் புள்ளியிடம் எந்த எழுத்து வருதோ அது என் பெயரின் மூன்றாவது எழுத்து. அப்படியே நான்காம், ஐந்தாம் எழுத்துக்களும் அதே வரிசையில் இருக்கும். நீங்க கண்டுபிடிக்க வேண்டியதெல்லாம் எந்தப் புள்ளிக்கருகில் 'ஏ' வை ஆரம்பிக்க வேண்டும் என்பதே! அதைக் கண்டு பிடித்துட்டால் எல்லாம் தெரிந்துட்டாற்போலதான், குட்லக்.''

''இது அநியாயம். இந்த விதத்தில் உங்க பேரைக் கண்டுப்பிடிக்கனும்னால் நான் 26 காம்பினேஷன்களைப் போடனும்'' என்றான் ரேவந்த்.

''அது கணித மேதை பண்ற விதம். கொஞ்சம் காமன் சென்ஸ் இருப்பவங்க சுலபமாய் கண்டுபிடித்துடுவாங்க..... ரேவந்த், உங்களுக்கு ஒரு விஷயம் சொல்றேன் கேளுங்கள்

உங்களுக்கு அபாரமான புத்திக் கூர்மையுடன் கூட கொஞ்சம் தாழ்வு மனப்பான்மை இருக்கும்னு தோணுது. அனாவசியமாய் நீங்க உங்க சிநேகிதர்களின் உதவியை நாடுகிறீங்க. அவங்க உங்களைத் தவறான வழியே இட்டுச் செல்லுவாங்களே தவிர எதற்குமே பயன்படமாட்டாங்க. நீங்களே சுயமாய் முயற்சி பண்ணினால் மிகச் சுலபமாய் இப்பெயரைக் கண்டுபிடித்துடலாம். நான் லைனில் இருக்கேன். முயற்சி பண்ணுங்க...''

அவன் போனாவைக் கையிலெடுத்துக் கொண்டான். அடுத்த வினாடி மிக உன்னிப்பாய் கவனம் பிசகாமல் ஆடும் சதுரங்க வீரனாய் மாறிவிட்டான்.

நேரம் ஓடிற்று. இரண்டு நிமிஷங்கள் ஆகிவிட்டன. அவன் நெற்றியிலிருந்து வியர்வை வழிந்து கொண்டிருந்தது. முதலிரு எழுத்துக்களும் R A என்று தெரிந்தது.

''உங்களால் கண்டுபிடித்துட முடியும். முயற்சி பண்ணுங்க ரேவந்த்.'' மறுமுனையிலிருந்து ஊக்குவித்துக் கொண்டிருந்தாள் அவள்.

வந்து விட்டது.

அவன் முறுவலுடன் ''நீங்க கொஞ்சம் போனைக் காதுக்கருகில் வைத்துக்கிறீங்களா?'' என்றான் தன் வெற்றியைப்பற்றிச் சொல்லாமல்.

''உம்...எதுக்கு?'' என்றாள்.

அன்பும் உணர்ச்சிப்பெருக்கும் சற்றே குரும்பும் மிளிர்ந்த குரலோடு அவள் பெயரை இனிமையாய் உச்சரித்தான். வீலிட்டு அலறாத குறையாய் ''மை காட்! கண்டுபிடித்துட்டீங்களே!'' என்று கத்திவிட்டாள்.

''.....தாங்க்ஸ்.''

''அப்படின்னால் என் போன் நம்பரைக் கூட மிகச் சீக்கிரத்தில் கண்டு பிடித்துடுவீங்க..'

''கண்டிப்பாய் கண்டு பிடித்துடுவேன். ஆனால் இரண்டு நாள் டைம் கொடுங்க. இரண்டு நாளும் சதுரங்கப் போட்டி இருக்கு'' என்றான்.

''ஆமாம், பேப்பரில் கூட படித்தேன். நீங்க கண்டிப்பாய் ஆடித் தீரணுமா ரேவந்த்?''

அவன் ஆச்சரியமடைந்தவனாய், ''ஏன், எதுக்காக அப்படிச் சொல்றீங்க?'' என்று கேட்டான்.

அவள் மௌனம் வகித்தாள்.

''ரஷ்யாவிலிருந்து போலன்ஸ்க்கீ கூட வராரே'' என்றான்.

''அதுக்குதான் தயக்கமாயிருக்கு எனக்கு. ரஷ்யர்கள் தோல்வியை அவ்வளவு சுலபமாய் எடுத்துக்க மாட்டாங்க.''

ரேவந்த் விட்டேற்றியாய், ''ஆங். நீங்க அனாவசியமாய் கலவரப்படுறீங்க. போலன்ஸ்க்கீ அப்படிப்பட்ட ஆளில்லை. ரொம்ப நல்லவர் ஸ்போர்டிவ்'' என்றான்.

'ஆனால் ஆபத்து போலன்ஸ்கீயிடமிருந்து வரவில்லை. சீதாராமிடமிருந்து வந்தது இங்கே போனில் இச்சம்பாஷணை நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அங்கே அவன் ஒரு எலுமிச்சம் பழத்திற்குள் கோழியின் ரத்தத்தை ஏற்றிக் கொண்டிருந்தார். பிறகு அந்தப்பழத்தில் ஒரு குண்டூசியைக் குத்தினான். அவன் முகத்தில் குரூரம் நிரம்பிய வெறுப்பு. பகைமை இரண்டும் போட்டியிட்டன.'

''போலன்ஸ்க்கீ நல்லவராகவே இருக்கலாம். ஆனால் 'திகேம்' என்ற அமெரிக்கப் பத்திரிக்கையைப் படித்தீங்களா?'' கேட்டாள் அவள்.

ரேவந்த் அதில் வந்திருந்த கட்டுரையைப் படித்தான். 'ரஷ்யனுக்குப் பாடங் கற்பித்த இந்தியன்' என்ற தலைப்பில் வந்திருந்த செய்தி அது. 'திகேம்' என்ற பத்திரிகை மஞ்சள்

பத்திரிக்கையைப் போன்றது. மனம் போனபடி எழுதியிருந்தது.

''எல்லா விளையாட்டுத் துறைகளிலும் ஐரோப்பிய நாட்டுடன் சேர்ந்தே ஒளி வீசிய ரஷ்யா, சதுரங்கத்தில் மட்டும் ஆசியன் சாம்பியன்ஷிப்பிற்காக ஏன் முயன்றது?..... கேவலம் சதுரங்கத்தில் தாம் மகுடம் சூடாத மகாராஜாக்கள் என்பதை எடுத்துக் காட்டிக்கொள்ள மட்டுந்தானா? அதனால் தான் இந்தப் போட்டிகளை மாஸ்கோவில் வைக்காமல் ஆசியாவிலுள்ள உஸ்பெகிஸ்தானில் வைத்திருந்தாற்போல தோணுகிறது. ரஷ்யர்களின் மலிவான தந்திரங்களை முறியடித்துப் பாடம் கற்பித்த இந்திய விளையாட்டு வீரனை 'திகேம்' பாராட்டுகிறது'' என்றிருந்தது அதில்.

ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால் போலன்ஸ்கீ ஒரு ரஷ்யப் பத்திரிக்கைக்கு தந்திருந்த பேட்டி அவனைக் கவர்ந்தது.

பத்திரிக்கையாளர் அவனைக் கேட்டார். ''நீங்க மிகச் சுலபமாய் ரேவந்த்தைத் தோற்கடிக்கும் நிலையிலிருந்தீர்கள். ஆனால் எப்படித் தோற்றீர்கள்?''

''எப்படியும் ஜெயிக்கத்தானே போறோம்னு கொஞ்சம் அலட்சியமாய் ஆடினேன்'' போலன்ஸ்க்கீ நேர்மையாய் பதிலளித்தான்.

''ஆனால் எதிராளி எந்த உபாயத்தைக் கையாளுவான் என்று பத்து உபாயங்களை எடுத்து வைக்கும் முன்னரே ஊகித்துவிடக் கூடியவர் என்ற பெயர் இருக்கு உங்களுக்கு. அப்படிப்பட்டவர் நாலே உபாயத்தில் எப்படித் தோற்றீங்க?''

''அதான் சொன்னேனே! அளவுக்குமீறிய தன்னம்பிக்கைன்னு! அவனுடைய மந்திரி வெட்டுப்பட்டுடும்னு நினைத்தேன். அதோடு கூட டைம் ரன் அவுட் ஆகிண்டிருந்தது இன்னொரு பக்கம் வேறு.''

''ஆனால் உங்க ஆட்டம் கேவலம் ரூக்கால் (யானை) கட்டப்படடது. மிஸ்டர் போலன்ஸ்க்கீ. இதை நீங்க கேவல மாய் பாவிக்கலையா?''

''அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோணலை'' அப்பத்திரிக்கை அதே தலைப்புடன் ''அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோணலை'' என்று வைத்துப் பேட்டியைப் பிரசுரித்திருந்தது. ரேவந்த்தைக் கூட இறுதியில் புகழ்ந் திருந்தது.

ரேவந்திற்கு அது நினைவுக்கு வரவே தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''என்ன மௌனமாயிட்டீங்க? நான் சொன்ன விஷயத் தைப்பற்றியா யோசிக்கிறீங்க?''

''ஆமாம்.''

''ஏனோ தெரியலை, எதுவோ நடக்கப்போகிறதுன்னு என் மனம் சொல்றது.....போலன்ஸ்கீயுடன் இம்முறை ஆடாமல் தப்பித்துக்க வழியில்லையா?''

''எல்லாம் முடிவான பிறகு இப்ப எப்படி முடியும்? போலன்ஸ்கீ இப்பவே இந்திய விளையாட்டு வீரர்களான ஹசன், ரவிசேகர், ஆரன் இவங்களோடு வரிசையாய் கல்கத்தா, டில்லி, பம்பாயில் ஆடிட்டு இங்கே வராரு. இங்கே விளையாட்டு வீரர்களான நானும் பிரபாகரும் ஆடணும். எங்களுள் யார் ஜெயிக்கிறாங்களோ அவங்களோடு ஆடப்போறாரு. அதோடு இதொன்றும் போட்டியில்லை. சிநேகத்திற்காக ஆடப்போற ஆட்டம், அவ்வளவுதான்.''

''ஆனாலும் எனக்கென்னவோ பயமாயிருக்கு, நீங்க இந்த ஒரு முறை தப்பித்துக்கக் கூடாதா?''

அவன் சிரித்துவிட்டு, ''இதில் உயிர்போற விஷயம் ஒன்றுமில்லையே? அதிகப்பட்சம் நான் தோற்றுப் போவேன் அவ்வளவுதானே? சிநேகப்பூர்வமான விளையாட்டாதலால் இதில் வரப்போகும் நஷ்டம் ஒன்றுமில்லை.''

''உங்களுக்கு இன்ட்யூஷனைப் பற்றித் தெரியுமா?''

''தெரியும். ஆனால் நான் அதையெல்லாம் நம்பமாட்டேன். ஒவ்வொருவரும் தம்மிடம் அந்தமாதிரி ஏதோ சக்தி இருப்பதாய் நினைச்சுக்கிட்டிருக்காங்க.''

அதற்கு மேல் அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. ''நாளைக்குப் போன் பண்றேன்'' என்று வைத்துவிட்டாள் விருப்பமின்றியே.



விசாலமான ஹால்.

ரேவந்த் போய்ச் சேருவதற்குள் எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்துவிட்டிருந்தன. அவன் போய்ச் சேர்ந்து பத்து நிமிஷங்கழித்து போலன்ஸ்க்கீ வந்தான். ரேவந்த்துடன் கை குலுக்கி விட்டு சிநேகபூர்வமாய் சிரித்தான்.

அதற்குள் பிரபாகரும் வந்து சேர்ந்துவிட்டான். அவன் என்றுமே அஜீர்ண வியாதிக்காரனைப் போலவே இருப்பான் பார்ப்பதற்கு. போலன்ஸ்க்கீயை மட்டும் விசாரித்து விட்டுச் சும்மாயிருந்து விட்டான்.

ரேவந்த் மேஜையை அணுகினான்.

சதுரங்கத்தில் டாஸைப் போடுவதிலும் கையில் காயைப் பிடித்துக் கொள்வதற்கும் யார் முதலில் எடுத்து வைப்பது என்பது தீர்மானிக்கப்படும்.

பிரபாகர் நாணயத்தை வீசினான்.

''தலை'' என்றான் ரேவந்த்.

பூ விழுந்தது.

பிரபாகர் வெள்ளைக் காய்கள் பக்கமாய் உட்கார்ந் திருந்தான்.

ஸ்டாப் வாச்சுகள் ஓடத் தொடங்கிவிட்டன. போலன்ஸ்கீ ரேவந்தின் ஆட்டத்தை கவனமாய் பார்த்துக்கொண்டிருந் தான்.

பிரபாகர் கீழ் பான்னை இரண்டு கட்டங்களுக்கு முன் னால் நகர்த்தினான் (பி. கே.4). ரேவந்த் உடனே ராணிக்குப் பக்கத்திலேயே இந்த பிப் :பான்னை முன்னுக்கு நகர்த்தி னான். பிரபாகர் நைட்டை முன்னுக்கு நகர்த்தவே (என். கே. பி. கே) ரேவந்தின் உதடுகளில் குறுநகை படர்ந்தது.

அவனை சிசிலியன் டிஸென்ஸில் வெட்டக்கூடியவர்கள் ஒருவருமே கிடையாது. அதேபோல ப்ரட் ஓபனிங்கிலும், அவற்றில் அவன் கை தேர்ந்தவன். இந்த பிரபாகர் தன் கைக்கு அஸ்திரத்தை எடுத்துத் தருகிறானே!

ரேவந்த் நைட்டை முன்னுக்கு நகர்த்தினான். (என். க்யூ பி. கே) பிரபாகர் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு. நெருப்புப் பெட்டியைக் கை விரல்களுக்கிடையே திருப்பிக் கொண்டிருந்தான். அவன் இத்தகைய மலிவு உபாயங்களைக் கையாளுவதில் கைதேர்ந்தவன். எதிராளியின் கவனத்தைச் சிதறடிப்பதற்காக சிகரெட் புகையை வளையம் வளையமாய் ஊதித்தள்ளிக் கொண்டிருப்பான்.

ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை. அடுத்த உபாயத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான்.

இரண்டரைமணி நேரம் கழிவதற்குள் மேஜையின் மேல் பாதிக் காய்கள் காலியாகி விட்டிருந்தன. ஆனால் அதற்குள் பிரபாகரின் ஆட்டம் சூடு பிடித்துக் கொண்டிருந்தது. தன்

பிஷப்பால் ரேவந்தின் நைட்டையும், ரூக்கால் பிஷப்பையும் பின்பண்ணி விட்டிருந்தான். பார்த்தவர்களுக்கு அவன் வென்றுவிட்டது போலவேயிருந்தது. ஆனால் மேலுக்குத் தான் அவ்வாறு தெரிந்தது. ரேவந்த் இரண்டு ரூக்ஸையும் இழந்து விட்டான். ஆயினும் அவன் குதிரைகளை நடத்திச் செல்வதில் மிகத் தேர்ந்தவன். அவனுடை நைட்ஸுகள் இரண்டும் எதிரியின் சேனைக்குள் நுழைந்து போராடிக் கொண்டிருந்தன. தன் பான்னைக் கைவிட்டு அதன் மூலம் நைட்ஸை முன்னுக்கு ட்டுச் செல்வதில் அவன் கெட்டிக் காரன்.

அவனுடைய ஒரு நைட்டையாவது கொன்றுவிடவேண்டு மென்று பிரபாகர் விஸ்வபிரயத்தனம் பண்ணிக் கொண்டிருந் தான்.

மாலை ஐந்தடிக்கவிருந்தது.

சதுரங்கத்தில் அந்த நாள் முடிவடையப் போகும் சமயத் தில் கடைசி காயை வைக்கமாட்டார்கள். அப்படிப் பண்ணி னால் எதிரிக்கு அன்றிரவெல்லாம் யோசிப்பதற்கு அவகாசம் கிடைத்துவிடும். அதனால் கடைசி ஸ்டெப்பைப் பற்றி ஒரு காகிதத்தில் எழுதிக் கவரில் வைத்து சீல் பண்ணி, குறிப் பிட்ட ஆளிடம் தந்து விடுவார்கள். மறுநாள் அந்தக் காயை நகர்த்துவதிலிருந்து ஆட்டம் திரும்பவும் தொடங்கும்.

ரேவந்த் பிஷப்பால் பான்னை வெட்டினான். அன்றைக் குக் கடைசியாய் எடுத்து வைப்பது தன் முறையாய் இருக்க வேண்டும் என்று விரும்பினான் பிரபாகர்.

அவன் ரூக்கை முன்னுக்கு நகர்த்தி, ரேவந்த்தின் பிஷப்பை வெட்டி விட்டு கர்வமாய் ரேவந்த் முகத்தைப் பார்த் தான். ஆனால் ரேவந்த்தின் முகத்தில் அவன் எதிர்பார்த்த தோல்வியின் அறிகுறி தென்படவில்லை. காகிதத்தில் எதையோ எழுதிக் கவரில் வைத்துக் குறிப்பிட்ட ஆளிடம் தந்தான்.

மேஜையைப் பார்த்த பிரபாகருக்கு ஏதோ சந்தேகம் வந்தது. தான் ரூக்கை நகர்த்தும் பரபரப்பில் மந்திரியை கவனிக்கவில்லை. ரேவந்த் நாளைக்கு வந்ததுமே வைக்கப் போகும் ஸ்டெப் தெரிந்துவிட்டது.

ரேவந்த் நாளைக்கு வந்ததும் நைட்டைப் பின்னுக்குக் கொண்டு வந்து தன் ராஜாவுக்கும் மந்திரிக்கும் 'ஃபோர்க்' வைத்து விடுவான். அத்துடன் தன் வேலை தீர்ந்தது, மந்திரியை இழக்க வேண்டியிருக்கும்.

நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு பிரபாகர் நிமிர்ந்து பார்த்தபொழுது ஹால் முழுவதும் காலி யாயிருந்தது. குறைந்தது ஆறுதல் சொல்லக்கூட ஒருவரு மில்லை. அசதியோடு எழுந்திருக்கப் போனவன், ஹாலுக்கு ஒரு மூலையில் நின்றபடி தன்னையே பார்த்துக்கொண் டிருந்த ஆளைக் கவனித்தான்.

அவன் சீதாராம்.

* * *

''பார்த்தீங்களா? நீங்க அனாவசியமாய் கலவரப் பட்டீங்க, நாளைக்கு ரொம்ப ஈசியாய் ஜெயிக்கப் போறேன். பார்த்துண்டிருங்க...''

வீட்டுப் படுக்கையறையிலிருந்த கட்டிலில் குப்புறப்படுத்த படி அவன் அவளோடு பேசிக் கொண்டிருந்தான். தவறை ஒப்புக்கொள்வதுபோல, ''சாரி, நான் அனாவசியமாய் கலவரப்பட்டுட்டேன்,'' என்றாள்.

''பரவாயில்லை. அதுசரி எனக்கு இரண்டாவதுகடிதத்தை எப்போ எழுதப்போறீங்க?''

''கடிதமா?... உங்களுக்கு என்னைச் சந்திப்பதைவிட அந்தக் கடிதங்களைப் படிக்கத்தான் ரொம்ப உற்சாகம் இருக்கும் போலத் தோணுதே?''

''ஆமாம், நிஜந்தான்...நான் எவ்வாறு கற்பனைகளைப் பின்னிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?''

''அதற்குள் மூன்று வாரங்கள் கழிந்து விட்டன.''

''சதுரங்கத்தில் என் வழியே ஒரு தனிப்பட்ட டெக்னிக் நம்பவைத்துட்டு—கடைசியில் ஓர் உதைவிடுவது, உங்களைக் கூட அதே மாதிரி நீங்கக் கெடு வைத்த நாளுக்குள் பார்த்துடு வேன்னு நினைக்கிறேன்.'' ''ஆனால் நான் உங்க எதிரி இல்லையே ரேவந்த்! எவ்வளவு சீக்கிரமாய் சந்திக்கிறீங் களோ அவ்வளவு தூரம் உங்க புத்திக்கூர்மையின் மேல் நம்பிக்கை ஏற்படும் எனக்கு.''

''ஆனால் நீங்க உங்க லாஜிக்கால் என்னைக்குழப்பறீங்க. லாஜிக் இல்லாமல் வெறும் கணக்குச் சொல்லுங்க. அரை நிமிஷத்தில் பண்ணிடறேன்.''

''நிஜமாவா?''

''பந்தயம்.''

''ஆனால் ஏன் சினேகிதியின் போன் நம்பரைச் சொல் றேன், ஐந்து ஸ்தான எண்...ஒரு எண்ணை அதே எண்ணு டன் பெருக்கினால் வரும் நம்பர் அது.''

''பெர்ஃபெக்ட் ஸ்கிவேர்னு சொல்லுங்க,''

''ஆங்...அதான். இன்னொரு குறிப்பு. என்னன்னால் அந்த எண்ணால் முதல் ஸ்தானத்து ஸ்க்வேரையும் கடைசி ஸ்தானத்து ஸ்க்வேரையும் கூட்டினால் நடு ஸ்தானம் வரும். இதில் எந்த லாஜிக்கும் எந்த காமென் சென்ஸும் இல்லை'' என்றாள்.

அவள் முடிக்கும் முன்பே ரேவந்த், ''101×101=10201'' என்றான். அவள் வியப்போடு ''மைகாட்! இவ்வளவு சீக்கிர மாய் எப்படிக் கண்டுப் பிடித்தீங்க?'' என்று கேட்டாள்.

ரேவந்த் காலரை மடித்து விட்டுக் கொண்டு, ''பின்னே என்னன்னு நினைத்தீங்க என்னை?'' என்றான்.

''கங்கிராஜுலேஷன்ஸ். இத்தனை சீக்கிரத்தில் கணக்கிட்டுச் சொல்லிடுவீங்கன்னு நினைக்கலை'' என்றாள்.

''உங்களுக்கு என் புத்திகாரியத்தின்மேல் இளப்பமான எண்ணம் இருந்திருக்கும் போலிருக்கே!.....பந்தயம் வேணுமானாலும் வைக்கிறேன், நீங்க எந்தக் கணக்கைச் சொன்னாலும் உங்களைவிட சீக்கிரமா நான் சொல்லிடுவேன்.''

''ஆனால் எந்தப் பெண்ணுமே தன் கணவன் கொஞ்சமாவது கமன்சென்ஸ் இருக்கறவனாயும், அவசரக்காரனாய் இல்லாதவனாயும்தான் விரும்புவாளே தவிர கணித மேதையாகணும்னு விரும்பமாட்டாளில்லையா? உங்களைப் பண்ணிண்டால், கத்திரிக்காய் கிலோ விலைக்கு ஸ்க்வேர் ரூட், பச்சைமிளகாய் நூறு கிராம் விலை என்று சொல்லுவீங்க போலிருக்கே'' என்று சிரித்துவிட்டுப் போனை வைத்துவிட்டாள்.

ரேவந்த்தின் முகம் சிவந்தது. அதற்குள் ஒரு சந்தேகம் ஏற்பட்டது, தன்னை அவசரக்காரன் என்று ஏன் சொன்னாள்? அவசரப்பட்டு நம்பரைச் சொல்லி விட்டேனோ?

போனை அருகில் இழுத்து 10201-க்கு டயல் பண்ணி

''ஹலோ'' என்றான்.

''சூப்பர் ஃபைன் ஹேர் கட்டிங் சலூன் சர்'' என்றுக் கேட்டது. ரேவந்த் டொக்கென்று போனை வைத்துவிட்டான். திரும்பவும் காகிதமும் பேனாவும் எடுத்து வைத்துக் கொண்டு கவனமாய் கணக்குப் போட்டான்—அதே போன்ற விதத்திலிருந்த மற்றொரு எண்—$110 \times 110 = 12100$ வந்தது.

அதற்கு டயல் பண்ணினான்.

''எஸ், ப்ளீஸ்'' என்றாள் மறுமுனையிலிருந்து ஒரு பெண்.

ரேவந்த் சாவதானமாய், பரபரப்படையாமல், ''உங்களைத் தொந்தரவு பண்றத்துக்கு மன்னிச்சுக்குங்க மேடம்! நாங்க பெனின்சுலா ப்ரொடக்ட்ஸிலிருந்து பேசறோம். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் ஒரு இரண்டு நிமிஷம் புள்ளி விவரக்கணக்கை எடுத்துப்போம். நீங்க எங்களுக்கு உதவி பண்ணுவீங்கன்னு எதிர்பார்க்கி றோம்'' ஆங்கிலத்தில் சொன்னான். ''இந்த மாதிரி போனில் இண்டர்வ்யூ பண்ணும் முறையை வெளிநாடுகளில் தற்சமயம் கண்டுபிடித்திருக்காங்க'' என்றான்.

''உங்களுக்கு என்ன விவரம் வேண்டும்?''

''பதினெட்டு இருபத்திரெண்டு வயதுக்குள்ளே யாரா வது பெண்கள் உங்கள் வீட்டில் இருக்காங்களா?''

''வாட்?'' கோபமாய் கேட்டது.

''கோபிச்சுக்காதீங்க மேடம். கேவலம் எங்கள் பொருட் களை விற்பதைப் பெருக்கத்தான் இந்த விவரங்களை சேகரித்துக்கறோம். அந்த மாதிரிப் பெண்கள் யாராவது இருந்தாங்கன்னால் அவங்க விருப்பு வெறுப்புக்களைத் தெரிஞ்சுப்பதுதான் எங்கள் நோக்கம். அதற்குத் தகுந்தாற் போல எங்கள் பொருள் உற்பத்தியில் மாறுபாட்டைக் கொண்டு வருவோம்.

இந்த மாதிரி விஷயங்களை நேரில் வந்து கேட்டால் நன்றாயிராதுன்னுதான் போனில் கேட்கிறோம். தயவு செய்து எங்கள் வேண்டுதலைப் புரிஞ்சுக்குங்க.'' என்றான், நிதானமாய் இவ்வளவு கதைகட்ட வேண்டியிருக் கிறதே. அட கடவுளே என்றெண்ணிக் கொண்டே.

''அதனால்தான் போனில் விசாரிக்கிறீங்களா?''

''ஆமாம் மேடம்'' மரியாதையோடு பதிலளித்தான்.

''பெர்சனலாய் கேட்க முடியாத கேள்விங்கிறீங்க, பிரா சைசு கிய்சு கேட்டுத் தொலைக்கலையே?'' குறும்பாய் வந்தது மறுமுனையிலிருந்து பேச்சு.

''மைகாட்!'' என்றெண்ணிக் கொண்டான் ரேவந்த். இந்த காலத்துப்பெண்கள் பெண்களேயில்லை- சிசின்ட்ரீக்கள்.

''அடடா—அந்தமாதிரிக் கேள்வி கேட்கமாட்டோம் மேடம். கேவலம் பொட்டு நிறம், முகத்துக்குப் பயன்படுத்தும் கிரீம்கள், அதைப்பற்றிய விவரம் அவ்வளவுதான்கேட்போம். தயவுசெய்து உங்க வீட்டில் அந்த வயதுடைய பெண்கள் எவ்வளவு பேர் இருக்காங்கன்னு சொல்றீங்களா?''

''ஒரே ஒருவர்தான்...நான்தான்.''

''தாங்க்யூ மேடம் 'நீ உன் சிநேகிதிகளைப் பற்றிச் சொல்லு, நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்' என்றார் ஒரு கவி. உங்கள் விருப்பு வெறுப்பைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் உங்கள் சிநேகிதிகளைப் பற்றிச் சொல்லுங்க. உங்களுக்கு வெளிநாட்டில் படித்துட்டு வந்த சிநேகிதி யாராவது உண்டா?''

''ஆங், ஒருத்தர் இருக்காங்க. சமீபத்தில்தான் ஆக்ஸ்போர்டில் படிச்சுட்டு வந்திருக்கிறாள்.''

ரேவந்த் இதயம் வேகமாய் துடித்தது. ''அந்தப் பெண்ணின் முழுப் பெயரையும் அட்ரசையும் சொல்றீங்களா?'' என்று கேட்டான்.

''ஏன்?''

''அந்த மாதிரி வெளிநாடுங்களில் படித்துட்டு வந்த பெண்களின் டேஸ்ட்டைத் தெரிந்துக்கத்தான்...''

''முழுப் பேரும் வேணுமா?''

''எஸ், மேடம்.''

''அட்ரசுமா?''

''ஆமாம்.''

அவள் போனை யாருக்கோ தந்த ஓசை—''சொல்லுங்க. நான் தான் பேசறேன். உங்களுக்கு என்ன விவரம் தேவை? நான் வைத்துண்டிருக்கும் பொட்டு ரோஸ் கலர். முகத்துக்கு எப்பொழுதும் பாண்ட்ஸ் கிரீம்தான் தடவிப்பேன்.''

ரேவந்த் திகைப்படைந்து, ''நீங்க அங்கத்தான் இருக்கிறீங்களா?'' என்று கேட்டான்.

சிரித்தவள், ''உங்களுக்குக் காமன் சென்ஸ் ரொம்பத்தான் ஜாஸ்தின்னு தெரியுது. அதான் ஜாக்கிரதையாய் இருக்கேன். ஆனாலும் நம்ப கண்ட்ராக்ட் பிரகாரம் நான் கண்டுபிடிக்கச் சொன்னப்பதான் கண்டுபிடிக்கணுமேயன்றி, ஏதோ பேச்சு வாக்கில் சொன்னதை வைத்துண்டு தேடிண்டு வரக்கூடாது. தெரிந்ததா?'' என்றாள்.

''தெரிந்தது'' அலுப்போடு சொல்லிவிட்டுப் போனை வைத்தான் ரேவந்த்.

* * *

மறுநாள் காலை பத்து மணிக்கே விளையாட்டு நிகழுமிடத்திற்குப் போய்ச்சேர்ந்தான் ரேவந்த். அப்பொழுது மிகக் குறைவான ஜனங்களே வந்து சேர்ந்திருந்தார்கள். போலன்ஸ்க்கீயுடன் ஆட்டம் பிற்பகலில்தான் நடக்கவிருந்தது. அப்பொழுது வந்துக்கலாம் என்றிருந்து விட்டார்கள் போலும்!

பிரபாகர் இன்னும் கொஞ்ச நேரத்தில் தோற்றுவிடுவான் என்று நேற்றிரவே தெரிந்து போய் விட்டிருந்தது.

ரேவந்த் படியேறிக் கொண்டிருந்தபோது சீதாராம் எதிர்ப்பட்டு, ''குட் மார்னிங் சார்'' என்றான். ரேவந்த் அவனைப் பார்த்து முகம் சுளித்தான்.

''நீங்க வெற்றியடையணும்னு நேற்றெல்லாம் பூஜை பண்ணினேன் சார். நீங்க கண்டிப்பாய் ஜெயித்துடுவீங்க.''

ரேவந்த் மரியாதைக்கு 'தாங்க்யூ' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டான். அவன் விடாமல், ''இந்த எலுமிச்சம்பழத்தை உங்களிடம் வெச்சுக்குங்க சார்... உங்களுக்குப் பரந்த வெற்றியைத் தேடித்தரும் இது'' என்று எலுமிச்சம் பழத்தைத் தந்தான்.

ரேவந்திற்கு இத்தகையவற்றின் மேல் நம்பிக்கை இல்லை.

''ஆனால், என் திருப்திக்காக சார்''—பலவந்தப்படுத்தினான் அவன்.

அவன் அதை சாதாரணமாய் வாங்கிக் கொண்டு உள்ளே போனான்.

பத்தரைக்கு ஆட்டம் தொடங்கிற்று.

ரேவந்த் தன் உறையை எடுத்து வந்து அதிலிருந்த ஸ்டெப்பிரகாரம் ராஜாவுக்கும் மந்திரிக்கும் ஃபோர்க் போட்டான், தன் நைட்மூலம்.

பிரபாகர் வெகுநேரம் யோசித்துவிட்டுத் தன் மந்திரியை இழந்தான். வேறெந்த ஸ்டெப்புமே இல்லாதபோது அவன் அதற்காக ஏன் அவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டிருந்தான் என்று பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்குப் புரியவில்லை.

ரேவந்த் பிஷப்பால் திரும்பவும் செக் சொன்னான்.

பிரபாகர் தலையை இரு கரங்களாலும் பிடித்துக் கொண்டு காய்களைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். நேரம் முடியப்போகிறது.

எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று எழுந்திருந்த அவன், ''எனக்கு என்னவோ போலிருக்கு'' என்றான். யாருக்குமே அவன் சொன்னது புரியவில்லை.

பிரபாகர் தலையைப் பிடித்துக் கொண்டு, ''என்னை யாரோ ஹிப்னாடிஸ் பண்றாங்க. எனக்கு எந்த ஸ்டெப்பை எடுத்து வைக்கணும்னே தெரியலை'' என்றான்.

சிலர் அதற்குள் ரேவந்தை சந்தேகக் கண்ணுடன் பார்க்கத் தொடங்கினார்கள். எஎலோரும் என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் கிட்டே வந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

சூப்பர்வைசர் இடையே புகுந்து, ''மிஸ்டர் பிரபாகர்! நீங்க இந்தமாதிரி சாக்குச் சொல்லித் தப்பிக்க முடியாது. நீங்க ஆட்டத்தை தொடாரவிட்டால் தோற்றுவிட்டதாய் தான் அறிவிக்க நேரிடும், ஜாக்கிரத்தை'' என்று எச்சரித் தான்.

(உலகச் சாம்பியனான கார்போவுடன் அனைத்துலக சதுரங்கப் போட்டியில் கார்சினாய் ஆடிக்கொண்டிருந்த பொழுது ஆட்டத்திற்கு நடுவில் கார்சினாய் எழுந்து நின்று இதே போல தன்னை கார்போவ் ஹிப்னடிஸ் பண்ணுவதாய் புகாரிட்டான். அவன் பார்வை தோஷத்திலிருந்துத் தப்பிப் பதற்கு முன் வரிசையில் ஒரு கஷாய வஸ்திரமணிந்த சந்யாசியை உட்காரவைத்துக் கொண்டார்கள். ஆனாலும் இவற்றை சூப்பர்வைசர் ஒப்புக்கொள்ள மறுத்து, கார்போவே வெற்றி பெற்றதாய் அறிவித்தார்.)

ரேவந்த் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை பிரபாகரையே குழப்பத்துடன் பார்க்கத் தொடங்கினான்.

பிரபாகர் ரேவந்தைப் பார்த்து, '' நான் காயை எடுத்து வைக்கப் போகும் சமயம் பார்த்து அவன் ஏதோ மந்திரங் களை முணுமுணுக்கிறான். இல்லாவிட்டால் இவ்வளவு முட்டாள் தனமாய் பிஷப்பைக் கொணர்ந்திருப்பேனா?'' என்றான். அந்த இறுதி வார்த்தை மட்டும் உண்மையே! சதுரங்கத்தைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்திருப்பவர்கள்

கூட அந்தமாதிரி காவல் வைக்காமல் காயை எடுத்து வைத் திருக்கமாட்டார்கள். ஆனால் உண்மையாகவே ரேவந்தின் பிரபாவத்தால்தான் அவன் இவ்வாறு நடந்து கொண்டானா? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதைதான் நம் ஜனங் களுடையதும். அதுபோல் ரேவந்தை என்ன பதில் சொல்லப் போகிறாய் என்பதுபோலப் பார்த்தார்கள், சூப்பர்வைசர் மட்டும் ''நேரம் ஆயிண்டிருக்கு மிஸ்டர் பிரபாகர்'' என்று எச்சரித்தார்.

தான் இனி ஆடப்போவதில்லை என்று எழுந்து நின்று விட்டான் பிரபாகர்.

ரேவந்தும் எழுந்திருந்தான்.

பிரபாகரின் பார்வை ரேவந்தின் பாண்ட் ஜேபியின் மேல் படிந்தது. ''அதென்னது?'' என்று கத்திவிட்டான். எல்லோரும் அந்தப் பக்கமாய் பார்க்கத் தொடங்கினார்கள். ஜேபி உப்பியிருந்தது. ஒரு வினாடி ரேவந்திற்குக்கூட தன் ஜேபியில் என்ன இருந்ததென்று புரியவில்லை. தன்னையறி யாமல் வெளியே எடுத்தான் அதென்னவென்று பார்ப் பதற்காக.

அது எலுமிச்சம்பழம்.

குண்டூசி குத்தப்பட்டிருந்தது. நடுவில் சிவப்பாயிருந்தது

சூப்பர்வைசர் கூட ஒரு வினாடி திகைப்படைந்து விட் டார். இவைகள் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்து விட்டன.

பத்திரிகையாளர்கள் டெலிபிரிண்டரில் இச்செய்திகளை அனுப்புவதற்காக நோட்டுப் புத்தகங்களில் எழுதிக்கொண்டு அங்கிருந்து ஓட்டமெடுத்தார்கள். ஜனங்களிடையே சந்தடி எழும்பிற்று. ரேவந்தை வினோதப்பிராணியைப் போலப் பார்க்கத் தொடங்கினார்கள். யாரோ அவன் கையிலிருந்த

எலுமிச்சம்பழத்தை வாங்கி அதிலிருந்த குண்டூசியை வெளியே இழுத்தார்கள்.

பெரிய புயலுக்கு நடுவில் தன்னந்தனியாய் மைதானத்தில் நின்று கொண்டிருந்தாற் போலிருந்தது ரேவந்திற்கு. தன்னைச் சுற்றி என்ன நிகழ்ந்து கொண்டிருந்தது என்று புரியவில்லை அவனுக்கு. மனதை அழுத்திப் பிடித்தாற் போல சலனம் ஒடுங்கிவிட்டது. போர்க்களத்தில் தன்னைச் சேர்ந்தவர்களே திடீரென்று எதிர்த்துவந்து புறமுதுகில் குத்தி விட்டாற் போல.....

பிரபாகர் வெற்றியை சாதித்துக் கொண்டவனைப் போல இறுமாப்புடன் ஹாலுக்கு வெளியே வந்தான்.

ஹால் காலியாகிவிட்டது.

சதுரங்க மேஜைக்கருகில் ரேவந்தும் அவனுக்குத் துணையாய் நிசப்தமும் எஞ்சிநின்றன. இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த வேதனையானது மடைதிறந்தது. கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டான். அந்த விசாலமான ஆளரவமில்லாத ஹாலில் அவன் எவ்வளவு நேரந்தான் அவ்வாறு உட்கார்ந்திருந்தானோ தெரியாது.

தோளில் கைபடவே பனித்து கண்களுடன் நிமிர்ந்து பார்த்தான்.

போலன்ஸ்கீ!

போலன்கீ ஒன்றும் பேசவில்லை. தோளைத் தட்டி விட்டுச் சும்மாயிருந்துவிட்டான்; அந்த நேரத்தில் அந்த ஆறுதல் போதும். இரு விளையாட்டு வீரர்களும் அவ்வறையை விட்டு ஓசைப்படாமல் வெளியே வந்தார்கள்.

* * *

இப்பிரச்சனை அத்துடன் நின்றுவிடவில்லை. மறுநாள் ஸ்போர்ட்ஸ் செய்திகளெல்லாம் இதையே தாங்கி வந்தன. ''கிராண்ட் மாஸ்டரின் வெற்றிக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் ரகசியம்''—என்று.

''மந்திர சக்தியின் உதவியுடன் விஜயமடையும் கிராண்ட் மாஸ்டர்'' என்று.

சின்னாட்களுக்கு முன்னால் ஒரு ரஷ்யப் பத்திரிகை போலன்ஸ்கீயைப் பேட்டி கண்டு எழுதியிருந்த கட்டுரையின் தலைப்பைப் பிடித்துக் கொண்டன. ''அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை'' என்று போலன்ஸ்கீ சொன்னதால். அப்பொழுது போலன்ஸ்கீயை வெற்றி கொண்டது கூட இதே போல தந்திரத்தை கையாண்டுதான் போலும்!'' என்று விமரிசித்திருந்தன.

''போலன்ஸ்கீயே இப்படிச் சொன்னாரென்றால் அதற்குப்பின் நம்பாமல் எப்படி இருப்பது?'' என்றும் குறிப்பிட்டன.

தான் எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு சொல்ல நேர்ந்தது என்று எடுத்துச் சொல்ல போலன்ஸ்கீயும் இல்லை.

முதல் நாளே அவர் ஊருக்குப் போய்விட்டார். ஆனாலும் போலன்ஸ்கீயே நேரில் வந்து 'நான் அந்த உத்தேசத்தில் சொல்லவில்லை. ஏதோ வாய் வார்த்தையில் சொன்னது' என்று சொன்னாலும் நம்பத்தாயாராயில்லை ஜனங்கள். ரேவந்தின் கண்களில் உண்மையிலேயே ஹிப்னாடிக் சக்தி இருக்கிறதா இல்லையா என்ற வாதத்தில் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள்,

மறுநாள் மாலை உள்ளூர் விளையாட்டுச் சங்கத்தின் கூட்டம் நடக்கவிருந்தது.

''நம் நாட்டிலேயே இதுவரைக்கும் கிராண்ட் மாஸ்டர்களே இல்லை. முதல் ஆள் நீதான். அதனால் தான் இவ்வளவு ரகளையும் குழப்பமும்'' என்றான் ஜேம்ஸ்,

ரேவந்த் மௌனமாயிருந்தான்.

அவன் உரோமம் மண்டிக்கிடந்தது, சுமார் முப்பத்தாறு மணி நேரமாய் அவன் அதேபோல வாய்மூடி மௌனமாய் ஒருவித தியான நிலையில் ஆழ்ந்தாற் போல இருந்து வரலானான்.

ஜேம்ஸ் திரும்பவும் ஏதோ சொல்ல வாயைத் திறந்த போது கதவிற்கருகில் சந்தடி கேட்டது. சீதாராம் உள்ளே வந்து, ''என்னை மன்னிச்சுடுங்க. கள்ளமில்லாத உள்ளத்துடன் உங்களுக்குத் தந்த தேவி பிரசாதம் இவ்வளவு அனர்த்தங்களை விளைவிக்கும்னு கனவிலும் கருதலை'' என்றான் ரேவந்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு.

ரேவந்த் மௌனம் வகித்தான்.

சீதாராம் ஐந்துநிமிஷங்கள் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான். இவ்விஷயத்தில் தவறெல்லாம் தன்னுடையதுதான் என்றும், தான்தான் அந்த எலுமிச்சம்பழத்தைத் தந்ததாகவும் உலகத்திற்கு சொல்லுவதாய் உறுதி மொழிந்தான். பிறகு சீதாராம் மெல்ல,

''உங்க புத்தகம்...எனக்கு.....அதான்....அர்ப்பணம்'' என்று இழுத்தான்.

நண்பர்கள் இருவருக்கும் புரிந்து விட்டது—அவனுடைய வியாபாரத் தந்திரம்! 'நீ எனக்கு உதவு. நான் உனக்கு உதவறேன்' என்ற தத்துவம்!

ரேவந்த் கோபத்தை மிகப் பாடுபட்டு அடக்கிக்கொண்டு, ''கெட் அவுட்'' என்றான்.

சீதாராம் அவனை இளப்பமாய் பார்த்துக் கொண்டே வெளியேறினான்.

ஜேம்ஸ் சட்டென்று அறையை விட்டு வெளியே வந்து அவனை நெருங்கினான்.

''சீதாராம், ஒன்றும் எண்ணிக்காதே! ரேவந்த் மனம் சரியாயில்லைன்னு உனக்கும் தெரிந்ததுதான். அவன் சார்பில் நான் பேசறேன்'' என்றான்.

சீதாராமின் முகம் மலர்ந்தது.

''நிலைமையை நீங்க புரிஞ்சுக்கிட்டீங்க சார்'' என்றான்.

''எதிரியைத் தோற்கடிப்பதற்காக மந்திரித்த எலுமிச்சம் பழத்தைத் தரச்சொல்லி என்னை ரேவந்த் கேட்டார்ன்னு நீ பேப்பரில் ஸ்டேட்மென்ட் தந்தாயானால் பிறகு ரேவந்த் பிழைக்க முடியுமா? இந்தச் சின்ன விஷயத்தை ஏன் அவன் புரிஞ்சுக்கமாட்டேங்கிறான்?''

''நானும் அதைத்தான் சார் சொல்றேன். என் நல்ல குணத்தை அவர் புரிஞ்சுக்கமாட்டேங்கிறார். இப்பவே என்னைப் பேப்பர்காரங்க வந்து சூழ்ந்துக்கத் தொடங்கிட்டாங்க.''

''நீ மட்டும் அந்த எலுமிச்சம்பழ சங்கதி ரேவந்த்துக்குத் தெரியவே தெரியாது. நான்தான் அவனுக்கு நல்லது பண்ணனும்னு அதைத் தந்தேன்னு சொன்னாய்னு வை, ரேவந்த் இழந்த மதிப்பையெல்லாம் திரும்பிப் பெற்றுடுவான் இல்லையா?''

''ஏன் முடியாது?''

''இவ்வளவு உதவி பண்ணிய உனக்குத் தன் புத்தகத்தை அர்ப்பணம் பண்றதில் தப்பென்ன இருக்குன்னுதான் புரியலை எனக்கு. ரேவந்துக்குச் சொல்றேன்.''

''அப்படிச் சொல்லுங்க சார்.''

''அப்புறம் பிரபாகர் சும்மாயிருப்பானோ என்னவோ?... இப்ப நீ அவன் கட்சியில் இருப்பதாய் எண்ணிண்டிருக்கானே!'' சந்தேகத்தோடு கேட்டான் ஜேம்ஸ்.

''அவன் என்ன பண்ணிடுவான் சார் நம்பளை?''

''என்ன சார் இப்படிச் சொல்லிடீங்க? ரேவந்திடம் எலுமிச்சம்பழம் இருந்ததைத் தெரிஞ்சுக்கிட்டிருக்கான்னால் அவன் சாதாரண ஆளாய் இருந்துட முடியாதே!''

''சே, அதெல்லாம் ஒன்றுமில்லை. நான்தான் சார் சொன்னேன் அவனுக்கு.''

''அப்படின்னால் இதில் அவனுடைய கண்டுபிடிப்பு ஒன்றுமில்லை, நீ தான் சொல்லியிருக்கிறாய்னு சொல்லு.''

''ஆமாம், நான்தான் சொன்னேன்.''

அவ்வார்த்தையை முடிப்பதற்குள் அவன் கன்னம் அதிர்ந்தது. சீதாராம் கீழே விழுந்து எழுவதற்குள் மற்றொரு உதை வந்து விழுந்தது கன்னத்தில். தொடர்ந்து மாறி மாறி வேகமாய் வந்து விழுந்தன. முதலில் கண் முன் மின்னல் பளிச்சிட்டது. பிறகு அடியால் ஏற்பட்ட வலி மூளைக்கு எட்டிற்று. ஐந்து நிமிஷம் கழிவதற்குள் பட்டரையில் வேலை பண்ணும் தொழிலாளியைப் போல ஆகிவிட்டது அவன் உப்பிய, கன்றியகன்னங்கள். அவன் காலரைப்பற்றித்தூக்கிய ஜேம்ஸ் சொன்னான். ''...நான் ரேவந்தைப் போல மென்மையான மனமோ இளகிய உள்ளமோ படைத்தவனில்லை. அதை மறந்துடாதே.''

* * *

ஆபீசில் வேலை பண்ணிக் கொண்டிருக்கையில் மானேஜிங் டைரக்டரிமிருந்து அழைப்பு வந்தது ரேவந்திற்கு. பேனாவை மூடி வைத்து விட்டு அவன் அவர் சேம்பருக்குள் நுழைந்தான்.

''உட்காரு.''

ரேவந்த் உட்கார்ந்தான். அவர் ஓரிரு நிமிஷங்கள் மௌனமாயிருந்தார், பிறகு பேப்பர் வெயிட்டை எடுத்துச் சுற்றிக்கொண்டே பேசத் தொடங்கினார்.

'ரேவந்த்! 'பாட்டா' போன்ற பெரிய கம்பெனிகளும் பாங்குகளும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு உற்சாகமளிக் கின்றன. ஏர் போர்ட்டு, ரயில்வே போன்றவை ஹாக்கி விளையாட்டு வீரர்களைத் தம் சங்கங்களில் சேர்த்துக் கொள் கின்றன. ஆனால் எனக்குத் தெரிந்தவரையிலும் சதுரங்க ஆட்டக்காரர்களை யாருமே அந்தத் தகுதிக்காக தம் சங்கங் களில் சேர்த்துப்பதில்லை.....'' என்று நிறுத்தி விட்டுத் தொடர்ந்தார்.

''.....உண்மையைச் சொல்லணும்னால் இதில் எங்க சுயநலம் கூட கொஞ்சம் இருக்கு, மறுக்கலை நான். உதார ணத்துக்கு, பெனின்சுலா ப்ரொடக்டைப்பற்றி தினசரி பேப் பருக்கோ அல்லது பத்திரிக்கைக்கோ ஒரு விளம்பரம் தரணு மானால் சுமார் ஐம்பதாயிரம் செலவாகிறது. அப்படியிருக் கும்போது நீ நேஷனல் சாம்பியன்ஷிப்பில் வென்றால் குறிப் பிட்ட ரேவந்த் என்பவர் பெனின்சுலா ப்ரொடக்ட்சில் வேலை பண்ணுகிறார் என்று எல்லா பத்திரிக்கைகளும் எழுதும். வாசகர்களைப் பொறுத்தவரை இதுதான் நம் கம்பெனிக்கும் பெரிய நன்மை. அதாவது, இன்னொரு வித மாய் சொல்லப் போனால் உன் ஒவ்வொரு வெற்றியும் நம் கம்பெனிக்குச் சுமார் ஐம்பதாயிரம் மதிக்கத்தக்க வியாபார விளம்பத்தை மறைமுகமாய் சம்பாதித்துத் தருகின்றன என்று அர்த்தம். அதனால்தான் பெரிய பெரிய கம்பெனிகள் கிரிக் கெட் ஆட்டக்காரர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றன.

ரேவந்த் மௌனமாயிருந்தான்.

அவர் மெதுவாய் விஷயத்திற்கு வந்தார். ''...கேன் வாசிங் எவ்வளவு நன்றாய் வேலை பண்ணும்னு தெரியுமா ரேவந்த்? நீ இளைஞன். உனக்குத் தெரியாமலிருக்கலாம், ஆன்ட்டி கேன்வாசிங் (எதிர்ப் பிரசாரம்) சில சமயம் மிக அபாயத்தை விளைவிக்கிறது புரிஞ்சுப்பாய்னு நினைக்கிறேன். நௌ யூ கேன் கோ.....'' அளந்து மிகக் குறைவாய் பேசி னார் அவர். ஆனால் அதில் இருந்த அர்த்தங்கள் அனந்தம்.

ரேவந்தின் முகம் வாடிவிட்டது. கால்களுக்குப் பலத்தைக் கூட்டிக் கொண்டு அரும்பாடுபட்டு அறைக்குள் வந்து நாற்காலியில் சரிந்தான்.

இத்தனைப் பக்கத்திலிருந்தும் அலை வந்து தன்னைத் தாக்கும் என்று எதிர்பாக்கவில்லை அவன். உலகத்தின் மீதே ஏதோ புரியாத வெறுப்பு தட்டிற்று. ஏதாவது பண்ணித் தீரவேண்டும். தான் இந்த உலகத்தை விட்டு ஓடி விடவேண்டும், போனை எடுத்து அகௌண்ட் டிபார்ட்மென்டிற்குப் பேசினான். ''என் கிராஜுயடி அது இது எல்லாம் சேர்ந்து மொத்தம் எவ்வளவு வரும்னு சொல்றீங்களா, ப்ளீஸ்.''

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள்.

காகிதத்தை எடுத்து ராஜிநாமாக் கடிதம் எழுதத் தொடங்கினான்.

தன் வெறுப்பிற்கும் ஆத்திரத்திற்கும் வழிதன்மீதே தான் பழி வாங்கிக் கொள்வதுதான். நாலைந்து வரிகளே எழுதினான் தன்னை இத்தனை நாளும் நன்றாய் கவனித்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்து விட்டுக் கடிதத்தை முடித்தான்.

அவன் அதைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றபோது போன் ஒலித்தது.

''நீங்கதானா?'' என்றான் ரிசீவரை எடுத்து.

''ஐயாம் சாரி.''

இருவரும் நிசப்தமாயிருந்தார்கள் கொஞ்ச நேரம். அந்த மௌனத்தைச் சிதறடித்தபடி அவள் கேட்டாள். ''என்ன பண்றீங்க?''

அவன் தன் கையிலிருந்த காகிதத்தைப் பார்த்து விரக்தியாய் சிரித்து விட்டுத் தான் செய்த காரியத்தைச் சொன்னான்.

''உங்களுக்கு புத்தி பிசகிடுத்தா என்ன?'' என்றாள்.

அவன் சொல்லத் தொடங்கினான். இதயத்தின் அடி வாரத்தில் கரடு தட்டிக் கிடந்த மலை போன்ற வேதனை யெல்லாம் சிநேக பூர்வமான வாஞ்சையில் கருகிப் போய் பேச்சு வடிவில் கொட்டத் தொடங்கிற்று. அவள் தடை விதிக்க வில்லை. அவனைச் சொல்லி முடிக்கும்வரை அப்படியே விட்டுவிட்டாள். அவன் அவளுக்குச் சொல்லவில்லை. உலகத் திற்குச் சொல்லிக் கொண்டிருந்தான். தன் முன்னே ஜனங் கள் கூடியிருப்பதைப் போல ஊகித்துக்கொண்டு, கண்களை மூடிப் பேசிக் கொண்டிருந்தான்.

''உங்களுக்குத் தெரியாது. சதுரங்கம் என் வாழ்க்கை யில் எவ்வளவு தூரம் பின்னிப் பிணைந்துக் கிடக்குன்னு உங்களுக்குத் தெரியாது, என் எட்டாவது வயதில் இந்த கருப்பு வெளுப்புக் கட்டங்கள் என் வாழ்க்கையில் ஒரு பாக மாய் வந்து சேர்ந்து விட்டன. அதிலிருந்து இதுவரை ஒரு ரிஷியாய் ஒரு முனிவனாய் அதைக் கையாண்டு வருகிறேன். சதுரங்கத்தை நான் என்றுமே ஒரு விளையாட்டாய் பாவிக்க வில்லை. அது ஒரு பெரிய யாகம். நள்ளிரவில் விழிப்பேற் பட்டால் மேற் கூரையைப் பார்த்து நைட்களாகவும், ரூக்சு களாகவுமே நினைத்துப்பேன். இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டராக வேண்டுமென்ற தவிப்பில் பிற இளைஞர்கள் கவலையின்றி அனுபவித்து மகிழ்ந்த ஆனந்தத்தைக் கூட என் பன்னிரெண்டாம் வயதிலிருந்தே விட்டொழித்தேன். என் வாழ்க்கையையே பணயமாய் வைத்து உழைத்தேன். இதையெல்லாம் நான் பெருமையாய் சொல்லிக்கலை, என் வேதனையைச் சொல்லிக்கிறேன். இவ்வளவு பண்ணி, இத்தனைப் படியேறி இந்தச் சிகரத்தை வந்தடைந்துவிட்ட பிறகு இப்பொழுது.....என்னைத் தன் ஆள்காட்டி விரலால் கூட சுட்டிக் காட்ட அருகதையில்லாத அனாமத்துகளிடமிருந்து பேச்சுக் கேட்டுக்க வேண்டியிருக்கு ஆனாலும் பரவாயில்லை. ஆனால்.....என் வாழ்க்கையில்

ஒரு பாகமாய் பின்னிப் பிணைந்து விட்ட சதுரங்கத்தை என்னிடமிருந்து பிரிக்க முயற்சி பண்ணுகிறார்கள்...'' அவன் குரல் கம்மிற்று.

அவள் உடனே பதில் பேசவில்லை. அவன் வருத்தத் தைப் புரிந்து கொண்டாற்போலக் கொஞ்ச நேரம் மௌன மாயிருந்துவிட்டு பிறகு சொன்னாள்.

''ஏன் வருந்துகிறீர்கள்? உங்கக் கையில் கலை இருக்கு. அதால் ஒரு உதை கொடுப்பதொன்றும் பெரிய காரிய மில்லை.''

''உதை கொடுக்கறதா?'' சிரித்தான் அவன். நாளைக்கே உள்ளூர் விளையாட்டு வீரர்களின் கூட்டம் நடக்கவிருக்கிறது, அந்த மீட்டிங்கில் எல்லோருமாய் கூடி ரேவந்தின் கண்களில் ஹிப்னாடிக் சக்தி இருக்கா இல்லையான்னு தீர்மானிக்க ஒரு கமிட்டியை நியமித்தாலும் ஆச்சரியமில்லை.''

''அவங்களையெல்லாம் முந்திண்டு நீங்களே ஒரு அறிக்கை தந்துட்டால்?''

''என்னன்னு?''

அவள் சொன்னாள். அதைக்கேட்ட அவன் கையிலிருந்து போன் நழுவி விழுந்தது. மிகக் கஷ்டப்பட்டுத் தன்னை சமாளித்துக் கொண்டவன், ''உங்களுக்கு மூளை கீளை பிசகிடுத்தா?'' என்றான்.

அவள் சாதாரணமாய் சிரித்தாள்.

''நீங்க அந்தக் காரியத்தைப் பண்ண முடியும் ரேவந்த். எனக்குத்தெரியும். உங்களிடம் அந்த சாமர்த்தியம் இருக்கு, உங்கள் உழைப்பு, விடாமுயற்சி, இருபது வருட சதுரங்க ஆட்ட அனுபவம் இவைகளைக் குறைவாய் மதிப்பிட் டுடாதீங்க.''

''ஆனால்...கொஞ்சம் காரியம் கெட்டுட்டாலும் போதும், குடி முழுகிடும்'' அவநம்பிக்கையோடு சொன்னான் அவன்.

''என் திட்டம் கெடாது.'' என்றாள் அவள்.

அவனுக்கு வேண்டியது ஊக்கந்தான் என்பதை அவன் அறிவாள்.

மறுநாள் பேப்பர்களில் பெரிய கொட்டை எழுத்துக்களில் இவ்வாறு வந்தது.

'REVANTH ANNOUNCES BLIND—FOLD'


அச்செய்தி இவ்வாறு தொடர்ந்தது.

''இந்தியன் கிராண்ட் மாஸ்டர் ரேவந்தின் கண்களில் கவரும் சக்தி இருப்பதாயும், அதன் மூலந்தான் அவர் எதிரியின் ஆட்டத்தைச் சுலபமாய் வென்றுவிடுகிறார் என்றும் எதிர் ஆட்டக்காரர் பிரபாகர் புகார் தொடுத்திருந்தார். அதே சமயத்தில் ரேவந்திடம் மந்திரித்த எலுமிச்சம்பழம் இருந்ததாலும், அதற்கு சின்னாட்கள் முன்பு பிரபல ரஷ்ய விளையாட்டு வீரரான போலன்ஸ்கீ ஒரு பத்திரிக்கைக்குத் தந்த பேட்டியில் 'அந்த நேரத்தில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை' என்று சொல்லியிருந்ததாலும், நிறைய பேர் இப்புகாரில் உண்மையிருப்பதாய் நம்பி வந்தார்கள். தனக்கு அத்தகைய சக்திகள் கிடையாது என்பதை நிரூபித்துக் கொள்வதற்காகவும் கண்களின் மூலமாய் ஹிப்னாடிஸ் பண்ணும் சக்தியே தன்னிடம் கிடையாது என்பதை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டிக் கொள்வதற்கும் ரேவந்த் மிகத துணிச்சலான ஒரு முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

எதிரியான பிரபாகருடன் சேர்ந்து மொத்தம் ஆறு பேருடன் அவர் 'பிளெயிண்ட்போல்டு' ஆடப்போகிறார். கண்களுக்குத் துணியைக் கட்டிக் கொண்டு ஆடி, தன் கண்களில் அத்தகைய சத்தியிருந்தாலும் அவை இயங்காது என்பதை நிரூபிப்பார். இப்போட்டிக்கு ஒப்புகொள்ள

வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். உள்ளூர் விளையாட்டுச் சங்கம் ஏற்பாடு பண்ணியிருந்த கூட்டத்தில் பேசிய பிரபாகர், இப்போட்டியில் பங்கேற்றுக் கொள்ளத் தனக்கு சம்மதமே என்றும், ரேவந்தின் கண்களிலுள்ள சக்தியை மறைத்துவிட்டால் அவன் ஆட்டத்தை நாற்பது ஸ்டெப்புக்களில் வெட்டி வீழ்த்திவிடுவேன் என்றும் அறிவித்தார்.

'மிக ஆர்வத்துடன் பலரும் எதிர்பார்த்திருந்த இப்போட்டிக்கு போலன்ஸ்கீ சூப்பர்வைசராய் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார், இப்போட்டியில் ஜெயித்தவருக்கும் போலன்ஸ்கீக்குமிடையே சாதாரணமாய் இன்றைக்கு நடக்க விருந்த ஆட்டம் பத்து நாட்களுக்குப் பிறகு டெல்லியில் நடக்கும். உள்ளூர் விளையாட்டுச் சங்கத்தின் மெயின் ஹாலில் நாளைக்குப் பத்துமணிக்கு ஆரம்பிக்கப் போகும் இந்த உற்சாகமிக்க ஆட்டத்திற்கு சதுரங்கத்தில் நாட்டங் கொண்டவர்கள் மட்டுமேயின்றி நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''



மறுநாள் ஒன்பதரை மணிக்கே ஜனங்கள் இந்த 'பிளெயின்ட் ஃபோல்டை'ப் பார்க்க கூட்டங்கூட்டமாய் வந்து சேர்ந்து விட்டார்கள்.

ரேவந்திற்கு புத்தி பிசகிவிட்டது என்றுதான் எண்ணிக் கொண்டார்கள் எல்லாரும். கண்ணை மூடிக்கொண்டு ஒரு சதுரங்க போர்டிலிருப்பதை நினைவு வைத்துக் கொள்வதே

கடினம். அப்படியிருக்கும்போது, ஏழு போர்டுகளில் விளையாட்டை எப்படி ஞாபகம் வைத்துக் கொள்வான்?

சரியாய் பத்தடிக்கப் பத்து நிமிஷங்கள் இருந்தபொழுது ரேவந்தின் கார் ஆபீசுக்கு முன்னால் வந்து நின்றது ஜனங்கள் கும்பலாய் கூடி அவனையே வேடிக்கைப் பார்க்கத் தொடங்கினார்கள். அவன் யாருடனும் பேசவில்லை. மௌனமாய் தலை குனிந்தவாறு ஹாலுக்குள் அடியெடுத்து வைத்தான். போலன்ஸ்கீக்கு மட்டும் கை குலுக்கினான். போலன்ஸ்கீக்குத் தெரியும், அவனுடைய கவனத்தை சிதறடிக்கக்கூடாதென்று. அதனால் அவனுடன் எதுவும் பேசவில்லை,

தான் பண்ணப் போகும் சாகசம் சாதாரணமானதில்லை என்று தெரியும் ரேவந்த்துக்கு. தன்மானம், மரியாதை, சதுரங்கத்திலுள்ள தன் சாமர்த்தியம் இத்தனையும் இன்று தான் ஆடப்போகும் ஆட்டத்தின் மேல் ஆதாரப்பட்டிருக்கிறது என்றும் தெரிந்திருந்தது. நண்பர்கள் சிலர் கூட அவனை எச்சரித்தார்கள். பிரபாகரின் புகார் மூலம் ஒன்றும் நடந்து விடாதென்றும், அவன் தோற்றுவிட்டாற் போலதான் என்றும் சொன்னார்கள். ஆனால் ரேவந்த் தன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவில்லை. சதுரங்க நியதிப்படி தான் ஜெயித்துவிட்டாற் போல ஆனாலும், ஜனங்களுக்கிடையே வேரூன்றிப் போய்விட்ட இந்தச் சந்தேகத்தை வேரோடு களைந்தெரிந்து விட வேண்டும். அதுதான் உண்மையான வெற்றி.

அதற்காகத்தான் அவன் இந்த முயற்சியை மேற்கொண்டான், காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விட்டான். சுமார் ஒரு மணி நேரம் அறைக்குள் தனியாய் கண்மூடி அமர்ந்திருந்தான். அது தியான நிலை இல்லை. கலைஞர்களும் விளையாட்டு வீரர்களும் தம் தொழிலில் ஒன்றிப் போய் பண்ணும் ஒரு வித யாகம் அது. ரிஷிகளும் சன்யாசிகளும் குறிப்பிடும் தியான நிலையைவிட உயர்ந்தது. அவன்

தியானித்தது தெய்வத்தைக் கூட இல்லை தன்னிடமுள்ள சக்தியை! அதையே கடவுள் என்று சொன்னாலும் தடையில்லை அவனுக்கு.

சமுத்திர அலைகளைப் போல வந்து மோதிய யோசனைகளின் இரைச்சலும் ஓலமும் பத்து நிமிஷங்களில் தணிந்தது. மனம் அமைதியாயிற்று. பிறகு அது ஒரு நிலைக்கு வந்தது. வருடக் கணக்காய் பண்ணிய சாதனை அதற்கு உறுதுணை புரிந்தது. சரியாய் ஒரு மணி நேரத்தில் அவன் மனப்பலகையின் மேல் எட்டு குறுக்குக் கட்டமும் எட்டு நேர்க் கட்டமுமுடைய ஒரு சதுரங்க போர்டு முத்திரையாய் வந்து படிந்தது.

அந்த கவனம் பிசகிவிடாமல் அவன் அப்படியே கிளம்பி வந்திருந்தான்,

ஹாலுக்கு நடுவில் ஏழு மேஜைகள் இருந்தன. மூன்று ஒரு பக்கம், மூன்று எதிர்ப்பக்கமுமாய்...நடுவில் இன்னொன்று.

ஏழு மேஜையின் மேலும் ஏழு சதுரங்க போர்டுகள் இருந்தன.

நடுவிலிருந்த நாற்காலியில் பிரபாகர் உட்கார்ந்திருந்தான். எஞ்சிய ஆறு பேர்களும் ஜூனியர்கள் ஆயினும் சதுரங்கத்தில் கைதேர்ந்தவர்கள். இந்தப்பக்கம் மூவர் அந்தப்பக்கம் மூவராய் உட்கார்ந்திருந்தார்கள்.

போலன்ஸ்கீ ஏழுமுறை டாஸைப் போட்டான். ரேவந்த் நான்கு முறை சரியாய் சொல்லிவிட்டான்.

முதலிருவருடனும் கருப்புக் காயாலும் அடுத்த ஆட்டக்காரனுடன் வெள்ளைக்காயாலும், பிரபாகருடன் கருப்புக்காயாலும் எஞ்சிய மூவருடனும் வெள்ளைக் காயாலும் ஆட்டம் தொடங்க வேண்டுமென்று நிச்சயமாயிற்று.

பிறகு அவன் கண்களுக்குத் துணி கட்டப்பட்டது. பார்வையாளர்களிடையேயிருந்து இரண்டு மூன்று பேர் வந்து

அவனைப் பரிசோதித்தார்கள். பிளெயிண்ட் போல்ட் ஆரம்ப மாயிற்று.

ஹால் ஜனங்களால் நிரம்பி வழிந்தது. இடதுபக்கம் முதலாவதாய் உட்கார்ந்திருந்த ஆட்டக்காரன் தன் காயை முன்னுக்கு நகர்த்தினான்.

''போர்டு நம்பர் ஒன், என் கே பி 3'' என்று பெரிதாய் இரைந்து கத்தினான் போலன்ஸ்கீ. ரேவந்த் மூளையில் புதையுண்டுக் கிடந்த சதுரங்க போர்டு ஏழாய் பதிந்தது.

இப்பொழுது அவற்றின் மேல் காய்கள் நிரம்பி வழிந்தன. போலன்ஸ்கீ அதைச் சொன்னதும் போர்டு நம்பர் 'ஒன்'னில் வெள்ளைக்காய் முன்னுக்கு நகர்ந்தது. அவன் ''பி. கே 4'' என்றான் மெதுவாய் தன் ஆட்டமாய்.

போலன்ஸ்கீ அவன் சொன்னபடியே அவன் சார்பில் காய்களை நகர்த்திவிட்டு, இரண்டாவது மேஜைக்கருகில் போனான். அவனோடு கூட ரேவந்தும் நடந்தான்.

அவ்வாறு ஏழு பேருடன் ஏழு ஸ்டெப் போட்டு விட்டுத் திரும்பவும் முதல் ஆட்டக்காரனிடம் வரும்போது அவன் நைட்டை நகர்த்தியிருந்தான். முதலில் அவன் என்ன ஆடினான் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு ஸ்டெப் எடுத்து வைக்க வேண்டும்.

தன் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு ரேவந்த் இரண்டாவது ஸ்டெப்பைச் சொன்னான்.

இவ்வாறு ஆட்டம் தொடர்ந்தது.

சுமார் இரண்டரை மணி நேரங்கழிந்ததும் இரண்டு பேர் ஆட்டத்தைத் துறந்து எழுந்து போய்விட்டார்கள்.

நாற்பத்திரெண்டாவது ஸ்டெப்பில் மற்றொருவர் எழுந்து போய்விட்டார்.

ரேவந்த் நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் மூளையில் நான்கு சதுரங்க போர்டுகளும் தெளிவாய் தெரிந்து கொண்டிருந்தன. அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் படியான நிசப்தம் சூழ்ந்திருந்தது. அவன் ஒரு ரிஷியைப் போலிருந்தான். போலன்ஸ்கீயின் வார்த்தைகள் மட்டுமே அவன் மூளைக்கு எட்டிக் கொண்டிருந்தன. உடனுக்குடன் அவற்றுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தான். கண்களைத் திறந்து ஆடுபவர்களை விட அரைமணி நேரம் முன்கூட்டியே செய்து முடித்தான்.

அவனைக் கொஞ்சம் திணறடித்தவன் பிரபாகர் ஒருத்தனே. பிளெயிண்ட்ஃபோல்டில் அதிகக் காய்களை வெட்டக்கூடாது. போர்டில் அதிகக் காய்கள் இருக்க இருக்க, கண்மூடி ஆடும் விளையாட்டு வீரனை ரொம்பவும் குழப்பாது. அந்த டெக்னிக்கைதான் பின்பற்றிக் கொண்டிருந்தான் பிரபாகர். அவனையும் குறைவாய் மதிப்பிட்டுவிடக்கூடாது. இந்தியாவைச் சேர்ந்த மிகச் சொற்பமான மாஸ்டர்களுள் அவனும் ஒருவன், எஞ்சியவர்களுக்கென்ன வந்தது? இன்னும் அரைமணியில் செக் சொன்னதுமே ஆட்டத்தை விட்டு விலகிவிட்டார்கள்.

அப்புறந்தான் உண்மையான யுத்தமே தொடங்கிற்று. பிரபாகருக்கு ரேவந்தின் பலமெல்லாம் அவன் குதிரையிலேயே இருந்ததைப் புரிந்து கொண்டான். அதனால் தன் பிஷப்பையும் இரண்டு ரூக்சையும் தந்து ரேவந்தின் இரண்டு குதிரைகளையும் வெட்டித்தள்ளிவிட்டான். ஆனால் அதற்குப் பிறகும் எஞ்சிய காய்களை விட்டுக் கொடுக்கவில்லை அவன். ரேவந்தின் எஞ்சிய காய்களை 'பிக்' பண்ணினான்.

தன் நைட் போய்விட்டதும் ரேவந்த் தன் ராணியின் மேல் நம்பிக்கை வைத்தான். சரியாய் நான்கு ஸ்டெப்புகளில் அதை வெளிக் கொணர்ந்து எதிரி சைனியத்திற்குள் விட்டான். அவன் கண்களை மூடிக்கொண்டே பிரபாகர்

யத்து ஸ்டெப்களுக்குப் பிறகு என்ன ஆடுவான் என்பதை ஊகித்துக் கொண்டான். இந்தக் கலை பாபீஷர் ஒருத்தருக்கு மட்டுமே இருந்ததென்பது பிரசித்தம். அவர் பதினேழு ஸ்டெப்புகளுக்கு முன்பே எதிரியின் ஸ்டெப்களை நிறுத்தி வைத்துவிடவல்லவராம், பிரபாகருக்குத் தன் ராணியைத் தந்து அதை இழக்கும்படி நேர்ந்தது ரேவந்த்க்கு. அதற்குப் பிறகு ரேவந்த் தன் ரூக்சை களத்திற்கு இட்டுவந்து பிஷப்பைத் தள்ளினான். பிரபாகரின் பிஷ்ப்பும் ரேவந்தின் ரூக்சும் போய்விட்டன. அதற்குள் ஜனங்கள் படபடவென்று கரகோஷம் செய்தார்கள்.

ஆட்டம் இந்த நிலைக்கு வந்ததும் ரேவந்த் தன் ராஜாவை சுயமாய் முன்னுக்கு கொணர்ந்தான். அதுவரையிலும் ஒரே கோணத்தில் ஆடிக்கொண்டிருந்த பிரபாகர் போர்டைப் பார்த்துத் திடுக்கிட்டான். போர்டில் பாதிக்கு மேல் காலியாயிருந்தது. அதாவது ரேவந்தின் மூளை அவ்வளவு துல்லியமாய் இயங்கி வருகிறது என்பது புரிந்தது. அதுமட்டுமேயில்லை, ரூக்சின் உதவியுடன் ராஜாவை சுயமாய் எடுத்து வந்திருக்கிறான். அவனைவிட ரேவந்திற்கு ஒரு ரூக் அதிகமாயிற்று.

மேலும் நான்கு ஸ்டெப் ஆடியதும் பிரபாகருக்கு ஒரு விஷயம் புரியத் தொடங்கிற்று. ரேவந்த் பிரபாகரின் நைட்டை வெட்டித்தள்ளிவிட மாட்டான். மேஜையின் மேலிருந்த நைட்ஸுகள் எதற்குமே பிரயோஜனமில்லை. மற்றொரு பக்கம் ரேவந்தின் ரூக் சைனியத்தை துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தது. மேஜை காலியாகிக் கொண்டிருந்ததைக் கவனிக்காமல் போனதால்தான் தான் எப்பொழுதோ சகதியில் வீழ்ந்து விட்டான்.

இனி ரேவந்த் கண்களுக்குத் துணி கட்டிக்கொண்டு ஆடினாலும் ஒன்றுதான் நான்கு கண்களை விழித்துக் கொண்டு ஆடினாலும் ஒன்றுதான். தான் எவ்வாறு ஆட வேண்டுமென்று எண்ணியிருந்தானோ சரியாய் அதே விதத்

தில் தன்னைக் கொண்டு ஆடித்தீர்த்து விட்டான் ரேவந்த். தன்னைக் கொண்டே காய்களைத் துப்புறவாக்கிவிட்டான். இனி ஆட்டத்தைத் தொடர்ந்து லாபமில்லை. இன்னும் நான்கு ஸ்டெப்களில் ராஜாவையும் நைட்டையும் ஃபோர்க் பண்ணிவிடப்போவது உறுதி.

அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். இன்னும் ஐந்து நிமிஷம் இருந்தது, நான்கு ஸ்டெப்களைப் போடுவதற்கு.

இன்னும் ஆடி நேரத்தை வீணாக்கத் தேவையில்லை. விளையாட்டைத் தொடர்ந்தால் முட்டாளாவது திண்ணம். எழுந்து நின்று ''நான் ஆட்டத்தை விட்டு நீங்கிக்கறேன்'' என்றான்.

அவன் தொலைவில் நின்றிருந்ததால் அவன் சொன்னது ரேவந்திற்குக் கேட்கவில்லை. முதலில் கேட்டது காதைத் துளைக்கும்படி வந்து மோதிய கரகோஷந்தான். பிறகு போலன்ஸ்கீ ரேவந்தின் கண்கட்டை அவிழ்த்து விட்டு, ''கங்கிராஜுலேஷன்ஸ் மை பாய்'' என்றான். அப்பொழுதுதான், தான் வென்ற சங்கதி ரேவந்திற்குப் புரிந்தது. அதற்குள் ஜனங்கள் அவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள். வெகு நேரமாய் மூடிக் கொண்டிருந்ததால் கண்கள் எரிச்சலடைந்தன-தண்ணீர் வழிந்தது ஆயினும் அது எரிச்சலால் வழிந்த நீரில்லை, ஆனந்தக் கண்ணீர். என்ன எண்ணிக் கொண்டானோ தெரியாது; பிரபாகர்கூட வந்து கைகுலுக்கினான். கேமராக்கள் பளிச்சிட்டன.

''மிகப் பெரிய வெற்றியை சாதித்துட்டாய்'' முறுவலுடன் மொழிந்தான் போலன்ஸ்கீ.

''மாஸ்டர், இந்த வெற்றி பெரிதுதான். ஆனாலும் ஏழு பேருடன் பிளெயிண்ட்:போல்ட் சாதாரணந்தானே? உண்மையைச் சொல்லுங்க, இந்த மாதிரி பந்தயம் ஆட நேர்ந்தால் உங்களால் முப்பது பேருடன் கூட பிளெயிண்ட் ஃபோல்ட் ஆட முடியாதா?''

போலன்ஸ்கீ ரேவந்த்தை உற்றுப் பார்த்தான்.


ரேவந்த் சொன்னது உண்மையே, உலகச் சாம்பியன் கார்போல் எழுபது பேருடன் ஒரு முறை கண்களுக்குத் துணி கட்டிக் கொண்டு ஆடியது பிரசித்தமானது. கலை என்பது உயர்ந்தது, அதனால்தான் கலைஞர்களுக்கு என்றுமே சந்தோஷமிராது. சாதிக்கச் சாதிக்க இன்னும் சாதிக்க வேண்டியது இருப்பது போலவே இருக்கும். அந்த தவிப்பில் சந்தோஷமும் வேதனை நிரம்பியதாய்தான் இருக்கும்.

டி. வி. கேமரா நிசப்தமாய் சுழன்று கொண்டிருந்தது. ஆப்டோகிராப்பில் கையெழுத்திட்டுக் கொண்டே அவன் மெல்ல யோசிக்கலானான். வெற்றிக்கும் தோல்விக்கும் வித்யாசம் மிகச் சொற்பமே. ஒரு சிறிய தப்பு ஸ்டெப் எடுத்து வைத்துத் தோல்வியடைந்திருந்தால் இந்த ஜனங்கள் இவ்வாறு சந்தோஷ ஆரவாரம் பண்ணுவார்களா? மாறாக ஏளனமாய் கேலி பண்ணிவிட்டுப் போயிருப்பார்கள்! குறைந்த பட்சம் தன் முயற்சியைக் கூட புரிந்து கொண்டிருப்பார்களா?

அந்த நேரத்தில் அவனுக்கு ஒரு வினோதமான உணர்ச்சி தோன்றிற்று. அவன் ஒரு உயரமான சிகரத்தின் மேல் நின்று கொண்டிருக்கிறான். வெற்றிக்கும் தோல்விக்கும் அதீதமான ஒரு உணர்ச்சி முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. ரிஷியைப் போல அவன் மேலும் மேலும் ஏறிப்போய்க் கொண்டேயிருக்கிறான். சூரிய கிரணங்களின் தாக்கலுக்குக் கைகளை முகத்திற்கு முன்னால் மறைத்துப் பொத்திக்கொண்டே.....ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவன் முன்னேறிப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தவாறிருக்கிறார்கள்.

இதெல்லாம் வினாடி நேரந்தான், அடுத்த வினாடியே அவன் சாதாரண மனிதனாகி விட்டான். வினாடி நேரத்து

அந்த உணர்ச்சி அனுபவத்தில் கர்வமோ, அகம்பாவமோ இம்மியும் இல்லை. ஆனால் வாழ்க்கையின் பெரிய சத்தியம் அடங்கியிருந்தது.



''கங்கிராஜுலேஷன்ஸ்.''

''உண்மையில் நான் தான் உங்களுக்குச் சொல்லணும். அந்த நேரத்தில் உங்களைப் பார்க்கனும்னு எப்படித் துடித்தேன் தெரியுமா? எல்லோரும் என்னை வாழ்த்துமபோது நான் நினைத்தேன், இந்த வாழ்த்தெல்லாம் உங்களைத் தான் சேரும்னு'' என்றான் ரேவந்த் உணர்ச்சித் துடிதுடிக்கும் குரலில்.

''நீங்க அனாவசியமாய் என்னை உச்சாணிக்குத் தூக்கி வைத்துப் புகழுறீங்க.''

''இல்லை, நீங்க மட்டும் அந்த சமயத்தில் எனக்கு தைரியமளிக்காமலிருந்திருந்தால் என் கலையே அன்றோடு முடங்கிப்போயிருக்கும். எங்கோ படித்திருக்கிறேன், ஆண்களின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாடியும் ஒரு பெண் இருப்பாள் என்று! ஆறுதலளிப்பதைவிட மனத்துணிச்சலை அளிப்பதுதான் பெரிது. நீங்க அதைத்தான் பண்ணினீங்க. உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை எனக்கு.''

''சிநேகிதர்களுக்கிடையே நன்றி எதற்கு?...உங்களிடம் அந்த சக்தி இருந்தது. எனக்குத் தெரிந்ததால் என்னால்

முயன்ற உற்சாகமளித்தேன். நீங்க ஜெயித்தீர்கள். அவ்வளவு தான்...நீங்க இந்த வெற்றி பெற்ற தருணத்தில் உங்களுக்கு ஒரு சிறிய பரிசு கொடுத்தனுப்பறேன். வாங்கிக்குங்க'' என்றாள்.

''அதென்ன?''

''ஹஹ்ஹும், சொல்லமாட்டேன், அது சஸ்பென்ஸ்.''

''உங்களிடம் ஒவ்வொன்றும் சஸ்பென்சாயிருக்கு! போன் நம்பர், உங்க விலாசம்...''

''என் தப்பில்லை. நான் குறிப்புத்தந்துண்டே வந்தேன். நீங்கக் கண்டு பிடிக்கலை.'' சரி, இன்னும் பத்துநாள கூட கெடு இல்லையே, என்னைக் கண்டு பிடிக்க என்ன முயற்சி எடுத்துண்டிருக்கீங்க? உங்களைப் பார்த்தால் எந்த முயற்சியும் எடுத்துண்டிருப்பதாய் தோணலையே!''

''இல்லைன்னு எப்படித் தீர்மானிச்சுட்டீங்க? 'ஐ ஹேட் நதிங் ஃபர் சிக்ஸ் என்றால் என்ன அர்த்தம்னு யோசிச்சிட்டிருக்கேன். இப்பத்தான் ஞாபகம் வரது. உங்களைக் கண்டு பிடிக்க இன்னும் பத்து நாள் கெடு இருக்கு இல்லே, அதில் கடைசி இரண்டு நாளும் நான் டெல்லியில் இருப்பேன்.''

''அப்படின்னால் இன்னும் இரண்டு நாள் கூடுதலாய் டைம் தரச் சொல்றீங்களா?''

''சேச்சே! அதெல்லாமில்லை. சும்மா சொன்னேன், அவ்வளவுதான். ஆனாலும் பத்துநாள் எதுக்கு? இன்னும் ரெண்டு மூணு நாளிலேயே கண்டு பிடிச்துடுவேன். உங்க டெலிபோனில் முதலிரு நம்பர்களும் இப்பவே தெரிந்து போயிடுத்து''

''என்ன?''

''ஒன்று, எட்டு.''

''கரெக்ட். எப்படிக் கண்டுபிடித்தீங்க?''

''இரண்டாவது முதல் நம்பரை விட எட்டு அதிகம்னீங்க இல்லையா?''

''குட்...மூன்றாம் நாலாம் நம்பரையும் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்'' என்றான் உற்சாகத்துடன் முன்னுக்கு வந்து.

''மூன்றாம் நாலாம் எண்களைவிட அவற்றைத் திருப்பிப் போட்டால் வரும் நம்பர் பத்து மடங்கு அதிகம்.''

''உம், அப்புறம்?''

''அப்புறம் இன்னும் என்ன இருக்கு?''

''வேறெதுவுமே இல்லையா?'' அவன் உற்சாகமிழந்தான். ''சாதாரணமான ஐ.க்யூ இருப்பவங்களுக்கு இந்தக் குறிப்புப் போதும், மூன்றாவது நம்பரைக் கண்டுப் பிடிக்க'', ரேவந்திற்குச் சட்டென்று ஏதோ புரியவே, ''ஓ, மூன்றாவது நம்பர் என்னன்னுத் தெரிந்துடுத்து'' என்றான்.

''இன்னும் அந்த 'இருட்டில் கொடுத்த முத்தம்' கதையைக் கூடச் சொல்லிட்டேனானால் போன் நம்பர் முழுவதுமே தெரிந்துடும்'' என்றாள்.

''ப்ளீஸ்...ப்ளீஸ், அதென்ன கதை, சொல்லுங்களேன்'' ரேவந்த் கெஞ்சினான்.

''ஒரு ஊரில் ஒரு காலேஜ் இருந்ததாம். அந்த காலேஜிப் பெண்கள் சிலர் 'காலேஜ் தினம்' முடிவடைந்த பிறகு ஒரு ஹாலில் பார்ட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே ஒரேயொரு பையன் கூட இருந்தானாம். அப்பாவியாய் பால்வடியும் கன்னங்களுடன் அசல் ரேவந்தைப் போல...'

ரேவந்த் பற்களைக் கடித்துக் கொண்டான். ''முதல்ல கணக்கைச் சொல்லுங்க'' என்றான். அவள் சிரித்துவிட்டு

''அப்புறம் என்ன? அதற்குள் மின்சாரம் போயிடுத்தாம். அந்த இருட்டில் ஒவ்வொரு பெண்ணிற்கும் ரேவந்தை முத்தமிடணும்போலத் தோன்றிவிட்டது'' என்றாள்.

''ரவீந்திர சரோவரைப் போலன்னு சொல்லுங்க?''

''ஆங் அப்படித்தான், ஆனால் அந்த இருட்டில் ரேவந்த் எங்கேயிருந்தான்னு எப்படிக் கண்டுப்பிடிப்பது? முடியாதில்லே?''

''ஆமாம், முடியாது.''

''அதனால் அவங்களில் லீடரைப் போலிருந்த ஒரு பெண், சிநேகிதிகளைப்பார்த்து, ''ஏய், நீங்கள்லாரும் அப்படியே அசையாமல் நில்லுங்க. எல்லோரையும் வரிசையாய் முத்தமிட்டுவிட்டு நான் ஹாலை விட்டுப் போயிடறேன்'' என்றாளாம்.

''மை காட்! ஒரு பையனை முத்தமிடுவதற்காக தன் இனத்தையே முத்தமிட்டுக்கும் முயற்சி வரையிலும் போயிருக்கிறாள்!''

''பின்னே என்ன பண்ணுவாள் பாவம்? ரேவந்தின் கன்னங்களுக்கு அவ்வளவு டிமாண்ட் இருக்கும்போலிருக்கு!''

ரேவந்த் கோபமாய் போனை வைக்கப்போனவன் கணக்கு சுவாரசியமாயிருந்ததால், அவ்வாறு பண்ணாமல் ''உம் அப்புறம் என்னவாச்சு?'' என்று கேட்டான்.

''அந்தப் பெண்ணைப் பார்த்து இன்னொருத்தி கூட அதேபோல பண்ணிட்டு வெளியே வந்துட்டாளாம். அரை மணிக்குள் ரேவந்த் மட்டுமே சிவந்து கன்றிவிட்டக் கன்னங்களுடன் அவ்வறையில் எஞ்சி நின்றானாம், பாவம்!''

''அதற்குப் பிறகு?''

''வெளியே ஃபீயூஸ் போட்டுக் கொண்டிருந்த எலெக்ட்ரீ ஷியனுக்கு அறையிலிருந்து 1081 தடவைகள் 'இச்' என்று சப்தம் கேட்டதாம்!''

''மை காட்!''

''அவ்வறையில் எவ்வளவு பேர் பெண்கள் இருந்தார் களோ அதுதான் என் கடைசி இரண்டு எண்கள்'' என்று போனை வைத்துவிட்டாள் அவள்.

* * *

''ரேவு! உன்னை யாரோ தேடிண்டு வந்திருக்காங்க பாரு'' என்ற தாயின் வார்த்தையைக் கேட்டு வெளியே வந்தான் ரேவந்த். ஹாலில் ஒரு காக்கியுடை அணிந்திருந்த ஆள் நின்றிருந்தான். ஒரு பெரிய பாக்கெட்டையும் சீட் டொன்றையும் நீட்டினான். சீட்டில், ''பரந்த வெற்றிக்கு அடையாளமாய் வாழ்த்துக்களுடன்'' எழுதியிருந்தது அதற்குக் கீழே சிறிய எழுத்துக்களில், குறிப்பு!—''உங்கள் துப்பறியும் அறிவையும், கண்டுபிடிப்பையும் தயவுசெய்து இந்த அப்பாவிப் பிராணியின் மேல் உபயோகிக்காதீர்கள்'' என்று எழுதியிருருந்தது- அவனுக்குச் சிரிப்பு வந்தது.

காகிதத்தை மடித்து வைத்துவிட்டு, ''இதென்ன பாக்கெட்?'' என்று கேட்டான். ஆர்வத்துடன் அவன் பாக்கொட்டைப் பிரித்து, ''உங்க டெலிபோன் எங்கே சார் இருக்கு?'' என்று கேட்டான். ரேவந்த் அவனைத் தன் பெட்ரூமுக்கு அழைத்துச் சென்றான்.

அந்த பாக்கெட்டில் சிறிய எலெக்ட்ரானிக் கால்குலேட் டரைப் போல ஒன்றிருந்தது. அதைப் போனில் பொறுத்தி விட்டுச் சொன்னான் அவன். ''இதில் நூறு பட்டன்கள் இருக்குசார். உங்க சிநேகிதர்களுக்கும், பரிச்சயமானவர் களுக்கும் போன் பண்ண நேர்த்தால் இனி நீங்க நம்பரை டயல் பண்ண வேண்டாம். உங்களுக்குத் தேவையான

நூறு நம்பர்கள் வரையிலும் இதில் பொறுத்தி வைத்து விடலாம். நீங்க பட்டனை அழுத்தினால் அத்த நம்பரை இந்த மிஷினே டயல்பண்ணி உங்களுக்குத் தந்து விடும். ஒருகால் மறுமுனையிலுள்ள போன் எங்கேஜிடாயிருந்தால் அந்த நம்பர் வரும் வரையிலும் இது அப்படிப் பண்ணிண்டே யிருக்கும். இது உங்க நேரத்தைப் பாதுகாப்பதோடு கூட எஸ்.டி.டி. பண்ணக்கூட ரொம்பவும் உதவுகிறது.'' என்று இன்னொரு கருவியை எடுத்து அடுத்த பக்கம் பொறுத்தினான்.

''நீங்க வீட்டிலில்லாத போது இந்த பட்டனை அழுத்தி விட்டுப் போய் விட்டால் போதும், உங்களுக்கு வெளியே யிருந்து யாராவது போன் பண்ணினால் இதோ இப்படிக் கேட்கும் அவங்களுக்கு'' என்று பட்டனை அழுத்தினான். ஒரு பெண்ணின் குரல் கேட்டது. ''எக்ஸ்யூஸ்மி சார்! ரேவந்த் வீட்டிலில்லை. அவருக்கு நீங்க ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லுங்கள்.''

'பட்' டென்ற ஓசையுடன் டேப் சுழலத் தொடங்கிற்று. மெகானிக் டேப்பை நிறுத்திவிட்டுச் சொன்னான்.

''நீங்க வீடு திரும்பியபிறகு இந்த டேப்பை திருப்பிப் போட்டுக் கேட்டால் உங்களுக்கு யார் யார் போன் பண்ணி என்ன சொன்னாங்கன்னு புரியும்.''

ரேவந்த் வியப்புடன் அந்தக் கருவியைப் பார்த்தான். விஞ்ஞானந்தான் எவ்வளவு முன்னேறி விட்டது! இத்தகைய கருவி இருப்பதாய் எங்கோ படித்திருந்தான். இப்பொழுது இதைக் கண்கூடாய் இந்தியாவில் அதுவும் தன் வீட்டில் பார்க்கும்பொழுது ஆச்சரியந் தாங்கவில்லை.

''யார் அனுப்பிச்சாங்க இதை?''

''அம்மா அனுப்பினாங்க சார்.''

ரேவந்த் ஆர்வத்துடன், ''அதான் யாருங்கறேன்?'' என்று கேட்டான். அவன் ஜேபியிலிருந்த இன்னொரு சீட்டை எடுத்துத் தந்தான். அதில் இவ்வாறு இருந்தது.

''நீங்க இப்படிக் கேட்பீங்கன்னு தெரியும். அதனால் தான் இக்காகிதத்தையும் அனுப்புகிறேன்.''

படித்து விட்டு ரேவந்த் நிமிர்ந்து பார்த்தபொழுது மெகானிக்கை அங்கே காணோம்.

* * *

''கங்கிராஜுலேஷன்ஸ்.''

''தாங்க்யூ.''

''கங்கிராட்ஸ்.''

''தாங்க்யூ.''

ரேவந்த் தன் சேம்பருக்குள் வந்து உட்கார்ந்த ஐந்து நிமிஷங்களில் மேனேஜிங் டைரக்டரிடமிருந்து அழைப்பு வந்தது. என்னவோ ஏதோ என்றெண்ணிக் கொண்டே போனான்.

''வா. உட்கார்'' என்றார் அவர். ரேவந்த் எதிரேயிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''கங்கிராஜுலேஷன்ஸ்! பேப்பரெல்லாம் உன்னைப் பற்றி ரொம்பப் புகழ்ந்து போட்டிருந்ததைப் பார்த்தேன். உண்மையாகவே பாராட்ட வேண்டிய விஷயந்தான் அது.''

ரேவந்த் ஆச்சரியமடைந்தான். நான்கு நாட்களுக்கு முன்னால் தன்னை மறைமுகமாய் ராஜினாமா பண்ணச் சொன்னவர் இவர்தானா? இப்பொழுது எதுவுமே நிகழாதது போல எத்தனை சாதாரணமாய்ப் பேசுகிறார்.....அதனால் தான் இவர்களால் இந்த வியாபாரத்தில் முன்னுக்கு வர முடிந்திருக்கிறது!

''இரண்டு மூன்று பேர்ட் ஆஃப் டைரக்டர்கள் போன் பண்ணி உன்னைப்பற்றி விசாரித்தாங்க. வர மீட்டிங்கில் உன்

புகழுக்கு ஒரு சான்றாய் இரண்டு இன்க்ரிமென்ட்டுகளைத் தரச் சொல்லப் போறேன்.''

''தாங்க்யூ சார்'' என்று எழுந்து கைக்குலுக்கி விட்டு வெளியே வந்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'வெற்றியே நீ வந்துவிட்டால் உச்சாணிக்கு ஏற்றி வைத்து விடுகிறாய்...போகும் போதோ அதள பாதாளத்தில் தள்ளி விட்டுப் போய் விடுகிறாய். இது உனக்கே அடுக்குமா!.

அவன் தன் சேம்பருக்குள் நுழைந்தபொழுது அங்கே ஜேம்ஸ் உட்கார்ந்திருந்தான். எப்பொழுதும் சிரித்துக் கொண்டே கலகலப்பாயிருக்கும் அவன் முகம் இன்று ஏதோ உணர்ச்சிப் போராட்டத்தில் சிக்குண்டாற்போல இருந்ததால் ''என்ன விசேஷம்?'' என்று கேட்டான் ரேவந்த்.

ஜேம்ஸ் கைவிரல்களைப் பார்த்தபடி, ''ரேவந்த் உன்னோடு ஒரு விஷயம் பேசணும்'' என்றான். அவன் குரலில் தென்பட்ட தீவிரத்திற்கு ஆச்சரியமடைந்த ரேவந்த், ''என்ன, ஏதாவது தகறாறா?'' என்று கேட்டான்.

''ஆணின் வாழ்க்கையில் கல்யாணம் என்பதே ஒரு தகறாறுன்னு நினைச்சுக்கிட்டால், அதுதான் நிகழ்ந் திருக்கு.''

ரேவந்திற்குப் புரியவில்லை. ''அப்படின்னால்?'' என்று கேட்டான்.

''நாம்ப ஒரு பெண்ணோடு போனில் பேசினோமே ஞாபகமிருக்கா? அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கலாம்னு நினைக்கிறேன்'' மெல்லச் சொன்னான்.

ரேவந்த் அதிர்ந்தவனாய், ''வாட்?'' என்றான் கனவி லும் கருதியிராததைக் கேட்க நேர்ந்தாற்போல. ''எந்தப் பொண்ணு? பத்து நாளைக்கு முன்னால் மாலிஷங் கால் எப்படிப் பண்ணனும்னு போனில் சொன்ன அந்தப் பொண்ணா?'' கேட்டான்.

''ஆமாம், அந்தப் பொண்ணுதான். அந்தப் பெண் பேர் சுலோச்சனா, ராஜ சுலோச்சனா.''

''அவளை நீ எப்படி சந்தித்தாய்?''

''முந்தாநாள் இரவு.''

''முந்தா நாள் சந்தித்துட்டு அதற்குள் இன்றைக்குக் கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானித்துட்டாயா?''

''ஏன்? சந்தித்த இரண்டு மூன்று வருஷங்கள் வரையிலும் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு ரூல் ஏதாவது இருக்கா?''

''அதில்லை. ஒன்றுமே தெரிந்துக்காமல் கல்யாணமா?''

''நீங்கள்ளாம் வாழ்க்கைக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் தரீங்கன்னுதான் புரியலை...கவர்ச்சி, ஆஹா ஓஹோ என்று புகழ்வது, ஒருவரையொருவர் புரிந்துப்பது இதெல்லாம் 'ட்ராஷ்' என்பது ஏன் அபிப்பிராயம். அது மட்டுந்தானா வாழ்க்கை என்பது? கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரு பக்கம்! அவ்வளவுதான். உனக்குத்தான் தெரியுமே நான் எதையாவது நம்பிட்டால் அ தை க் கடைப்பிடித்தே தீருவேன்னு.''

''அப்படி எந்த விதத்தில்தான் அவள் உன்னைக் கவர்ந்துட்டாள்?''

''இதில் கவர்ச்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏதோ ஒன்று நடக்கனும். அந்த விதத்தில் இப்படி நடந்துடுத்து, அவ்வளவுதான்.''

''அதான், எப்படி நடந்தது?''

அவன் சொல்லத் தொடங்கினான்.



விசாலமான வீதி வழியே அவன் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். முனைத்திருப்பங்களில் அது சாய்ந்தபோதெல்லாம் அவளுக்கு பயமாயிருந்தது. பிடித்துக் கொள்ள எதுவுமேயில்லை அவன் இடுப்பைத் தவிர.

அவன் மோட்டார் சைக்கிளை ஒரு பெரிய ஓட்டலுக்கு முன்னால் கொணர்ந்து நிறுத்தினான்.

இருவரும் ஒரு கேபினில் வந்து உட்கார்ந்ததும் அவன் டின்னருக்கு ஆர்டர் தந்தான். ஸ்பீக்கரிலிருந்து லேசாய் சங்கீதம் வெளி வந்து கொண்டிருந்தது. அவன் ஏதாவது பேசுவான் என்று எதிர் பார்த்தாள். ஆனால் அவன் அவளோடு பேசுவதைக் காட்டிலும் சங்கீதம் கேட்பதிலேயே ஒன்றிப்போய், மோட்டார் சைக்கிள் சாவியால் மேஜைக்கு மேல் பாட்டிற்கேற்ப தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடிக்கும்போது மணி பத்தடித்து விட்டிருந்தது.

''நீங்க எங்கே இருக்கீங்க?'' என்று கேட்டான் பில்லுக்குப் பணம் தந்து கொண்டே. அவள் சொன்னாள்.

அவள் வீட்டை நோக்கிப் போகுங்கால் மெயின் ரோடின் பக்கத்து சந்திலிருந்த மாடியறையைக் காட்டி ''அதோ அது தான் நான் இருக்கும் அறை'' என்றவன் சட்டென்று யோசனை வந்தாற்போல ''வாங்க என் அறையை வந்து பார்த்துட்டுப் போகலாம்'' என்று மோட்டார் சைக்கிளை சர்ரென்று அந்த பக்கமாய் திருப்பினாள்.

அவள் ''இவ்வளவு ராத்திரி நேரத்தில் எதற்கு?'' என்று தடை சொல்லப் போனாள்.

அவன் பிரேக்கைப் போட்டு விட்டு, ''எங்க வீட்டுக்காரர் ஒன்றும் நினைச்சுக்க மாட்டாருங்க'' என்று உள்ளே நடந்தான்.

தன் ஒருத்தனைப் பற்றி மட்டுமே பிரச்சினைகளைச் சீர் தூக்கிப் பார்க்கின்ற அவன் குணம் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

அவன் பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான். அவன் அறை ஒரு மியூசியத்தைப் போலிருந்தது. இங்க் பாட்டில்கள், பிரஷ்கள், டிராயிங் போர்டுகள் தென்பட்டன. ஜன்னல் கதவுகளை சரியாய் சாத்தாததால் டிராயிங் பேப்பர்கள் பறந்து வந்து தரையில் கிடந்தன.

கயிற்றுக்கட்டிலில் கயிறு தொய்ந்து தாழ்ந்திருந்தது. தலையணை இருக்க வேண்டிய இடத்தில் நாலைந்து புத்தகங்கள் இரைந்து கிடந்தன. சுவற்றில் ஸ்பானிஷ் கிதார் தொங்கிக் கொண்டிருந்தது.

''காபி குடிக்கிறீங்களா?''

''இப்பத்தானே சாப்பிட்டோம்?''

''பரவாயில்லை'' என்று பிளாஸ்கிலிருந்த ஆறிய காபியை ஸ்டவ்வில் வைத்தான். அவள் பார்வை அங்கிருந்த பெரிய போட்டோவின் மேல் படிந்தது. அதன் மேல் எழுதியிருந்த பெயரைப் படித்து விட்டு, ''யார் கிரெகரிபெக் என்பது?'' என்று கேட்டாள்.

''அமெரிக்காவில் பெரிய கிரிக்கெட் ப்ளேயர்'' என்றான். புத்தக அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள் அவள். ''கோடுகளில் உணர்ச்சிகளைக் காட்டும் விதம்'' என்ற ஆங்கிலப் புத்தகம் அது.

''நீங்க படம் கூட போடுவீங்களா?''

''போடுவேன்.''

''பத்திரிகைகளுக்குப் போடுவீங்களா?''

''ஆங்...கார்ட்டூன் போடுவேன்.''

அவள் சட்டென்று நிமிர்ந்து ''ஜேம்ஸ் என்ற பெயரில் போடுவது நீங்கதானா?'' என்றாள்.

''நான்தான்.''

அவளையறியாமல் கையிலிருந்த புத்தகம் நழுவியிருந்தது.

தமிழ்நாட்டிலிருந்த சொற்ப கார்ட்டூனிஸ்டுகளில் அவன் ஒருவன். படம் வரைந்து நகைச்சுவைகளை எழுதாமல் படத்திலேயே நகைப்பைத் தோற்றுவிப்பவன்.

''இத்தனை நேரமாய் நீங்கதான் கார்ட்டூனிஸ்ட்டுன்னு என் சொல்லவேயில்லை?''

''அதற்கு அவகாசம் வரலையே.''

சுலோச்சனாவுக்குத் தன் எக்சேஞ்சில் வேலை பண்ணும் ஆபரேட்டர் ஒருவனைப்பற்றி நினைவுக்கு வந்தது. அவன் தன் கட்டுரை பிரசுரமான பத்திரிக்கையைக் கையிலேந்திக் கொண்டு ஆறுமாதம் அலைந்திருப்பான். எது பேசினாலும் சம்பாஷணையை அப்பத்திரிகையைப் பற்றி இழுத்து வந்து, தன் கட்டுரையை எடுத்துக் காட்டுவான்.

''ரொம்ப சிரிப்பு வரதே! நீங்க இவ்வளவு நன்றாய் எப்படி படம் போடறீங்க?''

''நிரந்தர மனப்போராட்டத்திலிருந்து தப்பிக்கத்தான்... எப்படியா? டிரையிங் பேப்பரின் மேல் இண்டியன் இங்க்கால்'' என்றான் சிரித்துக் கொண்டே.

அவள் இன்னும் ஆச்சரியத்திலிருந்து மீளவில்லை. அதற்குள் காபி சுட்டுவிட்டது.

அவன் கோப்பைகளைத் தேடி எடுக்க ஐந்து நிமிஷ மாயிற்று. நியூஸ் பேப்பர்களுக்கடியில் இருந்தன அவை. அதற்குள் காபி ஆறிப்போய் விட்டது, அதையே குடித் தார்கள்.

தொலைவில் எங்கோ கடியாரம் ஒற்றை மணியடித்து மணி பத்தரை என்பதை எடுத்துக் காட்டிற்று.

ஜேம்ஸ் சிறிய விளக்கைப் போட்டான், அறை நீள நிறத் தில் அமிழ்ந்தது. ஜன்னல் வழியே நிலாக்கற்றை உள்ளே விழுந்து கொண்டிருந்தது. திடீரென்று அறையில் வந்து சூழ்ந்த இருட்டு அவளை துணுக்குறச் செய்தது.

அவன் கேட்டான். ''உங்க எக்சேஞ்சைப் பற்றிச் சொல்லுங்க?''

தன் எக்சேஞ்சைப்பற்றி அவன் கேட்கவே உற்சாக மடைந்த அவள் ''எதைச் சொல்வது?'' என்றாள்.

''எக்சேஞ்சில் யாராவது தெரிந்தவங்க இருந்தால், நாம் ப்ரீயாய் வேண்டிய மட்டிலும் ஃபான் பண்ணிக்கலா மாமே, நிஜமா?''

''யார் சொன்னது? சுத்தப் பொய்'' என்றாள் அவள் கோபமாய்.

''அப்படித்தான் சொல்லிப்பீங்க, நிஜத்தைச் சொல்லுங்க'' என்று பலவந்தப்படுத்தினான். அவள் யோசித்துப் பார்த்து விட்டு, ''எனக்குத் தெரிந்தவரையிலும் அந்த மாதிரி யாரும் பண்ணமாட்டாங்க. ஒருக்கால் ஆம்புலன்சில் யாராவது தெரிந்தவங்க இருந்தால் அவங்க லோகல் கால்களை ஃப்ரீயாய் தந்துக்கலாம்னு நினைக் கிறேன்.''

''நீங்க அந்த பொசிஷனுக்கு எப்ப உயருவீங்க?''

அவள் சிரித்துவிட்டு, ''ஏன்? நீங்க பண்ண வேண்டிய கால்ஸ் இருக்கா?'' என்றாள். அவன் தலையாட்டினான். ''இந்த விதத்திலாவது பில்லைக் குறைக்கலாமேன்னு நினைக்கிறேன்...'' என்றவன் சட்டென்று ஏதோ நினைவு வந்தவனாய் ''ஆமாம், லைன் மேனைப் பிடிச்சால் ஒருத்தர் பில்லை மற்றொருவருக்குத் தராப்பல ஏற்பாடு பண்ணுவானாமே, நிஜமா?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் சொல்லிப்பாங்க. ஆனால் அது உண்மையில்லை. எங்களுக்கு வர கம்பளையிண்டுகளில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்று சதவீதம் தப்புக் கம்ப்ளையிண்டுதான். முக்கியமாய் எஸ். டி. டி. வந்த பிறகு வீட்டிலிருக்கு பெண்மணிகள் தூரதேசத்திலிருக்கும் தம் சொந்தக்காரர்களுடன் மணிக்கணக்கில் பேசத் தொடங்கி—அந்த விஷயத்தையே மறந்துடறாங்க. பில் வந்து சேர்ந்ததும் ஆண்கள் கோபத்தால் தலைகால் புரியாமல் குதிக்கும்போது திருடனுக்குத் தேள் கொட்டியது போல இருந்துடறாங்க.''

''அப்படின்னால் ராங்—பில்லே இல்லைங்கிறீங்களா?''

''அந்த மாதிரி சில தப்புக்களை எல்லா இலாக்காக்களிலுந்தான் நிகழ்ந்துண்டிருக்கு. எங்க இலாக்காவைத் தப்புச் சொல்லணும்னால் ஒரே ஒரு விஷயந்தான் இருக்கும். எங்க இலாக்காவினர் மிக அலட்சியமாய் பண்ணும் தப்பு அது.''

''அதென்ன?''

''எவ்வளவோ பேர் போன் வேணும்னு வெயிட்டிங் லிஸ்டில் இருக்காங்க இல்லையா? எதிர்காலத்தில் இவங்க கணக்கு லட்சத்தைக் கூட எட்டிவிடும். இத்தனைப்பேருக்கும் வேண்டிய போன்களை இந்த இலாக்காவினர் ஏன் ஏற்பாடு பண்ணித் தரக்கூடாது? கேவலம் ஒழுங்கில்லாத திட்டந்தான் காரணம்! இப்ப ஒரு பத்து கோடி செலவழிப்பதனால் எதிர்காலத்தில் மேலும் லாபமடையலாம். எக்சேஞ்சுக்களை

லாபகரமாக்கும் ஏற்பாட்டின் மூலம் போன் கேட்டவங்களுக்கெல்லாம் பத்தே நாளில் போனைக் கொடுத்துட ஏற்பாடு பண்ணலாம். ஏன் பண்ணலை?'' என்றவள் சட்டென்று தான் ஆவேசமாய் பேசி விட்டதை எண்ணி நிறுத்திக் கொண்டாள். ஜேம்ஸிற்கு அந்த விஷயத்தின் மேல் அவ்வளவு உற்சாகமில்லை.

''வேறு விஷயம் சொல்லுங்க?'' என்றான். ஊர் துயிலில் ஆழத் தொடங்கியிருந்தது. கிழக்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்த பட்சி ஜன்னல் வழியே வெள்ளையாய் தென்பட்டது.

''என்ன?''

''நாம்ப யாரையாவது அழவைக்கணும்னு நினைச்சால் அவங்களுக்குப் போன் பண்ணிட்டு நம்ப ரிசீவரை வைக்கும் போது சரியாய் பொறுத்தி வைக்காவிட்டால் அவங்க போன் வேலை பண்ணாதாமில்லை? நிஜமா?'' அவள் கண்கள் அகல விரிய,''இந்த மாதிரி மோசமான யோசனையெல்லாம் உங்களுக்கு ஏன் தோணுது?'' என்று கேட்டாள்.

''உண்மைதானா இல்லையான்னு சொல்லக்கூடாதா என்ன?''

''உண்மைதான்.''

கீழேயிருந்த வீட்டுக்காரரின் வீட்டில் விளக்கை அனைத்துவிட்டார்கள். வராந்தாவில் இருள் அடர்ந்து பரவிற்று. அவன் ஜன்னல் கதவைத் திறந்தான். குளிர்ந்த காற்று விர்ரென்று வந்து மோதிற்று. டேப் ரிகார்டரை அனைத்து விட்டுக் கேட்டான். ''எதைப் பேசினாலும் போனில்தானே பேசுறாங்கன்னு நினைத்துப் பெண்கள் அவ்வளவாய் பொருட்படுத்த மாட்டாங்களாமே, நிஜமா?''

''தேவைக்கு மீறி அதிகமாய் மறுமுனையிலிருப்பவங்க டசினால் நாங்க 'கீ ஆ:ப்' பண்ணிடுவோம். அது

தெரியாமல் நாங்க இன்னும் கேட்டுண்டிருப்பதாய் நினைச்சுக்கிட்டு மறுமுனையிலிருப்பவங்க பேச்சைத் தொடர்ந்துண்டேயிருப்பாங்க. திட்டிண்டும் இருப்பாங்க.'' என்று சிரித்தாள்.

''எனக்கு ஆச்சரியமாயிருக்கு. காலையிலேருந்து சாயந்திரம் வரைக்கும் விரலை அப்படிச் சுழற்றிண்டேயிருக்கீங்களே விரலெல்லாம் வலிக்காதா?''

''பியானோ பட்டன் சிஸ்டம் வந்தால் நன்றாயிருக்கும்னு நினைச்சுப்போம்.''

டேப் ரிகார்டரில் பாட்டு மந்திர ஸ்தாயியில் வந்து கொண்டிருந்தது. அவன் கட்டிலிலிருந்த புத்தகங்களை எடுத்து அலமாரியில் அடுக்கி வைத்தான். அவள் கைக்கடியாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டாள். அவன் தன் அறையிலிருந்த போனைச் சுட்டிக் காட்டி, ''இது எனக்கு எப்படி வந்து சேர்ந்தது தெரியுமா?'' என்றான்.

''எப்படி வந்தது?''

''முதல் ஆறுமாதமும் எங்கப்பாவுக்கு ஹார்ட் கம்ப்ளெயிண்ட். அடுத்த ஆறுமாதமும் எங்கம்மாவுக்கு இதய நோய். வீட்டில்யாருக்காவது சீரியசாயிருந்தால் டெம்பரரி போன் தருவாங்களில்லே?''

''அவங்க எங்கே?'' என்று கேட்டாள் அந்த ஒரே அறையைக் கண்களால் துழாவி.

''என் சிறுவயதிலேயே காலமாயிட்டாங்க'' என்று சிரித்தான். அவளும் சிரித்தாள். அவன் சர்வ சாதாரணமாய் அருகில் வந்து அவளைத் தன் இரு கைகளாலும் சிறைப்படுத்தினான். இதெல்லாம் மிக நிசப்தமாய் சர்வசாதாரணமாய் நடந்தேறிவிட்டது.

ஒரு வினாடி அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் முகம் அதற்குள் நெருங்கி வரவே புரியத் தொடங்கியது.

அவளுக்கு. சட்டென்று திமிறிக்கொண்டு இஸ்டிக்காய் பின்னுக்கு நகர்ந்து, ''எ...என்ன...இது?'' என்று கேட்டாள் தொண்டை உலர.

அவளிடமிருந்து இதை எதிர்பாராத அவன் ஒரு வினாடி வியப்படைந்தவனாய். ''உங்களுக்குப் பிடிக்கலையா?'' என்றான். அவன் குரலில் ஆச்சரியம்!

''என்னன்னு நினைச்சுட்டீங்க என்னைப் பற்றி நீங்க?'' கோபமும் அழுகையும் கலந்திருந்தது அக்குரலில்.

அவனும் அதே நேர்மை பிறழாத குரலில் ''ஒன்றுமே நினைச்சுக்கலை'' என்றான். அந்த பதிலுக்கு வியப்படைந்தவளாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் சொன்னான். ''நீங்களும் நானும் மட்டுமே அறையில் இருக்கிறோம். நேரம் இரவு பத்தைத் தாண்டி விட்டது. உங்களுக்கு இஷ்டந்தான்னு எண்ணிட்டேன்'' என்றான்.

''அப்பாவிப் பெண்ணொருத்தி உங்களை நம்பி அறைக்குள் வந்தால் இந்த எண்ணத்தைத் தவிர வேறெதுவும் தோணாதா உங்களுக்கு?'' கோபமாய் கேட்டாள்.

''நடிக்காதீங்க. நடிப்பவங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. இந்த மாதிரி நடக்கப் போகுதுன்னு நிஜமாகவே உங்களுக்குத் தெரியாதா?'' என்றான்.

''நிஜமாய் எனக்குத் தெரியாது. உங்களுக்கு அந்த மாதிரி எண்ணம் இருக்கும்னு நினைக்கவேயில்லை நான்.'' அழுவதொன்றுதான் மிஞ்சியிருந்தது அக்குரலில்.

அவன் அவளை உற்றுப் பார்த்தான். அக்குரலில் தென்பட்ட உண்மைக்கு ஒரு வினாடி மௌனம் வகித்து விட்டுப் பிறகு தோளைக் குலுக்கி ''ஆல் ரைட். நான் அவசரப்பட்டுட்டேன் போலிருக்கு. இனி இதையெல்லாம் மறந்துடுங்க''

முகத்திற்கு முன்னால் தும்மி விட்டு 'சாரி' என்று சொல்வதுபோல அத்தனை சுலபமாய் அவளை 'இதையெல்லாம் மறந்து விடுங்கள்' என்று அவன் சொன்னதைக் கேட்டு அவள் தலை சுற்றிற்று.

''இதுக்காகத்தானா என்னை இங்கே கூட்டிட்டு வந்தீங்க?'' என்று கேட்டாள்.

அவன் அலட்சியமாய் தலையைச் சிலிர்த்து விட்டு, ''இனி இதையெல்லாம் மறந்துடுங்கன்னு சொன்னேனில்லே?'' என்றான்.

''இல்லை, சொல்லுங்க, என்னை இனிமேல் சந்திக்கவே மாட்டீங்க இல்லையா?''

''அதெற்கென்ன வந்தது? அவ்வப்போது சந்திக்கறதுக்கென்ன?'' விட்டேற்றியாய் பதிலளித்தான்.

''அப்படியென்றால் உங்க எண்ணப்படி ஆண்—பெண் சிநேகம் என்பது இதானா?''

ஏளனமாய் கேட்டாள் அவள். அவன் மெல்ல நிமிர்ந்து அவளை உற்றுப் பார்த்தான்.

''இதானான்னால் என்ன அர்த்தம்? முதல்ல காதலன் சந்திரனைப்பார் எவ்வளவு அழகாயிருக்கு என்பான். அவள் 'ஆமாம்' என்பாள், 'இன்றிரவு ரொம்ப நன்றாயில்லே?' எனபான், 'ஆமாம்' என்பாள். 'நம் உணர்ச்சிகள் எவ்வளவு நன்றாய் ஒன்று சேர்ந்துடுத்துப் பார்' என்பான். அவள் 'ஆம்' என்று தலையாட்டுவாள். 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்பான். ''நானும் அவ்வாறுதான், நீ இல்லாவிட்டால் உயிர்வாழேன் காதலா' என்பாள் அவள். அவன் அவளை சேர்த்து அணைத்துக் கொள்வான். இயற்கை புளகாங்கித மடைந்து போகும். குயில் பாட்டுப் பாடும். அவள் அவனோடு ஒன்றறக் கலந்து விடுவாள்... மொத்தத்தில்

இவ்வளவுக்கும் பிறகு நடப்பதென்னவென்றால் அவன் அவளை அனுபவிப்பது...இதற்காக இத்தனை டிராமாவும் இவ்வளவு நாள் பாடும் எதற்கு? ஒவ்வொன்றும் அதிலேயே தான் போய் முடிவடைகிறது. அப்படியிருக்கும்போது அதை அங்கேயே தொடங்கி முடித்துக் கொண்டு விட்டால் அந்த நேரத்தையெல்லாம் வேறு பயன்தரக் கூடிய வேலைகளுக்குப் பயன்படுத்திக்கலாமில்லே? இந்தக் காதலர்களைப் பார்த்தாலே எனக்குச் சிரிப்புதான் வரது. காதல் என்ற மன சாட்சியை வஞ்சிக்கும் இந்தப் பேரால் எவ்வளவு பேர் எத்தனையோ நேரத்தை வீணடிக்கிறாங்களோ பார்! முக்கிய மாய் எங்க ரேவந்தைப் போன்றவங்க...''

''நீங்க இவ்வளவு 'மெட்டீரியலிஸ்' என்று நினைக்கலை.''

''என்னுடையது கொடுமையான உணர்ச்சியாயிருக்கலாம். ஆனால் என் உணர்ச்சியை நான் பேணி பாதுகாக்கும் உரிமை எனக்குண்டு. இதை நீங்களும் ஒத்துக்கணும்னு ரூல் இல்லை.''

''சரி நாம் போவோமா?''

''வாங்க'' சாவிக் கொத்தைக் கையிலெடுத்துக் கொண்டான்.

அவள் வாயிலைத் தாண்டப் போனபொழுது நின்று, ''மை காட்'' என்றான்.

''என்னவாச்சு?''

அவள் கொஞ்சம் நாணமடைந்தவளாய், ''பிரா அறுந்துட்டாப் போலிருக்கு. இப்படி எப்படிப் போறது?'' என்று அந்தப் பக்கமாய் திரும்பி ''அறுந்துதானே போயிருக்கு, இல்லே?'' என்று கேட்டாள்.

அவன் வெள்ளையான அவளுடைய முதுகில் திண்மையாயிருந்த ஜாக்கேட்டைக் கொஞ்சம் மேலே தள்ளிவிட்டு

ஸ்ட்ராப்பைத் தேடிப் பிடிக்க முயன்று இரு கைகளாலும் இழுத்து ஒன்று சேர்த்து, ''அறுந்துப்போகலை. கொக்கி விட்டுப் போயிருக்கு, அவ்வளவுதான்'' என்று சரி செய்தான்.

அவள் மேஜைமேல் வைத்திருந்த கைப்பையை எடுத்துக் கொண்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஒரு காரைப் பழுது பார்த்த மெகானிக்கின் சோர்வு மட்டுமே தென்பட்டது அம் முகத்தில்.

இருவரும் அறைக்கு வெளியே வந்தார்கள். அறைக் கதவைப் பூட்டிவிட்டுப் படியிறங்கிக் கடைசி படியில் வந்து சேரும் வரையிலும் கேட்பதா வேண்டாமா என்று தனக்குள் போராடிவந்த அந்தக் கேள்வியைக் கேட்டுவிடத் தீர்மானித்த வளாய் நின்று, ''நான் ஒரு கேள்வி கேட்பேன், சொல்லு வீங்களா?'' என்றாள்.

''என்ன?''

அவளுக்கு வெட்கமாயிருந்தது. ஆயினும் அவன் மனதின் அடித்தளத்திலிருந்ததைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆர்வம் அவ்வெட்கத்தை நெட்டித் தள்ளிற்று. ''உங்களுக்கு...உங்களுக்கு எந்த தாபமுமே ஏற்படலையா?' என்று கேட்டாள்,

அவன் முகத்தில் ஆச்சரியம்? ''நீங்கதான் மறுத்துட்டீங் களில்லே? ஒரு முறை அப்படிச் சொல்லிட்ட பிறகு அப்புறம் எப்படித் தோன்றும்?'' என்றவன் ஏதோ புரிந்தாற்போலிருக் கவே. சிரித்துவிட்டு, ''கேவலம் என் உறுதியை சோதிக்கத் தான் நீங்க இந்த மாதிரி பண்ணினீங்களா.....என் யோசனை, உணர்ச்சி இதெல்லாமே மெட்டிரியலிஸ்ட்டாகத் தான் இருக்கும் சுலோச்சனா. இன்னும் நூறு வருஷம் போனாலும் நாம் இப்படித்தான் இருப்போம். நீங்க குளியலறையிலிருந்து சோப்பை எடுத்துக் கொடுக்கச் சொன்னாலும் என்னுள் எந்த தாபமும் ஏற்படாது. நீங்க 'நோ' என்று மறுத்துவிட்ட வினாடியி

லிருந்து உங்களைப் பெண்ணாய் பாவிப்பதையே விட்டுட்டேன். அதனால்தான் நம்மிருவருக்குமிடையே இனி சிநேகம் ஏற்படுவதைப்பற்றி நீங்க பேசியபோது தடுமாறிவிட்டேன். உங்களோடு சூதாட என்னால் முடியாது. மனம் நன்றாயில்லாதபோது உங்களோடு சேர்ந்திருக்க முடியாது. பின்னே எந்த விதத்தில் உங்களோடு சிநேகம் பண்ணுவேன்? ஒரு உணர்ச்சியை உள்ளே வெச்சுண்டு மேலுக்கு வேறு விதமாய் பேசத் தெரியாது என்னால். நான் பச்சையாய் பேசிட்டால் என்னை மன்னிச்சுடுங்க. உங்களை விட சுனில் கவாஸ்கரை பேனா நண்பனாக்கிப்பதே எனக்குப் பிடிக்கும்'' என்றான்.

''எத்தனைக் கொடுமையான யோசனை! மனதைக் கூட அணா பைசாவுடன் கணக்கிடுறீங்க போலிருக்கே!''

சந்திரன் மேகத்திரைக்குள் புகுந்து கொண்டதால் நிலா வெளிச்சம் மாயமாயிற்று. அவன் முகத்திலிருந்த உணர்ச்சியை அவளால் படித்தறிய முடியாமல் போயிற்று. அக்குரல் மட்டும் ஆழமாய் ஒலித்தது.

''ரொம்பக் கொடுமையான உணர்ச்சிகள்தான்! கொஞ்சமாவது மென்மையான உள்ளம் படைத்த பெண்ணாயிருந்தாலும் சரி, உள்ளத்தை சுக்கு நூறாக்கி விடவல்ல உணர்ச்சிகள்! எனக்கு காதலின் மேல் நம்பிக்கை இல்லை. அதைப் பற்றி ஆண்டாண்டுகளாய் சிந்தித்து ஏடு ஏடுகளாய் காவியங்களைப் புனைந்து ஏன் தள்ளுறாங்கன்னுதான் புரியலை. அது ஒரு கிரிமினல் வேஸ்ட் ஆஃப் டைம்னுதான் என் எண்ணம்.''

''காதலின் மேல் இவ்வளவு இளப்பமான எண்ணத்தை உங்களுக்குத் தோற்றுவித்தவங்க யாரோ?''

''எங்க குடும்ப நபர்கள்!... 'இன்செஸ்ட்' என்ற வார்த்தையை நீங்க எப்பவாவது கேட்டதுண்டா? இன்செஸ்ட் என்றால் நெருங்கிய உறவினர்களுக்குள் உடலுறவு

கொள்வது. தற்போது மேற்கிந்திய நாடுகளில் மிகக் கொடுமையாய் பரவியுள்ள இந்த இன்செஸ்ட் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே எங்க வீட்டில் நுழைந்து விட்டது! எங்கம்மா ஸ்கூல் டீச்சர். ஒரு நாள் பிற்பகல் ஏதோ வேலையாய் வீட்டிற்குத் திரும்பிய அவளுக்குத் தன் கணவனும் மகளும் படுக்கையில் தென்பட்டார்கள். அங்கேயே இருவரையும் கொன்றுவிட்டு எட்டாண்டுகள் ஜெயில் வாழ்க்கையை அனுபவித்து விட்டு அங்கிருந்த ஜெயிலர் ஒருவனுடனேயே எங்கோ ஓடிப்போய் விட்டாள்.''

அவன் எவ்வளவு சாதாரணமாய் பேச முயன்றபோதிலும் நடுங்கும் குரலை அரும்பாடுபட்டுத் தன் நிலைக்கு கொண்டு வர முயன்றதை அவன் உணர்ந்தாள். அவன் சொல்லத் தொடங்கினான்.

''படிப்பைத் தொடர ரொம்பக் கஷ்டப்பட்டேன். ஸ்காலர்ஷிப் போதவில்லை. டியூஷன்கள் சொல்லித்தர வேண்டியிருந்தது. அதனால் படிக்க நேரமும் கிடைக்காமல் போயிடும். ஒரு நாளைக்கு பதினாறு மணி நேரம் வேலை செய்யப் பழக்கப்படுத்திக்கொண்டேன். படிப்பு முடிவடைந்த பிறகு திடீரென்று இவ்வளவு நேரத்தையும் எப்படிக் கழிக்கறதுன்னே தெரியலை, கார்ட்டூன், கிதார், புத்தகம் இவற்றோடு பழகத் தொடங்கியது இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து விட்டாற் போலிருந்தது. என்னைச் சுற்றிலும் இவ்வளவு பெரிய உலகம் இருக்கிறதா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. அந்த 'விழிப்பு' என்னுள் உதிக்கத் தொடங்கி இந்தக் காதல் மீதும், மென்மையான உணர்ச்சிகளின் மீதும் நம்பிக்கை போய்விட்டது. என் இந்த விளைவுகளையெல்லாம் சேர்த்து நீங்க 'மெட்டீரியலிசம்னு பேர் வெச்சுக்கிட்டாலும் சரி; எனக்கு ஆட்சேபனை இல்லை...சரி வாங்க, நாம்ப இந்த மாதிரி வராந்தாவில் நின்னுண்டு மனந்திறந்து பேசிப்பது நன்றாயில்லை'' என்று நடந்தான்.

அவள் நகரவில்லை. சிலையாய் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டாள். எந்த மனிதனுமே கெட்ட வனில்லை. மனிதன் அடித்தளத்தைத் துருவிப் பார்த்தால் அது புரியும் என்றுதான் பட்டது அவளுக்கு.

''வாழ்க்கையை இவ்வளவு வியாபார ரீதியாய் எடுத் துக்கற நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கலை இன்னும்? என் எண்ணம் என்னன்னால், மனைவிக்காக ஒரு முந்நூறு நானூறு ரூபாய் மாதந்தோறும் செலவானாலும், ஒருசமையற் காரி— கம் பெண்-கம் வேலைக்காரி கிடைப்பாளே'' என்றாள் அவள்.

அவன் பேச்சில் ஏளனமிருந்திருக்குமா என்ற ஐயத்தில் அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் சிரித்ததால் தானும் சிரித்துவிட்டு, ''உண்மைதான்! இந்த யோசனையே எனக்குத் தோன்றலை...ஆனாலும் இவ்வளவு பைத்தியக் கார எண்ணங்களுடைய என்னை யார் பண்ணிப்பாங்க? சாமர்த்தியமாய் பேசி ஏமாற்ற எனக்குப் பிடிக்கலை'' என்றான். பிறகு, ''உங்களைப் போன்ற தனிக்கட்டைப் பெண்கள் யாராவது பண்ணிக்கலாமோ என்னவோ? விசாரித் துப் பாருங்கள்'' என்றான்.

''நிஜமாய் பண்ணிப்பீங்களா?''

''ஓ.....''

''தாங்க்யூ ரெண்டு மூன்று நாளில் ஏதாவது கோயில் அல்லது சர்ச்சில் பண்ணிப்போம். ஓ. கே?''

''சரி.''

''என்ன, இவ்வளவுதானா? ஆயிடுத்தா?'' என்றான் ரேவந்த் ஆச்சரியமடைந்தவனாய்.

''இவ்வளவுதானா? இத்தனையும் நடந்திருக்கு!'' என்றான் ஜேம்ஸ்.

''நான் நம்பலை. இவ்வளவு சீக்கிரத்தில் இரண்டே இரண்டு கேள்விகளுடன் இருவரும் இந்த முடிவெடுத்துக் கிட்டீங்களா? வாழ்நாள் எல்லாம் சேர்ந்திருக்கப் போகும் ஒரு தீர்மானத்தை இவ்வளவு சர்வ சாதாரணமாய் முடிவெடுத்துட் டீங்களா?'' ஆச்சரியமடைந்தான் ரேவந்த்.

''அப்படின்னால், கல்யாணம் பண்ணிக்கப் போறதுக்கு முன்னால் ஒரு மாதகாலம் ஒருத்தரையொருத்தர் ஐ க்யூ டெஸ்ட் பண்ணிக்கணுங்கிறயா?''

ஜேம்ஸ் தன்னைக் குத்திக் காட்டியதை உணர்ந்தான் ரேவந்த். ஆயின் அவர்களிருவருக்கும் அத்தனை நெருக்கம் இருந்தது. இருந்தாலும் அதை எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடியாதவனாய் ரேவந்த் ''அவள் எப்படிப்பட்ட வள்ளு உனக்கெப்படி தெரியும்?'' என்று கேட்டான்.

''உன் 'நிலாப்பெண்' எப்படிப்பட்ட வள்ளு தெரியாம லேயே நீ அவனைக் காதலிக்கலையா? மூன்று நிமிஷ நேரம் பார்த்து முடிவெடுக்கிற பெண் பார்க்கும படலம் போன்ற நிகழ்ச்சிகளை நீ மட்டுந்தானா எதிர்க்க முடியும்?...நீ கேட்கப் போகிற அடுத்த கேள்வியும் எனக்குத் தெரியும். நள்ளிரவு நேரத்தில் மோட்டார் சைக்கிளில் ஏறி, தைரியமாய் உன் அறைக்கு வந்த பெண்ணின் கற்பைப் பற்றிச் சந்தேகம் தோணலையான்னு கேட்கப் போறே, அவ்வளவுதானே இந்தக் கற்புங்கறதெல்லாம் ஒரு 'ட்ராஷ்' என்பது என் எண்ணம். எனக்குச் சந்தேகம் ஏற்பட்டுதுன்னு வை... நள்ளிரவு நேரத்தில் ஒரு பெணணை அழைச்சிட்டுப் போனால் என் குணத்துன் மேல் கூட அவளுக்கு சந்தேகம் ஏற்பட்டுத் தீரணுமில்லையா? ஆண்களுக்குத் தேவையில்லாத கற்புங்கற இது, பெண்களுக்கு மட்டும் ஏன் வேணுங்கறது இந்த சமூகம்? அதான் எனக்குப் புரியமாட்டேங்கிறது. நான் வெறும் வாய்ப் பேச்சும் பேசுவதில்லைங்கறது உனக்குத் தெரியும்! நாங்களிருவரும் சேர்ந்திருக்கப் போகிறோம், அவ்வளவுதான் இருபத்திநான்கு மணிநேரமும் 'பிசிபிசி' என்றிருக்கும் தினசரி

நிகழ்ச்சியில் மூன்று நிமிஷத்து பயாலாஜிகல் தேவைக்காக ஒருவர்க்கொருவர் ஒத்துழைத்துக்கறோம். ஒரு ஐம்பதாண்டுகளுக்குப்பிறகு ரெண்டு பேரும் சாகப்போறோம். இதற்காகப் போய் இத்தனை மனப்போராட்டமும், தீர்மானங்களும், லட்சியங்களும் ஏன்கறேன்? கல்யாணங்கறதே ஒரு பெரிய 'திங்க்' காய் இருக்கறப்ப அந்த 'திங்க்' யாரோடு இருந்தால் தான் என்ன? என் வார்த்தை உனக்குச் சிரிப்பை வரவழைக்கலாம். ஆனால் வாழ்க்கையில் எவ்வளவோ ஏமாற்றங்களுக்காளான என் மனம் எனக்கு கற்றுக் கொடுத்த பாடம் அது. 'நான் ஏதோ கஷ்டத்திலிருக்கிறேன். என் மனதை யாருமே புரிஞ்சுக்கமாட்டேங்கிறாங்க' என்ற செல்ஃப்பிட்டியான யோசனைகள் அதனால்தான் எனக்கு தோணுவதில்லை. இதற்கு நீங்க மெட்டிரியலிசம்னு பேர் வெச்சுக்கிட்டாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஏன்னால் கல்யாணங்கறதே ஆண்—பெண் என்ற இரு மெட்டீரியாலிஸ்ட்டுகள் தம் இச்சையைத் தீர்த்துப்பதற்காகவே பண்ணிக்கறதாய் நான் பாவிக்கிறேன். மேலுக்கு என்னதான் பூசி மெழுகிண்டாலும் சரி, அதுதான்...இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்துட்டு தான் நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதித்தேன். நாளன்றைக்குதான் கல்யாணம், கண்டிப்பாய் வா,''



''ரொம்ப வினோதமான ஆளாய் தோன்றுகிறாரே?'' என்றாள், அவள் போனில்—ரேவந்த் நிகழ்ந்ததையெல்லாம் விவரித்ததைக் கேட்டுவிட்டு.

''நமக்குச் சரியான எதிர்ப்பதம்...நாம்ப ஒரு மாதமாய் படற இந்த தாபத்தை அவன் ரெண்டே நிமிஷத்தில் பட்டுட்டான்.''

''ஆனால் அவன் வாதனையில் எங்கேயோ கீறல் இருக்கு .....இருபத்தி நான்கு மணி நேரமும் பிசி பிசியான வாழ்க்கையில் விவாகம் என்பது அற்பமான உடல் இச்சைக்கு மட்டுமேயில்லை. சிறு சிறு உணர்வுகளுக்காகவே மனிதன் வாழ்கிறான். முதல்ல இந்த பிசிங்கறதே எதுக்கு? மனிதன் வாழ்வதற்காகத்தானே! அந்த இன்பம் எப்படி வந்து சேருகிறது? உணர்ச்சி அனுபவத்தால் வந்த இன்பந்தானே! அப்படின்னால் கல்யாணங்கறது உணர்ச்சி மிக்க அனுபவம் இல்லையா? தேவையான்னு எப்படிச் சொல்லமுடியும்? உண்மையைச் சொல்லுங்க, நான் முதல் தடவை போன் பண்ணினப்ப உங்களுக்கு எப்படி தோன்றிற்று?''

''அன்றிரவெல்லாம் உங்க குரலேதான் கேட்டுக்கிட்டிருந்தது. ஒரு பெண் வாகாய் படுக்கையில் படுத்துக் கொண்டே காவேரியைப் போன்ற கூந்தலை விரித்து முன்னுக்கு போட்டுக் கொண்டு காதில் போனைப்பொறுத்திக் கொண்டு பேசும் காட்சியே கண்களில் மிதந்து கொண்டிருந்தது.''

''அவ்வளவு உணர்ச்சி மிகுந்த அனுபவத்தை எந்த மெட்டீரியலிஸ்டுக்கு மரக்காலால் அளந்து தரமுடியும் நம்மால்? வாழ்க்கைங்கறது அழகான உணர்ச்சிகள் கலந்த பூங்கொத்து இல்லையா?''

''ஆமாம், அதனால்தான்.....'' சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

''ஏன் நிறுத்திட்டீங்க? சொல்லுங்க?''

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை.''

''எனக்குத் தெரியும் நீங்க என்ன சொல்ல வந்தீங்கன்னு.''

''என்ன?''

''சும்மா என்னை அழவைக்கணும்னுதான் என் போன் நம்பர் தெரியாதுன்னு நடிக்கிறீங்க. உண்மையில் நீங்க என்றோ அதைக் கண்டு பிடிச்சுட்டீங்க. அதைச் சொல்லிட்டால் இனிமேல் இந்த மாதிரி கண்ணாமூச்சியாட்டம் ஆட முடியாதேன்னும், ஒரு மாதகாலம் வரைக்கும் இதை இப்படியே பொழுது போக்காய் இழுத்தடித்துண்டிருக்கலாமேன்னும் நினைக்கிறீங்க, இல்லையா?''

ரேவந்த் வியப்பால் வாயடைத்துப் போனான். உண்மையிலேயே அவன் நம்பரைக் கண்டுப் பிடித்து விட்டான். ஆனால் சொல்லவில்லை, அவனுக்கு அப்பெண் வைத்த பரீட்சையில் தேர்ச்சியடைவதைக் காட்டிலும் அப்பெண் தன்னை அழவைப்பதே பிடித்திருந்தது. இதைக் கூட அவள் கண்டுபிடித்து விட்டாளே, 'மைகாட்!' என்றெண்ணிக் கொண்டான்.

''நான் கொஞ்சம் குழப்பமடைந்தேன்.''

''எப்படி?''

''மூன்றாவது எண் சைபர்னு தெரிந்துடுத்து. ஆனால் கடைசி மூன்றெண்ணையும் ஒன்றுடன் ஒன்று கூட்டினால் 24 வரும்னீங்க. ஒரு எண் சைபரானால் எல்லாமே சைபராய் தானே இருந்து தீரணும்?''

''இருந்து தீரணுந்தான். ஆனால் நீங்க சைபரைக் கணக்கில் எடுத்துக்க மாட்டீங்கன்னு நினைத்தேன்.''

''உண்மையாய் எடுத்துக்கலை. ஆனால் எடுத்துக்காமப் போனாலும் அது வரும். Ate NothigN For Six—க்கு சரியான அர்த்தம் 18046 அந்த நம்பராயில்லாவிட்டால் 18226 ஆக இருக்கணும். இந்த இரு நம்பர்களையும் எட்டாம் வகுப்புப் பையன் கூட நிமிஷத்தில் கண்டுபிடித்துச் சொல்லியிருப்பான்...''

''அந்த நம்பர்களுக்குப் பண்ணி கிண்ணி தொலைத்தீங்களா என்ன?''

''பண்ணினேன்.''

''யாரோட நம்பர்கள்?''

''பைத்தியக்கார ஆசுபத்திரியும், கேன்சர் ஆசுபத்திரியும்.'' மறுமுனையில் சிரிப்பு. கொஞ்ச நேரத்தில் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் சொன்னாள். ''நீங்க உண்மையில் ரொம்ப நெருங்கிட்டீங்க. ஆனால் கடைசியில் கொஞ்சம் காலை உதைத்திருக்கு. பரவாயில்லை, முயற்சி பண்ணுங்கள். சீக்கிரத்திலேயே கிடைக்கும். எட்டாம் கிளாசுப் பையனைவிடக் கொஞ்சம் புத்தியை அதிகமாய் உபயோகித்துப் பாருங்கள், நேரம்கூட அதிகமாயில்லையே! இன்னும் நாலே நாள்தானே இருக்கு.''

''அது போதும்.''

''என் மூன்றாவது கடிதம் கிடைத்ததா?''

''மூன்றாவது கடிதமா?'' ஆச்சரியமடைந்தான் அவன். ''இன்னும் இரண்டாவது கடிதமே கிடைக்கவில்லையே.''

''எங்க மெகானிக்கிடம் கொடுத்தனுப்பிய சீட்டு ஒரு கடிதந்தானே! அதுதான் இரண்டாவது கடிதம் ''

''ஓ, அதா?'' ரேவந்த் சிரித்தான்.

''நான்தான் எழுதணுமா, நீங்க எனக்கு எழுதக் கூடாதா?''

''நானா? நான் எழுதி எந்த விலாசத்துக்கு அனுப்பறது?''

''நீங்க எழுதுங்க. நான் வாங்கிக்கிறேன்.''

''அப்படீன்னால் இப்பவே எழுதறேன். உங்களுக்கு எப்படி அனுப்பி வைப்பதுன்னு ஒரு மணி நேரங்கழித்துப் போன் பண்ணிச் சொல்லுங்க.''

''இது உங்க முதல் காதல் கடிதம் மிஸ்டர்! ஒரே மணி நேரத்தில் முடிந்துடும்னு சொன்னால் என்னால் நம்ப முடியாது. ஆபீசில் சாயந்திரம் ஐந்து மணி வரையிலும் நீங்க போராடித்தீரணும். அப்பப் போன் பண்றேன்'' என்று போனை வைத்துவிட்டாள்,

அவள் சொன்னது உண்மையே ஆயிற்று. ரோஜா வண்ணத்திலிருந்த லெட்டர் பேடிலிருந்த காகிதங்கள் எல்லாம் ஐந்தே நிமிஷத்தில் குப்பைக் கூடையை நிரப்பி விட்டன. முதலில் எப்படி ஆரம்பிப்பதென்பதே கடினமா யிருந்தது. 'அன்பார்ந்த உங்களுக்கு' என்று எழுதுவோமா என்ற போராட்டத்திலேயே இரண்டு மூன்று காகிதங்களும், 'வணக்கம்' என்று எழுதுவோமா வேண்டாமா என்ற சந்தேகத்தில் இரண்டு காகிதங்களும் கிழிந்தொழிந்தன. இனி பலனில்லை என்று கருதி முதலில் வெறுமே எழுதத் தொடங்கினான்.

'நான் உங்களைக் காதலிக்கிறேன்' என்று எழுதலாமென எண்ணினான். உலகத்தில் அதைக் காட்டிலும் முட்டாள் தனமான வாக்கியம் வேறில்லை என்றெண்ணிக் கிழித் தெறிந்தான்,

''என் வாழ்க்கையின் இறுதி நேரத்தில் சாவதற்கு முன்னால் யாராவது என்னிடம வந்து'உன் வாழ்நாளிலேயே மறக்க முடியாத சம்பவம் எது ரேவந்த்?' என்று கேட்டால். 'நிலாப்பெண்ணுடன் போனில் பேசியதுதான்' என்று ஆரம்பிப் போமா என்றெண்ணினான். கேவலம், பேசினாலே போதுமா என்று தன்னை கோலிபண்ணுவாள் என்றெண்ணி அந்த யோசனையைக் கைவிட்டான்.

ஒன்றுமே புரியவில்லை. எழுதி எழுதிக் கிழித்துக் கொண்டேயிருந்தான். என்னென்னவோ உணர்ச்சிகள் எவ்வளவோ காகிதங்கள்.

மூன்றடித்தது. நான்காயிற்று, ஐந்தும் ஆயிற்று. போன் ஒலித்தது.

''எழுதிட்டீங்களா?''

''ஆங்'' எப்படிக் கொடுத்தனுப்புவது?'' ஒரு பொய்யைச் சொன்னான்.

''நானே வந்து வாங்கிக்கறேன்.''

உணர்ச்சி பரபரக்க ''எங்கே?'' என்று கேட்டான்.

''உங்க ஆபீசிற்கே வரேன்.''

திடீரென்று ரேவந்த்தின் மேனியில் இரத்தம் குப்பென்று பெருக்கெடுத்தது. ''நீங்களே வரீங்களா?''

''ஆங்.....நானே நேரில் வரேன்.''

''எப்போ?''

''இப்பவே கிளம்பிட்டேன். நீங்க அந்தக் கவரை உங்க ஆபீசு வராந்தாவில் விசிட்டர்கள் உட்காரும் இடத்திலுள்ள நாற்காலிக்குக் கீழே போட்டு வையுங்கள். நான் வந்து எடுத்துக்கறேன். ஆனால் நீங்க மட்டும் அங்கே ஒளிஞ்சுண்டு என்னைத் திருட்டுத்தனமாய் பார்க்க முயற்சி பண்ணக்கூடாது. இந்த நிபந்தனைக்குச் சம்மதிக்கிறீங்களா?''

''ஓ.கே. உங்களைப் பார்க்க மாட்டேன். அந்த எல்லையிலேயே இருக்கமாட்டேன். உங்க மேல் ஆணை.''

''நீங்க இறங்கி வந்து கீழே உங்க காரண்டை நில்லுங்க. உங்களை அங்கே பார்த்து உறுதியாய் தெரிஞ்சுண்ட பிறகு தான் நான் விசிட்டர்களின் நாற்காலிப் பக்கமாய் போவேன்.''

''அப்படீன்னால் சரி'' போனை வைத்து விட்டு லெட்டர் பேடிலிருந்த கடைசி தாளைக் கையிலெடுத்துக் கொண்டான். ஒன்றுமே எழுதாமல் அதைக் கவரில் வைத்து ஒட்டினான் கவரின் மேலே மட்டும்,

'ஓ நிலாப்பெண்ணே! என்னென்னவோ எடுத்துச்சொல்ல நினைத்த உணர்ச்சிகளெல்லாம் மடை திறந்த வெள்ளமாய் பாய்ந்து வந்து மூழ்கடித்து விட, எஞ்சி நின்றது தூய்மையான சூனியம் ஒன்றே—ரேவந்த்'' என்று எழுதினான்.

பிறகு இன்டர்காமில் ஜேம்ஸைக் கூப்பிட்டான். ''ஜேம்ஸ்! ஒரு முக்கியமான உதவி பண்ணணும் நீ'' என்று நிகழ்ந்ததையெல்லாம் சொல்லிவிட்டு, ''அந்தப் பொண்ணு கொஞ்சம் அலசரப்பட்டு, ஏமாந்துட்டாள். என்னை அங்கே இருக்கக்கூடாதுன்னு சொன்னாளேயன்றி என் சிநேகிதர்கள் யாருமே அங்கே இருக்கக் கூடாதுன்னு சத்தியம் வாங்கிக்கலை. அதனால் நீ அங்கே ஒளிஞ்சுக்கணும். அந்தப் பெண்ணை எப்படியாவது நீ பிடிச்சுடணும்.''

ஜேம்ஸ் ஒத்துக் கொண்டான். இருவரும் விசிட்டர்களின் வராந்தாவுக்குப் போனார்கள். ரேவந்த் நாற்காலியின் கீழே கவரை வைத்தான். மாலை ஐந்தடித்து விட்டதால் ஆபீசு முழுவதும் ஆளரவமின்றி இருந்தது.

''நான் காரிடம் போய் நிற்கிறேன்'' என்று கீழே ஓடினான் ரேவந்த். ஜேம்ஸ் அங்கிருந்த தடுப்பிற்குப் பின்னால் மங்கலான நிழலில் போய் நின்று கொண்டான். ஐந்தரையடித்து விட்டதை கடிகாரத்தின் ஒற்றை மணியோசை எடுத்துக்காட்டிற்று.

வெளியே காருக்கருகில் ரேவந்தும் உள்ளே இருளில் ஜேம்சும்—பரபரப்புடன் ஒவ்வொரு வினாடியையும் கழித்துக் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் பரபரப்பில் வியர்த்துக் கொட்டிற்று.

வெளியே வந்து நின்ற ஒவ்வொரு காரையும் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தான் ரேவந்த்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன!

...பத்து நிமிஷங்கள்...

ஜேம்ஸ் அலுப்போடு கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். அப்பெண் தம் திட்டத்தைத் தெரிந்து கொண்டுதான் வரவில்லை போலிருக்கிறது என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதற்குள் ரேவந்த் சந்தடியின்றி அங்கே வந்து, ஜேம்சின் காதுகளில் ''என்ன, இன்னுமா வரக்காணோம்?'' என்று கிசுகிசுத்தான்.

''வரலை'' என்றான் ஜேம்ஸ்.

சட்டென்று ரேவந்தின் பார்வை நாற்காலிக்குக் கீழே கிடந்த வேறொரு காகிதத்தின் மேல் பட்டது. தான் வைத்த கடிதத்திற்குப் பக்கத்திலேயே அந்த காகிதமும் இருந்தது. முதலில் அதைப் பார்க்கவில்லை. ஓடிப்போய் அக்காகிதத்தை எடுத்துப் பார்த்தான். அந்தப் பெண்ணின் கையெழுத்து தான் அது.

—''இந்த விசிட்டர்களின் நாற்காலிக்குக் கீழே வேண்டாம். முதல் மாடியிலுள்ள தண்ணீர் டாங்கிற்கருகில் வையுங்கள்'' என்றிருந்தது அதில்.

சிநேகிதர்களிருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். ''கவரை வைப்பதற்கு முன்னாடியே இந்தக் காகிதத்தைப் பார்க்காதது நம் தப்பு. பாவம் அந்தப் பெண், அங்கே எதிர்பார்த்துண்டிருந்திருப்பாள். ஒன்றுமே தெரியாததுபோல நான் போய் இந்தக் கவரை அங்கே வெச்சுட்டு வந்துடறேன். நீ ஒளிந்துண்டிருந்து அந்தப் பெண்ணைப் பாரு'' என்று முதல் மாடிக்கு ஓடினான்.

தண்ணீர் டாங்கிற்கருகில் கவரை வைக்கப் போன பொழுது அங்கே இன்னொரு சீட்டு தென்பட்டது. ''இங்கே வேண்டாம். நான்காவது மாடியிலுள்ள டாய்லெட் கதவிற் கருகில் வையுங்கள்.'' என்றிருந்தது.

அங்கு போனபொழுது மூன்றாவது மாடியில் என்று எழுதியிருந்தது.

பத்து நிமிஷங்கள் வரையிலும் சிநேகிதர்களிருவரும் வேதாளத்தின் பிடியைத் தப்ப விட்ட விக்ரமாதித்தனைப் போல ஒரு மாடியிலிருந்து வேறொரு மாடிக்கு மூச்சிரைக்க ஓடிக் கொண்டேயிருந்தார்கள். அரைமணிக்குப் பிறகு கடைசி சீட்டுக் கிடைத்தது...'' மிகக் கஷ்டப்பட்டு விட்டீர்கள். இனி உங்கள் அறைக்குப் போங்கள்'' என்று எழுதியிருந்தது.

ரேவந்த் மனமொடிந்து போனான்.

''ஒருக்கால் நம்ப திட்டத்தைத் தெரிஞ்சுண்டிருப்பாள் போலிருக்கு'' என்றான் ஜேம்ஸ்.

''அப்படின்னால் அவள் தோற்றுட்டாற் போலத் தானே?'' என்று தன் அறைக்குள் நுழையப்போன ரேவந்தை நோக்கி ஓடிவந்த வேலையாள், ''அம்மா உங்களுக்காகக் காத்துக் காத்துப் பார்த்துட்டு இப்பத்தான் சார் போனாங்க'' என்றான்.

ரேவந்த் வியப்போடு ''எந்த அம்மா?'' என்றி கேட்டான்.

''உங்க மாமாப் பொண்ணுங்க.''

ரேவந்தும் ஜேம்சும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த ரேவந்த் தன் அறையிலிருந்த குப்பைக்கூடை காலியாயிருந்ததைப் பார்த்தவன் ஏதோ புரிந்தாற்போலிருக்கவே அப்படியே நின்றுவிட்டான். வினாடி நேரத்திற்குள் என்னென்னவோ யோசனைகள்!

மாமாபெண் என்று சொல்லிக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து. தான் காதல் கடிதம் எழுதத் தொடங்கி,

கிழித்துப் போட்ட காகிதங்களையெல்லாம் பொறுக்கி மூட்டை கட்டிக் கொண்டு போயிருக்கிறாள்! துப்புரவாய் எழுதப்பட்ட கடைசி கடிதத்தைவிட அதற்கு முன்னால் எழுதிய ரஃப் கடிதங்களிலிருந்துதான் உண்மையான மனதைக் கண்டு பிடிக்க முடியும். அதுதான் உண்மையான காதல் கடிதம். அவள் அதை மெதுவாய் மூட்டை கட்டிக் கொண்டிருந்தபோது தான் பெரிய துப்பறிபவனைப் போல வெற்றுக் கவரை எடுத்துக்கொண்டு மாடியெல்லாம் சுற்றி யலைத்திருக்கிறான்.

முதல் காதல் கடிதத்தை எழுதுபவன் கண்டிப்பாய் இருபத்தைந்து காகிதங்களையாவது கிழித்தெறிவான் என்று தெரிந்துதான் 'பரவாயில்லை, சாயந்திரம் வரையிலும் எழுதிண்டிருங்கள்' என்று டைம் கொடுத்திருக்கிறாள். தானோ ஒன்றுந் தெரியாமல் அந்த வலையில் வீழ்ந்திருக் கிறான்.

'இடியட்' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான் ரேவந்த்.

அதுவரை நடந்ததையெல்லாம் வெறுமே பார்வை யிட்டுக் கொண்டிருந்த ஜேம்ஸ் இனி பலனில்லை என்றறிந்து, ''இந்தப் பொண்ணு யாரோ தெரியலை, நாம்ப எண்ணிண்டிருப்பதைவிட பலே கெட்டிக்காரியாயிருப்பாள் போலிருக்கு. அவள் நம்பரைக் கண்டு பிடிக்கக் கூடிய ஆள் ஒருத்தன் தான் உண்டு'' என்றான்.

ரேவந்த் ஆர்வந்தாங்காமல் ''யாரது?'' என்றான்.

''அவன் ஒரு கம்ப்யூட்டர் டெக்னாலஜிஸ்ட் எலெக்ட்ரானிக் கிராஜீவேட். அதுமட்டுமில்லை, கணிதமேதை கூட. இந்த வேலைக்கு அவரை நாளைக்கே நியமிப்போம்.''

''யாரவர்?''

''பண்டிட் பிச்சைய சாஸ்திரி.''

* * *

''வணக்கம். உள்ளே வரலாமா?'' வேலை பண்ணிக் கொண்டிருந்த ரேவந்த் நிமிர்ந்து பார்த்தான். கதவிற்கருகில் நின்று கொண்டிருந்த ஆள் நெற்றியில் பொட்டுடனும் தலையில் சிறிய குடுமியுடனும், கையில் ஒரு பையுடனும் நின்று கொண்டிருந்தார். ஆபீசுக்கு ஜோதிடம் பார்ப்பவர் கள் யாராவது இம்மாதிரி வந்து பதவி உயர்வு எப்பொழுது கிடைக்கும் என்பதைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போவது வழக்கந்தான். சிலர் கிளிகளைக்கூட கொண்டு வந்து விடுவார்கள்.

''நீங்க யாரு?'' கேட்டான் ரேவந்த்.

''நம்மைப் பண்டித பிச்சய்ய சாஸ்திரிம்பாங்க.'' ரேவந்த் அதிர்ந்தவனாய் அந்த ஆளை ஏறிட்டுப் பார்த்தான். ஜேம்ஸ் சொன்னது போல இவர் எலெக்ட்ரானிக் கிராஜீ வேட்டும் கம்ப்யூட்டர் டெக்னாலாஜிஸ்டுமா? சந்தேகமாய் அவரைப் பார்த்தான்.

''நான் எலெக்ட்ரானிக் கிராஜீவேட், கம்ப்யூட்டர் டெக்னாலாஜிஸ்ட் கூட. அத்துடன் கணிதமேதை வேறு. ஜேம்ஸ் என்பவர் அனுப்பி இங்கே வந்தேன். சங்கோஜப் படாமல் உங்களுடைய கஷ்டத்தைச் சொல்லுங்க'' என்றார் அவர்.

''ஒரு பெண்ணை நான் காதலித்தேன். அவள் மூளை ஒரு கணிதப் பெட்டகம். வீட்டு விலாசத்தைக் கண்டு பிடித்துச் சொல்லணும்'' என்றான் ரேவந்த். அதற்குள் போன் ஒலித்தது. ரேவந்த்தை முந்திக்கொண்டு அவரே போனை எடுத்துப் பேசினார்.

''ஆமாம் பெண்ணே...இது ரேவந்தின் இருப்பிடந்தான். அவனும் இங்கேயே தான் இருக்கிறான். ஆனால் அவன் சார்பில் நான் சில கேள்விகளைக் கேட்கப் போகிறேன். தயங்காமல் பதில் சொல்லு...''

அவள் என்ன பேசப்போகிறாளோ என்று மூச்சை அடக்கிக் கேட்டுக் கொண்டிருந்தான் ரேவந்த். அவ்விரு வருக்கும் கொஞ்சநேரம் சம்பாஷணை நடந்தது. தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டார் பிச்சய்ய சாஸ்திரி.

''இப்ப என் அபூர்வமான மேதா விலாசத்தைப் பயன் படுத்தி உன் எண்ணைக் கண்டுப் பிடித்துடுவேன். இக்கேள்வி கள் ரொம்ப சாமர்த்தியமான கேள்விகள். கவனமாய் பதில் சொல்லனும்மா.''

''சொல்றேன்'' என்றாள் அப்பெண் மறுமுனை யிலிருந்து.

''ஆள்காட்டி விரலால் உன் போனைச் சுழற்றினபொழுது முதல் எண்ணைச் சுழற்றுவதற்குப் பிடித்த நேரத்தை விட இரண்டாவது எண்ணைச் சுழற்றுவதற்குப் பிடித்த நேரம் எவ்வளவு மடங்கு அதிகம்?''

''இருமடங்கு அதிகம்.''

''அப்படீன்னால் உன் உத்தேசம் முதல் என் ஒன்றா னால் இரண்டாம் எண் இரண்டுன்னு அர்த்தமா?''

''உங்க துப்பறியும் அறிவுக்கு வருந்துகிறேன். ஒன்றுக்குப் பக்கத்திலேயே இரண்டு இருக்காது. கடைசி வரையிலும் சுழற்றுவதற்குப் பிடிக்கும் நேரமும் அவ் விரண்டிற்கும் ஆகும் நேரமும் கிட்டத்தட்ட ஒரே நேரந்தான். கொஞ்சந்தான் வித்தியாசமிருக்கும் இருமடங்கு இருக்காது.''

பிச்சய்ய சாஸ்திரி திக்கென்ற உள்ளத்துடன். ''அபூர்வ மேதாவிலாசமுடைய எங்களைப் போன்றவங்க இந்த மாதிரி சின்ன விஷயங்களை மறந்துவிடுவதில் ஆச்சரியமில்லை'' என்று சுதாரித்துக் கொண்டார்.

''அப்படி உங்களுக்கு என் போன் நம்பர் தேவையா யிருந்தால் ஒரு நல்ல கணக்குச் சொல்றேன், எழுதிக்குங்க.''

பிச்சய்ய சாஸ்திரி காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டார்.

அவள் சொன்னாள். ''டான் தீடா பைரூட் ஆஃப் ஒன் ப்ளஸ் டான் ஸ்கிவேர் தீடா.''

பிச்சய்ய சாஸ்திரி கலவரத்துடன் ''இன்னொரு தடவை சொல்லு'' என்றார். அவள் சொன்னாள். பிச்சய்ய சாஸ்திரி அவளோடு பேசி முடித்துவிட்டு போனை வைத்தார் ரேவந்தைப் பார்த்து ''தெரிஞ்சுடுத்து தெரிஞ்சுடுத்து''. என்றார்.

ரேவந்த் அலுப்போடு, ''என்ன தெரிஞ்சுது?'' என்றான். ''காதலனே! இந்தப் பெண்ணின் போன் நம்பர் தெரிஞ்சுக் கணுமானால் நீ நம்ப பெரிய கடைவீதி நாற்சந்திலுள்ள நேரு சிலையிடம் போகணும்.''

''போய் என்ன பண்றது?''

''புறாவைப் பறக்க விட்டுக் கொண்டிருக்கும் அந்த நேருவின் வலது கையானது அவருடைய உடம்பிற்கு எத்தனைக் கோணத்தில் இருக்கிறதுன்னு கண்டுபிடிக்கணும்—''

''கிழிச்சாற் போலத்தான்.''

''அந்த காலத்து ராஜகுமாரர்கள் காதலுக்காக சப்த சமுத்திரங்களையும் தாண்டுவாங்களாம். நீ இதுகூடவா பண்ணமுடியாது?''

ரேவந்த் யோசிக்கத் தொடங்கினான்.

ஜேம்ஸ் ஊக்குவிப்பதுபோல பார்த்தான். ரேவந்த் கொஞ்சம் தடுமாறிவிட்டு ''சரி'' என்றான்.

அன்றிரவு பதினோறு மணிக்கு அவனும் ஜேம்சும் கருப்பு உடை அணிந்து கொண்டு நேரு சிலைக்கருகில் வந்து சேர்ந்தார்கள்.

நினைத்தாற்போல எளிதில் முடிந்துவிடவில்லை வேலை டேப்பைம் பிடித்து அளந்து கொண்டிருந்தபோது, பீட் கான்ஸ்டபிள் பிடித்துக் கொண்டார். தாம் அரேபியர்களில்லை என்றும் சிற்பங்களைக் கொள்ளையடிக்கும் கள்ளக்கடத்தல் காரர்களும் இல்லை என்றும் எவ்வளவு சொல்லியும் கேட்க வில்லை. 'சர்வே இலாக்காவைச் சேர்ந்த ஆட்கள் நாங்கள் என்று சொல்லிப் பார்த்தார்கள், ஆனால் 'நள்ளிரவு நேரத்தில் அந்த இலாக்காவினர் எதற்கு வேலை பண்ணனும் என்று எதிர்க்கேள்வியைத் தொடுத்தான் போலீஸ். கொஞ்சம் புத்திசாலியாய் தெரிந்தான் அவன், தவறிப்போய் போலீஸ் இலாக்காவிற்கு வந்து விட்டான் போலிருந்தது. அவனுக்குப் பத்து ரூபாயைக் கொடுத்து விட்டுத் தப்பித்து வருவதற்குள் உயிர் போய் மீண்டது. இறுதியில் அந்த கோணம் எவ்வளவு என்று கண்டுப்பிடித்து அன்றிர வோடிரவாய் பிச்சய்ய சாஸ்த்திரியின் வீட்டிற்குக் கிளம் பினார்கள்.

இரவெல்லாம் உறக்கமில்லாதது போல அவர் கண்கள் சிவந்திருந்தன. சுற்றிலும் காகிதங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றில் கணக்குகள் போடப்பட்டிருந்தன. ஒயர்களும் ஒ கால்குலேடர்களும், எலெக்ட்ரானிக் சாதனங்களும் சுற்றிலு மிருந்தன. நேற்று அப்பெண் சொன்னதை வைத்துக் கொண்டு இவர் இவ்வளவு கணக்குப் போட்டுப் பார்த்தி ருக்கிறார் என்று புரிந்தது ரேவந்திற்கு.

''நேருவின் கை எண்பத்தெட்டு டிகிரி கோணத்தில் மேலே நீட்டிக் கொண்டிருக்கிறது. இதை வைத்துண்டு என்ன புரிஞ்சுது உங்களுக்கு?'' என்று கேட்டான் ரேவந்த் பிச்சயய சாஸ்திரி காகிதத்தில் எழுதினார். ''டான் தீடா பை ரூட் ஆஃப் ஒன் ப்ளஸ் டான் ஸ்க்வேர் தீடா.....''

அவர் சிறிய கணக்கை இவ்வளவு குழப்புவதைப் பார்த்து வியந்தான் ரேவந்த்.

தொடர்ந்து அவர் சில நம்பர்களைக் கூட்டி சிலவற்றைக் கழித்தார். சிலவற்றைக் கால்குலேடர் மூலமாய் கழித்தார். கொஞ்ச நேரம் யோசித்தார். பிறகு கண்களைத் திறந்து ''தெரிந்துடுத்து'' என்றார்.

''என்ன தெரிந்தது?''

''ரேவந்த்தின் காதலியுடைய டெலிபோன் நம்பர்.'' சிநேகிதர்களிருவரும் பரபரப்புடன் ''என்ன நம்பர்?'' என்று கேட்டார்கள். ரேவந்த்தின் கை உணர்ச்சி வேகத்தில் நடுங்க லாயிற்று.

''பையா! உன் காதலியின் நம்பர் 76346.'' சட்டென்று காற்று போன பலூனைப் போலான ரேவந்த், ''இது மூட்டாள்தனம்'' என்று கத்திவிட்டான்.

பிச்சய்ய சாஸ்திரி கோபமாய், ''இது தப்பாயிருக்க வழியேயில்லை,'' என்றார்.

''நீங்க எங்கேயோ தவறு பண்ணிட்டீங்க.''

''முட்டாளே! என் மேதாவிலாசத்தையும், என் கால்குலேட்டர் பயிற்சியையும், என் விஞ்ஞானத்தையும் எலெக்ட்ரானிக் உலகத்தில் விஞ்ஞானிகள் சாதித்த மேன்மையையுமா பரிகாசம் பண்ணத் துணிந்துட்டாய்?'' என்று திட்டினார்.


ரேவந்த் பணிவோடு, ''அதைப்பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. இந்த நம்பர் மட்டும் இல்லவே இல்லை.''

''இதே நம்பர்தான்.''

''இது இல்லவேயில்லை.''

''அத்தனை உறுதியாய் எப்படிச் சொல்கிறாய்!''

''இது என்னுடைய போன் நம்பரானதால்!''



அன்பார்ந்த உங்களுக்கு—

நலமாயிருக்கிறீங்களா?...

சில விஷயங்கள் தவிர்க்க விரும்பினாலும் நம்மைச் சுற்றிக் கொண்டேயிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளுள் ஒன்று உங்கள் நினைவு! அதிலிருந்து தப்பிக்க முயன்று பலனில் லாமல் போகவே சும்மாயிருக்கிறேன்.

நேற்றிரவு கார் கண்ணாடியை மேலே தூக்கி உள்ளே உட்கார்ந்தபடி நேரு சிலைக்கருகில் இரு இளைஞர்கள் போலீசுடன் போராடிக் கொண்டிருந்ததைப் பார்க்க நேர்ந்தது தெவிட்டாததாய் இருந்தது. ஏதோ ஆங்கிலப் படத்தில் நகைச்சுவை காட்சியைப் பார்ப்பது போலிருந்தது.

உங்கள் ரஃப் கடிதங்களையெல்லாம் பார்த்தேன். ஒவ்வொன்றுந்தான் எவ்வளவு நன்றாயிருந்தன!...எப்படி ஆரம்பிப்பது என்ற ஒரே விஷயத்திற்கே பத்துக் காகிதங்களை வீணடித்திருக்கிறீர்கள்.

உங்கள் கடிதங்களிலிருந்த ஒரு வாக்கியம் எனக்குப் பிடித்துப் போய்விட்டது.'' என் இந்த உணர்ச்சியை உனக்கு எடுத்துச் சொல்லுவதைவிட, எனக்குள்ளேயே நான் மறைத்து வைத்துக் கொண்டால்தான் என் மனதின் அடித்தளத்தில் அது புதையுண்டு போய் எனக்கு அதிக சந்தோஷத்தைத் தருகிறது. சொல்லுவதைவிட சொல்லாமல் போவதே அதிக சந்தோஷத்தைத் தருகிறது. இல்லையா?'' என்ற வாக்கியந்தான்! என்

எண்ணம் என்றுமே தவறியதில்லை. மேலுக்கு மிக மெட்டீரியலிஸ்ட்டாகத் தென்படும் நீங்கள் உள்ளூர மிக நுட்பமானவர், இல்லையா?

போனவாரம் அப்பா என் பிறந்தநாளுக்கு ஏதாவது வாங்கிக் கொள்ளச் சொல்லித் தந்த பணத்தில் ஸ்மக்லிங் போன் சாதனங்களை வரவழைத்தது வீட்டில் யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் அலட்சியமாய் செலவழிப்ப தாய் அம்மா திட்டித் தீர்ப்பாள்.

நேற்று உங்கள் ஆபீசுக்கு எதிரேயிருக்கும் பிளாட்டில் (நம்பரைச் சொல்ல மாட்டேன்) இருந்து கொண்டு ஜன்னல் வழியாய் உங்கள் ஆபீசு அறையை பைனாகுலர் மூலமாய் நானும் என் சிநேகிதியும் ஒரு மணி நேரம் சர்ச்சைப் பண்ணிக் கொண்டே பார்த்தோம். என்னதான் விஷயம் என்று கேட்கிறீர்களா? அடிக்கடி நீங்கள் கிராப்பை சரி பண்ணிக் கொண்டது வலது கையால் என்று நானும், இல்லை இடது கையால் என்று என் சிநேகிதியும்...நீங்கள் யார் பக்கம் சார்? (கோபம் வந்தால்—ஏற்கனவே சிரிக்கலாமா வேண்டாமா? என்றிருக்கும் உங்கள் முகம் மேலும் நன்றாயிருக்கும் என்பது உண்மை). என் சிநேகிதி சொல்கிறாள் உங்கள் நெற்றி காவேரிப் படுகையைப் போலிருக்கிறதாம். நல்ல வேளை வாய் கொள்ளிடத்தைப் போலிருக்கிறது என்று சொல்லாமல் போனாள். இன்னொரு தடவை இந்த மாதிரி வருணித்தால் கொன்றுடுவேன் என்று சொன்னேன்.

இனி என் தினசரி நிகழ்ச்சிக்கு வருவோம். இரண்டு நாளாய் அம்மா, அப்பா ஊரிலில்லை. நான்தான் நளபாகம்! வீட்டிலுள்ள எஞ்சியவர்களுக்கெல்லாம் கூட நான்தான் கதி. எங்களுக்கெல்லாம் பெரிய திக்கு எங்கள் பாட்டிதான். பாட்டியுடன் பேசும்பொழுது தப்பித்தோம் பிழைத்தோம்னு, ஓடிவிடணும் போலிருக்கும். எல்லாம் கல்யாணம்... குடும்பம்...இதைப் பற்றியேதான்! எங்கள் இந்த நவீனச்

சூழ்நிலையில் கொஞ்சமாவது தமிழ்ச் சூழ்நிலையை ஞாபகப் படுத்துவது பாட்டிதான்!

ரேவந்த்!

நான் உங்களிடம் ரொம்பவும் உரிமையோடு பழகு கிறேனா? அன்று உங்களுக்கு 'இருட்டில் பெண்கள்' கதையைச் சொன்ன பிறகு அப்படித்தான் தோன்றிற்று எனக்கு. எங்கோ படித்தேன். 'பெண்களுக்குத் தன்னை ஏதாவது பண்ணிவிடப் போகிறார்களே என்ற பயம். பண்ண வேண்டும் என்ற குதூகலம்' இவ்விரண்டும் உண்டாம். இது எவ்வளவு தூரம் உண்மையென்று தெரியாது. ஆனால் உங்களிடம் மட்டும் சிறகை விரித்துக் கொண்டு பறந்தோடி வரவேண்டும் போலிருக்கிறது. குயில் பாடும் பாட்டு கண்ணி மைகளின் வழியே ஈரமாய் வழிந்தோடுகிறது—நம் சிநேகம் நினைவுக்கு வந்தது.

அன்று டாக்சியை விட்டிறங்கி டைப் இன்ஸ்டிடியூட் டிற்குள் நுழைந்தபொழுது தொலைவில் ஒளிந்து நின்றபடி உங்களையே பார்த்தபொழுது ஓட்டமாய் ஓடிவந்து உங்களைச் சந்திக்க வேண்டுமென்று எழுந்த ஆர்வத்தை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டேன். ஏனோ தெரிய வில்லை, கண்களில் மிதந்த கண்ணீர் கன்னங்களில் வழிந் தோடிய நினைவு! முகேஷின் 'சிலிரேசஜனீ' பாட்டு நினைவுக்கு வந்தது.

இன்றிரவு எவ்வளவு நன்றாயிருக்கிறது தெரியுமா? வெளியே மழை லேசாய் தூறிக் கொண்டிருக்கிறது. மின்சாரம் போய்விட்டது. மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் இவ்வாறு உட்கார்ந்து கொண்டு எழுதும்போது அறை முழு வதும் உங்கள் நினைவுகளே அலையலையாய் பரவிக் கொண்டிருக்கிறது. நடுவில் நான். எங்கம்மாவின் பிடியிலி ருந்து ஒளித்து வைத்துக் கொண்ட கேசட்டில் ''மைதோ ஏக் க்வாப் ஹை' பாட்டைப் போட்டுக் கேட்பதென்றால்

ரொம்பப் பிடிக்கும் எனக்கு. அம்மா மட்டும் எப்பொழுதும் 'துறுக்கரகளை' என்பாள். ஆனாலும் என்னைக் கண்டாரல் ரொம்ப பாசம்! ரேவந்த், நான் விரும்புமளவே மற்றவர்களும் என்னை விரும்பாவிட்டால் நான் மிகவும் வருந்துவேன்.

கே. வி. அப்பாஸ் நாவலைப் படித்திருக்கிறீர்களா? 'ஜோக்கர்' என்றால் எனக்கு நிரம்பப் பிடிக்கும். எவ்வளவு தடவை காதலை வேண்டினாலும் அது அவனிடமே வந்து சேர்ந்து விடுகிறது. ரொம்ப மெலோடி இல்லையா? அக் கதையில் அப்பாசின் நாவலைவிட கவிதை நன்றாயிருக் கிறது. 'வென் தி நைட் :பால்ஸ்' என்று ஒரு கட்டுரையைப் படித்த நினைவு. பங்களாதேஷ் கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெகு நாட்களுக்கு முன்னால் ஒரு பத்திரிகை யில் வெளிவந்தது. எவவளவு நன்றாயிருந்தன! காதலொன்றே வாழ்க்கையை சோபிக்கச் செய்யும் என்றெண்ணவில்லை நான்!

எனக்குத் தோன்றுகிறது நாளொன்றுக்கு இருபத்தி நான்கு மணி நேரங்களை மட்டுமே வைத்திருக்கும் இறைவன் எவ்வளவு சுயநலவாதி என்று! புத்தகங்கள், கவிதைகள், படம் வரைதல், விஞ்ஞானம், பாட்டு—தென்னையோலை களின் சலசலப்பு...இத்தனை சிறிய வாழ்க்கையில் எதைத் தான் நம்மால் கடைப்பிடிக்கமுடியும்? ஒவ்வொரு துறையும் அகன்றவையே! சிலவற்றையே ருசி பார்ப்பதற்குள் வாழ்க்கையில் பெரும்பாகம் கழிந்து விடுகிறது. உண்மையில் இறைவன் பெரிய சாடிஸ்ட்தானே!

ரேவந்த் இது மூன்றாவது கடிதம், நான்காவதும் கடைசி யானதுமான கடிதத்தை இரண்டு மூன்று நாட்களில் எழுது கிறேன். நீங்கள் எழுதி என்னிடம் தர வெட்கமடைந்து, கிழித்துக் குப்பைக் கூடையில் போட்ட கடிதங்களிலிருந்த ஒரு வரியை இங்கே எழுதி இக் கடிதத்தை முடிக்கிறேன்.

"நீங்கள் என்னை உண்மையில் இவ்வளவு தூரம் காதலிக்கிறீர்களா? என்றே எனக்கு சந்தேகமாயிருக்கிறது.

என் ஊகம் என்னவென்றால் நீங்கள் ஆளைக் காதலிப்பதை விட காதலிக்கிறோம் என்ற உணர்ச்சியையே அதிகமாய் காதலிக்கிறீர்கள் என்று! உண்மைதானே?''—படிக்கப்படிக்க எவ்வளவோ பொருள்களை உணர்த்தும் இந்த வரிகளைதான் எவ்வளவு முறை படித்திருப்பேனோ! மனதிலிருக்கும் உணர்ச்சி களை வெளிப்படுத்திக் கொள்ளாத உங்கள் குணம் என்னை மிகவும் கவர்ந்தது. பேசாமல், எப்பொழுதும் மௌனமாய் கம்பீரமாயிருப்பவர்கள் எல்லோருமே புத்திசாலிகளில்லை. ஆனால் கெட்டிக்காரர்கள் எல்லோருமே பேச்சை அளந்து பேசுபவர்கள்தான், சரி போகட்டும்.

உங்களைக் கண்டால் எனக்கு எவ்வளவு பிரியம் என்றால்—

என்னிடமிருந்து நான் விட்டுப் பிரிந்து உங்களை அடைய வேண்டுமென்ற அத்தனை தாபம்!

.....

மனதிற்குள்ளும் வெளியேயும் எங்கேயும் அலை மோதும் இரைச்சல் இரைச்சல் இரைச்சல்!

அதென்ன இரைச்சல் என்று தெரிந்துவிட்டால் பிறகு இரைச்சல் ஏது?

ஏராளமான அன்புடன்

ரம்யா.

குறிப்பு:- நீங்கள் இன்னும் என் முழுப் பெயரைக் கண்டு பிடிக்கவில்லை.

* * *

''அங்கே ஜனங்கள் அதிகமாயில்லை. ஆனால் இருந்த வர்கள் எல்லோருமே பரபரப்பாயிருந்தார்கள்.

ஜேம்ஸ் சூட் அணிந்திருந்தான். சுலோக்சனாவுக்குக் கல்யாணக் களை வந்துவிட்டது. பட்டுப்புடவை அணிந்திருந்தாள் அவள். விரலில் ஜேம்ஸ் பரிசளித்த மோதிரம் இருந்தது.

பெனின்சுலா ப்ரொக்ட்ஸ் ஊழியர்களும், டெலிபோன் எக்சேஞ்சில் பணிபுரியும் பெண்கள் சிலரும் அங்கிருந்தார்கள். திருமணம் முடிந்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. பார்ட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எல்லோரும் கும்பலாய் சாப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்த போது அவர்களுக்கு தொலைவில் பால்கனி சுவற்றில் சாய்ந்து கையிலிருந்த பிளேட்டிலிருந்து இனிப்பைத் தின்ற படி நின்று கொண்டிருந்தான் ரேவந்த்.

''என்ன நீங்க இங்கே தனியாய் நிற்கிறீங்க!'' என்று அங்கே வந்தாள் சுலோக்சனா.

ரேவந்த் முறுவடன் வாளாயிருந்து விட்டான், இருவருக்குமிடையே கொஞ்சநேரம் நிசப்தம் நிலவிற்று. அந்த நிசப்தத்தைச் சிதறடித்த அவள், ''ஜேம்ஸை உங்களுக்கு எவ்வளவு நாளாய் தெரியும்?'' என்று கேட்டாள்.

''சுமார் பத்து வருஷமாய்.''

திரும்பவும் நிசப்தம். அந்த நிசப்தத்தில் தடுமாற்றம். தர்மசங்கடமான அவஸ்தை இருந்தது புரிந்தது.

தொலைவிலிருந்த ஜனங்களைப் பார்த்துப் பேசினாள் அவள். ''எங்க வாழ்க்கை எப்படி தொடர்ந்து நடக்கப் போகிறது.

அவளிடமிருந்து திடீரென்று வந்த அந்தக் கேள்வியின் தாக்கலால் ஒரு வினாடி தடுமாறிவிட்டான் அவன்.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவள் முகத்தில் புதிதாய் வந்து சேர்ந்த திருமணக் களையோடு எதிர்காலத்தைப் பற்றிய கலவரமும் சேர்ந்து போட்டியிட்டன. அவள் திகிலோடு சிரித்தாள். ''திடீர்னு இதெல்லாம் ஆயிடுத்து. நினைத்தாலே கனவா நினை வான்னு புரியலை.''

அவனுக்குப் புரிந்தது. சிரித்தான்.

''உள்ளத்தில் ஒன்றை வைத்துண்டு மேலுக்கு நாசுக்காய் தந்திரமாய் பேசும் பலரைவிட ஜேம்ஸ் மிக நல்லவன்தான். மனதிலிருப்பதை ஒளியாமல் அப்படியே சொல்லிவிடுவான். அதனால்தான் அவன் வார்த்தைகள் கடுமையாயும் உணர்ச்சிகள் அபாயகரமாயும் தோன்று கின்றன. அவற்றை மூடி மறைத்துக்கத் தெரியாது அவனுக்கு அதனால்தான்.....''

''ஆனால் அவர் ரொம்ப ஃப்ரீயாய் செக்ஸைப் பற்றியும், ஆண் பெண் சம்பந்தங்களைப் பற்றியும் பேசுவதைப் பார்த் தால் எனக்கு ரொம்ப பயமாயிருக்கு. எங்கள் திருமண வாழ்க்கையில் இதனுடைய விளைவு எப்படியிருக்குமோ?

''அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படிப்பட்டவை...ஒரு மனிதனின் மேல் அவனைச் சுற்றிலுமுள்ள பிரபாவந்தான் ரொம்பவும் படும். அவற்றிலிருந்து மீண்டு, தனக்குப் பிடித்த குணநலங்களை ஏற்படுத்திக்கொள்ள அவனுக்குக் கொஞ்ச நாள் பிடிக்கலாம். சிலர் வெகு சீக்கிரத்திலேயே இம்மாறுதலை ஏற்படுத்திப்பாங்க, வேறு சிலரோ தன் வாழ் நாள் முழுவதுமே ஏற்படுத்திக்க முடியாதவங்களாய் இருந் துடவும் நேரும். இந்த எவல்யூஷயனைப் பற்றி தாமஸ் ஹாரிஸ் என்ற சைக்ரியாட்ரிஸ்ட் நன்றாய் விவரித்திருக் கிறார். முடிந்தால் ''பார்ன் டு வின்'' என்ற புத்தகத்தைப் படிங்க.

ஜேம்சின் மனத்தத்துவம் நன்றாய் புரியும். ரொம்பப் பெரிய ட்ரான்சாக்ஷனல் அனாலிஸிஸ் அதிலிருக்கு. ஜேம்ஸ்

இன்னும் குழந்தைப் பருவத்து மனோநிலையிலேயே இருக்கிறான். அவனை பெரியவங்க நிலைக்கு நீங்க இட்டு வரணுமானால் நீங்களே பெற்றோராய் மாறணும். ஆணின் வாழ்க்கைக்கு இந்த மாதிரி ஒரு வரவேற்பைத் தரணும்னே தெய்வம் பெண்ணைப் படைத்திருக்குன்னு தோணுது எனக்கு. தான் யாருன்னு தெரிவித்துக்காமலேயே என்னுள் இவ்வளவு மாறுதலைக் கொண்டு வந்துட்ட நிலாப்பெண்ணே இதற்கு உதாரணம்.''

ஏனோ தெரியவில்லை, நிலாப்பெண்ணைப் பற்றிப் பேச்செடுத்ததுமே சுலோச்சனாவின் உதடுகளில் குறுநகை படர்ந்தது.



அறை முழுவதும் மல்லிகை மலரின் வாசனை நாசியைத் துளைத்தது.

வெள்ளை வெளேரென்ற விரிப்பு சுகமாயிருந்தது. அவ்வறைக்குப் புது அழகு வந்து சேர்ந்து விட்டாற் போல துப்புறவாயிருந்தது.

இரவு பத்துமணி.

சுலோச்சனாவும் ஜேம்சும் கட்டிலில் உட்கார்த்திருந்தார்கள். சுமார் அரைமணி நேரமாய் அவ்விருவரும் பேசிகொண்டேயிருக்கிறார்கள். வரும் சம்பளத்தைப் பற்றியும் குழந்தைகள் எப்பொழுது வேண்டும் என்பதும், புகைப்பிடிபதைப் பற்றி அவளுடைய அபிப்பிராயம் என்னவென்பதைப்

பற்றியும்—ஒவ்வொன்றாய் அவன் கேட்கக் கேட்க பதிலளித்துக் கொண்டிருந்த அவளுக்கு உற்சாகம் மடிந்தது.

முதலிரவன்று பேசும் பேச்சா இது என்றெண்ணிக் கொண்டாள்.

கடியாரம் பதினோரடித்தது.

அவன் அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவனுடைய கழுத்துப் பிடரியில் அவள் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

அவளுடைய நிச்சிந்தையைச் சிதறடித்தவனாய் அவன் அவளைக் கேட்டான், "...ஆர் யூ குட் இன் பெட்?"

கேள்வியின் பொருள் விளங்கியதுமே அவன் காய்ந்த இலைச்சருகைப் போல நடுநடுங்கியவள் உடனே தன்னைத் தேற்றிக் கொண்டாள். "ஐ யாம் நாட் ஒ.கே—யூ ஆர் நாட் ஒ.கே—எந்தப் பெண்ணுமே முதலில் காதலைத்தான் பகிர்ந்து கொள்ள விரும்புவாள். பிறகுதான் அவ்வன்பையும் காதலையும் வெளிக்காட்டிக் கொள்வதற்காகக் கட்டிலைப் பகிர்ந்து கொள்ள விரும்பிவாளேயன்றி காதலின் சுவையையே அறிய முடியாத பெண்ணுக்குக் கட்டிலைப் பற்றி என்ன தெரியும்?"

அவன் அந்த வாதனையைக் கேட்டு வியப்படைந்தவனாய்—

"அப்படின்னால் உங்களைப்பற்றி நான் எண்ணிண்டிருப்பது தப்புன்னு சொல்லுங்க" என்றான்.

"என்ன எண்ணிண்டிருக்கீங்க என்னைப்பற்றி? ரொம்பப் பேருடன் பழகுபவள்னு நினைச்சீங்களா? அப்படி நினைத்தும் என்னை பண்ணிக்கிட்டீங்களா?" அவன் சர்வ சாதாரணமாய் "பெண் எனக்குப் புதிது இல்லை. அப்படியிருக்கும்போது என் மனைவிக்குப் புருஷன் புதிதாயிருக்கணும்னு விரும்பற

உரிமை கூட எனக்குக் கிடையாது. ஒருவர்க்கொருவர் துணையாயிருப்பதற்காகவும், ஒருவர் தேவையை மற்றவர் தீர்த்துக் கொள்வதற்காகவும் மட்டுமே கல்யாணங்கறது நடக்கிறது. இந்தக் காதல் கீதல் எல்லாம் 'ட்ராஷ்' என்பது என் அபிப்பிராயம். ஒருத்தரையொருத்தர் பார்த்துக்காமல் மணிக்கணக்காய் போனில் பேசிண்டு காதல் கீதல்னு உளறும் எங்க ரேவந்தையும் அந்த நிலாப் பெண்ணையும் பார்த்தாலே எனக்குச் சிரிப்பு வரது'' என்றான்.

''அப்படிப் பேசிப் பதில் ஒன்றுமே இல்லைங்கிறீங்களா?''

''ஒன்றுமே இல்லை.''

அவள் நிம்மதியாய் பெருமூச்சு விட்டு ''பிழைத்தேன்' என்றாள்.

''ஏன்?''

''நிலாப்பெண் நானானதால்...'' என்றாள் ராஜ சுலோச்சனா.

ஜேம்சுக்கு ஒரு வினாடி அவள் சொன்னது எதுவுமே புரியவில்லை. புரிந்த பிறகும் குழப்பத்துடனே இருந்து விட்டான். அவ்வுண்மையை உடனே செரிக்க முடியாத தடுமாற்றமடைந்தவன் வெகு நேரங்கழித்துத் தன்னைத் தேற்றிக் கொண்டு ''என்னது?'' என்றான்? அவன் மூளையை யாரோ அழுத்தினாற்போலிருந்தது. குரல் உடைந்தது.

சுலோச்சனா சாதாரணமாய், ''உங்க சிநேகிதர் ரேவந்துக்கு தினமும் போன் பண்றது நான்தான். முதல்ல ஏதோ பொழுது போக்காய் பண்ணினேன். நாம்ப இந்தமாதிரி கல்யாணம் பண்ணிப்போம்னு நினைக்கலை.'' என்றாள்.

அதற்குள் அவன் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். என்றுமில்லா தவாறு அவன் முகத்தில்

உணர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. ''மை காட்! ரேவந்த் உன்னை உயிரினும் மேலாய் காதலிக்கிறானே!'' என்றான்.

''ஒரு முறை கூட கண்ணால் காணாத பெண்ணை உயிரினும் மேலாய் நேசிக்க முடியும்னு நம்பத்தயாராய் இல்லை நான்.!'

''உனக்கு அவனைப்பற்றித் தெரியாது. நீ எவ்வளவு தப்புப் பண்ணிட்டாய்னு கூட உனக்கே தெரியலை.''

அவள் பேசவில்லை. கொஞ்ச நேரம் நிசப்தமாயிருந்து விட்டு அவனே கேட்டான். ''அப்படின்னால் ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிடியில் படிச்சது?''

''எல்லாம் போகஸ்'' என்று சிரித்தாள் சுலோச்சனா. அவன் சிரிக்கவில்லை. அவள் முகத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். எவ்வளவோ சொல்ல வேண்டும் என்றெண்ணினான். ஆனால் வாயிலிருந்து வார்த்தையே வெளிவர மறுத்தது. அவளுக்கு மட்டும் அவன் போக்கு ஆச்சரியத்தையளித்தது. ''ஏன் அப்படி இருக்கீங்க என்று கேட்டாள்.

அவன் சமாளித்துக் கொண்டு ''ஒன்றுமில்லையே'' என்றவன் பிறகு எதையோ சொல்ல நினைத்துச் சொல்லாமலேயே இருந்து கொண்டான். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு தனக்குள் முணுமுணுத்துக் கொள்வது போல, ''இந்த அடியை அவனால தாங்கிக்க முடியாது'' என்றான்.

சுலோச்சனா மனமுருகி, ''நீங்க இத்தனைச் சின்ன விஷயத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் தரீங்கன்னு தான் புரியலை எனக்கு. சிநேகிதரின் மனைவின்னு தெரிந்த பிறகு கூட அவன் இந்த விருப்பத்தை மேலும் தொடருவான்னு நான் நம்பலை'' என்றாள்.

''தொடருவதா? நான்சென்ஸ்! என் மனைவின்னு தெரிந்துட்டால் அப்புறம் அவன் இந்தப் பக்கமே கண் ணெடுத்தும் பார்க்க மாட்டான்.''

'பின்னே என்ன கவலை?''

''நான் பேசறது அவனைப்பற்றிய சங்கதி.''

''அதற்கென்ன வந்தது? நான்தான் நிலாப்பெண்ணுன்னு அவனுக்குச் சொல்ல வேண்டிய தேவையே இல்லையே? கொஞ்ச நாள் போன் வராமலே போயிட்டால் அவனே இந்த விஷயத்தை மெல்ல மறந்துடுவான். நீங்க சொல்றாப்பல இந்தக் காதல் கீதல்ங்றதெல்லாம் ட்ராஷ்தானே?''

ஜேம்ஸ் அசதியோடு மனைவியை ஏறிட்டுப் பார்த்தவன், எழுந்து ஜன்னலுக்கருகில் போய் வெளியே பார்த்தபடி கொஞ்சநேரம் நின்றான். ''என்ன பண்ணுவது? இப்போ என்ன பண்ணுவது?'' என்று அவன் முணுமுணுத்தது அவளுக்குக் கேட்டது. அவள் எழுந்து அவனக்கருகில் போய் நின்றாள். கொஞ்சநேரம் தயங்கியவள் பிறகு மெதுவாய் சொன்னாள். ''சரி விடுங்க, ...நான் இதை தொடர்ந்துண்டே யிருக்கேன்.'' துப்பாக்கி குண்டு விழுந்தாற்போல அதிர்ந்த அவன் சட்டென்று திரும்பி புரியாமல், ''என்ன சொன்னாய்!'' என்றான்.

''நிலாப்பெண்ணாகவே அவனோடு தொடர்ந்து போனில் பேசிண்டேயிருக்கேன். பார்த்தால் அடையாளம் தெரிஞ்சுப் போயிடும். அதனால் சந்திப்பதை எப்படியாவது தவிர்த்துண்டே வரேன். அப்புறமாய் கொஞ்சங் கொஞ்சமாய் பரிச்சயத்தைக் குறைத்துண்டே வந்துடறேன். அவனும் மறந்துடுவான்.''

அவன் கையிலிருந்த சிகரெட் துண்டைக் கடைசி முறையாய் இழுத்து உறிஞ்சி தொலைவில் விட்டெறிந்து விட்டு மேவாயைத் தடவிக் கொண்டே, ''எல்லாவற்றையும் விட இந்த யோசனை தேவலை போலிருக்கு'' என்று திரும்பி வந்து கட்டிலில் அமர்ந்தான்.

அவளும் வததமர்ந்தவள், ''என்னை மன்னிச்சுடுங்க. உங்களிடம் கூட இதைச் சொல்லக்கூடாதுன்னுதான் இருந்தேன். ஆனால் உங்களுக்கு ஃப்ராங்க்னஸ் பிடிக்கும்னு தெரிந்ததால் சொல்லிட்டேன்.'' என்றாள்.

''இல்லை இல்லை, சொன்னதே நல்லதாய் போயிற்று.'' அவள் கைமேல் தன் கையை வைத்துச் சொன்னான்.

அவன் தோளில் தலையை சாய்த்து மெதுவாய் உறக்கத்தில் அழத் தொடங்கினாள் சுலோச்சனா. அவன் கைநீட்டி விளக்கை அணைத்தான். இருள் அறையில் வந்து சூழ்ந்து கொண்டது. விடிவிளக்கு இருளை விரட்டியடிக்கத் தொடங்கிற்று.

இரவு பதினோறு மணியைத் தாண்டி விட்டதால் ஊரே நிசப்தத்தில் தோய்ந்து கிடந்தது. எங்கோ ஒரு நாய் மட்டும் திடிரென்று ஒருமுறை அழுதது. ஒரு பிச்சைக்காரன் பாட்டுப் பாடிக் கொண்டே வீதியில் போய்க்கொண்டிருந்தான்.

ஜேம்ஸ் நிமிர்ந்து சுவற்றைப் பார்த்தான். கிதார் தென்பட்டது. கூட்டில் டிராயிங் இங்க் தென்பட்டது. அவ்விரண்டுந்தான் தன் தோழர்கள் என்றெண்ணிக் கொண்டிருந்தான் இதுவரையிலும். தன் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் தோழர்களாய் எண்ணியிருந்தான்.....

திரும்பி மனைவியைப் பார்த்தான். சுலோச்சனா உறங்கிக் கொண்டிருந்தாள். திரும்பும் சுவற்றைப் பார்த்தான். விடிவிளக்கைச் சுற்றி ஒரு விட்டில் பூச்சி சுற்றிக் கொண்டிருந்தது. அவனுக்கு ஏனோ தன்னைச் சுற்றிலுமுள்ள உலகமே சந்தோஷமாய் இருப்பது போலவும் தான் ஒருத்தன் மட்டுமே வேதனையோடிருப்பது போலவும் தோன்றிற்று. எல்லோருமாய் சேர்ந்து தன்னை ஏமாற்றுவது போன்ற உணர்ச்சி. போன் வந்தால் ரேவந்த் முகத்தில் தென்படும் சந்தோஷமும், மணிக்கணக்கில் பேசுவதும், தானும் எடுத்துப் பேசிவிட்டு 'சிஸ்டர்' என்பதும்—

அப்பொழுதுதான் அவனுக்கு அந்தச் சந்தேகம் தோன்றிற்று.

அன்று தன்னோடு பேசிய அப்பெண்ணின் குரலுக்கும் சுலோச்சனாவின் குரலுக்கும் வித்யாசமிருந்தது போன்ற சந்தேகம்.

அச்சந்தேகம் வந்ததுமே சந்தோஷம் ஏற்பட்டது. ஆனால் அதற்குள் இன்னொரு யோசனை. ஒருக்கால் இரு குரல்களுமே ஒன்றாயிருந்தாலும் அதனால் என்ன நஷ்டம்? நான்தான் இந்த மாதிரி விஷயங்களுக்கு முக்கியத்துவம் தர மாட்டேனே? ஆண் பெண் சேர்ந்திருப்பதே கேவலம் உடல் இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்குதான் என்றும் காதல் என்பது வெறும் 'டராஷ்' என்பதுந்தானே தன் எண்ணம்! அந்தக் கணக்குப்படி இந்த சுலோச்சனா—தன் மனைவி—தனக்கு எவ்வளவு சந்தோஷமளிக்கிறாள் என்பதுதானே வேண்டியது! அவள் கடந்தகால வாழ்க்கையும் நிகழ்கால சம்பவங்களும் தனக்கெதற்கு?

அவன் திரும்பிப் பார்த்தான். ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்த சுலோச்சனாவின் இடுப்பு பாகத்தில் விளக்கு வெளிச்சம் பட்டுத் தெளித்துக் கொண்டிருந்தது.

அந்த இடுப்பின் மேல் எந்த பரபுருஷனின் கைவிரல்கள் பட்டு அவ்விளமையை அனுபவித்ததோ? இவளுடைய இந்தக் கைவிரல்கள் பயந்து நடுங்கி எந்தப் புருஷனின் கழுத்தைச் சுற்றிக் கோர்த்துக் கொண்டதோ.....

அவன் சங்கடத்தில் நெளிந்தான், தன் உடைமையை யாரோ அபகரித்துக் கொண்டு போய் விடுவது போன்ற உணர்ச்சி! பரிசுத்தமான வர்ணச் சித்திரத்தை யாரோ பாழடித்து விட்டாற் போன்ற பாவனை.

அவன் கட்டிலில் மற்றொரு முறை சங்கடத்தில் நெளிந்தவன் எழுந்து ஜன்னலுக்கருகில் வந்து இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

அந்த ஓசைக்கு விழித்துக் கொண்ட அவள் அவ்வளவு நேரமாகியும் இன்னும் உறங்காத அவனைப் பார்த்துவிட்டு, ''நீங்க இன்னுமா தூங்கலை'' என்று கேட்டாள் ஆச்சரியமடைந்து.

அவன் மெதுவாய் மனைவியை இமைக்காமல் பார்த்தான். கட்டிலில் வந்து உட்கார்ந்து ''என்னால இந்த உண்மையை ஜீரணித்துக்க முடியலை.''

''எந்த உண்மையை?''

''ரேவந்துக்குப் போன் பண்ணியது.''

அவள் சட்டென்று பதில் பேசவில்லை.

அவ்வறையில் சூழ்ந்திருந்த நிசப்தம் கூட ஆர்வத்துடன் அவர்களையே கவனிக்கத் தொடங்கிற்று. அவள் தொண்டையை கனைத்துக் கொண்டாள். எந்த அகம்பாவமும் தன்மானமும் இன்றி அவன் அவ்வாறு பேசியது அவளைப் பரவசப்படுத்திற்று. தன் கைவிரல்களையே பார்த்தபடி மெல்லிய குரலில் சொன்னாள்.

''எனக்கு மனோதத்துவமோ பெரிய பெரிய ஆங்கிலப் பதமோ தெரியாது. நீங்க என்னைக் கேட்டீங்க ஆர் யூ குட் இன் பெட்?' என்று. வேறு சம்பந்தங்கள் இருந்தாலும் பரவாயில்லை என்று அலட்சியமாய் எடுத்தெறிந்தீர்கள் அவ் வார்த்தையை, ஆனால் அது எண்ணினாற் போல அத்தனை எளிதான விஷயமில்லை என்றெண்ணுகிறேன். நான் மேலுக்கு அந்த மாதிரி சொன்னாலும் மனதிற்குள் எங்கோ மூலையில் இருந்து தீரும். உங்கள் சிறு வயது நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளும் உலகத்தின் மேல் வெருப்பையும் துவேஷத்தையும் வளர்த்திருக்கலாம். அதனால் நீங்க உங்க விருப்பத்தை மனதிற்குள் மறைத்து வைத்துக் கொண்டு வெறுப்பை மட்டுமே வெளியே காட்டுகிறீங்க...நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ற அளவுக்குப் பெரிய மனுஷியில்லை... எப்படிச் சொல்றதுன்னும் புரியலை. பிற புருஷர்களோடு

சம்பந்தம் கூட வேண்டாம் வெறுமே சிரித்துப் பேசினாலும் கூட ஒரு கணவனுக்கு வருத்தமாய்தான் இருக்கும். அப்படி வருத்தமும் வெருப்பும் இருந்தால்தான் அது காதல்! நான் யாரோடோ போனில் பேசினேன் என்று தெரிந்ததுமே உங்களுக்கு இன்றிரவெல்லாம் உறக்கமே வரமாட்டேங்குதே எனக்கு இதை விட வேறென்ன வேண்டும்?

உங்க மனதின் அடித்தளத்தில் எங்கேயோ என் மேல் அன்பு இருக்குன்னு தெரிகிறது. இல்லை என்று சர்வ சாதாரணமாய் சொல்லிடாதீங்க. என் கணவர் அந்தமாதிரி வருத்தப்பட்டது எனக்குப் பெருமையாயிருக்கிறது. ஏன்னால் எனக்கு அந்த மாதிரி பரிச்சயங்கள் கிடையவே கிடையாது. அதனால்.....''


அவள் இறுதி வார்த்தைகள் அவனுக்குச் சட்டென்று புரியவில்லை, புரிந்ததும் முகம் மலர, ''அப்படின்னால் நீ... நீ...'' என்று பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

அவன் சிரித்துவிட்டு, ''நான் நிலாப்பெண் இல்லை'' என்றாள்.

அவன் காற்றினும் கடுக வந்து அவளைச் சுற்றிக் கொண்டான். அவளால் மூச்சு விடவும் முடியவில்லை. ஆனாலும் பரவாயில்லை. இவ்வுலகத்தில் பெரும் பெரும் மகிழ்ச்சியெல்லாம் முதல் முதலில் துன்பத்தைக் கொடுத்து விட்டு வருபவைதான்!

அவன் அணைப்பில் நிச்சிந்தையாய் உறங்க முயன்ற வாறு தனக்குள் எண்ணிக் கொண்டாள் அவள். 'பரவா யில்லை. மனதைச் சுற்றிலும் ஒட்டிக்கொண்டிருந்த அழுக்கு உருகி வழியத் தொடங்கிவிட்டது. விரைவிலேயே அது இன்ப துன்பத்தைத் தன்னுள் ஏற்றுக் கொள்ளப் பழகிவிடும். உலகின்பால் நம்பிக்கை பிறப்பதற்கு இதுதான் முதல்படி. இனி ஐ யாம் ஒ. கே—ஹிவில் பி ஒ. கே.—தாங்க்யூ ரேவந்த்'

இனி அவர்களைப்பற்றிச் சொல்ல எதுவுமேயில்லை.



இரண்டு நாளாய் போனே வராதது அவனைக் கலரப் படுத்திற்று. கெடு முடியப் போகிறதே என்றில்லை. அதற்கு இன்னும் இரண்டு நாளிருந்தன.

ஆனால் அன்றுதான் அவன் டில்லிக்குப் போக வேண்டிய நாள்.

அன்று பதினோறாம் தேதி. ரேவந்திற்கு அப்பெண் ஒரு மாதம் கெடு தந்திருந்தாள். பதிமூன்றாம் தேதிதான் அதற்கு கடைசி நாள். அன்றுமாலை ஐந்துமணிக்குள் கண்டுபிடிக்காவிட்டால் தோற்றுவிட்டாற் போலதான்.

இரண்டு நாள்தான் இருக்கிறதே என்று சாவதானமாய் இருந்துகொள்ள முடியாது. மாலை ஐந்துமணிக்கு விமானம், மறுநாள் டில்லியில் விளையாடிவிட்டு பதிமூன்றாம் தேதி பிற்பகல் கிளம்பினால் திரும்பி வருவதற்குள் மாலை நான் காகிவிடும். அல்லது ஐந்து மணியும் ஆகிவிடலாம்.

வருவதற்குள் ஐந்தாகிவிட்டால் கெடு முடிவடைந்து தோற்றுவிட்டாற் போலதான். அந்த விதத்தில் பார்த்தால் இன்று ஒரே ஒரு நாள்தான் அதுவும் மாலை வரையிலும்தான் நேரமிருக்கிறது.

அதற்குள் அவளுடைய முழு பெயரையும், டெலிபோன் நம்பரையும் விலாசத்தையும் கண்டுபிடித்துவிடவேண்டும்.

கண்டுபிடிக்காது போனாலும் திருமணம் நடக்கலாம். ஆனால் அவள் பார்வையில் அவன் என்றென்றும் ஒரு அறிவிலி யாகவே எஞ்சி நிற்கவேண்டியிருக்கும். அதோடு கடைசி நாளாவது தன்னால் கண்டு பிடித்துவிட முடியும் என்று சவாலிட்டிருந்தானே!

...பதினோரடித்து ஒய்ந்தது கடியாரம். இன்றும் ஆறு மணி நேரங்கூட முழுதாய் இல்லை. விமான நிலையத்திற்கு மாலை நாலரை மணிக்கெல்லாம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும்.

இன்னும் ஏன் போன் வரவில்லை?

தான் டில்லிக்குப் போகப் போவதாய் சொன்ன விஷயத்தை அவள் மறந்துவிட்டாளா? அல்லது தன்னை நன்றாய் தோற்கடித்துவிட எண்ணிதான் இந்த கடைசி நாள் போன் பண்ணாமல் இருந்துவிட்டாளா?

அவனை மேலும் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கு மிடையே அலைக்கழிக்க விரும்பாமல் போன் ஒலித்தது.

அவள்தான்.

''ஹலோ...''

''இவ்வளவு நாளாய் எங்கே போனீங்க? என்னவா யிடுத்து?''

மறுமுனையில் அவள் சிரித்தது கேட்டது. ''சின்ன ப்ராப்ளம்...''

அவன் கலவரமடைந்து ''என்ன?'' என்று கேட்டான்.

அதே சிரிப்பு மாறாமல், '' அப்புறமாய் சொல்றேன், தாம்ப சந்தித்த பிறகு'' என்றாள்.

''நான் இன்றைக்கே டில்லிக்குப் போறேன், தெரியுமா?

''தெரியும்.''

''நாளன்றைக்குதான் திரும்பி வருவேன்.''

''தெரியும்.''

''நாளன்றுதான் நம்ப கடைசி நாள்.''

''ஆமாம், அதனால்தான் இது கடைசி போன்.''

திடீரென்று கலக்கம் வந்து சூழ, அப்படின்னால் என்ன பண்றது?'' என்றான்.

''இவ்வளவு குறிப்புக்களைத் தந்தபோதும் வெறுமே இருந்துட்டு, கடைசி சமயத்தில் என்ன பண்றதுன்னு கேட்டால் என்னால் என்ன பதில் சொல்ல முடியும்.''

''கொடுத்த குறிப்பெல்லாம் தப்புத்தப்பாய் இருந்தால் என்னால் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்''

''அதற்கு பதில் கூட சொன்னேன். எனக்குத் தேவையானது கணக்கு வாத்தியாரில்லை. அந்தமாதிரி இரண்டாங் கிளாசுப் பையன் கூட கணக்குப் போடுவான்.''

''இப்போ எங்கேயிருந்து போன் பண்றீங்க.''

''ஒரு பெரிய ஓட்டலறையிலிருந்து.''

''ஓட்டலிலிருந்தா?''

''ஆமாம் நாள் நெருங்கிண்டு வரதோனோ, அதான் சிநேகிதிகளுக்கெல்லாம் பார்ட்டி தந்துண்டிருக்கேன்.''

அவன் புரியாமல், ''எதற்கு நாள் நெருங்கிண்டு வரது?' என்று கேட்டான்.

''நாம்ப சந்தித்த பிறகு எப்படியும் அவங்களையெல்லாம் விட்டுடணுமில்லே? அதனால்தான் பார்ட்டி தரச் சொல்லி பலவந்தப் படுத்தினாங்க.''

''எந்த ஓட்டலில்?'' மிகச் சாதாரணமாய் கேட்பது போல் குரலை வரவழைத்துக் கொண்டு கேட்டான். ஒருக்கால் அவள் வலையில் விழுகிறாளா பார்ப்போம் என்று.

''ஆசையைப் பார்! சொல்லமாட்டேன்.''

''அப்படின்னால் எப்படி கண்டு பிடிப்பது?''

''இரண்டு நாள் பொறுங்கள். நானே சுயமாய் எங்க வீட்டுப் போன் நம்பருடன் உங்களிடம் வரேன்.''

''அப்படின்னால் எந்தக் குறிப்பும் சொல்லமாட்டீங்களா?''

அவள் ஒரு வினாடி மௌனமாய் இருந்துவிட்டு, ''பைத்தியக்கார யோசனைகளையெல்லாம் யோசிச்சிட்டிருக்காமல், நேர்மையாய் நான் சொன்னாற்போல பண்ணுவீங்களா?'' என்று கேட்டாள்.

அவன் ஆர்வத்துடன் ''பண்றேன், சொல்லுங்க!'' என்றான்.

''பிராமிஸ்?''

''பிராமிஸ்!''

''நான் இப்பத்தான் ஓட்டலிலிருந்து கிளம்பி நேரே வீட்டிற்குப் போயிண்டிருக்கேன். அப்பா எதற்கோ வரச் சொல்லியிருந்தார். அங்கே ஐந்து நிமிஷம் இருந்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு நேராய் நேரு சிலையண்டை வரேன். இவ்வளவையும் காரில் மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் பண்ணப்போறேன். நீங்க சரியாய் ஐந்து நிமிஷங்களுக்கப் புறம் புறப்பட்டு அதே வேகத்தில் வந்தால் நேரு சிலைக்கு அந்தப் பக்கத்திலிருந்து நீங்களும் இந்தப் பக்கத்திலிருந்து நானுமாய் ஒரே சமயத்தில் வந்து சேரலாம்.''

''இருவரும் ஒரேயளவு தூரந்தான் பிரயாணம் பண்றோம்னு சொல்லுங்க.''

"இதைச் சின்னக் குழந்தை கூட சொல்லிடுமே!"

ரேவந்த் முகம் சிவந்தது. "சரி, அப்புறம் என்ன, அதைச் சொல்லுங்க" என்றான்.

"நீங்க கார் டிரைவிங்கில் நிபுணர்னு கர்வப்படுறீங்க இல்லையா? அதையும் பார்த்துடுவோம், என்னைப் பிடிக்க முடிகிறதா உங்களால்லு! இதுதான் கடைசி சான்ஸ். ஆனால் நீங்க, தந்திரம் ஒன்றும் பண்ணாமல் அதே வேகத்தில் வரணும். முதல்லயே வந்துட்டால் நான் ஒப்புக்க மாட்டேன். நம்ப ரேஸ் அந்த சிலைக்கருகிலிருந்துதான் நாம்ப பயணம் பன்ற கிலோ மீட்டர்களெல்லாமே சமமான எண்கள்தான்."

அவனுக்கு அவள் சொன்ன கடைசி வாக்கியம் புரிய வில்லை. ஆயினும் அதைப்பற்றி பொருட்படுத்தவில்லை. அவன் உள்ளம் அவளைச் சந்திக்கப் போகிறோம் என்ற சந்தோஷமிகுதியால் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டி ருந்தது. கார் டிரைவிங்கில் தன்னை யாருமே மிஞ்சி விட முடியாதென்பதை அவன் அறிவான்.

"சரியாய் ஐந்து நிமிஷத்திற்கப்புறம் கிளம்பறேன்" என்றான்.

"விஷ் யூ ஆல் தி பெஸ்ட்" என்று போனை வைத்து விட்டாள்.

அவன் இம்முறை ஏமாற்ற விரும்பவில்லை. சரியாய் ஐந்து நிமிஷத்திற்கப்புறந்தான் கிளம்பினான். மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் டிரைவ் பண்ணத் தொடங் கினான். எங்காவது பிரேக் போட வேண்டிவிருந்தால் அந்த நேரத்தை அளந்து கொண்டு அதற்கேற்றாற்போல வேகத்தை அதிகரித்தும் குறைத்தும் குருட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டான்.

அவன் ஆபீசிலிருந்து நேரு சிலை இருபத்தி மூன்று கிலோ மீட்டர் தொலைவிலிருந்தது.

அந்த தூரத்தை அடைய, மணிக்கு நாற்பது கிலோ மீட்டர் வேகத்தில் பிரயாணம் பண்ணினால் எவ்வளவு நேரமாகும் என்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு சரியாய் அதே சமயத்திற்குப் போய்ச் சேரும்படி டிரைவ் பண்ணத் தொடங்கினான்.

அவன் இந்தப்பக்கமாய் போய்ச் சேர்ந்த அதே சமயத்தில் அந்தப் பக்கமாய் ஒரு கார் வந்தது. அதில் உட்கார்ந்திருந்த பெண்ணின் உருவம் சரியாய் தெரியவில்லை. முன்னால் ஒரு ஜீப் நின்று கொண்டிருந்ததால் அப்பெண் ரேவந்தின் காரைப் பார்க்க வழியில்லை.

ரேவந்த் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான். சிலைக்கு அந்தப் பக்கத்திலிருந்தும் இந்தப்பக்கத்திலிருந்து மாய் வந்து சேர்ந்தன இரு கார்களும்.

சிலைக்குப் பின்னாலிருந்து ரேவந்தின் கார் சிலையைத் தாண்டிக் கொண்டிருந்த அதே சமயத்தில் ஃபியட் காரிலி ருந்த அப்பெண் அதைப்பார்த்து விட்டு, திடீரென்று நினைவு வந்தாற்போல, கியரை மாற்றி சர்ரென்று ஒடித்து நேரு சிலையைச் சுற்றிக் கொண்டு காற்றிலும் சுறுமையாய் ஓட்டிக் கொண்டு போய் விட்டாள்.

போக்குவரத்து விதிகளையும், எதிரே வந்த வாகனங் களையும் பொருட்படுத்தாமல் அவள் அவ்வாறு திரும்பி ஓட்டத் தொடங்கியதைப் பார்த்து கலவரமடைந்தான் ரேவந்த். ஆயினும் சட்டென்று தேறி அதே வேகத்தில் காரைத் திருப்பினான். கிறீச்சிட்ட டயர் ஓசைகளுடன் போலீசின் விசில் சப்தம் தேய்ந்து மறைந்தது. வில்லிலிருந்து விடுபட்ட அம்பாய் அவன் கார் பறந்தது.

ரேஸ் தொடங்கிவிட்டது.

கண்கள் அகல விரிய ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த போக்குவரத்து கான்ஸ்டபிளைத் தாண்டிக் கொண்டு இரு கார்களும் ஓடத் தொடங்கின.

எதிரேயிருந்த காரைப் பார்த்துக் கொண்டே அவன் ஓட்டிக் கொண்டிருந்தான். காற்று விர்ரென்று மோதிற்று.

இதுதான் கடைசி சான்ஸ் என்றும் இப்பொழுது கண்டு பிடிக்க முடியாவிட்டால் இனி முடியவே முடியாது என்றும் அறிவான் அவன்.

கார் நேரு சிலையைச் சுற்றிக் கொண்டு சர்ரென்று திரும்பிய போது இமைக்கும் நேரம் அவள் அவன் கண்களில் பட்டு மின்னலாய் மறைந்தாள். ஆனால் தங்கவிக்ரகத்தைப் போன்ற அவள் உருவம் அவன் மூளையில் பதிவதற்குள்ளாகவே மாயமாகி விட்டது. பளீரென்று ஒரு மின்னல் மின்னி மறைந்ததுபோல அவள் அழகு அவன் கண்ணைப் பறித்து விட்டுப் போனாற்போலிருந்தது.

அம்முகம் பூர்ண சந்திரபிம்பமா, கன்னங்கள் மாதுளையா கண்கள் தாமரையா? தெரியாது. பார்த்த மாத்திரத்தில் சட்டென்று திருப்பிக் கொண்ட அந்நயனங்களுக்காகவே படைத்த மயிற்பீலியைப் போன்ற இரப்பைகள்! அந்த புரட்சி மார்ச்சிஸ்ட் சொன்னதுபோல மூக்கு சம்பங்கியா? இல்லை யில்லை. முனிவரின் தவத்தைக் கெடுப்பதற்காக இந்திரனால் அனுப்பப்பட்டு வந்த அப்சரஸ் நாட்டியமாடிக் கொண்டிருந்த போது அம்முளிவரின் மலரம்பைச் செரிய வந்த மன்மதன் தானே அவ்வழகியின் பேரெழிலைக் கண்டு மெய்மறந்து கரும்பு வில்லை வளைத்தபோது அந்த வளைவு இவள் மூக்கில் வந்து அமர்ந்து கொண்டதோ!

மனதில் உவமை மட்டும் தெளிவாயிருந்தது, ஆனால் உருவமோ தெளிவின்றியிருந்தது. எல்வளவுதான் நினைவு படுத்திக் கொண்டாலும் ஒரு அழகான சிற்பந்தான் நினைவுக்கு வந்ததேயின்றி உருவம் மட்டும் நினைவுக்கே வரவில்லை.

யோசித்தவாறே ஓட்டிக் கொண்டிருந்தான் அவன். அவன் இருகைகளாலும் ஸ்டிரிங்கைப் பிடித்துக் கொண்டு திருப்பாமல் உறுதியாய் அவளைப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தான். பின் கண்ணாடிகளுக்குக் கட்டியிருந்த திரைச்சீலை வழியே அவள் கூந்தலிலணிந்திருந்த பூ தென்பட்டுக் கொண்டேயிருந்தது.

டிரைவ் பண்ணுவதற்குத் தான் பட்ட கஷ்டம் எதுவும் அவள் பட்டாற்போல தெரியவில்லை. போக்குவரத்தை அனாயாசமாய் கடந்து சென்று கொண்டிருந்தான். அவனுக்கும் பந்தய வெறி அதிகரித்தது. மணிக்கு நூறு மைல்கள் வரையிலும் அனாயாசமாய் ஓட்ட வல்லவன் என்ற பெயர் சிநேசிதர்களிடையே அவனுக்கு இருந்து வந்தது. அதுவும் அவனுடைய புதிய அம்பாசிடர் கார் வேறு!

அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு. தான் ஏன் அவ்வளவு பின் தங்கி விட்டான் என்ற விஷயம்! அவளுடையது சிறிய ∴பியட். தன்னுடையதோ பெரிய அம்பாசிடர். போக்கு வரத்து இந்த மாதிரி இருக்கும்போது தன்னால் அவளைப் பிடித்துவிட முடியாது. இந்த ரீதியில் இன்னும் நாலுமணி நேரம் பிரயாணம் பண்ணினாலும் பலனில்லை.

அவள் புத்திசாதுரியத்தை எண்ணி வியக்காமலிருக்க முடியவில்லை. சட்டென்று இன்னொரு சந்தேகமும் வந்தது. அவள் இன்னும் குறுகலான சந்து பொந்து வழியே போகாத தன் காரணமென்ன? அந்தமாதிரி வழியே போனால் ஒரே நிமிஷத்தில் தன் கண்ணைக் கட்டிவிடலாமே! அவ்வாறு போகாததற்குக் காரணம்.....தான் இந்த மாதிரி பின் தொடர்வது அவளுக்குப் பிடித்திருக்கிறது, என்று புரிந்தது.

வேகமாய் போய்க் கொண்டே அவன் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். பன்னிரண்டடிக்கவிருந்தது. இன்னும் நாலே மணி நேரந்தான் பாக்கியிருந்தது, தான் விமான நிலையத்திற்குப் போவதற்கு.

மேலும் ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. கார்கள் அதிக போக்குவரத்தில்லாத அகன்ற சாலையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன. அதை கவனித்ததும் மூளையில் மின்னலாய் ஒரு யோசனை பளிச்சிட்டது. அவளுடைய காரை எப்படியாவது அந்த அகன்ற சாலையில் ஓடும்படிச் செய்து விட வேண்டும். அங்கே அவ்வளவு போக்குவரத்து இராது. அந்த மாதிரி ஒரு நேர்ப்பாதை கிடைத்துட்டால் போதும், தன் அம்பாசிடர் அந்த பியட்டை இரண்டே நிமிஷத்தில் பிடித்து விடும். இந்த யோசனை அவளுக்குத் தெரிந்து விடுமா?

அந்த அகலமான சாலையை நோக்கிப் போகாமல் வேறு பக்கமாய் போவதற்கு ஒரே ஒரு குறுகிய வீதி மட்டுமே அங்கே இருந்தது. அந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததும் அவள் யோசனையை இந்தப் பக்கமாய் திருப்பி நேராய் அகன்ற சாலையை நோக்கிப் போகும்படி செய்துவிட வேண்டும். அதற்குப் பிறகு அவளால் தப்பித்துவிட முடியாது.

அந்த குறுகிய வீதிக்கருகில் அவளுடைய கார் வந்து சேரும்போது ரேவந்த் தன் காரின் வேகத்தைக் குறைத்தான். அவள் கார்க் கண்ணாடி வழியே கவனித்ததைப் பார்த்தான். தன் காரைக் காணாமல் அவள் கலவரப்பட்டதைக் கண்டான். அவனுக்கு வேண்டியதும் அதுதான். அதற்குள் அந்த குறுகிய வீதியைத் தாண்டிச் சென்றுவிட்டது கார்.

இனி எல்லாம் நேரான பாதைதான்—

விசாலமான பரந்த சாலை அது! அவளுக்குத் தான் பண்ணிவிட்ட தப்பு புரிந்துவிட்டது போலும். காரின் வேகத்தை அதிகப்படுத்தியதிலிருந்து புரிந்தது. ரேவந்தின் உதடுகளில் குறுநகை படர்ந்தது. அவள் எவ்வளவு வேகமாய் போனாலும் பரவாயில்லை, தன் காருக்கு முன்னால் அந்தப் பழைய மாடல் நிற்காது. அவன் பெட்ரோலைப் பார்த்துக் கொண்டான். அது :புல்லாக இருந்தது.

விசாலமான அந்த சாலை சற்று மேடாய் இருந்தது. மேட்டுக்குக் கீழே வேறொரு சாலை இருந்தது. இரண்டு சாலைகளும் சமமாய் நீண்டு இறுதியில் மீண்டும் ஒன்று கூடும் படியான சாலை அது! கீழேயிருந்த சாலை லாரிகளுக் காக ஏற்படுத்தப்பட்ட சாலை.

மேட்டுப் பாங்கான அந்த விசாலமான சாலையை வந்தடைந்ததும், முதலில் அவள் கார் தென்படாததைக் கண்டு கலவரமடைந்தான் ரேவந்த். ஆனால் மேட்டுக்குக் கீழே யிருந்த லாரிகள் போகும் அந்த சாலையில் அவளுடைய கார் தொலைவில் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து நிம்மதி யடைந்தான். அந்த சாலைக்குள் நுழையத்தான் அவள் அந்த மாதிரி வேகத்தை மேற்கொள்ள நேர்ந்திருக்கிறது!

இரு கார்களும் ஒரே திசையை நோக்கி வேகமாய் அவ் விரண்டு சாலைகளிலும் பறந்து கொண்டிருந்தன. நடுவில் அவ்விரு சாலைகளும் அகலமாய் விரிந்திருந்ததால் ஒன்றை யொன்று பார்க்க முடியாதவாறு ஆயிற்று. மரங்கள் உயர மாய் ஓங்கி வளர்ந்திருந்தன. அவற்றுக்கு அந்த பக்கமாய், போய்க் கொண்டிருந்த கார் தென்படவில்லை.

அப்பொழுதுதான் ரேவந்திற்குச் சந்தேகம் வந்தது. தான் வேகமாய் வருவது தெரிந்தும் அவள் முன்னோக்கிக் காரை ஓட்டிக் கொண்டு போவதற்கு முட்டாள் ஒன்றுமில்லை. அம்மரத்திற்குப் பின்னால் நிதானித்து விட்டு, தன் கார் முன்னோக்கிப் போனதுமே பின்னுக்குத் திருப்பியிருப்பாள். அந்த சந்தேகம் வந்ததுதான் தாமதம் சடன் பிரேக் போட்டான். அதே சமயத்தில் இன்னொரு சந்தேகம்.

.....வீட்டுக் கூரையின் மேல் பத்துக் காக்கைகள் இருந்தன. துப்பாக்கியை வெடித்து அதில் ஒரு காக்கையைச் சுட்டால் மீதி எவ்வளவு இருக்கும்? ஒன்றுமேயிருக்காது எல்லாம் ஓடிவிடும் என்று சாதாரண மனிதன் சொல்லுவான். கொஞ்சம் புத்தியிருப்பவன் சுட்டு விழுந்துகிடக்கும் அந்த ஒரே ஒரு காக்கை மட்டும் இருக்கும் என்பான். அதிபுத்தி

சாலியானவன் ஒன்பது காக்கை இருக்கும் என்பான். பதிலளிப்பதற்கு முன்னால் தர்க்கரீதியில் யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட சமயோஜிதமான ஆண்களைத் தான் பெண்களுக்குப் பிடிக்கும்.....

—அப்பெண் திரும்பிப் போய்விடுவாளா, முன்னோக்கிப் போவாளா?

ரேவந்த் காரை வேகமாய் ஒட்டினான். மரத்தைத் தாண்டி முனை திரும்பியதும் சடன் பிரேக் போட்டு ஒரு பக்கமாய் கொணர்ந்து நிறுத்திவிட்டான். மறுபக்கத்து மரத்திற்குப் பின்னாலிலிருந்து அவள் தன் கார் போவதை கவனித்துக் கொண்டிருப்பான் என்பதை அவன் அறிவான்.

காரை நிறுத்திவிட்டு, இறங்கி, பூட்டிவிட்டு, அந்தப் பக்கமாய் வந்து கொண்டிருந்த காலியான டாக்சியை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டு வந்த விழியாகவே பின் நோக்கிப் போகச் சொன்னான். அவன் ஊகமே சரியாயிருந்தது.

அவள் கார் பின்னோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அக்காரைப் பின் தொடர்ந்து போகும்படி டாக்சிக்கு உத்தரவிட்டான். அவள் மெல்ல காரை ஒட்டிக் கொண்டிருந்தாள். பின்னாலிருந்த டாக்சியில் ரேவந்த் இருப்பான் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டாள்.

அவள் கார் ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்தது. சரியாய் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு ரேவந்தின் டாக்சி அங்கே வந்துச் சேர்ந்தது. டாக்சிக்காரனுக்குப் பணம் கொடுத்துவிட்டு ரேவந்த் ஓட்டலுக்குள் நுழைந்தான்.

பெரிய பெரிய அரிஸ்ட்டோகிரேடிக் குடும்பங்களில் பிறந்த ஆண்களும் ரெஸ்டாரெண்டுகளில் இல்லாமல் இந்த மாதிரி அறைகளில் பார்ட்டி தந்து கொள்வது வழக்கந்தான்!

ரேவந்த் ரிசப்ஷனிஸ்டிடம் போய், ''எக்ஸ்க்யூஸ் மீ! மிஸ். ரம்யா பார்ட்டி எந்த அறையில் நடக்கறதுன்னு சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''கொஞ்சம் முன்னாடி இந்த பக்கமாய் போனாங்களே, அவங்களா?''

''ஆமாம், அவங்களேதான்.''

''214''

ரேவந்த் லிப்ட்டில் ஏறி இரண்டாவது மாடிக்கு வந்து சேர்ந்தான். ஸ்டார் ஓட்டலாதலால் வராந்தா ஆளரவமின்றி இருந்தது. காலடியில் கம்பளம் மெத்தென்றிருந்தது.

அவன் வரிசையாய் ஒவ்வொரு அறையாய் தாண்டிக் கொண்டே 214-ம் அறைக்கு முன்னால் வந்து நின்றான். சட்டென்று கதவைத் தட்டிவிடவில்லை. சாவி துவாரத்தின் வழியே காதை வைத்துக் கேட்டான்.

''ரொம்ப தடபுடலாய் கொடுத்துட்டாய் ரம்யா?'' என்கிறாள் ஒரு பெண்.

ரேவந்த் நிமிர்ந்து நிம்மதியாய் பெருமூச்சு விட்டுக் கொண்டான். ஒரு நிமிடம் பொறுத்துச் சட்டென்று பிடியைத் திருப்பிக் கதவைத் தள்ளினான்.

அறைக்குள்ளிருந்த நான்கு பெண்களும் அந்த திடீர்ச் சூழ்நிலைக்கு அதிர்ந்து போய் அவனைப் பார்த்தார்கள். அவர்கள் அவனை அந்த நேரத்தில் அங்கே எதிர்பார்த் திருக்கவில்லை.

அந்நால்வரில் தன்னை இத்தனை நாளும் அழவைத்துக் கொண்டிருந்த பெண் யாரென்று தெரியவில்லை ரேவந்த் திற்கு. அழகில் நால்வரும் ஒருவரையொருவர் மிஞ்சும் படியாய் இருந்தனர். எல்லோருக்கும் ஒரே வயது இருக்கும். ஒரே சாயல்!

அதனால் அங்கே ரேவந்த் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளத் தொடங்கினான். 'நான் உன்னைக் காரில் பார்த்தாயிற்று' என்று நம்பவைக்கும் பாவனையில் ''ஹலோ ரம்யா'' என்றான் முறுவலுடன்—எந்தப் பெண்ணையும் உற்று கவனிக்காமல்.

நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார் கள். திடீரென்று அவ்வறையில் நிசப்தம் வந்து சூழ்ந்தது. தான் ஏதோ தவறு பண்ணிவிட்டதாய் புரியத் தொடங்கிற்று ரேவந்திற்கு. இனி லாபமில்லே என்றெண்ணி, ''உண்மையைச் சொல்லுங்கள், உங்களில் யார் ரம்யா?'' என்று கேட்டான்.

நால்வரும் ஒரே சமயத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, ''நான்தான்'' என்றவர்கள் எஞ்சிய மூவரும் கூட அதே வார்த்தையைச் சொன்னதையுணர்ந்து, நாக்கைக் கடித்துக் கொண்டவர்களாய் திரும்பவும் ஒரே சமயத்தில் ''நானில்லை என்றார்கள். பிறகு ஒருவரையொருவர் பார்த்து பக்கென்று சிரித்துக் கொண்டார்கள்,

ரேவந்தின் முகம் சிவந்தது. நானே கண்டுப் பிடிச்சுக் கறேன். ஆனால் முதல்ல நீங்களே சொல்லிவிடுவது நல்லது'' என்றான்.

''ரம்யா எங்களைப் போல சாதாரணமாய் இருந்தால் பரவாயில்லையா'' கேலியாய் கேட்பதுபோல கேட்டாள் ஒருத்தி. ரேவந்த் ஏதோ சொல்ல வாயைத் திறந்த அதே சமயத்தில் டாய்லெட் அறையின் கைப்பிடி அசைந்தது. கதவு திறக்கப் போனபொழுது நால்வருள் ஒருத்தி சட்டென்று கதவிற்கருகில் ஓடிப்போய் 'ரம்யா—வெளியே வராதே. ரேவந்த் இங்கே வந்திருக்கார்'' என்று கத்தினாள். திறக்கப் போன கதவு உடனே மூடிக் கொண்டுவிட்டது. பிறகு உள்ளே தாழிட்டுக்கொண்ட ஓசை கேட்டது.

அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்து கொண்டது. ரேவந்த் சிலையாய் நின்று விட்டான்.சரியாய் பத்தே அடி தூரத்திலிருந்த பெண்ணைத் தன்னால் சந்திக்க முடியவில்லை. இவ்வளவுநாளாய் தேடிய பெண்ணை இத்தனை அண்மையில் வந்து சேர்ந்தும் அவனால் பிடிக்க முடியவில்லை.

ஊஹூம்—அவன் எப்படியாவது சாதித்தே தீருவான்... இவ்வாறு எண்ணிய அவன் எஞ்சியவர்களைப் பார்த்தான். நால்வரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்களின் கண்கள் குறும்பாய் சிரித்துக் கொண்டிருந்தன.

சட்டென்று ஓடிப்போய் பாத்ரும் கதவை பிடித்து தள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு. உள்ளே அந்தப்பெண் கதவில் சாய்ந்து கொண்டு சிரிக்கிறாள் போலும்! என்ன பண்ணலாம் என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த பொழுதே ஒரு பெண் முன்னுக்கு வந்து, "ரேவந்த், இனி நீங்க இந்த அறையை விட்டுப் போறீங்களா" என்றாள் ஆங்கிலத்தில்.

அக்குரலில் தென்பட்ட அதிகாரத்தைப் புரிந்துகொண் டான் ரேவந்த். உண்மைதான். நான் இங்கே இருக்க உரிமை யில்லை. இவ்வறை யாருடையதோ!

ஒரு முறை நால்வரையும் பார்த்துவிட்டு மௌனமாய் அவன் அவ்வறையை விட்டு வெளியேறினான்.

ஆனால் அவன் அவ்வறையை விட்டு வெளியே வந்தா லும் கீழே போய்விடவில்லை. வராந்தா மூலையில் போய் நின்றுகொண்டான். இத்தனை நாளும் என்னை அழவைத்த பெண் வெளியே வரும் வரையிலும் எவ்வளவு நேரமானாலும் சரி அங்கேயே காத்திருக்க நிச்சயித்துக் கொண்டான்.

அதற்குள் அவ்வறைக் கதவு திறந்து கொண்டது. ரேவந்த் மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டு

மேலும் இருளில் ஒளிந்து கொண்டான். அங்கிருந்து பார்த்தால் தன்னைப் பார்க்க முடியாது என்று நம்பினான்.

அதற்குள் ஒருத்தி தலையை வெளியே நீட்டி வராந்தாவைப் பார்த்து விட்டுத் திரும்பிக் கதவை சாத்திக் கொண்டாள். ரேவந்திற்கு ஆயிரம் சந்தேகங்கள் எழும்பின.

அவர்களுக்குத் தான் இங்கே இருப்பதாய் சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ? உள்ளே என்னதான் நடக்கிறது? இந்தப் பெண்கள் என்னதான் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் அங்கே?

அவன் யோசனையைச் சிதறடித்தவாறு பின்னாலிருந்து காலடியோசை கேட்டது. நீக்ரோவைப் போலிருந்த வெயிட்டர் ஒருவன் வந்து ''என்ன பண்றீங்க இங்கே'' என்று கேட்டான். அவன் குரலில் இம்மியளவு மரியாதை குறைந்திருப்பதை உணர்ந்தான் ரேவந்த்.

''ஒரு சிநேகிதனை எதிர்பார்த்துண்டிருக்கேன்.''

''உங்களை மேனேஜர் கூப்பிடுகிறார்.''

''எதுக்கு?''

''தெரியாது.''

''ஏதாவது பேசணும்னால் உங்க மேனேஜரை இங்கே வரச்சொல்லு.''

''ரகளை பண்ணாதீங்க சார். நீங்களே வந்துட்டால் நல்லது.''

வெயிட்டரின் குரலில் வினயமில்லை. ரேவந்த் அவனோடு தகறாறு வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அவனோடு சேர்ந்து கீழே போனான். ரிசப்ஷனுக்குப் பின்னாலிருந்து மேனேஜரின் அறை. முதலில் திட்ட எண்ணியிருந்த மேனேஜர் ரேவந்தைப் பார்த்ததும் மரியாதையை

வரவழைத்துக்கொண்டார். ''நீங்க இரண்டாவது மாடியிலிருக்கும் ஒரு அறைக்குள் நுழைந்து அங்கிருக்கும் பெண்களைத் தொந்தரவுபடுத்தினீங்களாம். அந்த அறையிலிருந்து போன் வந்தது'' என்றார்.

ரேவந்துக்குப் புரிந்துவிட்டது. தன்னை இந்த ஓட்டலிலிருந்து வெளியேற்ற இந்த உபாயத்தைக் கையாண்டிருக்கிறார்கள் அந்த பெண்கள்.

அவன் மேனேஜரைப்பார்த்து கணீரென்று பதிலளித்தான். ரெண்டாம் மாடியில் எனக்காக எதிர்பார்த்திண்டிருப்பதாய் சொல்லி என் கிநேகிதன், பிசினஸ், புள்ளி ஒருத்தன் என்னைக் கூப்பிட்டிருந்தான். யாருக்கும் எந்த தொந்தரவுந் தராமல் நான் ஒரு மூலையில் நின்னுகிட்டிருந்தப்ப, உங்க வெயிட்டர் என்னை மரியாதைக் குறைவாய் பேசி இங்கே இழுத்திட்டு வந்திருக்கிறார். இப்ப நீங்க வீனாய் என் மேல் இந்தப் புகார் தொடுக்கிறீங்க. உங்க முதலாளிக்கு இதைப் பற்றி கம்ளையிண்ட் எழுதப்போறேன். கேவலம் ஒரு போன் காலை ஆதாரமாய் வைச்சுண்டு நீங்க என்னை இந்த மாதிரி உலுக்கி எடுப்பதற்கு உங்க மேல் ஐம்பதாயிரம் ரூபாய் மான நஷ்ட வழக்குப் போடப்போறேன்.

அவன் எதிர்பார்த்தது போலவே மேனேஜரின் முகத்தில் பயம் படிந்தது.

''சாரிசார்! ஆனால் ரூம் நம்பர் 214-லிருந்து போன்...'' என்று இழுத்தார். அவர் தடுமாற்றத்தைப் பார்த்து மேலும் வெகுண்டான் ரேவந்த்.

''யார் போன் பண்ணினாங்க? கீழே வந்து கம்பளையிண்ட் பண்ணச் சொல்லுங்க. எழுத்து மூலமாய் வாங்கிக்குங்க.

...வரச்சொல்லுங்க...இல்லாவிட்டால் நாமே போவோம். போனில் என்ன கம்பளையிண்ட் வேண்டியிருக்கு'' என்றான் கோபமாய்.

''நடந்தது என்னவோ நடந்துடுத்து. நீங்க போய் லாஞ்சில் உட்காருங்க சார்'' என்றார் மேனேஜர்.

''அதெல்லாம் முடியாது, வாங்க. அந்த ரூம் நம்பர் 214—க்குப் போவோம்'' அவனுக்கு எப்படியாவது அந்த அறைக்குள் திடீரென்று நுழைந்துவிட வேண்டும் போலி ருந்தது. தான் போய்ச் சேர்ந்துவிட்டோம் என்று வெற்றி பெருமிதத்துடன் அவர்கள் இருக்கும்போதே இதைப் பண்ணி விட வேண்டும்.

அவனும் மேனேஜரும் சேர்ந்து இரண்டாவது மாடிக்கு வந்தார்கள். அறை உள்பக்கமாய் தாழிடப்பட்டிருந்தது. மேனேஜர் கதவைத் தட்டினார்.

''யார்?'' என்று குரல் கேட்டது உள்ளேயிருந்து.

''மேனேஜ்மெண்ட்.''

கதவைத்திறந்த ஓசை. ரேவந்த் பின்னால் போய் ஒளிந்து நின்றான். கதவைத் திறந்த அப்பெண் முழுவதுமாய் திறக்காமல் கதவைப் பிடித்துக்கொண்டு குறுக்கே நின்றாள்.

''யாரோ ஒரு ஆள் வந்து தொந்தரவு பண்ணுவதாய் கம்ளையிண்ட் பண்ணினீங்க நீங்க' என்றார் மேனேஜர்.

வந்தது மேனேஜர் என்று திட்டமற தெரிந்து கொண்ட தும், ''ஆமாம், உள்ளே வாங்க'' என்று வழிவிட்டாள். மேனேஜர் உள்ளே நுழையும்போது சரேலென்று பாய்ந்து தானும் அவரோடு உள்ளே நுழைந்துவிட்டான் ரேவந்த். கண் மூடித் திறப்பதற்குள் இது நிகழ்ந்து விட்டது.

அவன் திடீரென்று அவ்வாறு உள்ளே நுழைவான் என்று ஊகித்திராத அப்பெண் அதிர்ச்சியடைந்தாள். ரேவந்த் லேசாய் சிரித்துக்கொண்டே உள்ளே அடியெடுத்து வைத் தான்.

அறையிலிருந்த பெண்களனைவரும் அவர்களையே வியப் புடன் பார்க்கலானார்கள்.

''மேடம்! உங்க அறைக்கு வந்து தொந்தரவு பண்ணிய ஆள் இவர்தானா?'' என்று கேட்டார் மேனேஜர்,

''மைகாட்! இல்லீங்க'' என்றாள் பணிவோடு ஒருத்தி. அருகில் குண்டு வெடித்தாற்போல அதிர்ச்சியடைந்தான் ரேவந்த் அந்தப் பதிலைக் கேட்டு.

''யாரோ கருப்பாய் ரௌடியைப் போலிருந்தான். கதவைத்தட்டிட்டு, ''உள்ளே வரலாமான்னு கேட்டான்!'' என்றாள் ஒருத்தி; அதற்குள் இன்னொருத்தி ரேவந்தைக் கனிவோடு பார்த்துவிட்டு,'' இவரைப் போன்ற ஆளாயிருந்தால் உங்களுக்கு எதற்குப் போன் பண்றோம்?'' என்றாள் குறும்போடு. அப்பெண்களெல்லோரும் சேர்ந்து தன்னை கலாட்டா பண்ணுவதையுணர்ந்தான் ரேவந்த். எவ்வளவு கடுகடுவென முகத்தை வைத்துக்கொள்ள முயன்றாலும் அவர்களால் சிரிப்பைத் தாங்கமுடியவில்லை. ஆனாலும் ரேவந்த் அதைப் பொருட்படுத்தவில்லை. டாய்லெட்டை எட்டிப்பார்த்தான். அது காலியாயிருந்தது.

அவன் அவ்வாறு பார்த்ததை கவனித்து விட்டு, ''நீங்க டாய்லெட்டுக்குப் போகணுமா? போங்க. எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது'' என்றாள் ஒருத்தி. அவர்களை நெறித்துக் கொன்றுவிட வேண்டும் போல கோபம் வந்தது ரேவந்திற்கு. பலவந்தமாய் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

மேனேஜர் ''சாரி மேடம், உங்களுக்கு எந்தப் பயமும் இல்லை, தைரியமாய் இருங்கள்'' என்று சொல்லிவிட்டு ரேவந்தை திரும்பிப்பார்த்து, சாரிசார்! நீங்க உங்க நண்பரை எதிர்பார்த்து வராந்தாவில் நில்லுங்கள், காபி அனுப்பி வைக்கட்டுங்களா?'' என்று கேட்டார் மரியாதையுடன்.

ரேவந்திற்கு அவருடைய வார்த்தைகள் காதில் விழவே இல்லை. அவன் யோசிக்கத் தொடங்கினான்.

என்னவானாள் அந்தப் பெண்? இந்த ஐந்து நிமிஷத்தில் எங்கே போயிருப்பாள்?

யோசித்துக் குழம்பியவாறே அவன் மேனேஜருடன் சேர்ந்து அறைக்கு வெளியே அடியெடுத்து வைக்கப்போன பொழுது அப்பெண்களில் ஒருத்தி, ''பில்லை ரெடியாய் எடுத்து வையுங்க. விருந்து கொடுத்த அந்தப் பொண்ணு போயிடுத்து, நாங்களும் கிளம்பின்டிருக்கோம்'' என்றாள்.

அவ்வார்த்தைக்குத்தச் சரேலென்று நின்றுவிட்டான் ரேவந்த்...'விருந்து கொடுத்தவள் போய்விட்டாள் என்றால்... என்றால்... நடந்தது என்னவென்று இப்பொழுது புரிந்து விட்டது.

அறைக்கு முன்னாலிருந்த வராந்தாவில் நின்று கொண்டிருந்த தன்னை இரண்டு நிமிஷங்களுக்கு ஏதோ சாக்குசொல்லி மேனேஜரின் அறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள், தான் அந்தப் பக்கமாய் போனதும் வெகு சுதந்திரமாய் போய் விட்டிருக்கிறாள்.

படியிறங்கிக் கொண்டிருந்த ரேவந்த் இப்பொழுது சாதாரண இருபத்தைந்து வயது அப்பாவி இளைஞனாயில்லை. அனைத்துலக சதுரங்க சாம்பியனாயிருந்தான். அடியுண்ட புலியாயிருந்தான்.

சானை பிடிக்கப் பிடிக்க வைரம் பிரகாசிக்கும், டென்னிசிலும் சரி சதுரங்கத்திலும் சரி, ஒருவரின் ஆட்டமே எதிராளியின் ஆட்டத்தின் மேல்தான் ஆதாரப்பட்டிருக்கிறது. எதிர் தரத்து ஆட்டக்காரர் நன்றாய் ஆடி திருப்பத்தைத் தோற்றுவிக்கத் தோற்றுவிக்கத்தான் உண்மையான ஆட்டக்காரனே தோன்றுகிறான். சக்தியெல்லாம் அப்பொழுதுதான் வந்து கூடத் தொடங்கும். ரேவந்த் விஷயத்திலும் அதுதான் நடந்தது.

கடைசி சமயத்திலாவது எப்படியாவது கண்டுபிடித்து விடலாம் என்றுதான் இவ்வளவு நாளும் அலட்சியமாய் இருந்துவிட்டான். ஆனால் இன்று மிகவும் ரகசியமாய் திட்டம் போட்டுவிட்டாள். பூனையை அறையில் போட்டுப் பூட்டி

னாற்போல எல்லா பக்கங்களிலிருந்தும் வழி அடைபட்டுக் கொண்டே போய் கடைசியில் பார்க்கும்போது என்ன மிஞ்சிற்று? தன் உபாயத்தை வேறு உபாயத்தால் மிஞ்சி விட்டாள் அவள்! அந்தப் பெண் இத்தனை இக்கட்டான நிலையிலும், இவ்வளவு மூச்சுவிட முடியாத டென்ஷனிலும் கூட...தான் அறைக்குள் வந்து நின்ற போதிலும் கூட...பந்த யத்தில் தோற்றுவிடாமல் ஆழ்ந்து சிந்தித்துத் தன்னை மானேஜர் அறைக்குத் துரத்தியிருக்கிறாள் என்றால்...

இத்தனை நாட்களுக்குப் பிறகு தன்னோடு ஆடிய ஆட்டத்தில் சூடு பிடித்திருக்கிறது. இனி எதிர் உபாயத்தைத் தானே கடைப்பிடிக்க வேண்டியதுதான்!

அவன் கௌண்டரை அணுகி, ''உங்க போனைப் பயன் படுத்தலாமா?''என்று கேட்டான். ரிசப்ஷனிஸ்ட் தலையாட்டி னார்.

நம்பரைச் சுழற்றி ''ஜேம்ஸ்'' என்றான்,

''ஸ்பீகிங்,''

''நான் ஓட்டல் ஆனந்தாஸ்ரத்திலிருந்து பேசறேன். நான் சொல்றதை கவனமாய் கேள்! நீ உடனே உன் மோட்டார் சைக்கிளில் இங்கே வா. ஏன்னா அப்புறமாய் சொல்றேன். போட்டது போட்டாற் போல அப்படியே எல்லா வற்றையும் வைத்துட்டு உடனே வா. டாங்கில் பெட்ரோல் இருக்கான்னு பார்த்துக்கோ'' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டான்.

இம்மாதிரி மேலும் மூன்று இடங்களுக்குப் போன் பண்ணினான்.

பிறகு மேனேஜரிடம் போனான். புன்முறுவல் மாறாமல் ''நீங்க எனக்குக் காப்பி தருவதாய் வாக்களித்தீங்க'' என்றான்.

''ஓ. ஷ்யூர்.''

ரேவந்த் எதிர் நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டு, ''வெறுமே இல்லைங்க, பில்லைக் கொடுத்துடறேன்'' என்றான் சிரித்துக் கொண்டே.

அவர் சிரித்துவிட்டு, ''நோ, நோ, உங்களுக்கு நாங்க தந்த சிரமத்துக்கு இது தண்டனை'' என்றார் அவரும் ஒரு இளைஞர்தான்.

''உங்களை எங்கேயோ பார்த்தாற் போலிருக்கே'' என்றான் ரேவந்த். அவர் நிமிர்ந்தார்.

''எங்கே பார்த்திருப்பீங்க?''

''சரியாய் ஞாபகம் வரமாட்டேங்குது'' நெற்றிப் பொட்டைத் தட்டிக் கொண்டான் ரேவந்த்.

''சரி, விடுங்க'' நாற்காலியை விட்டெழுந்திருந்து, ''காபி கொண்டாறேன்''என்று அறையை விட்டு அகன்றார். ரேவந்த் மேஜையின் மேலிருந்த பில் புத்தகத்தை எடுத்துக் காலடியில் போட்டான். பிறகு அதைக் காலால் குப்பைக் கூடைப் பக்கமாய் தள்ளிவிட்டான். மேனேஜர் காபியை எடுத்து வந்தார். காபியைக் குடித்தபடியே சாதாரணமாய் கேட்பது போல, ''அந்த அறையிலிருக்கும் பெண்கள் யார்?'' கேட்டான் ரேவந்த்.

''எங்க மேனேஜிங் டைரக்டருக்கு ஒரு பெண். அவங்க ஏதோ பார்ட்டின்னதால்.....''

''யாரு? ரம்யாவா?'' தனக்கு எந்த உற்சாகமும் மில்லா தவனைப் போல விசாரித்தான் ரேவந்த்.

''இல்லை. அரவிந்தான்னு பேர், நாம்ப போனப்ப முதல்ல கோபமாய் கதவைத் திறந்தாளே, அவதான்.''

அதற்குள் ரிசப்ஷனிஸ்ட் வந்து தேடத் தொடங்கினார்.

''என்ன வேணும்?''

''பில் புத்தகம் சார்''

''இங்கே வரலை'' என்றார் மேனேஜர். ரிசப்ஷனிஸ்ட் போய் விட்டார்.

திரும்பவும் இருவரும் சம்பாஷணையில் ஈடுபட்டார்கள். ஐந்து நிமிஷங்கள் சாதாரண சம்பாஷணை நிகழ்த்திய பிறகு, ''மேனேஜிங் டைரக்டரின் மகளுக்குக் கூட நீங்க பில் போடுவீங்களா?'' என்று கேட்டான் ரேவந்த்.

''லிமிடெட் கம்பெனி இல்லையா? அதோடு யாரோ சிநேகிதியின் பார்ட்டியாம்.''

''யாரந்த சிநேகிதி? ரம்யாவா?''

''எனக்குத் தெரியாது.''

திரும்பவும் ரிசப்ஷனிஸ்ட் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு வந்தான். மேனேஜர் மேஜைக்கு மேலேயிருந்த காகிதங்களையும் புத்தகங்களையும் எடுத்து ''காட்டிவிட்டு இங்கே இல்லைன்னேனே அப்பவே'' என்றார்.

அதற்குள் வெளியே மோட்டார் சைக்கிள் வந்த ஓசை கேட்டது. அதற்காகவே காத்திருந்த ரேவந்த் குனிந்து, அட இங்கே விழுந்திருக்கே, ஏதோ புத்தகம், இதானா? ''என்று எடுத்து'' தந்தான். ரிசப்ஷனிஸ்ட் முகம் மலர ''இதான் சார்'' என்று அதை எடுத்துக் கொண்டு போனான்.

காபியைக் குடித்து முடித்து ரேவந்த் எழுந்து நின்று, ''தாங்க்யூ ∴பர் யுவர் காபி'' என்று கைகுலுக்கி விட்டு வெளியே போர்டிகோவிற்கு வந்தான். அவன் வெளியே வந்த அதே சமயத்தில் இன்னும் இரண்டு மோட்டார்சைக்கிள் கள் உள்ளே நுழைந்தன.

ஜேம்ஸ் எல்லோருக்கும் முன்பே வந்து சேர்ந்து விட்டான்.

மொத்தம் நால்வரும் ரேவந்திடம் வந்தார்கள். அதில் இருவர் ஜீன்ஸுடன் இருந்தார்கள். மேலுக்கு அந்த மாதிரி

அப்பாவிகளாய் தென்பட்டார்களேயின்றி அந்நால்வருமே அதி புத்திசாலிகள். ஆபீசில் சுறுசுறுப்பாய் வேலை பண்ணுபவர்கள். ரேவந்தின் கீழ் வேலை செய்பவர்கள் ஆயினும் நெருங்கிய தோழர்கள். அவர்களுக்கிந்த விஷயத்தைப் பற்றியும் ரேவந்த் படும் பாட்டைப்பற்றியும் கொஞ்சம் தெரியும்.

ரேவந்த் அன்று தான் பண்ணிய காரியங்களையும், அப்பெண்களைப் பிடிக்கப் போய் அவர்கள் தப்பித்துக் கொண்டது முதலிய எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரமாய் சொன்னான்.

''வலையில் விழுந்த மீன் தப்பித்துடுத்துன்னு சொல்லு'' என்றான் ஜேம்ஸ் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு.

''சரி, நாங்க என்னதான் பண்ணணும் இதில்?''

''அந்தப் பொண்ணு போயிட்டாள். ஆனால் சிநேகிதிகள் நால்வரும் இன்னும் அந்த அறையிலேயேதான் இருக்காங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவங்களும் போயிடப் போறாங்க.'' என்றான் ரேவந்த்.

''அவங்களைப் பிடிச்சுப் போட்டு ஆங்கிலப் படங்களைப் போல ரகசியத்தை வரவழைக்கணுமா?''

எல்லோரும் சிரித்தார்கள். ரேவந்த் சிரிக்கவில்லை. அப்பெண்கள் வெளிவரவிருந்த வழியைப் பார்த்தபடியே சொல்லலானான்.'' இந்தப் பெண்கள் ஐந்து பேரும் ரொம்ப நெருங்கிய சிநேகிதிகளைப் போலிருக்கு. சாதாரணமாய் இவ்வளவு நெருங்கிய சிநேகம் யாருக்கு ஏற்படும்? ஒரே காலேஜில் படிப்பவங்களுக்கோ-ஒரே வீதியில் இருப்பவங்களுக்கோ அல்லது வீணை, டான்சு போன்ற ஏதாவது ஒரே கலைத்துறையில் இருப்பவங்களுக்குள்ளேதான் இருக்கும்! இல்லையா? இந்நால்வரையும் நீங்க நாலு பேரும் தனித்தனியாய் பின் தொடர்ந்து போகணும். நால்வரும் ஒரே தெருவிலிருப்பவங்களானால் அதற்குப் பிறகு நமக்கு அந்த ரம்யாவின் விலாசம் கிடைத்துட்டாற் போலதான்! அப்படியில்லாத

பட்சத்தில், அந்த நால்வருக்கும் பொதுவான விருப்பம் திருப்பம் அல்லது ஏதாவது ஒன்றைத் தெரிந்துக்கணும். அதன் மூலம் அந்த ஐந்தாவது பெண் விஷயத்தை கண்டு பிடித்துவிடலாம்.''

அவன் சமயோதிடத்திற்கு அவர்கள் வியந்தார்கள்.

''இவங்க வெளியே போனதும் அந்த ரம்யா எப்படியாவது இவங்களை சந்திக்காமலிருக்க மாட்டாள். காதறுத்தாலும் சரி கண்டுபிடித்தே தீருவோம்'' என்றான் ஜேம்ஸ் ஆர்வத்துடன்.

''எனக்கு ஐந்துமணிக்கு பிளேன். இன்னும் ஒரே மணி நேரத்தில் தெரிந்தாகணும் இந்த விவரம்.''

''ஒரு மணியா? இம்பாசிபிள்''

''ஏன் இம்பாசிபிள்?''

''ஒரே தெருவானால் பரவாயில்லை. ஆனால் ஏதாவது டான்சு, ஸ்கூல் மாணவிங்களானால் கஷ்டமாச்சே!''

''அதற்காகத்தானே உங்களைத் தேர்ந்தெடுத்தேன்'' என்று அவர்களின் நம்பிக்கையைத் தட்டி எழுப்பினான் ரேவந்த்.

அதற்குள் அப்பெண்கள் வரும் சந்தடி கேட்கவே ரேவந்த் ஓடிப்போய் மறைந்து கொண்டான் அங்கிருந்த தூணுக்குப் பின்னால்.

இரு பெண்கள் ஒரு காரிலும் மற்ற இருவரும் ஆட்டோவிலும் கிளம்பிப் போனார்கள்.

''க்விக், புறப்படுங்கள் பத்து நிமிஷத்திற்கொரு முறை எங்க வீட்டுக்குப் போன் பண்ணுங்க'' என்றான் ரேவந்த் தன் காரை நோக்கி ஓடியபடி. அந்நான்கு மோட்டார் சைக்கிள்களும் பெருத்த ஓசையைக் கிளப்பிக்கொண்டு போய்ச் சேர்ந்தன.

ரேவந்த் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். மணி இரண்டடிக்கப் போகிறது. வெய்யில் கொளுத்திக் கொண்

டிருந்தது. அவன் வீட்டையடைந்த ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் ஜேம்சிடமிருந்து போன் வந்தது.

''ஒரு பெண்ணைக் காரில் மௌண்ட் ரோடில் இறக்கி விட்டுவிட்டு இன்னொருத்தி பிரசிடெண்ட் ரோடு பக்கமாய் போய்விட்டாள். அதனால் அந்த நால்வரும் ஒரே வீதிக்காரர் களில்லைன்னு தெரிந்தது'' என்றான் ஜேம்ஸ் பெரிய துப்பறி பவனைப்போல.

''அந்த விஷயம் அவங்க தனித்தனியாய் ஆட்டோவிலும் காரிலும் போனபோதே தெரிந்துடுத்து'' என்றான் ரேவந்த் மெதுவாய். ஜேம்ஸிற்கு திக்கென்றது.

''நீ என்னதான் பண்ணப்போகிறாய் அப்படின்னால்?'' கேட்டான் ரேவந்த்.

''அந்தப் பெண்ணின் வீட்டிற்குள் நேராய் போய் நுழையப் போறேன்.''

''மைகாட்! அவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது?''

''சோஷல் செக்யூரிட்டி அதிகாரியாய்''

''இது நிச்சயமாய் நீயே கண்டுபிடித்த சாதுரியமாயிருக் காது.''

''ஜேம்ஸ், சிரித்துவிட்டு ''எங்கேயோ கதையில் இந்த மாதிரி படித்திருக்கேன் ரேவந்த். அதில் ஒரு மந்திரவாதி இந்தமாதிரி பண்ணிதான் கதாநாயகியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான்'' என்றான்.

''கோ எ ஹெட்'' என்று ரேவந்த் போனை வைத்து விட்டான், அடுத்த இரண்டாவது நிமிஷம் இன்னொரு போன் வந்தது.

''நான் பின்தொடர்ந்து போன பெண் போலீஸ் கமிஷன ரின் பெண்'' என்றான் அவ்விளைஞன்.

''குட்,''

''காரை விட்டிறங்கி நேராய் உள்ளே போய் விட்டாள்.''

''பிறகு என்னவாச்சு?''

''தன்னை யாரோ பின் தொடர்ந்து வந்தது போல வீட்டில் போய் சொல்லியிருக்கிறாள் போலிருக்கு. உள்ளே யிருந்து இரண்டு போலீசார் வந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.''

''இப்ப எங்கேயிருந்து போன் பண்ணுகிறாய்''

''டவுன் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பிலிருந்து.''

* * *

மூன்றாவது போன் வரும்போது தாமதமாகிவிட்டது. ஆனால் அவ்விளைஞன் எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொண்ட பிறகு போன் பண்ணியிருத்தான். ரேவந்த் போனை எடுத்ததும் விவரமாய் எல்லாவற்றையும் சொன்னான்.

''நான் பின்தொடர்ந்து போன பெண் பெயர் அரவிந்தா. அவ ஆனந்தாஸ்ரம் ஒட்டல்ஸ் ப்ரைவேட் லிமிடெட் மேனேஜிங் டைரக்டர் அவர்களின் புதல்வி. மிக புத்திசாலிப் பெண். விசாலமான கண்கள், எப்பொழுதும் உதடுகளில் குறுநகை...''

ரேவந்த் அலுத்துப்போய், ''அதெல்லாம் தேவையில்லை எனக்கு. மீதி விஷயங்களைச் சொல்லு'' என்றான்,

''அரவிந்தாவுக்கு கிதார் வாத்யத்தின் மேல் மோகம், சிவாஜி கணேசன் என்றால் உயிரை விடுவாள். பி. எஸ்.ஸி. பாசாகியிருக்கிறாள். பேனா நண்பர்கள் என்றால் பிடிக்கும். சினிமா அடிக்கடி பார்ப்பாள். அதுவும் சிவாஜி படம் என்றால் முதல்நாளே போய்ப் பார்க்கத் தவறமாட் டாள். ஜீன்ஸ் அணிவது பிடிக்கும். தந்தைக்கு ஒரே மகள். பணத்தை நன்றாய் செலவழிப்பாள். இப்போ 'இந்த ஒட்டல் பில்லைக்கூட தானே தருவதாய் போட்டி போட்டாள்.''

உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டிருந்த ரேவந்த் திடுக்கிட்டான். புரியாமல் ''ஒட்டலில் பில்லா?'' என்று கேட்டான்.

''ரெஸ்டாரெண்டிலிருந்து பேசறேன்.''

''அந்தப் பொண்ணு இப்ப எங்கேயிருக்கிறாள்?''

''என் பக்கத்திலேயேதான்.''

''முட்டாளே! நான் சொன்ன விஷயம் என்னவாச்சு?''

''அந்தப் பெண்ணை நான் பின்தொடர்ந்து போனப்ப, என்னைத் திரும்பிப் பார்த்துச் சிரிச்சுது சார். உடனே சிநேகமாயிட்டோம். அந்தப் பெண்ணே இதெல்லாம் சொன்னாள்.''

''டேய் இடியட்! இந்த விவரமெல்லாம் எதுக்கு? ரம்யாவின் போன் நம்பரைத் தெரிஞ்சுண்டு வந்தால் போதாதா?''

''மன்னிச்சுக்குங்க சார். நானும் அரவிந்தாவும் ஆழ்ந்து நேசிக்கிறோம். எங்க காதலில் மோசடிக்கே இடமில்லை. நான் உங்க கேர்ள் ஃபிரெண்டைப்பற்றி விசாரித்தால் அந்தப் பெண்ணுக்கு என் மேல் சந்தேகம வரலாம். அப்படி வந்துட்டால் அப்புறம் என்னால் பிழைக்க முடியாது.''

''நான் உன் கண்ணைப் பிடுங்கப் போறேன்.''

கோபத்தை அடக்கிக் கொண்டே சொன்னான் ரேவந்த்.

''பிடுங்கிக்குங்க சார்! காதலுக்குத் தியாகந்தான் வேண்டும்.''

''உன் காதலை உடைப்பில் போடு. நீங்க சந்தித்துண்டு அரைமணி கூட ஆகலையே.''

''சீதா, ஸ்ரீ ராமரை முதல் பார்வையிலேயே காதலித்து விட்டாள். சகுந்தலை து.....துஷ்.....துஷ்யந்தனை முதல் பார்வையிலேயே காதலித்து விட்டாள். காதலுக்கு நேரம் வேண்டாம். ஒருவர் கண்ணில் மற்றவர் பார்த்துக்கொண்டு எவ்வளவு நேரம் வேணுமானாலும் கழிப்பது காதலர்களின்

அறிகுறி.....மன்னிச்சுக்குங்க பாஸ்! அரவிந்தா கூப்பிடு கிறாள், போகணும்'' என்று போனை வைத்துவிட்டான்.

ரேவந்த் தலையைப் பிய்த்துக் கொண்டான். தன் திட்டம் நடக்கும் போல் தோன்றவில்லை. ஒருவன் ஜெயிலிலும் இன்னொருவன் ஒரு பெண்ணின் அணைப்பிலும் சிறைப் பட்டு விட்டார்கள்.

என்ன பண்ணுவதென்று யோசித்துக் குழம்பிக் கொண்டி ருந்தபோது நான்காவது போன் ஒலித்தது. அவ்விளைஞன் பணிவோடு ஆங்கிலத்தில் பேசினான்.

''நான் தொடர்ந்து சென்ற பெண்ணின் பெயர் பானுமதி. இரண்டு நாவல்களும் ஐந்து சிறுகதைகளும் எழுதியிருக்கிறாளாம். பள்ளிப் படிப்பு ராமாபுரத்தில்தான் படித்தாளாம். ஸ்கூல் படிப்பை முடித்து விட்டுப் பிறகு படிப்பைத் தொடரவே இல்லையாம். கதை எழுதுவதில் முனைந்து விட்டாளாம். இது தெரிந்ததும் அவளுடைய அபிமானி என்று கூறிக்கொண்டு நேராய் வீட்டிற்கே போய் விட்டேன். என் வேலை எளிதாகிவிட்டது...நாங்க பேசிக்கிட் டிருந்தப்ப நடுவில் இரண்டு முறை காபி கூட கொடுத்தாள்.''

''அது சரி, நமக்கு வேண்டியதைச் சொல். அந்தப் பெண்ணின் விருப்பு வெறுப்பு என்னன்னு சொல்லு.''

''வீணை என்றால் ரொம்பப் பிடிக்குமாம். கிதார் கேட்டுக்கொண்டே மணிக்கணக்கில் இருப்பதென்றால் ரொம்வும் விருப்பமாம். கவிதை இயற்றுவதிலும் வர்ணம் தீட்டுவதிலும் கொஞ்சம் திறமையுண்டாம். கோலமிடுதல், தையல்வேலைகளில் ஆர்வம், கிரிக்கெட் என்றால் விருப்பம். பாலமுரளி கிருஷ்ணாவின் கீர்த்தனைகளும்..... இன்னும் என்னென்னவோ கூட சொன்னாள். எல்லாவற்றையும் கேட்ட பிறகு எதில் அவளுக்குத் தேர்ச்சி இருந்தது எது அவளுக்குப் பிரியம் என்று புரியவே இல்லை சரியாய்''

''இவற்றால் நமக்கு எந்த லாபமுமில்லை. வேறு ஏதாவது விவரம் உண்டா?''

''திருமணத்தைப் பற்றி இவளுக்கு விநோதமான எண்ணம் இருந்து வருகிறது. கல்யாணமே பண்ணிக்க மாட்டாளாம். ஒருக்கால் பண்ணிண்டாலும் பிறகு கணவனைத் தள்ளி விடுவாளாம். இவ்வுலகத்தில் பெரிய பெரிய மனிதர்கள் எல்லோருமே திருமணமாகாதவர்களாகவோ, வாழ்க்கைத் துணையைத் தள்ளி வைத்தவர்களோ அல்லது கல்யாணமான பிறகு வேறு பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டவர்கள்தானாம்.....சொல்ல வேண்டாம்னுதான் இருந்தேன்.....இந்தப் பெண்ணுக்கு சீக்கிரத்தில் திருமணமாகி விட்டால் நன்றாயிருக்கும்னு தோன்றிற்று. ரொம்ப பரந்த உணர்ச்சிகள்'' என்று போனை வைத்து விட்டான் திரும்பவும் பேசுவதாய் சொல்லி

ரேவந்திற்கு ஒன்றுமே புரியவில்லை. போட்டது போட்டாற்போலவே ஆகிவிட்டது. நோத்தைப் பார்த்துக் கொண்டான். மூன்றடித்து விட்டது. இனி என்ன பண்ணுவது?...''

அதே சமயத்தில் ஜேம்சிடமிருந்து போன் வந்தது. செய்வதறியாதவனாய், ''அந்த வீட்டிற்குள் நுழைவதே பெரும் பாடாய் இருக்குப்பா. ஒரு மணி நேரமாய் பாடுபட்டும் லாபமில்லை. அவங்க ரொம்ப பழங்காலத்து மனுஷங்களாய் தோணுது'' என்றான்.

''அப்ப என்ன பண்ணலாம்?''

''அதான் எனக்கும் புரியலை.''

''ஜேம்ஸ்! ஒரு காரியம் பண்றயா?''

''என்ன?''

''ஹைஸ்கூல் பழைய மாணவ மாணவிகள் சங்கத்தின் சார்பில் ஒரு மீட்டிங் வைக்கப் போவதாய் சொல்லிண்டு மாணவர் தலைவனாய் போ.''

''ஆனால் அவள் எந்த ஸ்கூலில் படித்தாள்னு தெரியலையே. அதுவும் ஏழெட்டு வருஷங்களுக்குமுன்னாள்.''

''ராமாபுரம் ஸ்கூல் என்று சொல்லு.''

''ஆனால்...''

இருட்டில் அம்பை விட்டுப் பார்ப்போம். கடைசி அம்பைக் குறிபார்த்து ஏவு ஜேம்ஸ்!'' என்று போனை வைத்து விட்டான் ரேவந்த்.

பிறகு ஒவ்வொரு நிமிடமும் பரபரப்பில் கழிந்தது. முதலிரு பெண்களும் அதே ஸ்கூலில்தான் படித்திருக்கிறார்கள். அதனால் மூன்றாவது பெண்ணும் அதே ஸ்கூலில்தான் படித்திருப்பாள் என்றென்னுவது சரியல்ல.....மூன்று பத்து .....மூன்றேகால்.....

ரேவந்திற்கு முள்ளின்மேல் உட்காரீந்திருப்பது போலிருந்தது. போனையே பரபரப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பொறுமையை சோதிப்பதுபோல போன் வெகு நேரமாகியும் ஒலிக்கவேயில்லை.

சிநேகிதனைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே தள்ளிக் கொண்டு வரும் வேலை ஒன்று வந்து சேர்ந்து கொண்டது. அந்த விஷயத்தை ஜேம்சிற்குச் சொல்ல வேண்டும். அதற்குள் விமான நிலையத்திற்குப் போன் பண்ணித் தெரிந்து கொண்டான். டில்லி ப்ளைட் ஐந்து மணிக்கே கிளம்புகிறது. தாமதமில்லை என்றார்கள்.

அவன் போனை வைத்ததுமே அது ஒலித்தது.

ஜேம்ஸ்!

''நீ எப்படிக் கண்டுப்பிடித்தாயோ தெரியாது ரேவந்த்! ஆனால் அந்தப் பெண் படித்தது ராமாபுரத்தில்தானாம்!'' என்றான் ஆர்வம் படபடக்க.

ரேவந்த் போனை வைத்துவிட்டான். சம்பாஷனையைத் தொடரவில்லை, இனி ஒவ்வொரு நிமிஷமும் விலைமதிப்பு வாய்ந்தது. நாலரை மணிக்கெல்லாம் விமான நிலையத்தில் இருக்க வேண்டும். இப்பொழுதே மூன்றரையாகி விட்டிருந்தது.

ராமாபுரம் நகரத்திற்குப் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் மிலிடரி கன்ட்டோன் ஏரியாவுக்கு அந்த பக்கத்திலிருந்தது. அப்பள்ளியில் ஆங்கில மீடியம் கூட இருந்தது, மிகப் புராதனமான நல்ல தரமான ஸ்கூல்.

அப்பள்ளிக்குப் போய்—ஏழெட்டு வருடத்திற்கு முந்தைய அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரை எடுத்து அது அரவிந்தாவின் பெயர் உள்ள வருடமா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு — பிறகு 'ஆர்' என்ற எழுத்தில் தொடங்கும் பெயரைப் பார்க்க வேண்டும்.

ஒரு மணி நேரத்தில் இதெல்லாம் முடியுமா? போகவே கால்மணியாகிவிடுமே!...

ரேவந்த் மேலும் யோசிக்கவில்லை. சரியாய் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அவனுடைய கார் ராமாபுரத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

அவனுக்கு அப்பெண்ணை எப்படியாவது பிடித்தே தீர வேண்டும் என்ற ஆர்வம் எவ்வளவு பலமாய் தோன்றிற் றென்றால், இதற்காக டில்லி பிரயாணத்தைக்கூட விட்டு விடலாம் என்றுகூட எண்ணி விட்டான்.

யோசித்தவாறே ஸ்கூல் காம்பவுண்டிற்குள் காரைக் கொணர்ந்து நிறுத்தினான். அன்று பள்ளி விடுமுறை போலும்! விளையாட்டு மைதானமும் தாழ்வாரமும் ஆளரவ மின்றி கிடந்தது. மாலை வெயிலுக்கு தூண்களின் நிழல் நீண்ட வராந்தாவில் நீளக்கோடுகளாய் விழுந்து கொண்டிருந்தன. அவன் நடந்து கொண்டிருந்தபோது முகத்தில் வந்து விழுந்த நிழலும் வெளிச்சமும் அவன் உள்ளத்தில்

ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கையும், அவநம்பிக்கையும் போலவே இருந்தன.

அவன் வெல்வானா?

அதிர்ஷ்டவசமாய் ஆபீசு அறை திறந்தேயிருந்தது.

அவன் உள்ளே நுழைந்தான்.

விசாலமான ஹால் அது. சுமார் பத்து மேஜைகள் இருந்தன. மூலையிலிருந்த ஒரு மேஜைக்கு முன்னால் மட்டும் அறுபது வயது கிழவனைப் போல தோன்றும் நாற்பது வயது ஏழை இந்தியக் குமாஸ்தர ஒருவன் உட்கார்ந்து குனிந்த தலை நிமிராமல் வேலைபண்ணிக் கொண்டிருந்தான். ரேவந்த் அவருக்கு முன்னால் போய் நின்று லேசாய் இருமினான்.

பழக்கப்பட்ட குரலில் ''உட்காரும்மா'' என்றவர் நிமிர்ந்து ரேவந்தைப் பார்த்தவர் ஆச்சரியமடைந்து, ''அடே! நீ எப்படி வந்தாய்? மெயின் கேட்டிற்கருகிலேயே தர்வான் உட்கார்ந்து ஆண்களைத் தடுத்து நிறுத்தியிருப்பானே!'' என்றார்.

''கேட்டிற்கருகில் யாருமில்லை சார்'' என்றான் ரேவந்த் பணிவு நிரம்பி வழிந்த குரலில்.

''சொல்லுப்பா, என்ன வேணும் உனக்கு?''

ரேவந்த் சட்டென்று பதிலளிக்கவில்லை. ஜேபியிலிருந்த கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவன் துக்கம் மேலும் அதிகரித்தது.

கிழவர் கலவரமடைந்தார். ''என்னப்பா ஆச்சு? என்னவாச்சு?'' என்று நாற்காலியை விட்டு எழுந்து கலவரத்துடன் கேட்டார்.

''என் தங்கை இறந்துட்டாள் சார்'' என்றான் ரேவந்த் தேம்பிக் கொண்டே.

''அதற்காக இங்கே வந்து ஏன் அழுகிறாய்?'' என்று கேட்கவில்லை அவர். இரக்கம் ததும்ப ரேவந்தைப் பார்த்து, ''எப்பப்பா செத்தான்?'' என்று கேட்டார்.

''ஒரு வாரம் ஆயிடுத்து சார். ஒரே தங்கை.''

அவர் ரேவந்தை இரக்கத்தோடு பார்த்தார். கொஞ்ச நேரத்தில் தேறிய ரேவந்த், ''மன்னிச்சுக்குங்க. உங்க வேலையைக் கெடுத்துட்டேன்'' என்றான்.

''உன் தங்கை யார் தம்பி?''

''அரவிந்தான்னு...உங்க ஸ்கூலில்தான் படித்தாள்.''

''அப்படியா?'' என்றார் அவர். என்னால் உனக்கென்ன உதவி பண்ண முடியும் என்பதுபோல அவனைப் பார்த்தார். ரேவந்த் குரலைக் கனைத்துக்கொண்டு ''ஒரே தங்கை சார்... நாங்க எவ்வளவோ அருமையாய் வளர்த்தோம். ப்சு... விதியை யாரால் மீற முடியும்.''

''வருந்தாதேப்பா. செத்தவங்கள்ளாம் ரொம்ப புண்ணியசாலிகள்தான்.''

அரவிந்தா சாகும்போது தன் உயிர் சிநேகிதிக்கு இந்த விஷயத்தைச் சொல்லச் சொன்னாள் சார். அந்த சிநேகிதியின் விலாசம் கிடைக்கலை.''

யார் அந்த சிநேகிதி?''

''முழு பேரும் தெரியாதுங்க. அதற்குள் அரவிந்தாவுக்கு மேல் மூச்சு வாங்கத் தொடங்கிடுத்து. ர...ர...ரா...என்று சொல்லிண்டிருந்தப்பவே உயிர் போயிடுத்து...'' என்று பெரிதாய் அழப்போய் அரும்பாடுபட்டுத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான் ரேவந்த்.

''ம்...உயிர் போகும் தருணத்தில்கூட அவளைப் பற்றி எண்ணினாள் என்றால் அவள் எவ்வளவு நெருங்கிய சிநேகிதியாய் இருக்கணும்!''

''ஆமாம் சார், அதுக்குதான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு. இந்த விஷயத்தை அந்தப் பெண்ணுக்குத் தெரியப்படுத்தாவிட்டால் நாளைக்கு பத்தாம் நாள் பிண்டத்தைக் காக்கை கூட தொடாது சார். என் தங்கையின் ஆத்மா துடிதுடிக்கும் சார்'' என்று மனம் கரைந்தான்—

இங்கே தான் ஆடிய இந்த நாடகம் அங்கே அந்த சிநேகிதிகள் கூட்டத்திற்குத் தெரிய நேர்ந்தால் போதும் தன்னைக் கண்டந்துண்டமாக்கிக் காக்கைக்கு இரையாக்கி விடுவது உறுதி என்றெண்ணிக் கொண்டே!

அவர் ரேவந்தின் தோளில் பரிவோடு கைவைத்து, ''வருந்தாதே! என்னால் பண்ண முடிந்தது என்னவோ, அதைச் சொல்லு'' என்றார்.

''பிள்ளைக்குட்டிக்காரரான நீங்க என் வருத்தத்தை நன்றாய் புரிஞ்சுக்கிட்டீங்க'' என்றான் அவரைப் புகழ்வது போல.

''சொல்லுப்பா, எனன பண்ணனும்?''

''ஏழெட்டு வருஷத்திற்கு முன்னால் அரவிந்தா இந்த ஸ்கூலில்தான் படித்திருக்கிறாள். அதனால் அந்த வருஷத்து அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரை எடுத்துப் பார்த்து, அதில் 'ர' என்ற பெயருடன் தொடங்கும் பெண்ணின் பெயரைத் தேடிப் பார்க்கணும். அந்த பேரை வைத்துண்டு, பழைய ரிகார்டை எடுத்து அப்பெண்ணின் தந்தையின் பெயர், விலாசத்தைத் தேடணும். இதெல்லாம் ரொம்ப கஷ்டமான வேலைன்னு தெரியும் எனக்கு. ஆனால் பிண்டம்...காக்கைகள்...'' மேலும் சென்ட்டிமென்ட்டுடன் நாடகமாடினால் நன்றாயிராது என்றெண்ணி பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

அவர் மனம் உருகியவராய், ''பரவாயில்லைப்பா, இதில் கஷ்டமென்ன, பார்ப்போம்'' என்று எழுந்திருந்தார்.

இருவரும் ஸ்டோர் ரூமின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். இந்திய நாட்டின் பொருளாதார நிலையைப் போலிருந்தது அவ்வறை.

சிறிய விளக்கைப் போட்டுக் கொண்டு பழைய ரிகார்டுகளைத் தேடத் தொடங்கினார்கள். இன்னும் ஐந்து நிமிஷந்தான் பாக்கி. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் கிளம்பா விட்டால் விமானத்தை கோட்டை விடவேண்டியதுதான்.

ஏழு வருஷத்திற்கு முந்திய ரெஜிஸ்தரா அல்லது எட்டு வருஷத்திற்கு முந்திய ரெஜிஸ்தரா? நன்றாய் நினைவிருக்கா?''

''ரெண்டையும் பாருங்க''

ஏழு வருஷத்திற்கு முந்திய ரெஜிஸ்தரை எடுத்துப் பார்த்தார்கள். அதில் அரவிந்தாவின் பெயர் இல்லை. அதற்கு முதல் வருடத்திய ரெஜிஸ்தரை எடுத்துப் பார்த்தார்கள். அதிலுமில்லை. அதற்கும் முன் வருடத்து ரெஜிஸ்தர் மேல் தட்டில் இருந்தது. கிழவர் பாவம் ஸ்டூலைப் பிடித்துக் கொள்ள ரேவந்த் ஏறித் தேடியெடுத்தான். அவன் வெள்ளையாடை தூசி படிந்து பழுப்பு நிறத்திற்கு மாறி விட்டது.

அந்த ரெஜிஸ்தரில் மட்டும் பேர் இல்லாவிடில் இனி தோற்றுவிட்டாற் போலத்தான்—என்றெண்ணிக் கொண்டான். அந்த வருடத்து ரிஜிஸ்தர்கள் மொத்தம் நான்கு இருந்தன—நான்கு செக்ஷன்களின் ரெஜிஸ்தர்கள்! கிழவர் 'ஏ' செக்ஷன் ரிஜிஸ்தரைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ரேவந்த் 'பி' செக்ஷன் ரிஜிஸ்தரைப் பார்க்கத் தொடங்கினான்.

''ஆங், கிடைத்துடுத்து'' என்று இருவரும் ஏககாலத்தில் சொன்னவாறு நிமிர்ந்தார்கள்.

''ஏ செக்ஷனில் கே. அரவிந்தா என்று இருக்கு.''

''பி. செக்ஷனிலும் இருக்கு'' என்றான் ரேவந்த் செய்வ தறியாதவனாய்.

''அப்படின்னால் ஒன்று பண்ணுவோம். அப்ளிகேஷன் பாரத்தை எடுத்துப் பார்த்தால் அதில் இருக்குமில்லே? உங்கப்பா பேரென்ன?''

ரேவந்தின் தொண்டையில் ஏதோ அடைத்தது. அவன் பதிலை எதிர்பார்க்காமலேயே கிழவர் பழைய ஃபைல் ஒன்றை எடுத்து அதிலிருந்த அப்ளிகேஷன்களை உருவி எடுத்துப் பார்த்தார். ஒவ்வொரு அப்ளிகேஷன்களிலும் ஃபோட்டோ இருந்ததால் ரேவந்த் நிம்மதி பெருமூச்சு விட்ட படி தானும் தேடத் தொடங்கினான்.

அவர் ஒரு அப்ளிகேஷனைப் புரட்டிக் கொண்டிருந்த போது அதிலிருந்த போட்டோவைப் பார்த்து ஆச்சரிய மடைந்த ரேவந்த் ''இதுதான்'' என்று கத்திவிட்டான். அக்கத்தலுக்கு அவ்வறையே அதிர்ந்தது.

அவர் அதை வெளியே எடுத்து ''இதானா?'' என்று கேட்டார்.

''இதேதான்! இந்தப் பெண்ணேதான்'' உணர்ச்சித் துடிப்புடன் வெளிவந்தது அவன் வார்த்தை.

அவர் அப்ளிகேஷனைப் பரிசீலித்துவிட்டு, ''என்ன இது? இதன் மேல் பானுமதின்னு எழுதியிருக்கே?'' என்று கேட்டார்.

ஒரு நிமிஷம் ரேவந்த் அதிர்ந்துவிட்டான். உடனே இரு மடங்கு உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு, ''அந்தப் பொண்ணு பேர் பானுமதிதாங்க சார். எங்க வீட்டுக்கு அடிக் கடி வருவாள். கதையெல்லாம்கூட எழுதுவாள்...''என்றான்.

அவர் அப்ளிகேஷனை கண்களுக்கருகில் எடுத்துப் பரிசீ லித்து விட்டு, ''இவள் செக்ஷன் 'சி' ஆச்சே?'' என்றார்.

ரேவந்த் வார்த்தைகள் அப்படியே நின்றுவிட்டன.

''அப்படின்னால் 'அரவிந்தா' என்று இன்னொரு பெண் 'சி' செக்ஷனில் இருக்கலாமோ என்னவோ?'' என்றான்.

மறுபடியும் போட்டோக்களைப் பரிசீலித்தபொழுது இன்னொரு தெரிந்த முகம் தென்பட்டது.

''இவள் யார்?''

''போலீஸ் ஆபீசரின் பெண் காத்யாயினி. இவளும் உங்க வீட்டுக்கு வருவாளா?''

ரேவந்த் சோர்வாய் தலையாட்டினான். உண்மைக்கு இவ்வளவு நெருங்கி வந்துகூட மகிழ்ச்சியடைவதா அல்லது வருந்துவதா என்று புரியவில்லை அவனுக்கு. இறுதியில் அரவிந்தாவின் பெயர் 'ஏ' செக்ஷனில் இருந்தது.

''எல்லோரும் ஒரே செக்ஷனில் படித்திருக்கணும்னு எந்த ரூலும் இல்லை தம்பீ. சி செக்ஷனில் இருக்கும் பானுமதி 'ஏ' செக்ஷனிலிருந்த உன் தங்கைக்குசிநேகிதியாயிருந்தாள். இன்னொரு சிநேகிதி அதே போல வேறு செக்ஷனில் இருந்திருக்கமாட்டாளா?''

''இருந்திருக்கலாம். செக்ஷன் என்ன தலையெழுத்து. ஒரே ஸ்கூலில் வேறு கிளாசில் கூட படித்திருக்கலாம்'' என்றான் ரேவந்த்.

அவர் அதைப் பொருட்படுத்தாமல், ''முதல் எழுத்து என்னென்றாய்? 'ஆர்' தானே? இரு...எல்லா செக்ஷன்களிலும் சேர்த்து அந்த எழுத்தில் தொடங்கும் பெயர் எவ்வளவு இருக்குன்னு பார்ப்போம்...ஒன்று...இரண்டு.....நான்கு ஐந்து...செக்ஷன் 'ஏ'வில் ஐந்து. செக்ஷன் 'பி'யைப் பார்ப்போம். இரண்டு...மூன்று...மூன்று மொத்தம். செக்ஷன் 'சி'யில் ஆறு 'டி' செக்ஷனில்.....'' என்று இன்னும் ஏதோ சொல்லத் தொடங்கியபோது வெளியே கார் புறப்பட்ட

ஓசை கேட்டது. அவர் நிமிர்ந்து பார்த்தபோது எதிரே ரேவந்த் தென்படவில்லை.

காரை விர்ரென்று ஓட்டிக் கொண்டே தன்னையே தான் திட்டிக் கொண்டானான்.



பெருத்த ஓசையுடன் போயிங் போய்க் கொண்டிருந்த போது சீட்டில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டான் ரேவந்த். ஒரு அழகான ஏர் ஹோஸ்டஸ் விமானம் கீழே நொருங்கி விழப்போகும் தருணத்தில் தெய்வத்தை எப்படிப் பிரார்த்திக்க வேண்டும் என்று ஆக்சிஜன் மாஸ்க்கை வைத்துக்கொண்டு விவரித்தபடி இருந்தாள்.

தான் தோற்று அந்தப் பெண்ணே வென்று விட்டாள் என்று புரிந்து விட்டது ரேவந்திற்கு. நாளன்றைக்கு சாயந்திரம் வரையிலும் கெடு இருந்தது. ஆனால் என்ன லாபம்? தான் டில்லியிலிருந்து கிளம்பித் திரும்பி வருவதற்குள் பதி மூன்றாம் தேதி மாலை ஐந்துக்கு மேல் ஆகிவிடும்.

சாக்லீட் எடுத்து வந்த ஏர் ஹோஸ்டஸைப் பார்த்து, "டில்லியிலிருந்து திரும்பி வரும் ப்ளைட் எத்தனை மணிக்கு இருக்கு?" என்று கேட்டான்.

"சரியாய் மாலை 4-55-க்கு சார்"

ரேவந்திற்கு என்ன பண்ணுவதென்றே புரியாத வேதனை ஏற்பட்டது. தன் ஊகம் உண்மையானால் தன்னை

எதிர்கொள்வதற்காக அன்று அந்தப்பெண் விமான நிலையத்திற்கு வருவாள். வேறுவிதமாய் சொல்ல வேண்டுமானால் 'நீ தோற்றுவிட்டாய்' என்று தெரிவிப்பதற்காக.


உள்ளங்கையை மடக்கி ஓங்கி குத்திக்கொண்டான். காலையில் கார் ரேசில் தொடங்கிய வேட்டை—ஒட்டலுக்குப் போனது—நான்கு பெண்கள்—ராமாபுரம் ஸ்கூல்..... இத்தனை ரகசியங்களை இன்று ஒரே நாளில் துப்பறிந்தாற் போல முதல் நாளிலிருந்தே செய்திருந்தால் அப்பெண் மிக எளிதில் கிடைத்திருப்பாள். தான் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையோடு இத்தனை நாளும் வெறுமே கழித்துவிட்டான், சதுரங்கத்தில் கடைசி தருணம் வரையிலும் தோற்றுவிட்டாற் போலவே நடித்து, கடைசி வினாடி ஸ்டெப்பை எடுத்து வைப்பது தன் கைவந்த கலை. காதல் என்ற சதுரங்கத்தில் அதே தந்திரத்தைத் தன் மேலேயே கையாண்டிருக்கிறாள் அப்பெண்! ஆரம்பத்திலிருந்தே கைக்கு அகப்படுவது போலவே நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு இறுதிவரை அழவைத்திருக்கிறாள். அழவைத்து வென்று விட்டாள்.

யோசித்தவாறிருந்த அவன் விமானம் மேகங்களுக்கிடையேயிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்ததை கவனிக்கவில்லை.

விமான நிலையத்திற்கு தென்னிந்திய விளையாட்டுச் சங்க காரியதரிசியும், தேசிய சதுரங்க போர்டு அங்கத்தினர்களும் வந்திருந்தது மகிழ்ச்சியளித்தது ரேவந்திற்கு. தமிழனின் புகழுக்குக் குறைந்த பட்சம் வெளியூர்களிலாவது கௌரவமளிக்கப்படுகிறதே! எல்லோரும் சேர்ந்து ஒட்டலுக்குப் போனார்கள்.

ஒட்டலையடைந்ததும் ஜேம்ஸ்க்கு போன் பண்ணி லாக்கப்பிலிருந்த சிநேகிதனின் நிலையைப் பற்றி விசாரித்தான். அவனை வெளியே விட்டுவிட்டதாய் தெரிவித்தார்கள். பரவாயில்லை, இந்த மட்டிலும் பிழைத்தாகி விட்டது.

அன்றிரவெல்லாம் உறக்கமே வரவில்லை. கண்ணாடி ஜன்னலுக்கப்பால் தென்பட்ட நகரத்தையும் விளக்கு வெளிச்சத்தையும் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான். நள்ளிரவு ஒரு மணிக்கு மேல் ஏர்கண்டிஷனரை அணைத்து விட்டு லேசாய் கண்ணயர்ந்தான்.



போட்டி தொடங்கவிருந்த ஹாலுக்கு வெளியேயிருந்த வராந்தாவில் ஜனத்திரள் நிரம்பி வழிந்தது. ''உங்களுக்கும் பீராபகருக்கும் சச்சரவு ஏற்பட்டது எங்களின் அதிர்ஷ்டம். போலன்ஸ்கீ உங்களோடு ஆடுவதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது'' என்றார் செக்ரட்டரி. ரேவந்த் முறுவலுடன் வெறுமே இருந்துவிட்டான்.

ஹாலுக்குள் அடியெடுத்து வைத்ததுமே போலன்ஸ்கீ எதிரே வந்து, தன் நீண்ட கையை நீட்டி, ''ஹௌ ஆர் யூ பாய்?'' என்று கேட்டான் பரிவோடு. ரேவந்த் கைக்குலுக்கினான்.

சரியாய் இரண்டு மணிக்குப் போட்டி ஆரம்பமாயிற்று. ஒரு மணி நேரம் முடிவதற்குள் இரு அகில உலக விளையாட்டு வீரர்களும் தம் உலகத்தையே மறந்து போய் ஆட்டத்தில் லயித்துவிட்டிருந்தார்கள்.

தன் வெறுப்பையும் கோபத்தையும் விளையாட்டில் செலுத்தி தீவிரமாய் ஆடிக் கொண்டிருந்தான் ரேவந்த். போலன்ஸ்கீக்கு இந்த ஆட்டம் ஒரு வாழ்க்கைப் போராட்டம்.

இந்த ஆட்டத்தில் தான் தோற்றுவிட்டால் அகில உலகப் புகழிலிருந்து ஒரு படி கீழே இறங்கி விட வேண்டியதுதான் என்பது புரிந்தது.

சதுரங்கத்தின் மேல் ஆர்வமுடைய சிலர் அவ்விருவரின் விளையாட்டுக்களையும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மாலை நெருங்குவதற்குள் ரேவந்திற்கு ஒரு ரூக்கும் இரண்டு பான்சும் போய்விட்டன. போலன்ஸ்கீயின் ஒரு பிஷப்பும், ஒரு பானும் ஒரு ரூக்கும் போய்விட்டன. யாருடையது எவ்வளவு போயின என்பது பிரச்னையில்லை. ரேவந்தின் இரு குதிரைகளும் எதிரியின் பாசறைக்குள் சிறைப்பட்டிருந்தன. அவன் நைட்டின் மூலம் எவ்வாறு குழப்பத்தைத் தோற்றுவிப்பான் என்பது எல்லோரும் அறிந்ததே.

அன்றைய கடைசி ஸ்டெப்பை எழுதி ஒரு உறையிலிட்டு ஒட்டி சீல் பண்ண சூப்பர்வைசரிடம் தந்து விட்டு வெளியே வந்தான் ரேவந்த். ஹோட்டலுக்குத் திரும்பி வருவதற்குள் நன்றாய் இருட்டிவிட்டது. அன்று அவனை யாரோ டின்னருக்கு அழைத்திருந்தார்கள். வேற்று யோசனை யுடனேயே அவர்களோடு உண்டு கழித்துவிட்டு உறங்கப் போனான். சீக்கிரமாய் விழிப்பேற்பட்டுவிட்டது.

மணியைப் பார்த்தான். ஐந்து.

அதாவது இன்னும் சரியாய் பன்னிரெண்டு மணி நேரம் இருந்தது. எட்டரைக்கு ஆட்டம் மறுபடியும் தொடங்கிற்று. சூப்பர்வைசர் உறையைப் பிரித்து காய்களை எடுத்து வைத்தார்.

பத்தரையடிப்பதற்குள் ரேவந்த் எதிரியின் இன்னொரு பானை எடுத்து பிஷப்பையும் ரூக்கையும் தன் நைட்டால் சிறைப்படுத்தினான்.

போலன்ஸ்கீ ''உம்'' என்று தலையைச் சிலிர்த்துவிட்டுத் தனக்குள் நகைத்துக் கொண்டு, இந்த நைட்டை யார் கண்டு பிடித்தாங்களோ தெரியலை, எவ்வளவு அனாயாசமாய் கொன்று தள்ளிவிடுகிறது! இரண்டு கட்டங்களைத் துள்ளித் தாண்டிப் போய் லம்பத்தில் எப்படி நிற்கும்னு பிரம்மதேவனால் கூட கண்டு பிடித்துட முடியாது'' என்று வேடிக்கையாய் சொல்லிக்கொண்டே பிஷப்பை எடுத்து ரேவந்தின் ராணிக்கருகில் வைத்தான்.

தான் ராணியை நகர்த்தினால் அடுத்த ஸ்டெப்பாய் போலன்ஸ்க்கீ ரூக்கை முன்னுக்கு நகர்த்திவிடுவானே என்பதைப் பற்றிக் கூட ரேவந்த் சிந்திக்கவில்லை. தான் எடுத்து வைத்த உபாயத்தை அவன் எப்படி வென்று விட்டான் என்பதைப் பற்றிக் கூட யோசித்தான் இல்லை!

போலன்ஸ்க்கீ பேசிய பேச்சானது நினைவுத் திரையைத் துளைத்து எதையோ வெளிக்கொணர்ந்தாற் போல செய்து விட்டதால் மூளையின் அடிவாரத்தில் ஒரே ஒரு நினைவே வட்டமிடத் தொடங்கிவிட்டது.

லம்பம்! அதாவது நேர்க்கோடு! நேராய் போவது. இதே வார்த்தையை அவளும் பயன்படுத்தினாளே! எவ்வளவு இனிமையான வார்த்தை லம்பம் என்ற இச்சொல்!..... பெர்பென்டிகுலர்!

''நான் நேராய் ஓட்டலிலிருந்து வீட்டிற்குப் போய் அங்கிருந்து நேராய் கிளம்பி ஜங்ஷனுக்கு நேராய் வருகிறேன் —என்றது நினைவுக்கு வந்தது.

'வீட்டிற்குப் போய்விட்டு அங்கிருந்து ஜங்ஷனுக்கு வருகிறேன்' என்று சொல்லியிருக்கலாமே? அவ்வாறின்றி ஏன் அப்படிச் சொன்னாள்? அதற்குள் பார்வையாளர்களிடையேயிருந்து யாரோ ''நேரம் ரன்அவுட் ஆயிண்டிருக்கு' என்று கத்தினார்கள்.

ரேவந்த் திடுக்கிட்டு அந்தப்பக்கமாய் பார்த்தான். போலன்ஸ்க்கீ தன் ஆட்டத்தை ஆடி முடித்து வெகுநேரமாகி யிருந்தது. இன்னும் ஓரிரண்டு நிமிஷத்திற்குள் ரேவந்த் ஸ்டெப் எடுத்து வைக்காமல் போனால் தோற்றுவிட்டாற் போலதான்! அவன் பரபரப்புடன் யோசித்து முடித்து ராணியை முன்னுக்குக் கொணர்ந்தான்.

இம்முறை போலன்ஸ்க்கீயின் பங்கு!

ரேவந்த் திரும்பவும் யோசனையில் ஆழ்ந்தான்...'அவள் நேராய் போய் அங்கிருந்து நேராய் வருகிறேன் என்று சொன்னாற் போன்ற நினைவு! 'நேராய்' என்ற பதத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன் தந்தாள்?—

''இங்கிருந்து நான் எந்த வேகத்தில் வருகிறேனோ அதே வேகத்தில்தான் நீங்களும் அங்கிருந்து வரணும். இருவரும் ஒரே சமயத்தில் சந்திப்போம்.''

''அப்படின்னால் நீங்களும் நானும் ஜங்ஷனிலிருந்து ஒரே தொலைவில்தான் இருக்கிறோம்னு சொல்லுங்கள்.''

''இதைத் தெரிஞ்சுக்க ஒண்ணாம் கிளாசு பையனால் கூட முடியும்.''

''கேலோ...பை — கேலா...'' யாரோ உறுதுவில் கத்தினார்கள். உண்மையில் அந்த மாதிரி கத்தக்கூடாது. அவ்வாறு கத்திய பார்வையாளரை சூப்பர்வைசர் எச்சரித்து வெளியே அனுப்பிவைத்தார்.

டைம்...டைம்...டைம்...ரேவந்த் பதறிப்போய் போர்டைப் பார்த்தான். போலன்ஸ்க்கீ ராஜாவை நகர்த்தியிருந்தான். தான் ராணியை நகர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை. அதனால்தான் இந்த ஸ்டெப்பிற்காக இவ்வளவு நேரம் என்ன யோசனை வேண்டிக் கிடக்கிறது என்று ஆலோசனை தந்திருக்கிறார் யாரோ.

வேறு வழியில்லை.

ரேவந்த் ராணியை நகர்த்தினான்.

மறுபடியும் யோசனைகள்...

தன் ஆபீசிலிருந்து காரோட்டப் பந்தயம் தொடங்கிய ஜங்ஷன் எவ்வளவு தூரம் என்பதைத் தான் முன் கூட்டியே கணக்கிட்டு முடித்திருந்தான். அது இன்னும் நினைவிருந்தது அவனுக்கு. அது இருபத்தி மூன்று கிலோ மீட்டர்கள்! இருவரும் அந்த பாயின்ட்டை ஒரே நேரத்தில் சேருமாறு பிரயாணம் பண்ணினார்கள்.

அவ்வாறானால் ஹோட்டலிலிருந்து அவள் வீடும் அங்கிருந்து ஜங்ஷனும் மொத்தம் இருபத்துமூன்று கிலோ மீட்டர்கள் என்பது புரிந்தது. இதைத் தெரிந்துக்க ஒண்ணாங்கிளாசுப் பையனால் கூட முடியும் என்று அவள் சொன்னது இந்த தூரத்தைப்பற்றிதான் போலும்!

''இங்கிருந்து எங்க வீடும்— அங்கிருந்து ஜங்ஷனும் கிலோமீட்டர்களில் வித்தியாச மில்லாத சமமான எண்கள். இந்த வார்த்தைக்கு அவன் அந்த சமயத்தில் முக்கியத்துவம் அதிகமளிக்கவில்லை. ஆனால் இப்பொழுது யோசித்துப் பார்த்தபொழுது அர்த்தம் புரிந்தது. யோசித்தவாறே அடுத்த ஸ்டெப்பை எடுத்து வைத்தான் ரேவந்த். நேரம் பதினொன் றடிக்கப் போகிறது. இன்னும் இரண்டு மூன்று மணி நேரத் திற்குள் ஆட்டம் முடியவிருந்தது. இரண்டரை மணிக் கெல்லாம் விமான நிலையத்தில் இருக்க வேண்டும். விளையாட்டு முடிவடையாவிட்டால் பிரயாணம் கேன்சலாகி விடும்.


போலன்ஸ்க்கி அடுத்த ஸ்டெப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

ரேவந்த் யோசித்தது வேறொன்றைப் பற்றி. அவள் பிராயணம் பண்ணிய மொத்த தூரம் தெரியும். நடுவில் 90 டிகிரியில் சுற்றியதும் தெரியும். சட்டென்று அவன் உதடு களில் குறுநகை படர்ந்தது. மிகச் சிறிய கணக்கு.

பைதாகிரஸ் முறை—

கர்ணமும் ஸ்கிவேரும் = கோணமும் ஸ்கிவேரும் +
கோணம் ஸ்க்வேர்.

தனக்கு இரண்டு கோணங்களின் கூட்டுத்தொகை எவ்வளவென்று தெரியும். ஆனால் ஒவ்வொன்றும் தனித் தனியே எவ்வளவென்று தெரியாது. கர்ணம் எவ்வளவு என்றும் தெரியாது.



ஒன்றுந்தெரியாமல் எப்படி கண்டுபிடிப்பது? ஆங் இன்னொன்றுந் தெரிந்தது. கிலோ மீட்டர்கள் இரண்டுமே சம எண்ணிக்கைகள் என்பது.

நாற்சந்திக்கும் ஹோட்டலுக்குமிடையேயுள்ள தூரம் எவ்வளவு?

தான் அவ்வூரில் சுற்றிய அனுபவத்தை நினைவுப் படுத்திக் கொண்டு அவன் யோசிக்கத் தொடங்கினான்.

உத்தேசமாய் பதினைந்து அல்லது இருபது கிலோ மீட்டர் தூரமிருக்கலாம்.

போலன்ஸ்கீ தன் ஆட்டத்தை ஆடிவிட்டு சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ரேவந்த் பக்கமா யிருந்த ஸ்டாப் வாட்ச் கிர்ரென்று வேகமாய் சுற்றிக்

கொண்டிருந்தது. ரேவந்தீ தன் பங்கு ஸ்டெப்பாய் குதிரையை நகர்த்தினான். நகர்த்தி விட்டுக் கண்களை மூடிக் கொண்டான்.

மிகப் பெரிய கணக்கு. அவனுக்குக் கணக்கில் அனுபவம் கிடையாது. ஆனால் சதுரங்கத்திலிருந்த திறமை அளவுக்கு மீறிய ஞாபகசக்தியை தந்திருந்தது. முதலில் '15' என்ற எண்ணை எடுத்துக்கொண்டு கணக்கிட்டுப் பார்த்தான். வர வில்லை. பிறகு 16ஐ எடுத்துக் கொண்டான். வரவில்லை. ஒவ்வொரு கணக்கிற்கும் பத்து நிமிஷம் பிடித்தது. எல்லாவற்றையும் மனதிற்குள்ளேயே கணக்கிட்டு முடிப்பது பெரும்பாடாய் இருந்தது. ஆயினும் உறுதியை விடவில்லை. எவ்வளவோ ஸ்டெப்புகளை எடுத்து வைத்துக் கொண்டே யிருந்தான். மனமெல்லாம் கணக்கிலேயே லயித்திருந்தது.

கேவலம் '23' என்ற எண் மட்டுந்தான் தெரிஞ்சிருந்தது. அந்த ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு கண்டுபிடித்து முடிக்கவேண்டும். ஆனாலும் அவன் உறுதி தளரவில்லை. அடுத்த எண்ணான 17ஐ எடுத்துக் கொண்டான். ஒருக்கால் அந்த தூரமே 17ஆகவிருந்தால்...

$17^2 = X^2 (23-X)^2$

$289 = X^2 + 529 + X^2 - 46X$

$X^2 + 120 - 23X = 0$

$(X-8)\ (X-15) = 0$

$X = 8$ அல்லது 15.

வந்து விட்டது முழு எண் 15, 8.

ஆனந்தாஸ்ரமத்திலிருந்தாவது நாற்சந்தியிலிருந்தாவது அவள் வீடு சரியாய் 8 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

அவன் யோசனையைச் சிறகடித்தவாறு 'செக், மிஸ்டர் ரேவந்த்'' என்ற குரல் கேட்டதால் கண்களைத் திறந்தான். எதிரி சேனைகள் எல்லாம் ஒன்று திரண்டு தன் சாம்ராஜியத்

திற்குள் அடியெடுத்து வைத்திருந்ததை கவனித்து, செய்வ தறியாது தன் ராஜாவை நகர்த்திவிட்டு கண்களை மூடிக் கொண்டான். இதில் பெரிதாய் என்ன இருக்கிறது? ஃப்ரெண்ட்லி மாட்ச்! மனதிற்குள் ஆடும் சதுரங்கம் இதைக் காட்டிலும் மேலானது. அங்கே தோல்வியானது வாழ்க்கைப் போராட்டப் பிரச்னை. அதைக் கண்டுப்பிடிக்க முடியா விட்டால் வரப்போகும் மனைவி வாழ்நாளெல்லாம் தன்னை இடித்துக் காட்டிக் கொண்டேதானிருப்பாள்.

ரேஸந்த் தன் சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டான்

ப்ளைண்ட் ஃபோல்ட்!!

கண்களை மூடிக்கொண்டு சதுரங்கத்திலுள்ள அறுபத்தி நான்கு கட்டங்களிலும் எங்கெங்கே எந்தெந்த காய்கள் இருந்தன என்பதை நினைவிற்குக் கொண்டு வருவது. ஆனால் அவன் இப்பொழுது நினைவுபடுத்திக் கொண்டது சதுரங்க போர்டை இல்லை. தன் நகரத்து வரைபடத்தை! தன் ஊர் வரைபடத்தில் எந்தெந்த இடத்தில் எவ்வெவ்வூர் இருந்தன என்பதைத்தான்.

அவன் நினைவிலிருந்து சதுரங்க கட்டங்கள் மாயமாகி விட்டன. குதிரைகளும் யானைகளும் பிஷப்புகளும் ஓடி மறைந்தன. மூளையே வெள்ளைக் காகிதமாயிற்று, அதன் மேல் ஒரு சரளமான கோடு வந்து நின்றது. அதற்குள் அது ஒரு முக்கோணமாயிற்று. அப்படிப்பட்ட முக்கோணங்கள் நான்கு. நான்கு ப்ரோபபிளிடிஸ்! இத்தனை நாளும் தான் சுற்றித் திரிந்த ஊரின் வரைபடத்தையும் வீதி வரைபடத் தையும் நினைவுக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டான்.

அந்த வீதி வரைபடத்தில் இந்த முக்கோணத்தைப் பதித்தான்.

அப்பெண்ணின் வீடு A, B, C, D என்ற நான்கு இடங் களுக்குள் எங்கோ ஓரிடத்தில்தான் இருந்து தீரணும்.

ஏ—சர்வோதயா நகர் பி—காந்தி காலனி

சி—கடற்கரை ஏரியா டி—சேரிப்பகுதி

அவ்வாறானால் இவற்றில் இரண்டைத் தள்ளிவிடலாம். அப்பெண்ணின் கார், ஜங்ஷனுக்கு இடதுபக்கத்திலிருந்து வந்து கடற்கரையை நோக்கிப் போயிற்று. அதனால் வீடு 'ஏ' அல்லது 'டி' பகுதியில்தான் இருந்திருக்க வேண்டும். 'டி' சேரிப்பகுதியானதால் எஞ்சியிருந்தது 'ஏ' பகுதி மட்டுந் தான். நிலாப்பெண் வசிப்பது சர்வோதயா காலனியில் தான்.

"செக் மிஸ்டர் ரேவந்த், முடிந்துவிட்டது. அதற்குள் கைதட்டலோசை வானைப் பிளந்தது. ரேவந்த் போர்டைப் பார்த்தான். தான் ஆட்டத்தை விட்டு நீங்ககூடிய நிலை வந்துவிட்டது. ஒரு சிறுவன் தான் அடைந்த வெற்றியைப் பார்த்து இறுமாந்து போவதுபோல "நான் வென்று விட்டேன்" என்றான் போலன்ஸ்கீ.

ரேவந்த் முறுவலித்துவிட்டு, "நானும் வென்று விட்டேன்" என்றான்.

19

ஓட்டலுக்கு வந்ததுமே ப்ரீ..ப்கேசில் சாமான்களை எடுத்து வைத்துக் கொள்ளக்கூடவில்லை. அதற்குள் ஜேம்சுக்கு லைட்னிங் கால் பண்ணினான் ரேவந்த். ஐந்து நிமிஷத்தில் ஜேம்ஸ் லைனுக்கு வந்தான்.

''ஜேம்ஸ்! நான்தான் ரேவந்த். இவ்வளவு நாளாய் நம்மை அழவைத்துண்டிருந்த பெண் எங்கேயிருக்கிறாள் என்று கண்டுபிடித்துட்டேன்.''

''எங்கே?''

''சர்வோதயா காலனியில்.''

''எப்படித் தெரிந்தது?''

''அதெல்லாம் இப்பப் போனில் வேண்டாம்...சரி, இன்னும் பதினைந்து நிமிஷத்தில் கிளம்பி வரப்போகிறேன். நான் வருவதற்குள் அப்பெண்ணின் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்துவை. அதை வைத்துண்டே போன் நம்பரைக் கூட கண்டுபிடி...''

''எப்படிக் கண்டுப்பிடிப்பது?''

''சர்வோதயா காலனி ரொம்ப நவீன பகுதி. வீடுகள் எல்லாம் ஒன்றுக்கு மற்றொன்று தூரதூரத்தில் அமைந்திருப்பவை. எல்லாமாய் சேர்ந்து நூறு வீடுகள் கூட இராது. மோட்டார் சைக்கிளை எடுத்துண்டு ஒவ்வொரு வீடாய் போ. எந்த வீட்டில் நீலநிற .'.பியட் காரும் வெளி நாட்டு டயோட்டாவும் இருக்கிறதோ அங்கே முயற்சிபண்ணு. வேறுவழில்லை. இன்னும் மிஞ்சினால் ரெண்டே மணி நேரந்தான் இருக்கு...ஆனால் இறுதிவரை முயற்சி எடுப்பது தான் சதுரங்க விளையாட்டு வீரனின் லட்சணம்'' என்று போனை வைத்து விட்டான்.

செகரட்டரி ''போவோமா?'' என்று கேட்டான்.

''இன்னும் ஒரு நிமிஷம்''

செகரட்டரி நேரத்தைப் பார்த்து விட்டு, ''விமான நிலையத்தில் ரிபோர்ட்டிங் டைம் முடிந்து விடும்'' என்றான்.

நேரம் அதற்குள் இரண்டரை தாண்டிவிட்டது. விமானம் மூன்று மணிக்கு. உண்மையில் ஒரு மணி முன் கூட்டியே

ரிபோர்ட் பண்ண வேண்டும். அதிர்ஷ்டவசமாய் கல்கத்தா விமான நிலையத்தைப் போலின்றி டில்லி விமான நிலையத்து வழி அத்தனை சிக்கலானதில்லை.

ரேவந்த் மற்றொரு லைட்னிங் கால் போட்டான். சர்வோதயா காலனியையே சல்லடை போட்டு சலித்தாவது அவன் அப்பெண்ணின் போன் நம்பரைக் கண்டுபிடித்து விட எண்ணியிருந்தான். எந்த வழியையும் விடப் போவாதில்லை அவன். அவன் இப்பொழுது போன் பண்ணியது சுலோச்சனாவுக்கு. அந்த நேரத்தில் அவனைப் பார்த்தால், படை திரண்டு எழும் சேனை வீரர்களை எல்லா பக்கங்களிலிருந்தும் யோசனைபண்ணி முடிவெடுத்து ஏவிவிடும் 'கமாண்டர் இன் சீப்'பைப் போல தோன்றினான்.

விமானம் கிளம்ப சரியாய் இருபத்தைந்து நிமிஷங்களே இருந்தன.

செக்ரட்டரி கலவரத்தோடு மற்றொரு முறை நேரத்தைப் பார்த்து விட்டு, ''விடுங்க, டிக்கெட்டை கேன்சல் பண்ணி டட்டுமா? நாளைக்குப் போய்க்குங்க'' என்றான்.

ரேவந்த் கலக்கமடைந்து, ''எந்தச் சூழ்நிலையாயிருந்தாலும் சரி, நான் இன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் எங்க ஊரில் இருந்து தீரவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுது அவன் பண்ணிய ட்ரங்க்கால் வந்து விட்டது. போனை எடுத்து, ''ஹலோ, கொஞ்சம் சுலோச்சனாவைக் கூப்பிடுறீங்களா?'' என்று கேட்டான் உறக்க.

''எந்த சுலோச்சனா?'' அசிரத்தையோடு கேட்டார்கள் மறுமுனையிலிருந்து யாரோ.

''ராஜசுலோச்சனா...ஆபரேட்டர்.''

''என்னவோ, தெரியாது'' என்று போனை வைக்கப் போனான் அந்த ஆள்.

''டோன்ட் டிஸ் கனெக்ட் என்று கத்தினான் ரேவந்த் கோபமும் எரிச்சலும் மிகுந்த குரலில்.'' இது டில்லியிலிருந்து வரும் லைட்னிங் கால்னு தெரியும் உங்களுக்கு. ஆனாலும் இவ்வளவு அலட்சியமாய் எப்படி வைக்க முடிகிறது உங்களால்?''

''சுலோச்சனா என்ற பெயரில் யாருமே கிடையாதே இங்கே.''

''அவள் உங்க எக்செஞ்சில் எட்டு வருஷமாய் வேலை பண்ணுகிறாள். உங்க செக்ஷனில் இல்லாமலிருக்கலாம். ஆனால் இது ரொம்ப முக்கியமான விஷயம். சக ஆபரேட்டருக்கு இந்த அளவு உதவி கூட பண்ண முடியாத நீங்க— உங்களுக்குத் தேவையானபொழுது மற்றவங்க மட்டும் உதவி பண்ணணும்னு எப்படி எதிர்பார்க்க முடியும்? முதல்ல டெலிபோன் ஆபரேட்டர் என்றாலே பொறுமைக்கு அவதாரம் என்கிறாங்க எல்லோரும். அப்படியிருக்கும்போது குறைந்தபட்சம் பக்கத்திலிருப்பவங்களைக் கூட கேட்காமல் நீங்க இவ்வளவு அலட்சியமாய் 'அவள் யாருன்னு தெரியாது' என்று எப்படிச் சொல்றீங்க?''

அவன் வார்த்தைகள் நன்றாய் வேலை செய்தன. அவனுக்கு எந்த பதிலும் சொல்லாமல் பக்கத்திலிருப்பவர்களை ஏதோ கேட்பது காதில் விழுந்தது. என்னென்னவோ பேச்சுக் குரல்கள்...பிறகு கொஞ்ச நேரத்தில் சுலோச்சனா லைனுக்கு வந்து ''ஹலோ'' என்றாள்.

* * *

தட தட வென்று சப்தமிட்டுக் கொண்டே மோட்டார் சைக்கிள் அந்த தார் ரோடு வழியேபோய்க் கொண்டிருந்தது. வீதியின் இருபங்கங்களையும் பார்வையிட்டுக் கொண்டே போய்க்கொண்டிருந்தான் ஜேம்ஸ். ஃபியட் கார்கள் பல வீடுகளில்நின்று கொண்டிருந்தன. ஆனால் பெரும்பாலான வீட்டுக்

கார் ஷெட்டுகள் மூடிக்கிடந்தன. அதற்குள் வேறொரு கார் இருந்ததா இல்லையா என்று புரியவில்லை. ஒவ்வொரு வீட்டிற்கும் முன்னால் போய் நின்று ''உங்க வீட்டில் இளம் பெண்ணொருத்தி இருக்கிறாளா?'' என்று கேட்டால் தோல் உரிந்து விடும்.

ஒரு வீட்டிற்கு முன்னால் டயோட்டா தென்பட்டது. அத்துடன் இன்னும் நிறைய கார்களும் இருந்தன. மேலும் வீட்டிற்கு முன்னால் பந்தல் போடப்பட்டிருந்தது. நிறைய பேர் கூடியிருந்தார்கள். அதைத் தாண்டிப் போனான்.

சுமார் ஐந்து நிமிஷம் கழிந்ததும் இன்னொரு டாயோட்டா கண்ணில் பட்டது போர்டிகோவில். அதைத் தவிர கார் ஷெட்டில் இன்னொரு கார் நின்றுகொண்டிருந்தது கூட சந்து வழியாய் நன்றாய் தெரிந்தது.

இருமுறை அவ்வீட்டைச் சுற்றி வட்டமடித்து விட்டு உள்ளே நுழைந்தான் ஜேம்ஸ். கேட்டிற்குள் கூர்க்கா அமருமிடம் தெனபட்டது. உள்ளே வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்து விட்டு எழுந்திருந்தான் கூர்க்கா.

* * *

''நான்தான் ரேவந்த். டில்லியிலிருந்து பேசறேன். உங்களோடு ஒரு முக்கியமான விஷயம் பேசனும்.''

''என்ன?''

அந்தப் பொண்ணு இருப்பது சர்வோதயா காலனின்னு தெரிஞ்சுது. அதை வைத்துண்டு அவள் போன் நம்பரைக் கண்டு பிடிக்க முடியும்னு நினைக்கிறேன்.''

அவன் வேலை மெனக்கெட்டு இந்த விஷயத்தை அவ்வளவு தூரத்திலிருந்து தனக்குப் போன் பண்ணி சொல்ல

வேண்டிய தேவை என்ன? ஆச்சரியமடைந்தாலும், ''எப்படி?'' என்று கேட்டாள் சுலோச்சனா தன் வியப்பை வெளி காட்டிக் கொள்ளாமல்...

இந்த குறுக்குக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. வியப்புடன், ''வட்டாரம் தெரிந்தால் போன் நம்பரைக் கண்டு பிடித்துட முடியாதா?'' என்று கேட்டான்.

''எங்களிடம் இரண்டு வித விவரங்கள் உண்டு. ஒன்று பேரைச் சொன்னால் நம்பரைச் சொல்லுவது. இதை டைரக்டரி விசாரணை என்பார்கள். இதைத் தவிர நம்ரைச் சொன்னால் அது யாருடையது அவங்க விலாசம் என்னன்னு சொல்ற மற்றொரு விதம்...இவ்விரண்டைத் தவிர வேறெதை யுமே சொல்ல முடியாது. ஏன் என்றால் ஒரு வட்டாரத்தி லிருக்கும் எல்லா போன்களும் அடுத்தடுத்த நம்பர்களில் இராது...''

''அந்தப் பெண்ணின் பெயர் 'ஆர்' என்ற எழுத்தில் தொடங்கும்.''

''' 'ஆர்' எழுத்தில் தொடங்கும் பெயர்கள் டைரக்டரியில் ஆயிரத்திற்கும் மேலே இருக்கும்.''

''முதல்ல அந்தப் பெண்ணின் பெயரில்தான் போன் இருக்கும்னு என்ன நிச்சயம்?'' ரேவந்த் தனக்குத்தானே பதிலளித்துக்கொள்வது போல சொன்னான்.

''அப்ப என்ன பண்ணலாம்?''

ரேவந்த் சட்டென்று பதில் பேசவில்லை. மோவாயைத் தடவிக் கொண்டான். ஜேம்ஸ் இந்த நேரத்தில் அந்த காலனியில் சுற்றிக் கொண்டிருப்பான். ஆனால் அங் கொன்றும் இங்கொன்றுமாய் வீடுகள் இருக்கும் அக்காலனி யில் அப்பெண்ணின் வீட்டை எப்படித் தேடிக்கண்டு பிடிப் பான்? அதில் நம்பிக்கை வைப்பது வீண்!

''ஹலோ...''

அவன் சுதாரித்துக் கொண்டு, ''சரி, சுலோச்சனா நம்மால் ஒன்றும் முடியாதுன்னு நினைக்கிறேன், தாங்க்ஸ்'' என்று போனை வைத்துவிட்டான்.

செகரட்டரி கைக்கடியாரத்தைப் பார்த்துவிட்டு, ''நாம் இனி போய் பிரயோஜனமில்லை. நேரம் ஆயிடுத்து'' என்றான். அதற்குள் மணி இரண்டே முக்கால் ஆகியிருந்தது.

''உலகமே தலைகீழானாலும் சரி, இன்று மாலை ஐந்து மணிக்கெல்லாம் நான் அங்கே இருந்து தீரணும். சாவியைத் தாங்க, நான் ஓட்டறேன்'' என்று ப்ரீஃப் கேசைக் காரில் வைத்து விட்டு ஸ்டீரிங்கின் முன்னால் வந்தமர்ந்தான்.

முனை திரும்பும்பொழுது ஏற்பட்ட 'கிறீச்' சென்ற ஒசை உள்ளிருந்தவர்களுக்குக் கேட்டு முடிப்பதற்குள் அடுத்த முனையை நெருங்கிவிட்டிருந்தான். அத்தனைப் படு வேகத்தில் பறந்து கொண்டிருந்த அக்காரை 'ஜன்பத்'தில் நிறைய பேர் வாயைப் பிளந்தபடி நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். விமான நிலையத்தைப் போய் சேர்ந்தபொழுது கடைசி வெயிடிங் லிஸ்ட் நம்பருக்கு டிக்கெட் தந்து கொண்டிருந்தார்கள்.

செக்ரட்டரி ஓட்டமாய் ஓடிப்போய் போர்டிங்கார்டைப் பெற்றுக் கொண்டான். அதைப் பெற்றுக் கொண்டாலும் போதும் பிரயாணம் நிச்சயமானாற்போலதான்! ஆயினும் ரேவந்த் சந்தோஷமாயில்லை. தான் தோற்றுக் கொண்டிருப்பது புரிந்தது. அவ்விருட்டில் மினுக் மினுக்கென்று ஒளி வீசிக்கொண்டிருந்த ஒரே நம்பிக்கை—ஜேம்ஸ் ஒருத்தன்தான்.



''அவரை உள்ளே அனுப்பு'' கணீரென்று கேட்ட அக்குரலுக்கு கூர்க்கா, ஜேம்ஸ் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பால்கனியில் ஒரு கிழவர் நின்றுகொண்டிருந்தார். கிழவரானாலும் பலமாயும் திடமாயும் இருந்தார். ஐந்து நிமிஷங்களாய் ஜேம்சுக்கும் கூர்க்காவுக்கும் வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரர் அழைத்ததால் ஜேம்ஸ் கர்வமாய் கூர்க்காவைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடக்கத் தொடங்கினான் உள்ளே.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

''யார் நீ? என்ன வேணும்?''

''பழைய மாணவர்கள் அசோசியேஷனைச் சேர்ந்தவன்-ராமாபுரம் கான்வென்ட் ப்ரெசிடென்ட் நான். பழைய மாணவர்களும் மாணவிகளும் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். அதற்காக ரம்யாவையும் அழைக்கலாம்னு வந்தேன்.''

''ரம்யா யாரு?''

ஜேம்ஸ் ஒரு வினாடி அகிர்ந்துவிட்டான். உடனே தேறி, ''இந்த வீடு இல்லீங்களா? சரிதான்...இந்த காலனியில்தான் இருப்பதாய் யாரோ சொன்னாங்க, தேடிண்டே வந்துண்டிருக்கேன்'' இனி அங்கே இருந்தால் நேரம் வீண் என்றெண்ணிப் போகத் திரும்பினான்.

ஒஹோ? ரம்யாவைப் பற்றியா நீ கேட்கிறாய்?''

துப்பாக்கி குண்டு பட்டாற்போல அதிர்ந்துபோய் திரும்பினான் ஜேம்ஸ். முகத்தில் ரத்தம் ஜிவ்வென்று பரவிற்று. தன் பரபரப்பை அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டு, ''ஆமாம், இருக்காங்களா?'' என்று கேட்டான்.

உள்ளே திரும்பிப் பார்த்து ''அம்மா, பொண்ணு'' என்று கூப்பிட்டார் அவர்.

''என்னப்பா?'' உள்ளே எங்கிருந்தோ லேசாய் கேட்டது குரல். ஜேம்ஸ் தன் பரபரப்பை அடக்க முடியாதவனாகி விட்டான். எட்டிப் பார்த்த அவனை, ''உள்ளே வாப்பா'' என்று தன்னோடு கூட்டிச் சென்றார். வென்ட்டிலேட்டர் கூட இல்லாமல் மிக இருட்டாய் இருந்தது உள்ளிருந்த அறை.

உள்ளே நுழைத்ததுமே லேசான சிரிப்பு ஒசை கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான் ஜேம்ஸ்.

அதற்குள் கிழவர் வெளிக்கதவைத் தாழிட்டு விட்டார்.

''வீட்டைச் சுற்றி சுற்றி இரண்டு முறை ரோந்து வந்த போதே சந்தேகப்பட்டேன். என்னை உன்னால் ஏமாற்றிட முடியாது அப்பனே'' என்று அந்த பக்கத்திலிருந்து அவர் சொன்னது கேட்டது.

* * *

''நீங்க ஏன் ஏதோ போலிருக்கிறீங்க? விளையாட்டில் தோல்வியும் வெற்றியும் சகஜந்தானே! உங்களுக்கும் அது தெரிந்ததுதானே?'' என்றான் செகரட்டரி.

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றான் ரேவந்த்.

''பின்னே எங்க உபசரிப்பில் ஏதேனும் குறைபாடு இருக்கா?''

ரேவந்த் கலவரமடைந்தவனாய், ''சேச்சே, அந்த மாதிரி யோசனைகளை வெச்சுக்காதீங்க நீங்க'' என்றவன் நிதானமாய், ''ஒரு டெலிபோன் நம்பரைக் கண்டுபிடிக்கும் அவஸ்தையில் ஆழ்ந்திருக்கிறேன் நான்'' என்றான்.

செகரட்டரிக்குப் புரியவில்லை. ''டெலிபோன் தொந்தரவு ஏதாவது இருந்தால் சொல்லுங்க, நான் வேலை பண்றது அங்கேதான்'' என்றான்.

''ஊஹூம். எனக்குத் தேவையான வேலை அந்த மாதிரியதில்லைங்க'' என்றபோது சட்டென்று அவன் மூளையில் மின்னலாய் ஏதோ பளிச்சிட்டது. நிலாப்பெண்ணின் அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ''.....டைப் இன்ஸ்டிடியூட்காரன் எப்படியும் அங்கேயே தானே இருக்கப் போகிறான்? முதலில் டாக்சிக்காரனிடம் என்னைப் பற்றி விசாரித்திருக்க வேண்டியது நீங்க... கையிலிருக்கும் ஒரு பறவையை விட்டுவிட்டு புதரிலிருக்கும் இரண்டு பறவைக்காக முயற்சிகும் ஆண்கள் அத்தனை கெட்டிக்கார ஆண்களில்லை. அப்படிப்பட்டவங்களை பெண்கள் விரும்பவும் மாட்டாங்க.....''—

''டெலிபோனில் எந்த டிபார்ட்மென்ட் நீங்க?''

''அகௌண்ட்ஸ்''

ரேவந்தின் உற்சாசம் வடிந்தது. ஆயினும் முயற்சியைக் கைவிடவில்லை. ''உங்க டிபார்ட்மென்டில் சில விவரம் கேட்கணும். யாராவது சொல்லுவாங்களா?''

''எப்ப வேணும்?''

'இப்பவே''

''ஆனால் மிஸ்டர் ரேவந்த்!...'' என்று ஏதோ சொல்லப் போன அவரை இடைமறித்து ''ஆபரேஷன்ஸ் சைடில் உங்களுக்கு யாராவது தெரிந்திருந்தால் சொல்லுங்க'' என்று கேட்டான் ரேவந்த்.

''வெங்கடேஸ்வரன்னு..... நம்ப தமிழ்க்காரன்தான்— அசிஸ்டென்ட் இஞ்ஜினீயர்.''

''அவர் நம்பர்?''

செக்ரட்டரி சொன்னான்.

''வாங்க, போன் பண்ணுவோம்''

செக்ரட்டரி ரேவந்தை வினோதமாய் பார்த்தான். நிச்சயமாய் இவனுக்கு புத்திதான் பிசகிவிட்டது என்றெண்ணி விட்டான். அதைப் பொருட்படுத்தாமல் ரேவந்த் பப்ளிக் பூத்தை நோக்கி வேகமாய் நடந்தான்.

பிரயாணிகள் சீட்டுகளில் உட்கார்ந்து விட்டார்கள். பெல்டுகளைக் கட்டிக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்தி விளக்கு எரியத் தொடங்கி விட்டது. இன்னொரு பக்கமாய் சாமான்களை காருக்குள் வைத்து முடித்தாகி விட்டது.

செக்ரட்டரி செய்த போனுக்கு வெங்கடேஸ்வரன் லைனுக்கு வந்தான். சுறுக்கமாய் ரேவந்தைப் போனில் பரிச்சயம் பண்ணி வைத்துவிட்டு, ரிசீவரை ரேவந்திடம் தந்தான். ரேவந்த் தனக்குத் தேவையான விஷயத்தைச் சொல்லிவிட்டு, ''டெலிபோன் டிபார்ட்மென்டில் லொகாலிடிவைஸ் புத்தகம் இல்லாமலா? உதாரணமாய் ஓரிடத்தில் ரோடு மராமத்து வேலை நடத்துண்டிருப்பதாய் வையுங்க. ஒரு கட்டையில் சில டெலிபோன் ஒயர்கள் அறுந்துவிட்டன. ஒவ்வொரு கஸ்டமரும் புகாரிடும் வரை நீங்க அதனை சரி பண்ணாமலேயேதான் வைத்திருப்பீங்களா?''

''பண்ணுவோம்.''

''அப்படிப் பண்ணுவதற்கு உங்களுக்கு எந்தெந்த லொகாலிட்டியில் எந்தெந்த நம்பர்கள் இருக்கும்னு தெரிந்திருக்கணுமில்லே?''

''தெரிஞ்சிருக்கணும் மிஸ்டர் ரேவந்த். ரொம்ப நுட்பமான தர்க்கத்திற்கு ஒவ்வாத கேள்வி இது. உண்மையில் ஒவ்வொரு எக்சேஞ்சும் இந்த மாதிரி புத்தகம் ஒன்றை எழுதி வைத்துக்க வேணும். ஆனால் ஜூனியர், உதவி இஞ்ஜினீயர்களின் அலட்சிய மனப்பான்மையால் யாருமே இதை அப்டுடேட்டாய் வைத்துப்பதில்லை. ஒரே லொகாலிடியிலிருந்து பத்துப் புகார் வந்தாலும், ஒவ்வொன்றையும் முதலில் தனித் தனியாய் பரிசோதித்துவிட்டு அதற்குப் பிறகுதான் முக்கியமான ஒயர் அறுந்து விட்டிருக்கிறதுங்கற முடிவுகளே வராங்களே தவிர, அந்த பத்து டெலிபோன்களும் ஒரே ஏரியாவிலேயே இருக்குங்றதைப் புரிஞ்சுக்க மாட்டாங்க. இது கேவலம் எங்க அலட்சிய மனப்பான்மையால்தான்.''

''அந்த மாதிரி இல்லாமல் ரிஜிஸ்தர் எழுதி வைத்திருப்பவங்க யாராவது உண்டா?''

''நூற்றுக்கு ஒன்று அல்லது ரெண்டு எக்சேஞ்சுகள் இருக்கலாம், அந்த மாதிரி.''

—ரேவந்த் என்றுமே தெய்வத்தை வணங்கியவன் கிடையாது. அப்படிப்பட்டவன் அந்த நேரத்தில் பிரார்த்தித்துக் கொண்டான். 'சர்வோதயா காலனி இருக்கும் டெலிபோன் எக்சேஞ்சாய் இருக்கும்படி செய் சுவாமி அந்த ஒரிரண்டு எக்சேஞ்சும' என்று.

* * *

பைலட் வந்து காக்பிட்டில் அமர்ந்து கொண்டான் விமானத்திற்குள்ளே பிரயாணிகள் நுழைவதற்காக அமர்த்தப்பட்டிருந்த ஏணி அகற்றப்பட்டது. கதவுகளை சாத்தி விமான பணிப்பெண்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். கிராண்ட் கன்ட்ரோலர் வாக்கி டாக்கியில் அறிவிப்பு வழங்கிக் கொண்டிருந்தார்.

தன் கையிலிருந்த டிக்கெட் துண்டுகளை (போர்டிங் ஸ்லிப்ஸ்) அதுவரை நாலைந்து முறை கணக்கிட்டுப் பார்த்து

விட்ட ஆபீசர் சந்தேகத்தோடு கௌண்ட்டரோடு பரிசீலித்துப் பார்த்துக் கொண்டார். எவ்வளவு முறை பார்த்தபோதிலும் ஒரு வித்தியாசம் வந்து கொண்டேயிருந்தது.

அவ்விஷயம் பைலட்டிற்குத் தெரிவிக்கப் பட்டது. விமானப்பணிப் பெண்கள் பிரயாணிகளைக் கணக்கிட்டார்கள். திரும்பவும் ஒன்று வித்யாசமாகவே இருந்தது.

பைலட் அரவிந்த் கோஷிற்கு நேரத்தை வீணாக்குவதே பிடிக்காத ஒன்று. இரண்டு மணி நேர பிராயணத்தை ஒன்றரை மணி நேரத்திலேயே முடித்துக் கொண்டு திட்டுக் கேட்பது அவர் வழக்கம். எப்பொழுடாப்பா போய்ச் சேருவோம், உடனே விமானப் பணிப்பெண்ணுடன் ஓட்டலுக்குப் போய் விருந்து உண்போம் என்ற பரபரப்பு அவருக்கு. இத்தாமதத்திற்கு அலுப்படைந்த அவர் காக் பிட்டிலிருந்து வெளியே வந்தார்.

விமான நிலையத்து எல்லா மைக்குகளின் மூலமாயும் பிரயாணி மிஸ்ஸான விஷயம் அறிவிக்கப்பட்டது. தேவை அப்பிரயாணியோ அரசாங்கம் ஊனமுற்றோருக்காக ஏற்பாடு செய்திருந்த போனில் சுலோச்சனாவுக்கு எஸ்.டி.டி. பேசிக்கொண்டிருந்தான்.

* * *

இன்னும் இரண்டு மணி நேரம் கூட முழுமையாய் இல்லை. இதற்குள் ரேவந்த் கிளம்பியிருப்பான். தானோ இந்த மாதிரி இருட்டறையில் அடைபட்டுக் கிடக்கிறேன்! ஏன் என்றும் புரியவில்லையே!

என்ன பண்ணுவதென்றே புரியவில்லை ஜேம்சுக்கு. ஜேம்ஸ்பாண்டைப் போல ஜன்னல் வழியாய் வெளியே குதிப்போமென்றாலோ அங்கே இருந்தது இருப்புக் கம்பிகள் தான்! வென்ட்டிலேட்டரைப் போன்ற எதுவுமே இல்லை.

அவன் குழம்பிக் கொண்டிருந்தபோது வெளியே தாழ்ப் பாளைத் திறந்த ஓசை கேட்டது.

கிழவர் உள்ளே வருகிறார் போலும், பின்னாலிருந்து மண்டையில் ஓங்கி ஒன்று போடுவோம் என்றெண்ணிக் கத வின்குப் பின்னால் போய் நின்று கொண்டான் ஜேம்ஸ். அவன் ஆறடி உயரமானவன் உள்ளங்கைகள் பலம் வாய்ந் தவை. அதன் உதைக்கு எப்படிப்பட்ட பலமான மண்டையா னாலும் சரி சூரைத் தேங்காயாகி விட வேண்டியதுதான்! ஆனால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த தலை யிலோ பூ இருந்தது. கனகாம்பரப் பூ! ''என்னப்பா?'' என்று உள்ளேயிருந்து கேட்ட பெண்...கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

* * *

''க்விக்—டைம் இல்லை.....நேராய் போய் இஞ்சினியரை சந்தியுங்கள். எம். டி. எஃப் (M. D. F) ரெஜிஸ்தர் என்பாங்க அதனை. லொகாலிட்டி வைஸ்மெயின் டிஸ்ட்ரிப்யூஷன் ஃப்ரேம் ரெஜிஸ்தர்..... அதை அவங்க ஆபீசில் வைத்திருந்தால் நம்ம வேலை எளிதானாற் போலத்தான். எப்படியாவது அதைப் பெற்றுக்குங்க. நான் ப்ளைட்டில் வரேன். உங்க ளுக்கு நம்பர் கிடைத்துட்டால் விமான நிலையத்துக்குச் செய்தியைச் சொல்லிடுங்க. அவங்க என்னிடம் சொல்லிடு வாங்க. இதெல்லாம் ஐந்துமணிக்குள் நடந்து முடிந்துடணும். ஐந்தைத் தாண்டிவிட்டால் நாம் தோற்றுட்டாற்போலதான்'' என்று போனை வைத்து விட்டான். பிறகு ப்ரீஃப்கேசை எடுத்துக்கொண்டு செக்யூரிடியை நோக்கி ஓட்டமெடுத்தான்.

அங்கே போய்ச் சேர்ந்து, ''நான்தான் அந்தப் பிரயாணி. மைக்கில் கூப்பிட்டது என்னைத்தான்'' என்று ப்ரீஃப் கேசைத் திறக்கப் போனான், முதலில் வியப்படைந்து பிறகு கோபமாய் ஏதோ சொல்லப்போன இன்ஸ்பெக்டர் ரேவந்தின் கையிலிருந்து தன் கைக்குள் வந்து சேர்ந்த ரூபாய்த்

தாளைப்பார்த்து விட்டு வாயை மூடிக்கொண்டார். ப்ரீஃப் கேசைத் திறந்து பரிசோதிக்காமலேயே ''போங்க சார் இப்போதே ரொம்பத் தாமதமாயிடுத்து'' என்றார்.

அங்கிருந்து விமானம் வரையிலும் ஒட்டப்பந்தயத்தில் ஓடுவதுபோல வேகமாய் ஓடினான். விமானப் பணியாட்கள் யாவரும் அவனை வினோதமாய் பார்த்தார்கள்.

விமானம் இன்னும் ஏன் கிளம்பவில்லை என்று புரியாமல் அலுப்படைந்த பிரயாணிகள்—அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த ரேவந்தைப் பார்த்துவிட்டு ஏதேனும் மந்திரியின் மகன் போலும் என்றெண்ணிக் கொண்டார்கள்.

''போர்டிங் ஸ்லிப்பை எடுத்துட்டு இவ்வளவு நேரமாய் எங்கே போயிட்டீங்க?'' கோபமாய் கேட்டாள் ஏர் ஹோஸ்டஸ்—அமர்ந்து பெல்ட்டைப் பொறுத்திக் கோண்ட ரேவந்தைப் பாராத்து.

''டாய்லெட்டிற்கு.''

* * *

''எங்களை மன்னிச்சுடுங்க'' என்றாள் அப்பெண் கதவைத் திறந்துகொண்டு வந்தவாறு. ''பணத்தை பிளாக்கில் சம்பாதித்து சம்பாதித்து அப்பாவுக்குப் பைத்தியமே பிடிச்சுடுத்து. சந்தேகத்திற்கிடந்தருமாறு யார் நடமாடினாலும் உடனே அவங்களை இன்கம்டாக்சுக்காரங்களோ அல்லது சி. பி.ஐ க் காரங்களோன்னு சந்தேகப் படத் தொடங்கிடுவார். ஒன்றும் நினைச்சுக்காதீங்க.'j

''அவர் எங்கே இப்போ?''

''செடெடின் தந்திருக்கிறேன். தூங்கறார்.''

ஜேம்ஸ் முறுவலுடன், ''நான் சி. பி. ஐ. க் காரன் இல்லைன்னு எப்படி நம்பிட்டீங்க?'' என்றான்.

அவளும் சிரித்துவிட்டு, ''இருந்துட்டுப் போங்களேன்! ஏதாவது கதைகளில்தான் இந்தமாதிரி நிகழ்ச்சியெல்லாம் நடக்கும்'' என்றாள்.

அவன் ஒரு வினாடி யோசித்தவாறே அவளைப் பார்த்தான். மனத்திலிருப்பதைக் கள்ளங்கபடமின்றி பொலபொல வென்று வெளியே கொட்டிவிடக்கூடிய சுறுசுறுப்பு மிகுந்த அக்கல்லூரி மாணவியின் கண்களில் 'நாமிருவரும் சிநேகிதர் களாய் இருப்போமா?' என்று வரவேற்கும் பாவனை கலந்து மிளிர்ந்தது.

அவன் தன் பெயரையும் விவரத்தையும் சொல்லி விட்டு அவளையும் விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டு 'திரும்பவும் எப்போது சந்திக்கலாம்!'' என்றும் கேட்க நினைத்தான். அதற்கு முதற் படியாய் ஓரடி முன்னோக்கி எடுத்து வைத் தான் அவளை நோக்கி. அப்பெண்ணை நெருங்கினான் சட்டென்று முன்னாள் இரவு மனைவியுடன் நெருக்கமாயிருந்த. நினைவு வந்தது அவனுக்கு. ஏதோ சங்கடம் நெளிந்தது. அதனை வார்த்தைகளால் வடிக்கமுடியாது.

ஓரடி பின் வாங்கி, ''உங்களுக்கு இந்த லொகாலிடியில் இருக்கும் ரம்யா என்ற பெண்ணைத் தெரியுமா?'' என்று கேட்டான்.

வேறு ஏதோ கேட்பான் என்றெண்ணியிருந்த அவள் இக்கேள்வியைக் கேட்டு வியப்படைந்து. ''ரம்யாவா? யாருமே தெரியாதே'' என்றாள்.

''அவங்களிடம் டயோட்டா கார் இருக்கும்''

''அடுத்த தெருவில்.....ஆங்.....ஆங்.....ஒரு பெண் இருக்கிறாள், நிஜந்தான், டயோட்டாவில் பார்த்திருக்கிறேன் அவளை.''

ஜேம்ஸிற்கு நினைவு வந்தது. அந்தத் தெருவில்தான் அவன் நிறைய கார்களையும் ஜனங்களையும் பார்த்தான்.

அவன் விடுவிடென்று வெளியே போக அடியெடுத்து வைத்ததைப் பார்த்துவிட்டு அவள் தடுமாற்றத்துடன் கேட்டாள், ''திரும்பவும் சந்திப்போமா?'' என்று. ஒரு காலத்தில் அவனே பெண்களைப் பார்த்து கேட்கும் கேள்வி அது! ஒரு வாரத்திற்கு முன்னால் வரையிலும்.....

இப்பொழுதோ.....கல்யாணம் என்ற பெயரில் சுலோச்சனா புதிதாய் எதையோ கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள் அவனுக்கு.....அதனைக் காதல் என்று சொல்லிக்கொள்வதற்கு அகம்பாவம் இடந்தரவில்லை. ஆனால் அவளை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கு மட்டும் ஏதோ குறுக்கிடுகிறது.

.....சிரித்துவிட்டு மோட்டார் சைக்கிளை நோக்கி ஓட்டமெடுத்தான் ஜேம்ஸ். தாம் நம்பிய லட்சியத்தை மனப்பூர்வமாய் கடைப்பிடிப்பவர்கள் இவ்வுலகத்தில் மிகச் சிலரே. உலகமானது இவர்களை நன்றாய் புரிந்து கொள்ளாமல் கெட்டவர்கள் என்ற முத்திரையைப் பதிப்பித்து விடுகிறது.

லட்சியத்திலிருக்கும் நல்ல செயலை விட்டுவிட்டு கெட்டதை மட்டுமே பிடித்துக் கொள்கிறது.

* * *

டெஸ்ட் டேஸ்க் ரூம்!

பதினைந்தடி உயரமுள்ள பானெல்ஸ்கள் அவ்வறையில் குத்திட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஏர் கண்டிஷன்கள் அவ்வறையைக் குளு குளுவென்று வைத்திருந்தன.

பூமியிலிருந்து நீண்டு வரும் இரும்புக் குழாய்கள் அப்பானெல்ஸுகளுக்குள் பொறுத்தப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து ஆயிரக்கணக்கான ஒயர்கள் வெளியே வந்து பிரிந்து வெவ்வேறு இடங்களோடு சேர்த்து பொறுத்தப்பட்டிருந்தன. பானெலுக்கு வலது பக்கம் 'லொகாலிடி' முறையில் இடது

யக்கம் 'நியூமரிகல்' முறையிலும் அவை அமர்த்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஓயரும் ஒவ்வொரு போனுடன் இணைக்கப்பட்டிருந்தன.

நாலைந்து இளைஞர்கள் போனுக்கருகில் உட்கார்ந்தபடி இடைவிடாமல் வந்து கொண்டேயிருக்கும் புகார்களைக் குறித்துக் கொண்டேயிருந்தார்கள். பானெலுக்கு இடது பக்கம எந்தெந்த ஓயர்கள் எந்தெந்த போன் சம்பந்தப்பட்டது என்பதை வரிசையாய் நம்பர்களில் எழுதப்பட்டிருந்தன.

11000 லிருந்து 11100 வரையிலும்—

11101 லிருந்து 11200 வரையிலும்—

இவ்வாறு எழுதப்பட்டிருந்தன.

தன்னைப் பரிச்சயம் பண்ணிக்கொண்ட சுலோச்சனா இஞ்ஜினீயரைத் தனக்குத் தேவையான புத்தகத்தை பற்றி கேட்டாள். யாருமே கேளாத ஒரு புத்தகத்தை ஆபரேட்ட ரொருத்தி கேட்பதையறிந்து ஆச்சரியமடைந்தாலும், ''அந்த மாதிரி ரெஜிஸ்தர்களை சமீபத்தில்தான் எழுதத் தொடங்கினோம்—நான் வந்த பிறகுதான்.....'' என்று கர்வமாய் சொல்லிக் கொண்டார் இஞ்ஜினீயர். அவள் இதயம் படபடக்க, ''எனக்கு ஒருவாட்டி அந்த ரிஜிஸ்தரைப் பார்க்கத் தருவீங்களா?'' என்று கேட்டாள்.

அதொன்றும் ரகசிய புத்தகமில்லை. கேட்டவளும் தம் ஸ்தாபனத்தில் வேலைபண்ணும் ஒருத்திதான். அதனால்அவர் டிராயிரலிருந்து அப்புத்தகத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, ''சாதாரணமாய் எல்லா எக்சேஞ்சுகளிலும் இந்த புத்தகத்தை வைத்திருக்கமாட்டாங்க. இதன் மகிமை ரொம்பப் பேருக்குத் தெரியாது. ஒரு லொகாலிடியில்.....'' என்று சொல்லிக் கொண்டே போனார்.

அவள் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. நடுங்கும் கரங்களுடன் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள். இன்னும்

முற்றிலும் எழுதி முடிக்கவில்லை அந்த ரெஜிஸ்தரில். கொஞ்ச நாளைக்கு முன்புதான் எழுதத் தொடங்கினாற்போலிருந்தது. சில வட்டாரங்கள் இல்லை. தனக்குத் தேவையான ஏரியா இருக்கிறதோ இல்லையோ என்ற பரபரப்பில் ஒவ்வொன்றாய் பார்வையிட்டுக்கொண்டே வந்தாள். நடுங்கும் கரங்களுடன்! சந்தோஷ்நகர்.....சாந்திப்பூர்.....சங்கம்பேட்டை.... ஆங்...அடுத்து தென்பட்டது

சர்வோதயா காலனி!



பெருத்த சப்தத்துடன் இறங்கிய விமானம் சிறிய குலுங்களுடன் நின்றது. அரவிந்த கோஷ் சந்தோஷத்தோடு கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். ஐந்தடிக்கப் பன்னிரெண்டு நிமிஷங்கள் பாக்கியிருந்தன. கர்வமாய் சிரித்துக் கொண்டே ஹோஸ்டசைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''ஏதோ ஒரு நாள் எங்களையெல்லாம் கொன்றுடப் போகிறாய் நீ. உன் வேகத்துக்கு பெல்லி லாண்டிங் கூட ஈடு கொடுக்க முடியலை'' என்றாள் அவள்.

''ஆமாம் என் வேகத்தால் பெல்லியைக்கூட லாண்டாக விடமாட்டேன் நான்'' என்றான் அவன். அவ்வார்த்தைகளில் மிதந்து நின்ற வேறு பொருளை உணர்ந்து அவள் சிரித்தாள்

சரியாய் அதே நேரத்தில் ரேவந்த் 'அரைவல்' என்று. எழுதியிருந்த இடத்தை நோக்கி ஓட்டமெடுத்துக் கொண்டி

ருந்தான். விமானத்தின் கதவு திறந்து கொண்டதுமே வெளியேறிய முதல் பயணி அவன்தான்.

உள்ளே நுழைந்துகொண்டிருந்த அவன் காதுகளில் மைக்கிலிருந்து வந்த அலறல் கேட்டது.

''மிஸ்டர் ரேவந்த்! பாஸஞ்சர் ஃப்ரம் டெல்லி ஈஸ் ரிக் வெஸ்டட் அட் என்கொயரி கௌண்டர்!''

அவன் அதற்காகவே அவ்வாறு ஓடிவந்தவனைப்போல அதே ஓட்டத்தில் என்கொயரி கௌண்டரை நோக்கி ஓடினான் அவனுக்காகப் போன் வந்திருந்தது. அது சுலோச்சனாவிடமிருந்து.

அவன் சட்டென்று ரிசீவரை வாங்கிக்கொண்டு தொண்டை வரள கேட்டான். ''என்ன சுலோச்சனா? கிடைத்ததா?''

''இல்லை.''

ஒரு வாளி பச்சைத் தண்ணீரை குபீரென்று முகத்தின் மேல் வாரியடித்தாற் போலிருந்தது. ஏமாற்றத்தால் மனமொடிய பெருமூச்செறிந்த அவன் ''இல்லையா?'' என்றான்

''ஊஹூம்.''

* * *

அவ்வீதியின் கோடி வரையிலும் கார்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. தானும் மோட்டார் சைக்கிளை ஒரு பக்கமாய் நிறுத்திவிட்டு, கார்களைத் தாண்டிக் கொண்டே நடந்து போனான். அவனுக்கு அந்த வீட்டில் என்ன விழா நடந்து கொண்டிருந்ததென்று தெரியவில்லை. அது வீடா அல்லது வேறு ஏதாவதா என்றும் புரியவில்லை. ஒரு வேளை அந்த வீடாயிருந்தால்.....

அவனுக்குக் குறும்புத்தனமான ஒரு யோசனை கூட வந்தது. சாயந்திரம் ஐந்து மணியோடு ரேவந்த் பந்தயத்தின் கெடுவும் முடிவடைகிறது. அதனால் விமானநிலையத்திலி ருந்து நேராய் அவனை இங்கேயே வரவழைக்கத்தான் இந்த ஏற்பாட்டை அப்பெண் பண்ணியிருப்பாளோ? ஆனால் தன் யோசனையை நினைத்து அவனுக்கே சிரிப்பு வந்தது.

* * *

''அந்த லொகாலிடியில் சுமார் நூறுபோன்கள் இருக்கும். கிட்டதட்ட எல்லா போனையும் பண்ணிப்பார்த்துட்டேன். எங்கேயுமே கிடைக்கலை.''

''எப்படிப் பண்ணி பார்த்தீங்க?''

''போனை மறுமுனையிலிருப்பவங்க எடுத்ததுமே 'ரம்யா இருக்காளா?' என்று கேட்கத் தொடங்கினேன் அவள் சிநேகிதியைப் போலவே. எல்லாவிடத்திலும் 'இல்லை' என்ற பதில்தான் வந்தது.''

நிராசையோடு தலையைச் சிலிர்த்துக் கொண்டான் அவன். தான் போட்ட முக்கோணங்களும் பைத்தாகிரஸ் தத்துவங்களும்—காக்கைகளைக் கணக்கிட்டாற் போலதானா? காக்கைகளைப் பற்றி எண்ணியதும் அப்பெண் சொன்ன 'காக்கைகளும்—துப்பாக்கி சப்தமும்' கதை நினைவிற்கு வந்தது.....தர்க்க வாதத்தோடு சமயோஜிதமாய் யோசித்துப்பார்ப்பவன் எந்த மூலையிலும் எந்த பாரத்தையும் தன்னுள் வைத்துக் கொள்ளமாட்டான்.

''நீங்க அந்த லொகாலிடியில் எல்லா நம்பரையுமே பண்ணிப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன் ஏன்?''

''ஒன்றுமேவா அவுட் ஆஃப் ஆர்டர் இல்லை? (கெட்டும் போனது)''

சுலோச்சனா நாக்கைக் கடித்துக் கொண்டு ''இருந்தது'' என்றாள்.

''எந்த போன் அது?'

அவள் தனக்கு முன்னாலிருந்த காகிதத்தைப் பார்த்து விட்டு, மூன்று நம்பர்களைச் சொன்னாள்.

''நம்பர்கள் தேவையில்லை. எனக்கு அந்த விலாசங்களும் அவை யார் யாருடையவைன்னும் சொல்லுங்க.'' சுலோச்சனா ரிஜிஸ்தரைப் புரட்டிப் பார்க்கத் தொடங்கினாள்.

அதற்குள் ரேவந்த் யோசிக்கத் தொடங்கினான். சுலோச்சனா சொன்ன மூன்று நம்பர்களும் ஒன்று என்ற எழுத்தில் தொடங்குபவைகளே. ஆனால் நிலாப்பெண் விதம் விதமாய் சொன்ன கணக்குப்படி இறுதி மூன்று எழுத்துக்களும்—046 ஆக இருக்கவேண்டும், இம்மூன்றிலும் அது இல்லையே!

அதற்குள் சுலோச்சனா சொன்னாள். ''முதல் நம்பர் எலெக்ட்ரிக் சப் ஸ்டேஷனின் நம்பர்.''

''குட். இரண்டாவது?''

''டாக்டர் பகவன்தாஸ் நம்பர்.''

இதயம் துடிக்க ''மூன்றாவது'' என்று கேட்டான்.

''கைலாசம். ப்ரொபரைட்டர் ரம்யா இண்டஸ்ட்ரீஸ்...'' அவள் மேலும் படித்துக் கொண்டே போனாள். ரேவந்த் குதூகலத்துடன் ''கிடைச்சிடுத்து'' என்று கத்திய கத்தலுக்குப் பிரயாணிகள் எல்லோரும் சட்டென்று வினோதமாய் திரும்பிப் பார்த்தார்கள். அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. மறுமுனையில் சுலோச்சனா 'கங்கிராஜுலேஷன்ஸ்' சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தெரியும் இவ்வளவு நாளாய் ரேவந்த் பட்ட பாடு.

கையிலிருந்து ரிசீவர் நழுவி விழாமல் கெட்டியாய் பிடித்துக் கொண்டான் ரேவந்த்.

தன்னை சமாளித்துக் கொண்டு "அந்த நம்பர் என்ன?" என்று கேட்டான்.

"13733"

"I ATE Nothing For Six மணி" என்றான் சிரித்துக் கொண்டே.

டென்சிங் இமாலயத்தில் ஏறி வெற்றியடைந்தபோது கூட அத்தனை சந்தோஷப்பட்டிருக்க மாட்டான். மனதிற்குள் போட்டுப் பார்த்துக் கொண்ட மனக்கணக்குகள், ட்ரங்க் கால்கள், விமானத்தில் பட்ட பரபரப்பு, எல்லாம் அந்த நேரத்தில் மறந்து விட்டது. சுலோச்சனாவுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போனை வைத்தான். ப்ரீ...ப் கேசை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். கண்ணாடிக் கதவைத் தாண்டிக் கொண்டிருந்தபோது அவனுக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது. ரேவந்த் அதைப் பார்த்து அப்படியே நின்று விட்டான்.

டயோட்டா!

தன்னை ஏற்றிக் கொண்டு போன அதே கார்...அதே! அதிலிருந்து ஒரு ஆஜானுபாகுவான மனிதர் இறங்கினார்.

...புல் சூட் அணிந்திருந்தார் அவர். ரேவந்திற்கு அவர் யார் என்று தெரியும். ஓரிரு மீட்டிங்குகளில் பார்த்திருக்கிறான்.

கைலாசம்!

* * *

ஜெப்ஸ் கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும்போது மேலே தொங்கிய போர்டை அண்ணாந்து பார்த்தான். "ரம்யா இண்டஸ்ட்ரீஸ்..." என்றிருந்தது. அவன் உதடுகளில் குறுநகை தவழ்ந்தது.

இன்னும் கார்கள் வந்து கொண்டேயிருந்தன. தொலைவில் போர்டிகோ தென்பட்டது. அங்கு நிறைய ஜனங்கள் கூடியிருந்தார்கள். அருகே போய் அங்கு தென்பட்ட காட்சியைக் கண்டு அப்படியே நின்றுவிட்டான்.

* * *

"உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும்னு நினைக்கிறேன். என் பேர் ரேவந்த்."

"தெரியும்...என் மகள் எல்லாம் சொன்னாள்..." கம்பீரமாய் வெளிவந்தது அவர் குரல்.

இருவரும் காரிலேறப் போன பொழுது "ஒன் மினிட்" என்றான் ரேவந்த்.

போர்டிங் ஸ்லிப்பின் மேல்—'நிலாப்பெண்ணின் போன் நம்பர் 13733. கோரமண்டல் கைலாசம்' என்று முழு விலாசத்தையும் எழுதினான். எழுதி நிமிர்ந்தவன், "உங்க கைக்கடியாரத்தில் டைம் என்ன?" என்று கேட்டான்.

"4, 58"

"அந்த நேரத்தை இங்கே போடறேன். இரண்டு நிமிஷம் கெடு இருக்கும்போதே நான் உங்கப் பெண்ணின் போன் நம்பரைக் கண்டு பிடித்ததால் வெற்றியடைந்து விட்டேன். வீட்டிற்குப் போனதும் நீங்களே எனக்குச் சாட்சி சொல்ல வேண்டியது" என்று வெற்றிப் பெருமிதத்தில் சிரித்தான்.

அவர் பேசவில்லை. இருவரும் உட்கார்ந்ததும் கார் புறப்பட்டது.

ஆகாயத்தில் மழை மேகங்கள் திரண்டிருந்தன. சில கொக்குக் கூட்டங்கள் தென்திசையே பறந்து கொண்டிருந்தன. வரப்போகும் புயலுக்கு அறிகுறியாய் நகரம் அப்பொழுதே

ஓய்வாய் கூட்டிற்குள் முடங்கிவிட்டிருந்தது. குளிர்ந்தகாற்று விர்ரென்று வந்து காரில் மோதிற்று.

ரேவந்த் திரும்பி கைலாசத்தைப் பார்த்தான். நெற்றியில் கை வைத்தபடி சீட்டிற்குப் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டிருந்தார் அவர். மிக களைத்துப் போனவராய் தென்பட்டார்.

எதையோ இழந்து விட்டாற் போலிருந்தது அவரைப் பார்த்தால். அவரைப் பார்த்த ரேவந்திற்கு சந்தேகம் பிறந்தது.....மகள் தன்னைக் காதலித்ததை இவர் விரும்ப வில்லை போலும்...

பத்தயக் கெடு முடிவடையும் சமயம் பார்த்துத் தனக்காக விமானநிலையத்திற்கே காரை அனுப்பியிருக்கிறாள் என்றால் தந்தையிடம் தன்னைப்பற்றிய சகல விஷயத்தையும் சொல் லியேயிருப்பாள். அவன் தோற்றிருப்பான் என்றெண்ணிக் காரை அனுப்பியிருக்கிறாள். உண்மையே...ஆனால் கடைசி நேரத்தில் தான் ஜெயித்து விட்டதை அறிய நேர்ந்தால்.....? ஏமாற்றமடைவாளா? என்னவோ...சந்தோஷமும் படலாம். யாருடைய வெற்றியானால் என்ன, இருவரின் வெற்றியுந் தானே அது!

ஏதோ இனிய உணர்ச்சியால் அவன் உதடுகளில் குறு நகை படர்ந்தது. தனக்குள் சொல்லிக் கொள்வதுபோல, ''கடைசி நேரத்தில் நான் ஜெயித்துடுவேன்னு நினைத்தே பார்க்கலை இல்லே?'' என்றான். அவ்வார்த்தைகள் காதில் விழவே, தியானத்திலிருந்து மீண்டவரைப் போல திடுக்கிட்டு கண் விழித்தார் அவர்.

''நீ ஜெயிப்பாய்னு அவளுக்குத் தெரியும். மனிதர்களை அவள் போடும் எடை என்றுமே தவறாயிராது'' என்றவர் டிரைவரைப் பார்த்து, ''...சீக்கிரமாய் ஓட்டு'' என்றார். கார் வேகத்தை மேற்கொண்டது.

விமான நிலையத்திலிருந்து சர்வோதயா காலனி வெகு தொலைவிலிருந்தது. பேசுங்கால் அவர் குரலில் தென்பட்ட கம்மலை அவன் கவனிக்கவில்லை.

ரேவந்திற்கு அவரை என்னென்னவோ கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் தன் பரபரப்பை பார்த்து அவர் என்ன எண்ணிப்பாரோ என்றஞ்சி வெறுமே இருக்கலானான். இத்தனை நாளாய் தன்னை அழவைத்துக் கொண்டிருந்த அப்பெண்ணை இன்னும் கொஞ்ச நேரத்தில் பார்க்கப் போகிறோம் என்ற உணர்ச்சிஅவனை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்து கொண்டிருந்தது. அவன் யோசனைகளைச் சிதறடித்த வாறு, ''உனக்காக இந்தக் கவரைத் தந்தாள்'' என்று ஒரு உறையை அவனிடம் நீட்டினார் அவர். ரேவந்த் வியப்போடு அதை வாங்கி, உறையைக் கிழித்து படிக்கத் தொடங்கினான்.

அன்புள்ள ரேவந்திற்கு.

இது நான் உங்களுக்கு எழுதும் நான்காவதும் கடைசியானதுமான கடிதம். பந்தயக் கெடு முடிவதற்குள்ளாகவே இது உங்கள் கைக்கு கிடைக்க வேண்டுமென்று எண்ணி அப்பாவின் மூலம் கொடுத்தனுப்புகிறேன். இன்று பதிமூன்றாம் தேதி ஐந்துமணிக்குள் என்னையும் என் போன் நம்பரையும் கண்டு பிடித்து விட்டீர்களா? கண்டுபிடித்திருந்தால் உங்களுக்கு என் பாராட்டுக்கள். இல்லாவிட்டால் முன்பே சொன்னதுபோல... வெவ்விவ்வே...

எது என்னவாயிருந்தாலும் உங்களுக்கு நல்வரவு! தன் செம்பொற்கிரணங்களால் பூமியை ஒளியில் ஆழ்த்துவதற்காக வெளிவரும் சூரியனைப் போல என் வாழ்க்கையில் வரவிருக்கும் தங்கள் வரவை பொறுமையாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். வாருங்கள் தோழரே, சீக்கிரமாய் வந்துவிடுங்கள். பச்சை வயல்களில் சந்தியா வெளிச்சம் வந்து பரவுவதற்குள், பட்சிகள் தம் கூட்டிற்குள் போய் முடங்குவதற்குள், சிவந்த கதிரவன் மேற்கு மலைக்குப் பின்னால் போய் ஒளிவதற்குள், அமிர்த கலசத்தில் வெண்மதியின் தண்ணிலவை

ஏந்திக்கொண்டு வரப்போகும் தங்களுக்காக தாமரைமலரைப் போல காத்துக் கொண்டிருக்கிறேன். கூம்பிவிட்டேனோ என்று வருந்த வேண்டாம். காலையில் மலர்ந்து மாலையில் வாடிப்போகும் பூவைப்போல அனாதி காலந்தொட்டு கால வெள்ளத்தில் கருகிப்போகும் மனிதர்கள் எந்தரே! கவிஞர் ரவீந்திரநாத் சொன்னதுபோல—

"காலதேவன் என் கதவைத் தட்டும்போது
நான் என் வாழ்வில் பங்கேற்ற சகல
பாத்திரங்களையும் முழுமையாய் அவனுக்கு
முன்னால் எடுத்து வைப்பேன்.
இரத்தக் கறை படிந்த கைகளுடன் ஒருநாளும்
அவனை திருப்பியனுப்ப மாட்டேன்—

பகல் கழிந்து, பட்சிகள் ஒடுங்கிவிட்டாலும், காற்றும் அசையாவிட்டாலும்.....இருளே, நீ உன் போர்வையை என் மேல் போர்த்து. இவ்வாழ்க்கையில் உன்னைச் சந்திக்கும் பாக்கியம் எனக்கில்லாவிடினும், உன்னைக் கண்ணால் கான முடியாமல் போய்விட்டேனே என்ற என் தீராத ஏக்கத்தை என்னிடமிருந்து பிரித்துவிட முடியாது பிரபு! நான் போக வேண்டிய வேளை வந்துசேர்ந்து விட்டது. உங்களனைவரையும் வணங்கி விடைபெற்றுக் கொள்கிறேன். என் வீட்டுச் சாவியைத் திருப்பித் தந்து விட்டேன்....."

படித்துக் கொண்டிருந்த ரேவந்துக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. அதற்குள் பக்கத்திலிருந்து தேம்பிய குரல் கேட்கவே சட்டென்று திரும்பிப் பார்த்தான். அதுவரை உறுதியாய் உட்கார்ந்திருந்த கைலாசம் கைக்குட்டையை வாயிலடைத்துக் கொண்டு வரும் துக்கத்தை அரும்பாடுபட்டு அடக்க முயன்று கொண்டிருந்தது தென்பட்டது.

அவன் தன்னைப் பார்த்ததை உணர்ந்த அவர் குரல் கம்ம, 'நீ வரும் வரையிலும் பிணத்தை எடுக்கக் கூடாது என்பது அவள் வேண்டுகோள். அதனால்தான் நானே

சுயமாய் வந்.....'' என்றவர் அதற்கு மேல் பேச முடியாத வராணார்.

மோனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் இமய பர்வதம் திடீ ரென்று எரிமலையைக் கக்கிக்கொண்டு தூள் தூளாகி வெடிக்க நேர்ந்தாற்போல—சகல சராசரமும் ஒடுங்கி இயற்கையே ஸ்தம்பித்துப் போய் விட்டாற்போல—விண்ணே அதிர்ந்து மேலே விழுந்துவிட்டாற்போல.....

அவன் எவ்வளவு நேரந்தான் அவ்வாறிந்தானோ தெரி யாது. காருக்கு வெளியே ஓடி மறைந்த எந்தக் காட்சியுமே கண்ணில் படவில்லை. வாயிலிருந்து வார்த்தை புரள மறுத்தது. மனமும் யோசிப்பதையே மறந்துவிட்டது. துக்கம் மடையைத் திறந்து கொண்டு வெளிவரப்போன பொழுது கையிலிருந்த கடிதமே ஆறுதலுக்கு ஓடிவந்தது. கண்ணீர் திரையிட்டு எழுத்துக்களை மறைக்க, ஒவ்வொரு எழுத்தாய் கூட்டிக் கூட்டிப் படிக்கத் தொடங்கினான்.

''என்றாவது நள்ளிரவு நேரத்தில் வயிற்றில் தாங்க முடியாத வலி தோன்றும். சாதாரண வாயு என்றார்கள் டாக்டர்கள் ஆக்ஸ்போர்டிலிருந்து வந்த பிறகு அது அதிகரித்து விட்டது. யாரோ ஸ்பெஷலீஸ்ட்டு சந்தேகப் பட்டு செப்கெட்ரோஸ்கோப் பரிசோதனையைப் பண்ணிப் பார்த்தபொழுது—வெளிப்பட்ட வியாதிக்கு டாக்டர்கள் எல்லோரும் சேர்ந்து சூட்டிய பெயர், 'ஹெப்டிக் டைப் இடர்மிடெண்ட் பார்ஃபெரியா.' சாவு வந்து தழுவும் வரையி லும் மனிதனை மிகச் சாதாரணமாகவே விட்டு வைத்திருக்கும் வியாதி.

மரணம் உறுதி என்று தெரிந்த பிறகு பிழைப்பது மிக அரிது ரேவந்த். உயிரோடிருக்கப் போகும் இரண்டு மூன்று மாதங்களையாவது சந்தோஷமாய் சிரித்து பாடிக் கொண்டு கழிக்க வேண்டுமென்று விரும்பினேன். என் மரணத்தைப் பற்றித் தெரிந்த ஒரே ஆள் என் தந்தை மட்டுமே. அவர்

எனக்குத் தந்தை மட்டுமே இல்லை, சிநேகிதர், குரு, எல்லாமே அவர்தான். இந்த ஒரு மாதகாலமும் என்னுள் ஏதேனும் வேலையைத் தோற்றுவித்துக் கொள்வதற்காகவும் சாவைப்பற்றிய யோசனையிலிருந்து ஆறுதல் பெருவதற் காகவும் எனக்கு எதிலாவது நாட்டம் கொள்ள வேண்டிய நிலை. அந்த சமயத்தில்தான் பேப்பரைப் பார்த்தேன், இந்தியாவின் ஒரே கிராண்ட் மாஸ்டரான நீங்கள் தான் எனக்குச் சமமான ஆறுதல் என்று தோன்றிற்று. நான் பண்ணுவது தப்பென்றும் உங்களுக்கு வீண் ஆர்வத்தை ஏற்படுத்துகிறேன் என்றும் தெரிந்துதான் இருந்தது ரேவந்த்! ஆனால் என்னைச் சுற்றி வேலையை உண்டாக்கிக் கொள்ளும் பொருட்டு நான் தொடங்கிய இச்சதுரங்க ஆட்டத் தில் நானும் இக்காதல் குழியில் விழுந்து விட்டேன். புத்தி சாதுரியத்தை வெளிக்காட்டிக்காமல் அப்பாவியாய் போனில் கேள்விகள் கேட்கும் உங்கள் மேல் நாளுக்கு நாள் அன்பு பெருகத் தொடங்கிற்று என்னுள். எந்த விஞ்ஞானியாவது என் இந்த வியாதிக்கு மருந்து கண்டுபிடித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்றெண்ணாத நேரமில்லை.

என் ஆசையை கேலி பண்ணுவது போலவே இவ்வலி மேன்மேலும் பெருகத் தொடங்கிற்று. 'நான் நெருங்கிக் கொண்டிருக்கிறேன்' என்று கட்டியங் கூறுவது போல மரண தேவதை இரத்த ரூபத்தில் என் வாயிலிருந்து அவ்வப்போது வெளிவந்து எச்சரிக்கத் தொடங்கிற்று. மேலுக்கு மட்டும் குறும்புக்கார விளையாட்டுப் பெண்ணாய் இருந்து வந்தேன் எல்லோரிடமும். இந்த குறும்புக்காரப் பெண் இதற்கெல்லாம் பயந்து விடுவாளா என்ன? மரண தேவதையையே கூப்பிட்டு நேரிடையாய் சொல்லிவிட்டாள்—'ஓ மரண தேவதையே! உன்னை நான் எதிர்பார்த்துக் காத்திருக்கப்போவதில்லை. நானே சுயமாய் வந்து உன்னை வரவேற்பேன் அப்பொழுது இந்தமாதிரி கஷ்டப்படுத்தமாட்டாயன்றோ?'—என்று

இந்த வியாதிக்கும் ட்ராங்க்விலைசர் ஊக்கும் ஒத்து வராது. அதனால்தான் ஒரு மாத்திரை—இக்கடித்திற்குப் பக்கத்திலேயே

இன்னும் கொஞ்சநாள் போராடத்தான் எண்ணியிருந் தேன் ரேவந்த். ஆனால் ரொம்பவும் களைத்துப் போய் விட்டேன். வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக் கொள்வதற்கு முன்னால் —ஒரே ஒரு நாளாவது உங்களோடு கழிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. குறைந்தது என் நெற்றி யில் ஒரே ஒரு முத்தமாவது பதிக்காவிட்டால் இவ்வுயிர் புனிதத்தன்மையை எய்தாது.

How Delicious is the winning of a Kiss at Loves Begening—என்று மட்டும் டைரியில் எழுதிக் கொள்கிறேன். எது என்னவானாலும்—காலமானது என் நினைவை உங்க ளிடம் என்றும் விட்டு வைக்க வல்லது என்ற ஆசை. என் குறும்புத்தனத்தால் உங்கள் ஒரு மாத காலத்தை வீணாக்கி விருத்தத்திற்குள்ளாக்கி விட்டேனா? தன் இடதுமார்பிலிருந்து தாய் அகற்றுங்கால் அழும் குழந்தை அடுத்த வினாடியே வலது மார்பில் ஆறுதலடைவது போல துன்பத்திலிருந்து 'சிநேகம்' மூலம் ஆறுதல் பெற்றேன். எத்தனைக் கனவுகள் கண்டிருப்பேன். எதிர்காலம் என்ற வீட்டில் எத்தனைக் கலர்கலரான தோரணங்களைத் தொங்கவிட்டு வேடிக்கைப் பார்த்திருப்பேனோ? ஆனால் புயலில் சிக்குண்ட இவ்வோட் டைப் படகிலேறி துறைமுகத்திலிருந்து புறப்பட்ட எண்ணால் எப்படித் துறைமுகத்துக்கு வந்து சேரமுடியும்? என் இந்த செய்வதறியாத இருள் மயமான வாழ்க்கையின் கடைசி சமயத்தில் துணையாய் நின்றதற்கு உங்களுக்கு நன்றி சொல்லுவேனா அல்லது ஆசையை வளர்த்து விட்டு கைக்கெட்டாமல் போவதற்கு மன்னிப்பு வேண்டுவேனா?

ஆனாலும் சிநேகிதர்களுக்கிடையே மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை!

நீங்கள் என் நம்பரைக் கண்டு பிடித்து மிக அண்மையில் வந்தும் கூட மயிரிழையில் பிசகிவிட்டீர்கள். 18046 என்று கண்டுப்பிடித்த நீங்கள் அந்த கேன்சர் ஆசுபத்திரியில் கொஞ்சம் விசாரித்திருந்தால் இந்த குழப்பமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் அகன்று விட்டிருக்குமே 'ஐ ஹேட் நத்திங் ஃபர் சிக்ஸ்' என்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க நான் மிகப் பாடுபட வேண்டியிருந்தது. ஒரு விதத்தில் பார்க்கப் போனால் என் வீட்டு நம்பரும் சேர்ந்து வரக் கூடிய நம்பர் அது. சரி, என் வீட்டு நம்பரையாவது கண்டு பிடித்தீர்களா இல்லையா? 13733 ஐந்துமணி தாண்டி விட்டதே! நீங்கள் வென்றீர்களா அல்லது தோற்றீர்களா என்று தெரிந்து கொள்வதற்கு நான் இருக்கப்போவதில்லை

ட்ராங்க்விலைஸர்ஸ் கண்களின் மேல் பலவந்தமாய் நிசப்தத்தை அழுத்துகின்றன. இதுவே கடைசி இரவு என்று இவ்வியாதிக்குத் தெரிந்துபோய் விட்டது போலும். இந்த இரவானது என் முகத்திலுள்ள சிரிப்பை அடியோடு ஒழித்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு விட்டது போலும்.

குடலை குழப்புகிறது ஆயினும் நான் அதற்கு மசிய மாட்டேன். ஆயினும் மரணம் என்றால் என்ன? நாம் இருக்கப் போவதில்லை, அவ்வளவுதானே' நதியின் நீரோட்டம் பனிபடர்ந்த புல்வெளிகள், ஆலய எல்லைக்குள் வளரும் அந்த புல் பூண்டுகள், மலயமாருதங்கள், மயிலின் நாட்டியம் இதெல்லாம் இருந்தே தீருமன்றோ? ஒய்யாரமாய் அசையும் கொடிகள், காவிரியின் அலையோசை, விஞ்ஞானிகளின் அபார வெற்றிகள், வீதிகள், கட்டிடங்கள் உலகம் எல்லாம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். பார்வையாளர்களுக்கிடையே நம் சீட் மாத்திரம் காலியாகியிருக்கும். அவ்வளவுதானே!

இரவு வெகுநேரமாகி விட்டது. எதிரே இராமர் படத்தில் விளக்கு வெளிச்சம் பட்டு தெறித்துகொண்டிருக்கிறது. புத்த

விக்ரகத்திற்கு முன்னால் நேற்று மாலை எடுத்து வைத்த பூ இன்னும் வாடாமலிருக்கிறது. காலமானது விரலிடுக்கு களின் வழியே பாதரசத்தைப் போல வழுக்கி ஓடிக் கொண்டே யிருக்கிறது ரேவந்த்! மரணமடைந்தவர்கள் சுவர்க்கத்தின் வாயிலை அடைவார்கள் என்று சொல்வது உண்மை யானால், அந்த சுவர்க்க வாசலின் தூணைப்பிடித்துக் கொண்டே உங்களுக்காக கனவு கண்டவாறு காத்திருப்பேன். காற்றில் தவழ்ந்து வரும் உம் காலடியோசை எனக்குக் கேட்கிறது. யூகலிப்ஸ்டஸ் மரக் கிளையின் உச்சாணியில் கட்டி வைத்திருக்கும் என் இதயம் உமக்காக வரும் வழியெல்லாம் மலர்ப் படுக்கையை விரித்துக் கொண்டே வரும். ப்யாசாடின்.....வந்து கொண்டே... வந்துகொண்டேயிருக்கும் நீர் ஏன் நின்று விட்டீர்? சீக்கிர மாய் வாருங்கள். காலமானது நம்மிருவரையும் ஒன்று சேர்க்க வல்லதானால், நாம் என்றாவது எங்காவது ஒன்று சேருவோம். இமயமலையில் உதயவேளையில் படரும் பனித் துளிகளிலோ...சகாரா பாலைவனத்திலோ ...நீங்கள் ப்யாசாடினோ என்னவோ தெரியாது. ஆனால் நான் ப்யாசீஷாம் என்பது மட்டும் உண்மை!

இரவு மேலும் நிசப்தமாய் இருக்கிறது. இந்த நிசப்தத் தில்—மயான அமைதியும், வைராக்கிய உன்மத்தமும், தனிமை என்ற பாலைவன புஷ்பமும், தண்ணீரில் தாழ்ந்து படர்ந்த மரக்கிளையின்மேல் உட்கார்ந்து சந்தியா வெளிச்சத் தில் காதலனின் வரவுக்காக காத்திருந்தபடி இதயத்தை உருக்கும் குயிலின் கீதத்தை செவி மடுத்தபடி சோகக் கண்ணீரை உகுத்துக் கொண்டே காலதேவனை எதிர்பார்க் கும் சோகம் இழைந்தோடுகிறது.

இனி லாபமில்லை. துன்பமே வென்றுவிட்டது போலிருக்கிறது. கண்ணீரை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டே எழுதவேண்டியிருக்கிறது. அதென்ன உம் கண்ணி லும் கண்ணீர் முத்துக்களா? அழாதீர், அழாதீர். அழுதால்

என் கண்ணிலும் நீர் வழியும்...போய்வருகிறேன், சிநேகிதரே விடைபெற்றுக் கொள்கிறேன்.—ரய்யா''

கண்ணிலிருந்து கண்ணீர் வழியாமல் போனதேன்? வானம் இரண்டாய் பிளக்காததேன்?.....பின்னுக்குச் சாய்ந்து கண்களை அழுத்தமாய் மூடிக் கொண்டான் அவன். இதெல்லாம் உண்மையில்லையென்றும் கனவே என்றும் யாராவது சொன்னால் எவ்வளவு நன்றாயிருக்கும். கண் மூடித் திறப்பதற்குள்தான் இதெல்லாம் எப்படி நிகழ்ந்து முடிந்துவிட்டது தன் வாழ்க்கையில் எத்தனை இனிமையாய் அடியெடுத்து வைத்துவிட்டு எவ்வளவு வேதனை மயமாய் பிரிந்து போய் விட்டாள் அப்பெண்! ஓ நிலாப்பெண்ணே! என்னையே நான் உனக்கு அர்பணித்துக் கொள்வதற்காக நான் வந்த தருணத்தில்...எத்தனை கல்நெஞ்சமோ உனக்கு. என் துக்கத்தில் புணர் ஜென்மம் எடுக்கச் செய்துவிட்டு மரணமடைந்து போனாயே! இப்பந்தயத்தில் நான் வென்றும் தோற்றவன்தானா? அல்லது தோற்று வென்றேனா?

.....

கார் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. அதற்காகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாற்போல் அங்கிருந்த கும்பலில் சலசலப்பு ஏற்பட்டது. ''இருட்டப் போகிறது, உம் சீக்கிரமாய் ஆகட்டும்'' என்றார் ஒருவர். கைலாசம் யார் தோலின் மீதோ கையை ஏந்திக்கொண்டு துக்கம் தாளாதவராய் தவிதவித்துக் கொண்டிருந்தார்.

தன் தோளில் கை படவே கண்களைத் திறந்தான். ரேவந்த்.

ஜேம்ஸ்!

இருவரும் பேசாமல் நின்றார்கள். இருவரும் தம் தம் யோசனைகளை மௌனமாய் பகிர்ந்து கொண்டார்கள். ஜனங்கள் சூழ்ந்து நிற்க மத்தியில் திண்ணையில் கிடந்தாள்

அவள். இலைகளுக்கு நடுவே விரிந்த ரோஜா மலராய் அக்கூட்டத்திற்கிடையே தென்பட்டாள். அகர்பத்திகளின் புகைத்திரளுக்கு இடையே அவள் முகம் தெளிவின்றி தெரிந்தது. ஆதவனின் மறைவில் இதழ் கூம்பி நின்ற தாமரை மலராய் இருந்தாள்.

எடுத்துச் செல்ல ஆயத்தமானார்கள். ஒவ்வொருவராய் போய் இறுதி தரிசனம் பண்ணிக் கொண்டார்கள்.

''போவோம் வா'' என்றான் ஜேம்ஸ் தானும் அந்த பக்கமாய் போகக் கிளம்பியபடி.

ரேவந்த் நகராமல் ''வேண்டாம்'' என்றான்.

''ஏன்?'' ஆச்சரியமாய் கேட்டான் ஜேம்ஸ்.

''ஒரு அருமையான கற்பனைச் சிற்பத்தை இத்தனை நாளும் மனதிற்குள்ளேயே செதுக்கிக் கொண்டிருந்தேன் நான். அது கற்பனையாகவே நிலைத்துப் போகட்டும் ஜேம்ஸ்.''

''அவளைப் பார்த்தாலும் நீ நிராசைப்பட்டுவிடமாட்டாய் ரேவந்த்.''

''இல்லை. பார்த்தால் மேலும்வேதனை பெருகும். அவள் என் நினைவிலேயே நிலைத்து போய் விடட்டும். ரம்யா—வாகவே நிலைத்திருக்கட்டும். பெயரைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை கூட எனக்கில்லை. உண்மையைக் காட்டிலும் கற்பனையே மேல். என் கற்பனையிலேயே அவளை நிலைத்திருக்க விட்டுவிடு...''

.....

சூரியனும்அக்காட்சியைக்காண சகிக்காதவனாய்அவசரம் அவசரமாய் மேற்கு மலைக்குள் ஒடுங்கிக் கொண்டான்.

மனிதர்களின் நிழல் நீளவாட்டில் விழத்தொடங்கிற்று. கைலாசத்தைத் தடுத்து நிறுத்துவது பெரும் பாடாய்

இருந்தது. மகள் பால் அவருக்கு இருந்த அன்பை அங்கிருந்த எல்லோரும் அறிவார்கள்.

தொலைவில் யாரோடும் தொடர்பில்லாமல் தனியே உட்கார்ந்திருந்தான் ரேவந்த். ஜேம்ஸ் கூட அவனைப் பேசச் சொல்லி வற்புறுத்தவில்லை. தீ நாக்குகள் மென்மையான அச்சரீரத்தைத் தாக்கி சாம்பலாக்கத் தொடங்கவே எல்லோரும் கலையத் தொடங்கினார்கள்.

ஜேம்ஸ் அவனிடம் வந்தான்.

''வா, போவோம்.''

''ஊஹூம். என்னைக் கொஞ்ச நேரம் தனியாய் விடு ஜேம்ஸ்! எனக்கு இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்கணும் போல இருக்கு. நான் என்னவோ வைராக்கியத்தோடு இங்கே இருக்கணும்னு நினைப்பதாய் என்னிவிடாதே! இந்த நிசப்தம் ரொம்ப நன்றாயிருக்கு.எனக்கு துக்கம்கூட இல்லை ஜேம்ஸ்! என்னுடைய இந்த உன்மத்த நிலையை தடுக்காதே, போய் வா.''

ஜேம்ஸ் தடுமாறியபடி போய்ச் சேர்ந்தான்.

இருள் அடர்ந்து பரவிக் கொண்டிருந்தது. செந்நிற தீக்கொழுந்துகளுக்கிடையேயிருந்து புகை மேலே எழும்பிக் கொண்டிருந்தது. முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அச்சிதையையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

காலமானது சமுத்திரத்தைப் போல எல்லையில்லாதது. அழகான முத்துச் சிப்பியைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்குமோ என்று ஓடிவரும் ஒவ்வொரு அலையையும் பார்ப்பதும் அது வேகமாய் ஓடிவந்து தான் கரையில் அழகாய் கட்டி வைத்த மணல் வீட்டை அழித்துவிட்டுப் போய் மறைந்து விடுவதும்...ஓ. தெய்வமே என் மணல்

வீட்டைக் காப்பாற்று! இவ்வளவு அழகான பெண்ணை— இத்தனை சபத்தமாய் உன்னோடு இட்டுச் சென்று விட உனக்கு மனம் எவ்வாறு ஒப்பிற்று? இவ்வளவு கடின இதயமா உனக்கு? ஓ காற்றே! நீ பலமாய் வீசாதே! குறைந்த பட்சம் தூசிகளையாவது நீ உருவோடு விட்டுவை! ஓ பூமியே, நீ வேகமாய் சுழலாதே! குறைந்த பட்சம் பஞ்ச பிராணன்களையாவது செக்குச் செதுராமல் விட்டுவை. இந்த தூசி பறந்து போய் எந்த தூசியை அலங்கரிக்குமோ?...அவ்விடத்தில் ஒரு சிறிய புதர் எழும்பும். அப்புதர் அடர்ந்து எழும்பி ஒரு ஓவியனைக் கவரும். அது ஒரு ரம்மியமான ஓவியம் உருவெடுக்க ஏதுவாகும். அதிருப்தியில் ஒரு திருப்தி!

''போயிட்டு வாப்பா, ரொம்ப இருட்டிடுத்து...பிணங்களைத் தின்னும் நரிங்க வர்ர நேரமாயிடுத்து''—என்றான் வெட்டியான். ரேவந்த் நிமிர்ந்தான். தொண்ணூறு வயதிருக்கும். ஒரு கிழவன் கைத்தடியை ஊன்றிக் கொண்டு நின்றிருந்தான். துக்கத்தையும் மகிழ்ச்சியையும் சரிசமமான கண்ணோட்டத்தில் பகிர்ந்து கொள்ள பழக்கப்பட்டிருந்த அக்கிழவனின் முகத்தை எத்தனையோ சாவுகளையும் அவ்வூர் உறவினர்கள் கொண்டிருந்த துக்கங்கையையும் கண்டிருந்த அனுபவம் வேதாந்தமாய் மாற்றி விட்டிருந்தது.

''எனக்கு இங்கிருந்து போகவே பிடிக்கலை தாத்தா! அதப்பாரு, அவள் இன்னும் அங்கேயே படுத்துட்டிருக்காப் போல இல்லை?''

''பன்னெண்டு நாளு ஆத்மா இங்கனே சுத்திட்டிருக்கும் சாமீ, பந்த பாசத்த ஒதற முடியாம.....பதிமூணாம் நாளு காக்கைங்களோடு சேர்ந்து பறந்து சூனியத்தோடு கலந்துடுங்க.....ஞாபகத்தை மட்டு நம்மண்டை விட்டு வெச்சிருக்கும்.....''

ரேவந்த் கண்ணீர் திரையிட்ட கண்களுடன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

மேதாவித்தனத்தைக் காட்டிலும் அஞ்ஞானம்தான் மனிதனுக்கு எத்தனை திருப்தியை அளிக்கிறது! அது அஞ்ஞானமா?.....அவள் உண்மையிலேயே இறந்து விட்டாளா? ஒருக்கால் இல்லையோ?

காதலில் உள்ள வேதனையே—மனிதத்தன்மை என்னும் பனித்துளிகளாய் இமயத்தில் தோன்றி, மேகங்களின் மூலம் உருகி வழிந்து, நதி நீரில் ஓடிவந்து கலந்து, நீராவியாகி, எல்லையில்லாத பரந்த வெளியில் ஒன்றறக் கலந்து போகிறது! அதுவே வெண்ணிலாவாகிறது. அந்த நிலாவெளிச்சத்தில் ஒரு பெண் அதிகாலையிலேயே எழுந்திருந்து 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்...' என்று பாடித் தன்னைப் பரவசப்படுத்துகிறாள். தன்னுடனேயே தங்கி விடுகிறாள். தன் வெற்றியில் மகிழ்ச்சியடைகிறாள். தன் தோல்விக்குப் பின்னால் நின்று உற்சாகமூட்டி தைரியமளிக்கிறாள். தனக்கு அவள் ஒரு தேவதை!

தனக்கு கை கொடுத்த தாத்தாவின் கையை ஊன்றி கொண்டே எழுந்திருந்தான் அவன். இருவரும் நடந்தார்கள் சிதையை விட்டு தொலைவில்.....

முடிந்தது



எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா